


# மதுரைமகுடம்

கலைமாமணி விக்கிரமன்

## நூல் விவரம்


9/04/593


| | |
|---|---|
| நூல் தலைப்பு: | மதுரை மகுடம் வரலாற்று நாவல் |
| ஆசிரியர்: | கலைமாமணி விக்கிரமன் |
| மொழி: | தமிழ் |
| பதிப்பு ஆண்டு: | இரண்டாவது பதிப்பு ஏப்ரல் 2002 |
| உரிமை: | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை: | 113 k.g. வெள்ளைத்தாள் |
| நூல் அளவு: | கிரௌன் சைஸ் (1 x8) 12.5 X 18.5 செமீ |
| அச்சு எழுத்து: | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள்: | 238 + 2 |
| விலை: | ரூ.48.00 |
| லேசர் முறை அச்சு: | கிரிதர் கிராபிக்ஸ் 3,ஜெயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 600 014 |
| மேலட்டை ஓவியம்: | சிவகுமார் |
| அச்சிட்டவர்: | இளங்கோ அச்சகம் சென்னை 600 014 |
| வெளியிட்டோர்: | விக்கிரமன் பதிப்பகம் சென்னை 600 033 |

565776
894.8113
VIK

# முன்னுரை

'மதுரை மகுடம்' நாயக்க மன்னர்கள் காலத்து வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு புனையப்பட்ட வரலாற்றுப் புதினமாகும்.

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் தொடக்க காலத்தில் விஜயநகரப் பேரரசர்களின் பிரதிநிதியாகத் திகழ்ந்தார்கள். பிறகு சுதந்திரமாக மதுரையைத் தலை நகராகக் கொண்டு ஆளத் தொடங்கினார்கள்.

தெலுங்கு மொழி பேசிய நாயக்க மன்னர்கள் ஆட்சி மீனாட்சி அரசியுடன் கி.பி. 1736 உடன் முடிவடைந்தது. ஏறத்தாழ மதுரை நாட்டை 207 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த நாயக்க அரசர்களுள் சொக்கநாத நாயக்கர் இருபத்தி மூன்று ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்.

சொக்கநாதரின் மனைவி மங்கம்மாள் வரலாற்றுப் புகழ் பெற்றவள்.

சொக்கநாதரின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்களைக் கொண்டு கற்பனைப் பாத்திரங்களைச் சேர்த்து 'மதுரை மகுடம்' என்று பெயர் சூட்டி 'தாய்' வார இதழில் ஏறத்தாழ ஆறு மாதங்கள் தொடர் கதையாக எழுதினேன்.

நாயக்கர் ஆட்சி வலுப் பெற்றபின் பாண்டியர்கள் வலுவிழந்து பல பிரிவினராகப் பிரிந்து தமிழகத்தின் தென்கோடி மாவட்டங்களில் சிற்றரசர்களாக ஆட்சி புரிந்து வந்தனர். பாளையக்காரர்களாக, நாயக்கர் அரசர்களுக்கு அடங்கிய சிற்றரசாக ஆண்டு வந்தனர். அவர்களுள்

தென்காசியினின்று ஆண்டு வந்த பாண்டியர் குறிப்பிடத் தக்கவர்.

நமது வரலாற்றுப் புதினம் சொக்கநாதரின் இறுதி ஆண்டுகளில் அவருக்கு எதிராக ஆட்சி செய்து மதுரை மகுடத்தை அடைய முயன்றவர்களைச் சுற்றிச் சுழன்று செல்கிறது.

சொக்கநாதரின் திருக்குமாரர் முத்து வீரப்பர். அவர் மனைவியின் பெயர் முத்தம்மாள். அழகிய தமிழ்ப் பெயர். இவ்வளவுதான் வரலாற்றுச் சான்றுகள். மெல்லிய நூலிழை யைக் கொண்டு வரலாற்றுப் புதினம் எனும் ஆடையை நெய்துளித்துள்ளேன்.

'தாய்' வார இதழில் அன்புடன் வெளியிட்ட இலக்கியச் சித்தர் வலம்புரிஜான் அவர்களுக்கும், என்னை அவ்வப் போது உற்சாகமூட்டி எழுத வைத்த 'தாய்' பத்திரிகை உதவியாசிரியர் கீதப்பிரியன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர் கதையாக வெளிவந்த போது ஜீவனுள்ள சித்திரங்களை வரைந்தும், இப்போது மேலட்டையை அழகு படுத்தியும் தந்த ஓவியர் உமாபதி அவர்களுக்கும் 1994ஆம் ஆண்டு எம்.ஏ.சி. ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அறக்கட்டளையினர் இந்த நூலைச் சிறந்த புதினம் எனத் தேர்ந்தெடுத்து ரூ.25 ஆயிரம் பரிசு வழங்கிச் சிறப்பித்தனர். அவர்களுக்கும் இந்தச்சமயத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூலுக்கு அணிந்துரை அளித்துதவிய வரலாற்று நாவலாசிரியர் திரு. ஸ்ரீவேணுகோபாலன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பல வரலாற்றுப் புதினங்களைப் படைக்க தமிழன்பர்களின் ஆதரவை வேண்டுகிறேன்.

*கலைமாமணி விக்கிரமன்*

## விசித்திரச் சித்த விக்கிரமன்

*ஸ்ரீவேணுகோபாலன்*

**வ**ரலாற்று நாவல் எழுதும்போது எனக்கு ஏதாவது சந்தேகம் வந்தால் கவலைப்பட மாட்டேன். மிஸ்டர் விக்கிரமன் இருக்கிறார் போ! என்று நினைத்துக் கொள்வேன்.

அவரிடம் என் கஷ்டத்தை லேசாகச் சொல்லி வேண்டிக் கொண்டால் போதும்.

'அதுவா?... அவரைவிட இன்னும் புதுசா அந்த வம்சத்துச் சரிதையை யாரும் கூறிவிடவில்லை. அதனால் அவருடைய புத்தகத்தையே அடிப்படையாக வைத்துக் கொண்டால் போதும்'' என்பார்.

அல்லது,

"இக்கட்டான 'பீரியடை' எடுத்திருக்கிறீர்களே! அதைப் பற்றிப் பெரிய ஆராய்ச்சி ஒன்றும் வரவில்லை. உங்களுக்குத் தெரிந்த விஷயம் போதுமானது. தைரியமாக எழுதுங்கள்!" என்பார்.

ரொம்ப ஆச்சரியமாக இருக்கும். தமிழக சரித்திரத்தை அப்படி நுனிவிரலில் வைத்திருப்பார். கேட்டவுடனேயே பதில் சுடச்சுட விழும்.

இதில் நான் மிகவும் அதிசயப்படுவது என்னவென்றால் எனக்குத் தெரிந்தவற்றை நான் மீண்டும் ரெஃபரன்ஸ் புத்தகம் பார்த்துத்தான் நினைவில் கொண்டு வருவேன். அவருக்குப் பெரும்பாலும் அது தேவையில்லை. சரித் திரத்தில் அத்தனை விஷயங்களும் அவருக்கு மனப்பாடம் ஆகியிருக்கின்றன. ஒரு சின்ன விஷயங் கூட அவரது கவனத்தைவிட்டு விலகிப்போகாது.

இதற்கெல்லாம் காரணம் அவருக்குச் சரித்திரத்தின் மீது இருக்கும் தணியாத ஆர்வம்தான். ஆர்வம் என்பது கூட அடக்கமாக்கிய வார்த்தைதான். வெறி என்று சொல்ல வேண்டும்.

ஒரு விஷயம் கேளுங்கள்: தமிழ்த் தாத்தா உ.வே. சாமி நாதய்யரின் வாழ்க்கைச் சம்பவங்கள் சிலவற்றை நான் படித்திருக்கிறேன். சமீபத்தில் அவர் வாழ்க்கை முழுதும் படித்து விட்டேன்.

ஆகா! இவரைத் தற்காலத் தமிழகமும் போற்ற வேண்டாமா என்ற ஆதங்கத்தில் திரு. விக்கிரமனிடம் பேசினேன். பாருங்கள்!

அங்கேயும் அவர் அத்துபடிதான்.

"தமிழகம் செய்த அதிர்ஷ்டம் தமிழ்த் தாத்தா உ.வே.சா. சங்க இலக்கியத்தைத் தேடிக் கொணர்ந்தது. அதை விட அதிர்ஷ்டம் அவர் வாழ்க்கையை அவரே எழுதியது. ஒப்பற்ற இலக்கியம் அது! என்ன அழகான நடை! திரு. கல்கியும் திரு. வாசனும் இல்லை என்றால் 'உ.வே.சா' இதை எழுதியே இருக்கமாட்டார். அந்த வரலாற்றுச் சுவை மிகுந்த சுய சரித்திரத்தை நாம் இன்னும் நன்றாகப் பயன்படுத்தவில்லையே" என்று ஆதங்கத்துடன் கூறினார். திரு. விக்கிரமன்.

எவ்வளவு படித்து, சிந்தித்து வைத்திருக்கிறார் பாருங்கள்!

இவரது அணையாத இந்த சரித்திர ஆர்வத்திற்கு அவ்வப் போது பல நல்ல வாய்ப்புகளும் வந்து உதவின. அவர் ஆசிரியராக உள்ள 'அமுதசுரபி'யின் தீபாவளி மலர்களே அவர் சரித்திர அறிவை அவ்வப்போது உறை தேய்த்துச் சொல்லும் கற்களாக அமைந்தன.

தமிழகத்தில் அநேகமாக இடையறாது தீபாவளி மலர் வெளியிட்டு வரும் ஒரே பத்திரிகை 'அமுதசுரபி' யாகத் தான் இருக்க முடியும். இதை வெளியிடுவதற்கே திரு. விக்கிரமனின் தனிப்பட்ட ஆர்வம்தான் காரணமாக இருக்கும்.



இந்த மலர் ஆர்வத்திற்குப் பின்னே பார்த்தால் அவருடைய சரித்திர ஆர்வந்தான் தலையாக வீற்றிருக்கும்.

ஒவ்வொரு மலரிலும் அவர் புனித யாத்திரை போய்ப் பார்த்த சரித்திரத் தலம் கட்டாயம் இருக்கும்.

நமக்குப் பழக்கப்பட்ட தலமாக இருந்தாலும், நாம் அறியாத பல புதிய சரித்திரக் குறிப்புகளைக் கூறுவார்.

பழக்கப்படாத தலமாக இருந்தால் போதும், நமக்கு அங்கே போகும்படி வேண்டிய ஆசையைத் தூண்டி விட்டு விடுவார்.

இதில் ஒன்று கூற விரும்புகிறேன். சரித்திரக் குறிப்புகள் என்றால் என்னவோ சுவாரசியமற்ற, ரசமற்ற குறிப்புகள் என்று நினைக்க வேண்டாம்.

நிச்சயம் சொல்லமாட்டார். அந்தக் குறிப்புகளுக்கு அழகு ஊட்டி, சுவை ஊட்டி, சௌந்தரிய டிரஸ் உடுத்தி நம்மிடமே காண்பித்து விடுவார்.

அடாடா! அப்படியா! என்று சொக்க வைத்து விடுவார்.

இதற்கு அவருக்குப் பெரிதும் உதவிபுரிவது அவரது கவிதை நடை.

ஒரு தனி மயக்கத்தோடு அது சரளமாக வரும். அவரே கவிதை எழுதுவதால் அது அவர் நடையைக் கவர்ந்து கொண்டது.

இதன் நிகர லாபம் அவர் சரித்திர நாவலுக்கு! ஏனெனில் இந்த நாவலில் தான் கவிதை நடையைக் கொஞ்ச வைக்கலாம். சரித்திர நாவல் அதற்கு ஈடுகொடுக்கும். அவர் அதைப் புரிந்து கொண்டு தம் திறனை அதில் நிறைய விரவி விடுகிறார்.

ஆக, சரித்திர அறிவு 'சரித்திர நோக்கு' கவிதை அழகு இம் மூன்றும் சரித்திர நாவலுக்கு உரித்தான முக்கனிகள். இவற்றை ஒரு சேரக் கூட்டி விட்டால் – அவ்வளவுதான், பலன் பழனிப் பஞ்சாமிர்தத்தைவிட ருசியாக இருக்கும்.

எனக்கு அவரிடம் ஒரு குறை உண்டு, சோழ நாட்டிலும் பல்லவ நாட்டிலும் மட்டுமே உலாவுகிறாரே என்று.

பாண்டியர்கள் பக்கம் அவர் திருப் பார்வை அதிகம் திரும்ப வேண்டுமே என்று நான் பலமுறை விண்ணப்பித்ததுண்டு.

சமீபகாலமாக என் ஆதங்கத்தைத் தீர்த்து வருகிறார் அவர்.

இந்த 'மதுரை மகுடம்' அதற்குச் சான்று.

உலகத்தில் நீண்ட நாள் அரசு செலுத்திய குடும்பங்களில் பாண்டிய வமிசமும் ஒன்று. தென் காசிப் பாண்டியர் மீது அவர் கவனம் வீழ்ந்து, அவர்களையும் மதுரை நாயக்கர்களையும் மையமாக வைத்து அற்புதக் கதை படைத்துள்ளார் அவர்.

காதல், உளவு, சாகசம், சண்டை என்ற பல புள்ளிகளைத் தொட்டுக் கொண்டு கதை ஓடும்போது ஒரு பரவசம் ஏற்படுகிறது. எங்கேயாவது தங்கு தடை ஏற்பட வேண்டுமே! கிடையாது. சரளமாக ஓடைச் சிலுசிலுப்பில் ஓடுகிறது.

முத்தம்மாள் – முத்துவீரப்பன் காதல், இரண்டு வம்சங்களும் (பாண்டியர்களும், நாயக்கர்களும்) சேருவார்களா என்ற தாபம், மங்கம்மாவுக்கு இறுதியில் ஏற்படுகிற கோபம் எல்லாம் சேர்ந்து நம்மைக் கடைசிப் பக்கம்வரை கதை எப்படி முடியுமோ என்று பயப்பட வைக்கின்றன. முடிவு வரியைப் படித்த பிறகுதான் திருப்தி.

நடை, கற்பனை, கவிதை, சரித்திர நோக்கு எல்லாம் கொண்ட விசித்திரச் சித்தராக விளங்குகிறார் விக்கிரமன். அவர் மதுரைக்கு வைத்த மகுடம், நமக்கே வைத்துக் கொண்ட மகுடம்.

இதோ அவர் நடை அழகுக்கு இரண்டு மாதிரிகள்:

*"அவளுக்குப் பிரியமிருந்தால்தான் அந்த*
*முகத்தாமரை இதழ் விரிந்து சிறு*
*முறுவல் பூக்கும். செம்பவள வாய் விரிந்து*
*ஒரு சிறு சொல் உதிரும்!"*

*"அவளுடைய மேனி அழகு அந்த நிழல்*
*படர்ந்த தோப்பில் பளிச்சென ஒளி வீசியது."*

கே.கே. நகர்
சென்னை – 78.

**ஸ்ரீவேணுகோபாலன்**

# மதுரை மகுடம்

## 1

**கு**ற்றாலநாதரையும், குழல்வாய் மொழி அம்மையையும் தரிசித்துக் கோயிலுக்கு வெளியே வரும்போது பாண்டிய இளவரசி முத்தம்மாள் உள்ளத்தில் இனம் புரியாத மகிழ்ச்சி துள்ளி நின்றது.

குற்றால அருவியின் 'இழு'மென்ற ஓசையும், புகைபோல் மெல்லியதாய்ப் பரவிய சாரலின் பூந்தெளிப்பும், நெடிதுயர்ந்த மரங்களும், மரங்களிடைத் தாவும் மந்திகளும், மந்திகளைத் துரத்தும் கடுவன்களும் மற்றும் இயற்கைத்தாயின் எழிற்கோலங்களும் அவள் பலமுறை கண்டவைதான். அவற்றைக் காணும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொருவித சுகானுபவத்தை முத்தம்மாள் அடைந்து மகிழ்ந்தாள்.

எப்போதெல்லாம் தோன்றுகிறதோ அப்போதெல்லாம் தென்காசி மாளிகையிலிருந்து புறப்பட்டு, குற்றாலத்திற்கு வந்து விடுவாள்.

இளவரசி குற்றாலத்திற்குப் புறப்படுகிறாள் என்றால் பரிவாரத்தாருக்குப் பெரும் மகிழ்ச்சி. இரண்டு மூன்று நாள்கள் என்று குற்றாலத்தில் முகாமிட்டு விடுவாள். சிவிகை

சுமப்போர், குதிரை வீரர்கள், பரிசாரகர்கள் குற்றேவல் செய்யும் சிப்பந்திகள் இவர்கள் எல்லாம் நன்றாக ஓய்வெடுத்துக் குற்றாலச் சாரலை அனுபவிப்பார்கள். தென்காசி மாளிகையில் கிடைப்பதைவிட உணவு வகைகள் விதவிதமாகக் குற்றாலத்தில் கிடைக்கும். முத்தம்மாள் அருவியில் நீராட மட்டும் வருவதில்லை. மலைச்சாரலின் இயற்கைக் காட்சியோடு காட்சியாக ஒன்றிவிடுவாள். இழுமென விழும் அருவியைக் காணக் காண அவளுக்கு ஒரே ஆனந்தம்!

"மலையிலிருந்து குதித்து வரும் இந்தச் சிற்றாறு எங்கே பிறக்கிறது?" என்று முத்தம்மாள் தேனாட்சியைக் கேட்டாள். தேனாட்சி நம்பிக்கைக்கு உகந்த பணிப்பெண் மட்டும் அல்லள்; தோழியாகவும் திகழ்ந்தாள்.

அருவி பிறக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று முத்தம்மாளுக்கு அடக்க முடியா ஆசை.

தேனருவியையும் செண்பகா தேவி அருவியையும் அடைந்து நீடாடி அவள் ஆனந்தித்திருக்கிறாள்.

வட அருவி குதித்துக் குதித்து வந்து பொங்குமாங் கடலில் விழுந்து, பிறகு கீழே விழும் அழகைக் கைகொட்டிச் சிறு குழந்தை போல் ரசித்திருக்கிறாள்.

வழி நெடுகக் காணப்படும் கனிசேர் மரங்களையும் மரங்களிடை மந்திகள் தாவி விளையாடும் அழகையும் மேகக் கூட்டங்கள் வானக் கடலில் நீந்திச் செல்லும் புதுமையையும் அவள் ரசித்திருக்கிறாள். திரிகூட மலையின் கம்பீரமும் அழகும் அவள் உள்ளத்தில் சொல்ல முடியாக் குதூகலத்தை அளிக்கும்.



"நமது முன்னோர்களின் அறிவுத் திறனுக்கும், அனுபவ ஆற்றலுக்கும் நான் தலை வணங்குகிறேன்" என்று முத்தம்மாள் பெருமிதத்துடன் இயற்கைச் சூழலை ரசித்தவாறு கூறுவாள்.

"ஆமாம் தேவி! பாண்டியர் மிகுந்த பாக்கியசாலிகள். பாண்டிய நாட்டில் தமிழ் தவழ்ந்து வளர்ந்ததில் வியப்பில்லை. குற்றாலத்து இனிய சூழலின் இன்பத்தைப் பருகவே தமிழ்த்தாய் பாண்டிய நாட்டில் என்றும் குடிகொண்டிருக் கிறாள்" என்று தேனாட்சி உற்சாகமாகக் குற்றாலச் சூழலை வர்ணிப்பாள்.

"அதோ பார்! அதோ பார்!" என்று இளவரசி படபடப்புடன் சுட்டிக்காட்டுவாள். அவள் அதிசயத்துடன் நோக்கு மிடத்தில் மந்திகள் மகவுடன் கொஞ்சிக் குலவிக் கொண்டே வாழைப் பழத்தைக் குலையுடன் தின்று கொண்டிருக்கும்.

"இளவரசி! இன்னும் சிறு குழந்தைபோல் குரங்குகளின் குறும்பை ரசிக்கிறீர்களே?" என்று கூறி தேனாட்சி மெல்லச் சிரிப்பாள்.

"குழந்தை உள்ளம் கொண்டிருந்தால்தான் இயற்கை விந்தைகளை ரசிக்க முடியும் என்றால், நான் என்றும் குழந்தையாகவே இருந்து விடுகிறேன்..." என்று கூறிய இளவரசி முத்தம்மாள், "தேனாட்சி! நான் மிகச் சாதாரண அறிவுடையவள். ஆனால், இந்தக் குற்றாலத்தின் இனிய காட்சியைக் கண்டு ரசிக்க திருஞானசம்பந்தப் பெருமானே வந்திருக்கிறார். அவரும் இந்த மந்திகளின் சேஷ்டைகளை ரசித்திருக்கிறார்" என்று கூறித் தொண்டையைக் கனைத்துக் கொண்டு,

*"மலையார் சாரல் மகவுடன்*
*வந்த மடமந்தி*

*குலையார் வாழைத் தீங்கனி*
*மாந்தும் குற்றாலம்...*

என்று இனிய குரலில் பாடினாள்.

இளவரசியின் குரலினிமையைத் தேனாட்சி முன்பே அறிந்திருக்கிறாள். தமிழ் இலக்கியங்களைக் கற்றறிந் திருக்கும் அவள் புலமையைப் புரிந்து கொண்டிருக்கிறாள் என்றாலும் அன்று வழக்கத்தைவிட உணர்ச்சி மிகுதியுடன் இளவரசி பாடியதும், இயற்கை இன்பத்தில் திளைத்து உணர்ச்சிவயப்பட்டிருந்தும் தேனாட்சிக்கு வியப்பை அளித்தன.

"தேனாட்சி! குற்றாலச் சாரலை விட்டுப் பிரியவே மனமில்லை. நான் அரசரிடம் சொல்லி, குற்றாலத்திலேயே ஒரு மாளிகையைக் கட்டித்தரச் சொல்லப் போகிறேன். இங்கேயே தங்கியிருந்து இயற்கை இன்பத்தில் திளைத்துக் காலமெல்லாம் வாழ ஆசைப்படுகிறேன்" என்று கூறும் போது முத்தம்மாள் விழிகளை மூடிக்கொண்டு, அந்த இன்பத்தைத் தனக்குத்தானே அனுபவிப்பது போல உணர்ந்தாள்.

பிறகு விழிகளைத் திறந்தபோது எதிரே தேனாட்சி ஏதும் மறுமொழி கூறாமல் இதழ்களில் குறும்புச் சிரிப்புடன் நிற்பதை முத்தம்மாள் கண்டாள்.

"தேனாட்சி! நான் கூறியதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?" என்று பார்வையாலேயே வினவினாள்.

"தேவி! குற்றாலத்திலேயே இருந்துவிட முடியுமா? குற்றாலத்துக் குளிர்ச்சாரலும், இயற்கைக் காட்சிகளும் மட்டும் நம் வாழ்க்கைக்குப் போதுமா என்று எண்ணினேன். சிரிப்பு வந்தது" என்றாள் தேனாட்சி.



"அதில் சிரிக்க என்ன இருக்கிறது?"

"உங்களுக்கு இல்லை; எனக்குத்தான். என்னை மணக்கப் போகிறவர் அயல்தேசத்தவராயிருந்தால் அப்போது நான் குற்றாலத்தில் தங்க முடியாதே என்று நினைத்தேன். சிரிப்பு வந்தது" என்று தேனாட்சி கூறி மீண்டும் முன்றானையை வாயில் புதைத்துக் கொண்டு சிரித்தாள்.

"தேனாட்சி அதற்காக மட்டும் நீ சிரிக்கவில்லை; வேறேதோ காரணமிருக்கிறது" என்று இளவரசி சற்றுக் கடுமையாக முகத்தை மாற்றிக் கொண்டு கேட்டாள்.

"தேவி! எனக்கு வரப்போகும் கணவரை நான் அப்படிக் கட்டளையிடலாம். ஆனால் உங்களைப் பற்றி நினைத்தவுடன் சிரிப்புப் பொங்கி வந்தது..." என்றாள் தேனாட்சி மறுபடியும் சிரிப்பை அடக்கிக் கொண்டு.

"என்னைப்பற்றி என்ன நினைத்தாய்?" முத்தம்மாள் கேட்டாள்.

"உங்களை மணக்கப் போகிறவர் எந்த நாட்டு இளவரசரோ? அவரைத் தன் நாட்டை விட்டு விட்டுக் குற்றாலத்திலேயே தங்கவேண்டும் என்ற நீங்கள் கண்டித்துச் சொல்ல வேண்டியிருக்கும். உங்கள் கட்டளைக்கு அவர் கீழ்ப்படியும் காட்சியை மனத்தில் எண்ணிப் பார்த்தேன்; சிரிப்பு வந்தது–" என்றாள் தேனாட்சி.

குறும்புக்காரி என்று செல்லமாக அவள் கன்னத்தில் தட்டலாம்; ஆனால் முத்தம்மாள் மௌனமானாள். தேனாட்சி சொல்வதில் நியாயமிருக்கிறது. தன்னை மணக்கப்போகும் இளவரசர்! ஆ! தனது திருமணம்! தன் திருமணத்தைப் பற்றி முத்தம்மாள் இதுவரை நினைக்கவில்லை. நினைக்க

வாய்ப்பு ஏற்படவில்லை. இன்று தேனாட்சி அந்த நினைவுக்குத் தூபமிட்டு விட்டாள்.

முத்தம்மாள் உடல் சிலிர்த்தது. தேனாட்சி சொல்வது போல் தன்னை மணக்க வரும் மணவாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவராயிருப்பார்? தன் தந்தை யாரை மனத்தில் கொண்டிருக்கிறாரோ?

அவளைப் பொறுத்தவரை எளிய வாழ்க்கை நடத்தும் சாதாரண பிரஜை ஒருவரை மணக்க வேண்டும் என்ற எண்ணம்தான் தலைதூக்கி நிற்கிறது... ஆனால் குணம் நிறைந்தவராகவும் கல்வியில் சிறந்தவராகவும் அவர் இருக்க வேண்டும் என்பதொன்றே போதுமானது.

"தேவி! ஏன் மௌனமாகிவிட்டீர்கள்?" தேனாட்சி கேட்டாள்.

"தேனாட்சி! நானும் நினைத்துப் பார்த்தேன். நீ சொல்வது சரி. குற்றாலத்து இனிய சூழலிலேயே என்னை மணக்கப் போகிறவரும் என்றும் தங்கியிருக்க வேண்டுமென்றால் அது சாத்தியப்படுமா? தன் நாட்டைத் துறந்து வர வேண்டும். மறந்து வரவேண்டும் அல்லது தென்காசியைத் தலைநகராக்கிக் கொண்டு குற்றாலத்தில் வசிக்க வேண்டும். இயலுமா? சம்மதிப்பாரா? நான் சொல்வதைக் கேட்கக் கூடியவராயிருக்க வேண்டும் என்றால் அதற்கு அரசகுமாரனால் முடியாது; எளிய, பாண்டிய நாட்டுக் குடிமகன் ஒருவரால் தான் முடியும் என்று நினைத்தேன்" என்றாள் இளவரசி முத்தம்மாள்.

இப்போது தேனாட்சி எதும் மறுமொழி கூறவில்லை. மௌனமாயிருந்தாள். அவள் முகத்தில் வாட்டம் கூடியது.



தேனாட்சியின் முகமாறுதலைக் கண்ட முத்தம்மாள், "ஏனடி அதற்குள் உன் முகம் வாடிவிட்டது? உன் கல்யாண நினைவு வந்து விட்டதா? நீ கல்யாணமாகிப் புக்ககம் சென்று விட்டால் உன்னைப் பிரிவதில் எனக்கு வருத்த மாகத் தானிருக்கும் என்றாலும் நீயும் கல்யாணம் செய்து கொண்டு கணவருடன் இன்பமாக இருக்க நான் தடையாக இருக்கமாட்டேன். தேனாட்சி! நீ, மற்றவர் நினைப்பது போல் பணிப்பெண் அல்லள். என் அந்தரங்கம் அறிந்து உயிர்த் தோழி" என்று கூறி அவளுடைய முதுகை அன்புடன் வருடினாள்.

"தேவி! என் கவலை, என் கல்யாணத்தைப் பற்றியன்று. உங்கள் திருமணத்தைப் பற்றித்தான். உங்கள் தந்தையின் சபதம் என் நினைவுக்கு வந்தது. உங்களுக்கு ஏற்ற மணவாளன் எங்கே வளர்ந்து கொண்டிருக்கிறாரோ என்று நினைத்துப் பார்த்தபோது எனக்குக் கவலை ஏற்பட்டது" என்றாள். குரலில் கவலை ததும்பி நின்றது. "எனக்கும் அந்தக் கவலைதான் தேனாட்சி" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிய இருவரும் அங்கே பாண்டிய மன்னர் நிற்பதைக் கண்டனர்.

முத்தம்மாள் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. அங்கே அந்த நேரத்தில் அவள் தன் தந்தையை எதிர்பார்க்கவில்லை.

அரசர் தென்காசியில் விசுவநாதர் ஆலயத்தில் காலை பூஜையில் கலந்து கொண்டிருக்கும் நேரம் அது. தென் காசியிலிருந்து குற்றாலம் அண்மையில் தான் என்றாலும் அந்த நேரத்தில் பாண்டிய மன்னர் குற்றாலத்திற்கு வருவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

மன்னர் திடீரென்று அங்குப் பிரவேசித்ததால் திடுக் கிட்டுத் திகைத்து நாணமுற்ற தேனாட்சி தலைகுனிந்தவாறு

சற்று விலகிச் சென்று மறைவாக நின்றாள். தொலைவில் அரசரின் பரிவாரங்கள் நின்று கொண்டிருந்தனர். அரசர் தன் மகளை நெருங்கிக் கூந்தலை வருடினார்.

"முத்தம்மா! நான் வரும்போது யாருடைய கவலையைப் பற்றி உன் தோழி பேசினாள்? எனக்கு இதுவரை ஒரே ஒரு கவலைதான். மதுரையை ஆளும் அரசி மங்கம்மாவிடம் நானிட்ட சபதத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டு இது வரை செயலாற்றி வந்தேன். இப்போது உனக்கு ஏற்ற மணவாளனைத் தேர்ந்தெடுக்க வேண்டுமே என்ற மற்றொரு கவலையும் சேர்ந்தது. உன்னை மணக்கப் போகும் மணவாளன் அழகனாக – வீரனாக நல்லவனாக மட்டும் இருந்தால் போதாது; முத்தம்மா! மதுரை அரியணையில் நமது பாண்டியர் பரம்பரையைச் சிறப்பாக நிலைநாட்டக் கூடிய வல்லவனாகவும் இருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட நல்ல வரன் கிடைக்க வேண்டுமே என்பதே எனக்குப் பெருங்கவலை" என்ப் பெருமூச்சுடன் மன்னர் கூறினார். அவர் கவலைக் குரலைக் கேட்டு முத்தம்மாள் திடுக்கிட்டாள்.

தன் தந்தை இதுவரை இதுபோல் கவலையுடன் பேசியது இல்லை என்பதை முத்தம்மாள் அறிவாள்.

பாண்டிய நாட்டைப் பழங்கால மகோன்னத நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே அவர் கவலை. அதற்காக அவர் பல திட்டங்களை வகுத்துக் கொண்டிருப்பதையும் சில பாளையக்காரர்களின் உதவியை நாடுவதையும் அவள் அறிவாள். சிதைந்து கிடக்கும் பாண்டியர் பரம்பரையினரிடம் ஒற்றுமையை ஏற்படுத்த முயன்று கொண்டிருப்பதையும் அவள் அறிவாள். தன் திருமணத்தைப் பற்றிய கவலையும் சேர்ந்துவிட்டதென்பதை இப்போது அறிந்து கொண்டாள்.



கலகலவென்று நகைத்து, "அப்பா! உங்கள் கவலைக்கு மருந்தொன்று சொல்லட்டுமா?" என்று முத்தம்மாள் கேட்டாள்.

"சொல்லு மகளே! யோசனை எங்கிருந்து வந்தாலும் நான் ஏற்கத் தயங்க மாட்டேன்."

"நான் கல்யாணமே செய்துகொள்ளாமல் உங்களுடன் இருந்துவிட்டால்? குற்றாலத்திலே எனக்கொரு மாளிகை கட்டித் தந்து விடுங்கள்... அது போதும்."

மகள் இவ்வாறு கூறியவுடன் பாண்டிய மன்னன் வரகுணராமன் மெல்ல நகைத்தார்.

"அன்பு மகளே! அதெப்படி முடியும்? என் அருமை மகள் முத்தம்மா கன்னியாகவே காலங்கழிப்பதா? என் மனக்கோட்டையின் வெற்றியே உன்னிடத்தான் இருக்கிறது பாண்டிய வம்சத்தின் பாம்பரைக் கொடி அறுந்து போகாமல் காத்து நிற்க எனக்கு மகன் இல்லை. உனக்கொரு தம்பி பிறந்தான். நான் மகிழ்ச்சியுடனிருந்தேன். அவன் இப்போது இருந்திருந்தால் பாண்டியர் குலக்கொடி துளிர்த்து நின்றிருக்கும். அவன் தன் தாயையும் அழைத்துக் கொண்டு பிறந்த சில நாள்களிலேயே மேலுலகம் போய்ச் சேர்ந்துவிட்டான். அந்தச் செய்தியை நான் உனக்குத் தெரிவிக்கவில்லை. நீயே பலர் சொல்லக் கேட்டுத் தெரிந்திருப்பாய். தாயற்ற பெண் என்ற நினைவே வராமல் உன்னை வளர்த்து வருகிறேன்" தழுதழுக்கும் குரலைச் சரிப்படுத்திக் கொண்டார்.

"மகளே, முத்தம்மா! நீதான் எனக்கு மகன்! பிற்கால வாரிசு. பாண்டிய வம்சம் தழைக்க வைக்கும் கொழு கொம்பு. காசி விசுவநாதர் அருளால் உனக்கு ஏற்ற மணவாளன்

கிடைத்துவிட்டால் நான் இரட்டை வெற்றி பெற்று விடுவேன். நாயக்க அரசி மங்கம்மாவிடம் நான் செய்த சபதத்தை நிறைவேற்றுவது ஒன்று. பாண்டிய வம்சம் அறுபடாமல் மீண்டும் மதுரை அரியணையில் உன்னையும் உன் கரம் பிடிப்பவனையும் அமரவைப்பது மற்றொன்று. அதனால்தான் உன் திருமணத்தைப் பற்றி அவ்வளவு முக்கியமாகக் கருதுகிறேன். குற்றால மாளிகை என்ன – நீ நீடாரக் குற்றாலத்தை மதுரைக்கே கொண்டு வந்துவிட வேண்டும்" என்றார்.

தந்தையின் சொற்களை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் முத்தம்மா. நாயக்க அரசி மங்கம்மாவிடம் விடுத்துள்ள சூளுரையைத் தன் தந்தை மீண்டும் கூறும் போது அவர் முகத்தில் எழுந்த வீர ஒளியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மங்கம்மாவிடம் தன் தந்தை செய்துள்ள சபதம் என்னவென்று அறிய முத்தம்மாளுக்கு நீண்ட நாள்களாக ஆவல்.

"மதுரை நாயக்க வம்சத்துப் புகழ்பெற்ற, பலம் மிக்க அரசி மங்கம்மாள்.

புகழ் குன்றி, பலங்குன்றி தென்காசியினின்று சிறு பகுதியை ஆண்டு கொண்டிருப்பவர் பாண்டிய மன்னர் வாகுணராமன். கருகிப் போகாமல் ஒரிரு துளிர்களுடன் தலையசைத்துக் கொண்டிருக்கும் பாண்டியர், பேரரசியுடன் மோதுவதா? அவர்களுடன் சபதம செய்வதா? அது என்ன சபதம்?

முத்தம்மாள் தன் தந்தையைக் கேட்டாளி.



பாண்டிய அரசர் வரகுணராம குலசேகரப் பாண்டியனுடன் அவர் ஒரே மகள் இளவரசி முத்தம்மாள் பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில், அரசருடன் வந்திருந்த பரிவாரத்தாருள் ஒருவனான வீர இளைஞன் செண்பகநாதன், அந்த வேளையில் அங்கே இருக்கக்கூடாது என்ற எண்ணத்தில் வெளியே வந்த தேனாட்சியை நோக்கி இதே கேள்வியைக் கேட்டான்.

"தேனாட்சி! இளவரசியின் அந்தரங்கத் தோழியே! நமது மன்னர் மதுரை அரசி மங்கம்மாவிடம் சபதம் செய்திருக்கிறாராமே, அது என்ன?

"உங்களுக்கும் தெரியாதா?" என்று நகைத்தவாறு கேட்ட தேனாட்சி, துளிர் வெற்றிலையை எடுத்துத் தடவியவாறு பாண்டியர் சபதத்தைப் பற்றி விவரமாகக் கூறினாள்.

## 2

சலசலவென்று ஓடிவரும் அருவி நிர் பாதங்களை வருடுமாறு அமர்ந்து, தேனாட்சி சொல்லிவரும், நடந்து போன சம்பவங்களைக் கேட்பதில் செண்பகராமனுக்கு ஆவல் அதிகமாகியது.

தென்காசி மாளிகையில் தேனாட்சியைப் பல முறை அவன் சந்தித்திருக்கிறான் என்றாலும் இவ்வளவு நெருக்கமாக அமர்ந்து அவள் பேசுவதைக் கேட்கும் வாய்ப்பு இப்பொழுதுதான் அவனுக்குக் கிடைத்தது. அதைச் சுவாரசியத்துடன் அவள் பேசும்போது பாண்டிய நாட்டின் பெருமையை அவள் வானளாவப் புகழ்ந்தாள்.

"என்னதான் நமது பழம்பெருமையை நீ புகழ்ந்தாலும் மதுரை நாயக்க அரசர்களுக்குக் கப்பம் கட்டித்தானே நமது பாண்டிய மன்னர் வாழ வேண்டியிருக்கிறது?" என்று கவலையுடன் கேட்டான் செண்பகராமன்.

அவன் பாண்டிய அரண்மனையில் அரசாது சொந்த அலுவல்களைக் கவனிக்கும் பணியாளன். பணியாளன் என்ற நிலைக்குச் சற்று மேம்பட்ட அந்தரங்க உதவியாளருள் ஒருவன் என்று கூறலாம். அவனது முன்னோர் அழகர் மலைக்கருகே சிறு கிராமத்தைச் சேர்ந்தவர்கள். மதுரை மாளிகையில் 'தொண்டாற்ற வந்த அவர்கள் பாண்டிய ஆட்சியின் கடைசி காலத்தைப் பார்த்தவர்கள். பாண்டிய சகோதரர்கள் ஒருவரோடொருவர் பூசலிட்டு, அந்நியனை மதுரைக்கு அழைத்ததையும் அறிந்தவர்கள். அதற்குப் பிறகு விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாக விசுவநாத நாயக்கர், ஆளத் தொடங்கியபோதும் அவனது முன்னோர் அரசரிடம் விசுவாசமாக வேலை செய்து வந்தார்கள். செண்பகராமனின் தந்தை பாண்டிய மன்னரின் நம்பிக்கைக்கு உகந்தவராக இருந்ததால், பாண்டிய மன்னர் பெரும் நாடிழந்து பாளையக்காரர் என்ற பெயருடன் தென்காசியைத் தலைநகராக்கி ஆளச் சென்றபோது அவருடன் சென்றுவிட்டார். அப்பொழுது செண்பகராமன் மூன்று வயதுச் சிறுவன். அவன் வளர்ந்து, போர் வித்தைகள் பயின்றதெல்லாம் தென்காசியில்தான். அவனுக்கு அரசாங்க விவகாரங்கள் ஏதும் தெரியா. மதுரை நாயக்க அரசருக்கு ஒவ்வோர் ஆண்டும் தென்காசியிலிருந்து பொன்னும் பொருளும் திரைப் பணமாகச் செல்வதை மட்டும் அவன் அறிவான். குதிரைகள் மீதும், பொதி சுமக்கும் காளைகள் மீதும் அவற்றை ஏற்றிச் செல்லும்போது அவன் காவலாக உடன் செல்வதுண்டு.



அவன் கூறியதைக் கேட்டுத் தேனாட்சி, "நமது மன்னர், மதுரைக்குக் கப்பம் கட்டி வருவதென்னவோ உண்மை தான். காலத்தின் கொடுமைதான் அது என்றாலும் நமது அரசர் தக்க தருணத்தை எதிர்நோக்கி இருக்கிறார், என்றேனும் ஒரு நாள் பூரண சுதந்தர அரசராக, தாம் திகழப் போகும் காலத்தை..." என்று உணர்ச்சி மிகக் கூறினாள்.

"ஒகோ! பூர்ண சுதந்தரம் உடைய அரசராகத்தான் திகழ்வேன் என்று சபதம் செய்திருக்கிறாரோ?" என்று செண்பகராமன் கேட்டான்.

"அப்படி நேரிடையாகச் சபதம் செய்துவிடவில்லை. ஆனால் அரசரின் இதயத்தின் அடித்தளத்தில் அந்த உணர்ச்சிதான் அப்போது இருந்தது. இப்போதும் இருக்கிறது. இனியும் இருக்கும்" என்றாள் தேனாட்சி.

"புதிர் போடாமல், சுற்றி வளைக்காமல் சீக்கிரமாக, ஆனால் சுருக்கமாகச் சொல்லு. எந்தக் கணத்திலும் மன்னர் இங்கிருந்து புறப்பட்டுவிடலாம். பிறகு உன்னை எப்போது சந்தித்துப் பேசப் போகிறேனோ?" என்று அவசரப்பட்டான் செண்பகராமன்.

"புதிர் இல்லை அன்பரே! உண்மையில் நடந்ததை நானறிந்ததைச் – சொல்கிறேன். மதுரை நாயக்கமன்னர் சொக்கநாதரை உங்களுக்குத் தெரியுமா?' தேனாட்சி கேட்டாள்.

"ஆகா நன்றாக நானறிவேன். சென்ற ஆண்டு நான் மதுரை சென்றபோது சொக்கநாதரைச் சந்திக்க முடியவில்லை. மதுரையில் அவர் இல்லை. நாங்கள் கொண்டு சென்ற கப்பப் பணத்தை ராயசத்திடம் தரக் காத்திருந்தோம்.

ஆனால், தளபதி மீசையை முறுக்கிக் கொண்டு அங்கு வந்து தங்க நாணயங்களையும் பட்டுப் பீதாம்பரங்களையும் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தார். எனக்குப்பெரும் சந்தேகம், கப்பப் பணம் பொக்கிஷத்திற்குச் செல்கிறதா அல்லது மூன்று பேரும் பங்கு போட்டுக் கொள்கிறார்களா? பணம் ஜாக்கிரதை என்று ஒரு முறைக்கு இருமுறை சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமல் வந்துவிட்டோம்" என்று நடந்ததைக் கூறினான்.

"நீங்கள் மதுரைக்குச் சென்றிருந்த சமயத்தில் மங்கம்மாள் தன் கணவர் மன்னர் சொக்கநாதரை அழைத்துக் கொண்டு திருக்குற்றாலத்திற்கு வந்திருக் கிறாள். மதுரையிலிருந்து மன்னர் வரப்போதும் செய்தியைக் கேள்விப்பட்ட நமது அரசர் குற்றாலத்திற்கு விரைந்து வந்தார். சொக்கநாதரும், மங்கம்மாளும் தங்குவதற்கேற்ற குடிலைக் குறுகிய காலத்தில் அமைத்துத் தந்தார் நமது அரசர். மங்கம்மாள் மகிழ்ச்சி நிறைந்தவளாக இல்லை. சொக்கநாதர் உடல் மெலிந்தவராகக் காணப்பட்டார். சொக்கநாதர் அதிகம் பேசவில்லை. எப்போதும் ஏதோ சிந்திப்பவராகவும் தனக்குள்ளேயே பேசிக் கொள்பவருமாக மனக்கலக்கம் கொண்டவர்போல் காணப்பட்டார். திடீரென அவர் சிரிப்பார். கோபங்கொண்டு கூச்சலிடுவார். காலையிலும், மாலையிலும் குற்றாலம் அருவியில் அவர் நீராடுவதற்கான வசதியை நமது அரசர் செய்து கொடுத்தார்" என்று கூறிய தேனாட்சி மேலும் தொடர்ந்தாள்.

"தன் கணவரின் மனநிலை சரியில்லாத காரணத்தால் மங்கம்மாளும் மகிழ்ச்சியுற்றிருந்தாலும் அரசி என்ற செருக்கு அவளைவிட்டு மறையவில்லை. குற்றாலத்திலுள்ள வசதிகள் போதாவென்று குறை கூறிய மங்கம்மாள் நமது



அரசர் ஏற்படுத்தித் தந்திருந்த குடிலைப்பற்றி மிக அலட்சியமாகப் பேசினாள். நமது அரசர் வம்புச் சண்டைக்குப் போவதில்ல. வந்த சண்டையையும் விடுவதில்லை. என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். தெய்வபக்தியும், தமிழ்ப் பற்றும் நிறைந்த நமது அரசரை மங்கம்மாள் மிக அலட்சியமாகப் பேசினாள். பிறகுதான் தெரிந்தது, தொடக்கத்திலிருந்தே மங்கம்மாளுக்கு நமது அரசரைக் கண்டால் உள்ளூரப் பிடிப்பதில்லை என்பது!"

தேனாட்சி இவ்வாறு கூறிச் சற்று நிறுத்தினாள்.

"நாயக்க அரசிக்கு ஏன் நம் அரசரைப் பிடிக்க வில்லை?" என்று செண்பகொராமன் கேட்டான்.

"காரணம் அரசிக்குத்தான் தெரியும். எனக்குத் தெரிந்த வரையில் ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும். தென்காசிப் பகுதிகளை மதுரை நாட்டோடு சேர்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் அரசிக்கு நீண்ட காலமாயிருக் கிறது. அந்த எண்ணம் அநியாயமானது. சொக்கநாதரின் பாட்டனார் திருமலை நாயக்கர் காலத்தில் நடைபெற்ற ஒவ்வொரு விழாவுக்கும் நமது அரசரும் அவரது முன்னோரும் ஏராளமாகப் பொன்னும் பொருளும் அளித் திருக்கிறார்கள். எப்போதாவது கலகம், போர் என்று ஏற்பட்டால் தென்காசியிலிருந்து பாண்டிய வீரர்களை உடனே அனுப்பி உதவுவார். அதுபோகட்டும்! மூக்கறுப்புப் போர் என ஒன்று நடந்ததே தெரியுமா?" என்று தேனாட்சி கூறத் தொடங்கியபோது, "அது என்ன மூக்கறுப்புப் போர்?" என்று செண்பகராமன் ஆவலுடன் கேட்டான்.

"அதுவா?" தேனாட்சி நகைத்தாள். "கேட்டால் சிரிப்பு வருகிறது. பார்த்தவர் கூறியதைக் கேட்டாலோ மிகவும்

பயமாக இருக்கிறது. இருபது இருபத்தைந்து வருடங்கள் ஆகியிருக்கலாம் அது நடந்து. ஆனால் இன்றைக்கும் கதை கதையாக நமது மாளிகையில் உள்ளவர்கள் சொல்லுவார்கள். இப்போது மதுரையில் அரசராக இருக்கிறாரே மங்கம்மாளின் கணவர் சொக்கநாத நாயக்கர், அவருடைய பாட்டனார் திருமலை நாயக்கருடைய கடைசிக் காலத்தில் மைசூரிலிருந்து வந்த படைகள் மதுரைக் கோட்டையைச் சூழ்ந்துகொண்டனர். அவ்வளவு எளிதில் மதுரைக் கோட்டையைப் பிடிக்க அவர்களால் முடியவில்லை. சேதுபதிகள் படைவீரர்கள் ஆயிரக்கணக்கில் உதவிக்கு வந்து மைசூர்ப் படைகளை விரட்டி அடித்தனர். தலை தப்பினால் போதும் என்று ஓடிய மைசூர் வீரர்கள் ஓடும் போது வழியில் உள்ள ஊர்களிலுள்ளவர்களை, பெண்கள், குழந்தைகள் என்று பாராமல் அவர்கள் மூக்குகளை அறுத்தெறிந்தனர். இதைப்பற்றி நமது அரசர் திருமலை நாயக்கருக்குத் தம் ஆட்சேபணையையும் மேலே என்ன செய்யலாம் என்ற யோசனைகளையும் தெரிவித்துப் பல கடிதம் எழுதினார்.

"கடிதத்திற்கு மறுமொழி கூற அல்லது சமாதானம் கூற திருமலைநாயக்கர் உயிருடன் இல்லை. சொக்கநாதர் மதுரை அரசரானபோது அரசரைத் தனியே அவரைக் கணமும் பிரியாது அவருடனேயே இருந்த மங்கம்மாளின் கண்களில் இந்தக் கடிதம் பட்டது. தென்காசிப் பாண்டியர் ஒரு பாளையக்காரர். மதுரைக்கு அடங்கி வாழும் ஒரு சிற்றரசர். அவர் நம்மைக் கண்டிப்பதா என்று மங்கம்மாள் சீறினாள். ஆனால் அதை வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை. அரசர் மீது மங்கம்மாளுக்குக் கோபமும் வெறுப்பும் ஏற்பட, அவை எல்லாம் காரணங்கள். தன் சீற்றத்தை வெளியே புலப்படுத்தச் சமயம் ஒன்றை



எதிர்பார்த்தாள். சொக்கநாதரை மங்கம்மாள் திருக்குற்றாலத்திற்கு அழைத்து வர நேர்ந்தது என்ற சொன்னேனல்லவா? குற்றாலத்து அருவியில் தினமும் நீராடினால், திரிகூடமலைச் சாரலில் வீசும் மூலிகைக் காற்று பட்டால் சொக்கநாதரின் நோய் தீரும் என்று கேள்விப்பட்ட மங்கம்மாள், தன் கணவர் சொக்கநாதரை அழைத்துக் கொண்டு திருக்குற்றாலம் வந்தாள்". தேனாட்சி சற்று நிறுத்திச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"சொக்கநாதருக்கு என்ன நோய்?" என்று செண்பகராமன் கேட்டான்.

"அவருக்கு ஒரு நோயாய் இருந்தால் கூறிவிடலாம். என்ன நோய் என்று மருத்துவர்களாலேயே கண்டுபிடிக்க முடியாத புதிர். இளம்வயதில் அவருக்குக் காதலில் தோல்வி, அவரது ஆட்சி முறையில் கோளாறு. அண்டை நாடுகளிடம் அவர் கொண்ட கொள்கையில் தவறு. அதனால் ஏற்பட்ட போரில் மதுரை நாட்டையும் இழக்க நேர்ந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சி." தேனாட்சி மளமளவென்று அடுக்கிக்கொண்டே போனாள்.

தேனாட்சிக்கு இவ்வளவு விவரம் தெரிகிறதே என்று விழிப்புடன் செண்பகராமன் அவளையே விழி இமைக்காமல் பார்த்தவாறிருந்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?" தேனாட்சி முகத்தில் நாணம் மிகக் கேட்டாள்.

"ராஜீய விவகாரங்கள் முழுமையும் உனக்குத் தெரிந்திருக்கின்றனவே என்று ஆச்சரியப்பட்டேன். ஒரு கதை சொல்வது போல் சொல்கிறாயே, அந்தத் திறமையைக் கண்டு அதிசயப்பட்டேன். உன் முகத்தில் ஏற்படும்

உணர்ச்சி, மாறுதலை விழிகள் சுழல்வதைச் சொற்களுக்கேற்ப உன் உதடுகள் குவிவதை நான் வைத்த கண் மாறாமல் பார்த்துக் கொண்டிருக்கிறேன்..."

தேனாட்சி சிரித்தாள். "நன்றாகப் பேசுகிறீர்கள், பேச்சுத் திறமைக்கேற்றபடி அரசியல் விவகாரங்களை அறிந்து கொண்டிருக்க வேண்டாமா? அரசரின் மெய்க்காவலராக இருந்து என்ன பயன்?" என்று மெல்லக் குத்திக் காட்டினாள். செண்பகராமன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

"தேனாட்சி! மங்கம்மாளிடம் நமது அரசர் செய்த சபதம் என்ன என்று அறிய விரும்பி உன்னிடம் கேட்டேன். நீ அதைக் கூறுவதை விட்டு எங்கோ சுற்றுகிறாய். மங்கம்மாவும் சொக்கநாதரும் திருக்குற்றாலத்திற்கு வந்தார்கள் முன்பே மங்கம்மாவுக்கு நம் அரசரைக் கண்டால் பிடிக்கவில்லை. எரிமலை போல் அவள் உள்ளக் குமுறல் இருந்தது. பிறகு என்ன ஆயிற்று என்று தான் உன்னைக் கேட்க விரும்புகிறேன்" என்றான் செண்பகராமன்.

"அடடா! அதற்குள் அவசரப்பட்டால் என்ன செய்வது? சூழ்நிலையுடன் முறையாக விவரித்துச் சொன்னால் தான் சரிவரப் புரியும். அதனால் மதுரை மன்னர் சொக்கநாதருக்கு ஏற்பட்ட நோய் என்ன என்பதைக் கூற முன்வந்தேன்" என்றாள் தேனாட்சி.

"தேனாட்சி ஒன்றுமே எனக்குத் தெரியாது என்று நினைத்துவிடாதே. நான் சொல்கிறேன். சொக்கநாதருக்கு ஏற்பட்ட நோயின் காரணமும் மதுரையில் நடைபெற்ற சூழ்ச்சிகளும் உனக்குத் தெரிந்ததைவிட எனக்கு அதிகமாகவே தெரியும்" என்றான் செண்பகராமன்.



"உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தா என்னிடம் ஒன்றும் தெரியாதவர் போல் நடித்தீர்கள்?" என்று கேட்ட தேனாட்சியின் விழிகள் மேலும் மலர்ந்து விரிந்தன.

"மதுரை மகுடத்திற்குக் கடும் போட்டி. அந்தப் போட்டியில் சொக்கநாதர் பலியானால் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்று செண்பகராமன் கூறியதைக் கேட்ட தேனாட்சி வியப்புடன் மேலும் அவன் சொல்வதைக் கேட்க ஆவல் கொண்டாள்.

## 3

செண்பகராமனுக்கு நாட்டு நடப்பும் அரசாங்கத்தில் நடைபெறும் உள் விஷயங்களும் தெளிவாகத் தெரிந்திருப்பதை அறிந்த தேனாட்சி மிக வியப்புற்றாள். அரசி மங்கம்மாளிடம் பாண்டிய மன்னர் செய்த சபதம் என்ன என்பதை அறியும் முன்பாக சொக்கநாதருக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைப் பற்றிச் செண்பகராமன் விவரிப்பதை ஆவலுடன் கேட்கலானாள். மதுரை மகுடத்தை அடைய இவ்வளவு போட்டியா என்றும் வியப்புற்றாள்.

செண்பகராமன் சொல்லி வரும்போது அவளுக்கு இடையிடையே பல சந்தேகங்கள் ஏற்படும். குறுக்கிட்டுக் கேட்பாள்... தொடர்பாகக் கூறிவரும்போது இடையிடையே குறுக்கீடு ஏற்படுவது அவனுக்குப் பிடிக்காது என்றாலும் தேனாட்சிக்காகப் பொறுத்துக் கொண்டான்.

அவன் பேசிவரும்போது தேனாட்சியின் முகத்தில் ஏற்படும் மாறுதல்களை அவன் ரசித்தான். மிக அருகே அவளுடன் உட்கார்ந்து பேசும் அந்த வாய்ப்பை அவ்வளவு

எளிதில் இழந்துவிடக் கூடாது என்பதற்காக சொக்கநாதரின் இளவயது முதல் நடைபெற்ற சம்பவங்களை விரிவாகவே கூறினான்.

"தேனாட்சி! மதுரை நாட்டு அரசியல்மிகக் குழப்பமான நிலையில் உள்ளது. நமதுபாண்டிய மன்னரே ஒரு கால கட்டத்தில் சொக்கநாதரின் திறமையை எண்ணி வியப் படைந்திருக்கிறார். சொக்கநாதரின் பாட்டனார் திருமலை நாயக்கர் போல, இவரும் பெரும் புகழ் அடைவார் என்று எண்ணியிருந்தார். பாண்டியநாடு விடுதலையடைந்து மீண்டும் மதுரை மகுடத்தை அணிய வாய்ப்பே ஏற்படாது என்று சோர்வுடன் கூடிய முடிவுக்கும் வந்துவிட்டார். ஆனால் நாட்டில் நடைபெறும் சம்பவங்கள், சூழ்ச்சிகளைப் பார்க்கும்போது சொக்கநாதருக்கு ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது" செண்பகராமன் பேச்சைச் சற்று நிறுத்தினான்.

"ஓ"! என்று வியப்புக் குறியை முகத்தில் படரவிட்ட தேனாட்சி, "சொக்கநாதருக்கு நாட்டு நடப்பு ஏதும் தெரியாதா?" என்று கேட்டாள். தனக்குத் தெரிந் திருப்பதை விடப் பல மடங்கு செண்பகராமன் அறிந்திருக் கிறான் என்பதைப் புரிந்து கொண்டாள். அவளுக்கிருந்த சந்தேகத்தைக் கேட்டாள்.

"மதுரை மகுடத்திற்குப் பலத்த போட்டி. பலர் சூழ்ச்சி செய்கிறார்கள் என்று சொல்கிறீர்களே, சொக்கநாதருக்கு வாரிசு இல்லையா? மகனில்லையா? அவருக்குப் புதல்வர் ஒருவர் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேனே!" என்று கேட்டாள் தேனாட்சி.

"ஆமாம். சொக்கநாதருக்கு ஒரே ஒரு வாரிசு இருக்கிறான். முத்து வீரப்பன். அவன்மீது சொக்கநாதருக்கு



அளவற்ற அன்பு. ஆனால் மங்கம்மாளுக்கோ தன்மகனிடம் காரணம் தெரியாத வெறுப்பு. ஓராண்டுக் காலமாக முத்து வீரப்பன் மதுரை மாளிகையிலிருந்து எங்குச் சென்றான் என்றே தெரியவில்லை. அந்தக் கவலையே சொக்கநாதரின் உடலை மெலிவடையச் செய்து உள்ளத்திலும் கவலையை ஏற்படுத்திவிட்டது."

"முத்து வீரப்பனைத் தேடி அழைத்து வருமாறு அரசர் கட்டளையிடவில்லையா?" தேனாட்சி கேட்டாள்.

"மகன் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் சொக்கநாதர் சும்மாயிருப்பாரா? ஆனால் அவரிடும் கட்டளைகளை நிறைவேற்ற அதிகாரிகள் முனையவில்லை. அரசி மங்கம்மாளின் குறுக்கீடு அதிகம் ஏற்பட்டுவிட்டது. மன்னர் இடும் உத்தரவுகளைத் தன்னிடம் தெரிவித்த பிறகே நிறைவேற்ற வேண்டும் என்று மங்கம்மாள் கண்டிப் பாகக் கூறியுள்ளார். அதிகாரிகள் திகைக்கிறார்கள். மன்னர் இடாத கட்டளைகளை நிறைவேற்ற முயல்கிறார்கள். மாளிகையில் குழப்பம். அரசர் சொக்கநாதரின் புத்தி பேதலித்துவிட்டது. அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று புரளி மெல்லப் பரவத் தொடங்கியது. பாவம் மங்கம்மாள்! அரசியாக இருந்தும் நிம்மதியில்லை" என்றான் செண்பகராமன்.

"உம்; பாவமா? நமது பாண்டிய மன்னரைத் துரும்பாக நினைத்து அவள் அவமரியாதை செய்துள்ளதை நீங்கள் மறந்துவிட்டீர்களா?" தேனாட்சி சீறினாள்.

"எனக்கு மட்டும் கோபமில்லையா? அவர்களின் நிலையை நினைக்கும்போது எனக்கே பரிதாபமாக இருக்கிறது என்றுதான் சொல்ல வந்தேன். மாளிகைக்குள்ளே சதி; வெளியே அண்டை நாடுகளுடன் போர். மறவர் நாடு,

சேரநாடு, மைசூர் நாடு எல்லா நாடுகளுடனும் போர் நடத்தி, பொன்னையும் பொருளையும் வீணாக்கியுள்ளார் சொக்கநாதர் என்ற கெட்ட பெயர். போர்க்குணம் இன்னும் விடவில்லை அவரை. மங்கம்மாளுக்கும் சொக்கநாதருக்கும் அதைப் பற்றியே கடும் வாக்குவாதம். இன்னொன்று தெரியுமா தேனாட்சி? நமது பாண்டிய நாட்டின் பரம்பரைத் தலைநகர் மதுரை, பெருமை மிகுந்தது. மன்னர் சொக்கநாதர் சில காரணங்களுக்காக மதுரையினின்று திருச்சிக்குத் தலைநகரை மாற்றினார். ராஜதந்திரமாகவும் இருக்கலாம். அதைப்பற்றி நானோ, நமது அரசரோ கவலைப்படவில்லை. ஆனால், மதுரையில் தன் பாட்டனார் திருமலை நாயக்கர் கட்டிய பிரம்மாண்டமான மாளிகையிலிருந்து அழகிய மரத் தூண்களையெல்லாம் பெயர்த்து திருச்சிராப்பள்ளி அரண் மனைக்கு எடுத்துச் சென்றுவிட்டார். வேலைப்பாடு மிகுந்த அந்தத் தூண்களை நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு கதவும் திறமைமிகுந்த பாண்டிய நாட்டுத் தச்சர்கள் செய்தது. அதைப் பார்த்து எவ்வளவோ பேரர் எரிச்சல் பட்டனர். ஆத்திரப்பட்டனர்...''

“ஆ... அப்படியா அவை விலை மதிப்பற்றனவாயிற்றே?''

“அத்துடன் நின்றிருந்தால் சரி. மீண்டும் திருச்சிராப் பள்ளியிலிருந்து மதுரைக்கே தலைநகரை மாற்ற உத்தா விட்டு விட்டாராம் சொக்கநாதர்!''

செண்பகராமன் கூறியவுடன் தேனாட்சி களுக்கென்று சிரித்துவிட்டாள். அடுத்து ஆத்திரத்துடன், “நாயக்க அரசருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது போலிருக்கிறது!'' என்றாள்.

“நீயே சொல்லிவிட்டாய். அதுபோல மதுரையிலுள்ள வர்கள் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். தன் அருமைக்



கணவரை மற்றவர்கள் பைத்தியம் என்று சொல்லும்போது அரசியின் மனம் என்ன பாடுபடும்? தன் கணவருக்குப் பைத்தியமில்லை என்று மங்கம்மாளுக்குத் தெரியும் என்றாலும் அவருக்கு ஏற்பட்டிருக்கும் மனக் குழப்பம் அவரை உண்மையிலேயே பைத்தியக்காரராக மாற்றிவிடும் என்று அஞ்சினாள். அரசரின் மனக்குழப்பத்தை எப்படி யாவது தீர்க்கவேண்டும் என்று உறுதி பூண்டாள். 'அவருக்குப் பூரண ஓய்வு தேவை. அவர் மனத்தைக் குழப்புகிறவர்களையெல்லாம் நெருங்கவிடாமல் செய்ய வேண்டும்' என்றும் திட்டமிட்டாள்.''

ஒரே மூச்சில் செண்பகராமன் இவ்வளவு செய்திகளைச் சொல்லிவருவது தேனாட்சிக்கு வியப்பாயிருந்தது. தனக்குத் தெரிந்ததைவிட செண்பகராமன் நிறைய அறிந்து வைத் திருக்கிறார் என்பதில் அவளுக்குப் பெருமையே! அந்தப் பெருமிதம் அவள் விழிகளில் பிரதிபலித்தது. அந்த ஒளி வீச்சில் காதலும் கனிந்திருந்தது. அவர்மீது தனக்குக் காதல் ஏற்பட்டிருப்பது போல் அவருக்கும் இருக்குமா? இருவர் மனமும் ஒன்றுபட்டு காதல் வளர்ந்து திருமணமாகி தென்காசியிலேயே குடும்பம் நடத்தும் நிலை ஏற்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணினாள். விழித்திருந்த ஒரு கணம் அவள் மனம் கனவில் நிறைந்தது. மௌனமானாள்.

செண்பகராமன் அவள் முகத்தை ஒரு கணம் உற்றுப் பார்த்தவாறு, “தேனாட்சி... தேனாட்சி...'' என்றழைத்தான்.

திடுக்கிட்ட தேனாட்சி, 'தன் கனவை செண்பகராமன் அறிந்துவிட்டால்...!' நாணத்தால் சிவந்த முகத்தை மூடிக்கொண்டாள்.

"என்ன தேனாட்சி?" அவன் மிருதுவாக அவள் விரல்களைப் பற்றினான். சிலிர்த்த மேனியளாய் தேனாட்சி திடுக்கிட்டு, அவன் கரத்தை மெல்ல விலக்கி விழிகளால் அவனுடன் பேசிச் சற்று நகர்ந்தாள்.

"நமது மன்னர் குற்றாலத்தில் வேண்டிய வசதிகளைச் செய்து தந்திருக்கிறாரே, அந்த நன்றி கூட மங்கம்மாளுக்கு இல்லை" என்று பேச்சைத் திசை மாற்றினாள் தேனாட்சி.

"தேனாட்சி! மங்கம்மாளின் திறமை இப்போது புரிகிறது. இந்த நாட்டைத் தன் பிடிக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டாள் அரசி. குற்றால அருவியில் குளித்து அமைதியாக இருக்க மட்டும் திட்மிட்டு அரசரை மங்கம்மாள் அழைத்து வரவில்லை; மதுரையிலிருந்தால் சொக்கநாதரைப் பலர் சந்தித்துச் சலுகைகளைப் பெற்று, அவருடைய தயாள குணத்தைப் பயன்படுத்திப் பயனடைந்து விடுகிறார்கள். மேலும் அரசர் தளவாயின் சொல்லைக் கேட்கத் தொடங்கிவிட்டார். அதைத் தடுத்தாக வேண்டும் என்று அரசி விரும்புகிறாள். குற்றாலத்தில் தன் மேற்பார்வையில் மன்னர் இருக்க வேண்டும் என்பதும் அரசியின் திட்டம். குற்றாலத்திற்கு அழைத்து வந்ததற்கு அதுவே முதன்மையான காரணம்" என்று, தான் நேரே பார்த்து அறிந்தவன் போல் செண்பகராமன் கூறினான்.

தேனாட்சி மௌனமாய் அவன் முகத்தையே பார்த்தவாறு கேட்டுக் கொண்டிருந்தாள்.

"நான் ஒன்று கேட்கிறேன் சொல்வீர்களா?" என்று தேனாட்சி செண்பகராமனைக் காதல் விழிகளுடன் நோக்கியவாறு கேட்டாள்.



செண்பகராமன் பரபரப்படைந்தான். தேனாட்சி என்ன கேட்கப் போகிறாள்? ஒரு வேளை நாம் நினைப்பதையே கேட்டுவிடுவாளோ? அவளிடம் நாம் கொண்டிருக்கும் காதலை வெளிப்படுத்த நாம் துடிப்பதுபோல் அவளும் ஆர்வமுடையவளாயிருக்கிறாளோ? அல்லது சற்று முன்பு முதன்முறையாக அவளுடைய மெல்லிய விரல்களை வருடினோமே. அதை அவள் விரும்பாமல் அதைப்பற்றிக் கேட்டுத் தன் விருப்பமின்மையைத் தெரிவிக்க விரும்புகிறாளோ? என்ற கவலையுடன் அவள் கேட்கப் போவதை எதிர்பார்த்திருந்தான்.

## 4

குற்றாலத்திலிருந்து வாகுண பாண்டியன் தென் காசிக்குப் புறப்பட்டார். தன் மகள் இளவரசி முத்தம்மாளையும் உடனே புறப்படுமாறு கூறினார். அவ்வளவு விரைவாக குற்றாலத்திலிருந்து புறப்படுமாறு தந்தை கூறுவார் என்று முத்தம்மாள் எதிர்பார்க்கவில்லை.

தன் அந்தரங்கத் தோழி தேன்மொழியையும் அழைத்து அவளையும் உடன் சிவிகையில் அமரச் சொன்னாள்.

தேனாட்சி சற்றுத் தயங்கினாள். "தேனாட்சி! என்னுடனேயே அமரலாம். உன்னுடன் மனம்விட்டுப் பேசிவர இதுவே நல்ல வாய்ப்பு" என்று கூறினாள்.

குற்றாலத்திலிருந்து அவ்வளவு விரைவில் இளவரசி புறப்பட்டு விடுவாள் என்று தேனாட்சி சற்றும் எதிர் பார்க்கவில்லை. அதுபோல் பாண்டிய மன்னருடன் வந்திருந்த செண்பகராமனும் புறப்பட்டுவிட்டான். அன்று

அவனைப் பிரிகிறோமே என்ற வேதனை அவளுள்ளத்தில் இப்போது அதிகமிருந்தது. தென்காசிக்குச் சென்றால் இருவரும் ஒருவரையொருவர் சந்திப்பது அவ்வளவு எளிதன்று. பாண்டிய மாளிகை அந்தப்புரம் கட்டுக்காவல் மிகுந்தது. பிற ஆடவரின் நிழல்கூட அங்கே பட முடியாது. பாண்டிய மன்னரின் அந்தரங்க ஊழியராக செண்பகராமன் இருந்தாலும், அவனால் தேனாட்சியை நினைத்தபோது சந்தித்துவிட முடியாது.

குற்றால அருவிக் கரையில் சிற்து நேரம் அளவளாவக் கிடைத்த நேரத்தையும் சொக்கநாருக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைப் பற்றிப் பேசியே கழித்துவிட்டதில் அவனுக்கு வருத்தம். ஆனால் மதுரை மகுடத்திற்கு ஏற்பட்டுள்ள போட்டியைப் பற்றியும் மதுரை அரசருக்கு எதிராக ஏற்பட்டுள்ள சூழ்ச்சியைப் பற்றியும் அவன் விவரித்து வந்தபோது தேனாட்சி ஆவலுடனும், அதிசயத்துடனும் கேட்டு வந்தாள். அந்தப் போதில் அவள் முகம் மாறு வதையும் விழிகள் உணர்ச்சியைப் பிரதிபலிப்பதையும் அவன் ரசிப்பான்.

தேனாட்சியின் கரத்தை மெல்லப் பிடித்த செண்பகராமன் "இதுபோல் சந்தித்துப் பேச அவகாசம் கிடைப்பது மிக அபூர்வம் தான்" என்றான்.

"மணமிருந்தால் மார்க்கமுண்டு" என்று தேனாட்சி கூறி "தென்காசி கோயிலில் அர்த்த ஜாம பூஜை நடைபெறும் போது அரசர் வருவார். அவருடன் இளவரசியும் வருவார்" என்று குறிப்பாகத் தெரிவித்தாள் தேனாட்சி.

செண்பகராமன் மெல்ல நகைத்தான். "காசிவிசுவநாதர் சந்நிதிக்கு அரசர் வருவார். அவருடன் இளவரசியும்



வருவார்கள். நானும் வருவேன். உண்மைதான். ஆனால் இன்று நாம் சந்தித்து நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தது போல் அப்போது பேச முடியுமா?" என்றான்.

"நேரம் போவது தெரியாமல் வேறென்ன செய்தி பேசினோம்?" என்று தேனாட்சி அவனுள்ளத்தை ஊடுருவது போல் பார்த்தாள்.

"ஓ! நமது திருமணத்தைப் பற்றிப் பேசவில்லை என்று சொல்கிறாயா?" என்று அவன் திடீரென்று கேட்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அவள் முகம் கணத்தில் செவ்வல்லியாகியது. அவள் உள்ளத்திலும் காதல் துளிர் விட்டிருப்பது மெய்தான். ஆனால் அவனைப் போல் உடனே தன் இதயத்திலுள்ளதைப் பூ விரித்ததுபோல் தெரிவிக்க அவளால் இயலவில்லை என்றாலும் அவன் தனது கரத்தைப் பிடித்து மெல்ல வருடுவதை உணர்ந்தும் அவளால் உடனே அதை விலக்க விரும்பவில்லை.

என்ன சொல்வதென்று அவளுக்குப் புரியவில்லை. திருமணத்தைப் பற்றி அவ்வளவு விரைவில், எளிதில் கேட்டுவிட்டானே! அவன் நினைப்பதுபோல் அது அவ்வளவு எளிதில் நடைபெறக் கூடியதா? காதலுக்குக் கண் இல்லை என்று சொல்வது எவ்வளவு உண்மை. அவர் குலம் கோத்திரம் பாராமல், நான் காதல் கொண்டேன் என்பதற்காக என் பெற்றோர் என் காதலை ஏற்பாரா அல்லது அவரது பெற்றோர்தான் சம்மதிப்பார்களா?

"தேனாட்சி ஏன் மௌனமாகி விட்டாய்? உன்னை முதன் முதலில் சந்தித்தபோதே என் உள்ளத்தில் ஒருவித விவரிக்க முடியாத பரபரப்பு ஏற்பட்டது. உன்னை ஒரு முறை, மறுமுறை, இன்னொருமுறை பார்க்க வேண்டும்

என்ற ஆவல் ஏற்பட்டது". அவன் பேசிக்கொண்டே அவள் தோளைத் தொட முயன்றான்.

தேனாட்சி சற்று நகர்ந்தாள். "அதோ! மீண்டும் அழைப்பு வந்துவிட்டது. இளவரசி புறப்பட ஆயத்தமாகி விட்டாள். மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும் என எண்ணுகிறேன்" என்று தன் விழிகளை மெல்ல மூடித் திறந்தாள். உணர்ச்சி வசத்தால் விழிகளில் படர்ந்திருந்த நீர் கசிந்து விழிக்கோடியை நனைத்தது. அதை மறைக்க இதழ்களில் முறுவலைக் கூட்டினாள்.

அவனும் சிரித்தான். "தேனாட்சி! இனி நம் பயணம் நமது திருமணத்தை நோக்கித்தான் – நம் பேச்சு நம் திருமணத்தைப் பற்றித்தான்" என்றான்.

தேனாட்சி அவனை நேராக நிமிர்ந்து பார்த்தாள். "பாண்டிய இளவரசிக்கு விரைவில் திருமணம் நடக்கப் போகிறது. அதற்குப் பிறகுதான் என் திருமணத்தைப் பற்றி நான் நினைப்பேன், பேசுவேன்" என்றாள்.

அவன் மறுமொழி கூறுவதற்குள் தேனாட்சியை அழைக்க பணிப்பெண் வந்துவிட்டாள். விழிகளாலேயே பேசி விடைபெற்றுக் கொண்டு அவள் செல்வதைப் பார்த்தவாறு நின்றான் செண்பகராமன்.

சிவிகையில் தன்னுடன் அமர்ந்திருக்கும் தேனாட்சியை இளவரசி கேட்டாள்: "நதிக்கரையில் நேரம் போவதே தெரியவில்லை இல்லையா?"

தேனாட்சி திடுக்கிட்டாள். செண்பகராமனுடன் தான் பேசிக் கொண்டிருந்ததைத்தான் இளவரசி குறிப்பிடு கிறாள் என்று நினைத்து என்ன சொல்லுவதென்று புரியாமல் விழித்தாள்.



"எனக்குக்கூட விட்டுப் பிரிய மனமில்லை" என்றாள் இளவரசி. அருவிக் கரையில் செண்பகராமனுடன் இருந்து பேசிக்கொண்டிருந்த நிகழ்ச்சியைத்தான் 'எனக்கு' என்று இளவரசி குறிப்பிடுகிறாள் என்று எண்ணினாள்.

அசட்டுச் சிரிப்புடன், "அப்படியெல்லாம் எனக்கில்லை தேவி! நாட்டு நடப்பைப் பற்றி அவர் பேசிக்கொண் டிருந்தார். மதுரை மன்னர் மகுடத்திற்குப் பெரும் போட்டியாம். சூழ்ச்சியும், சதியும் நடக்கின்றனவாம்" என்றாள் தேனாட்சி. இளவரசி வியப்புடன் அவளை நோக்கினாள்.

"நமது மன்னரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் அவர். இல்லாவிட்டால் அவரோடு பேசிக் கொண்டிருந் திருப்பேனா?" என்றாள் தேனாட்சி.

இளவரசிக்குப் புரிந்து விட்டது 'ஓ!' என்று வியப்புடன் குரல் கொடுத்துச் சிரித்தாள்.

"பேச்சின் இடையே நான் கண்டிப்பாகச் சொல்லி விட்டேன். இளவரசியின் கல்யாணத்திற்குப் பிறகுதான் மற்ற பேச்செல்லாம் என்று சொன்னேன். பாண்டிய இளவரசியை மணப்பவர்தன் நாட்டைவிட்டுக் குற்றாலத்தி லேயே தங்கியிருக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனை இருக்கிறது என்றும் அவரிடம் மறக்காமல் சொன்னேன்" என்றாள்.

பாண்டிய இளவரசி முத்தம்மாள் தேனாட்சியை இமை கொட்டாமல் நோக்கினாள்.

"தேனாட்சி! என் தந்தையும் நீயும் என் திருமணத்தைப் பற்றி இன்று ஏதாவது பேசுவதென்று முன்பே திட்டமிட்டீர்களோ? அதனால்தான் என் தந்தை உடனே

தென்காசிக்குப் புறப்படுமாறு கட்டளையிட்டிருக்கிறார். நாளைக்காலை மலைக் கோயிலுக்குச் செல்ல வேண்டுமாம். என் திருமணம் விரைவில் நடக்க அங்கே ஒரு பிரார்த்தனை நடத்த வேண்டுமாம். முன்பே நேர்ந்து கொண்டார்களாம். அந்தக் கோயிலுக்குக் கன்னிப் பெண்கள் மட்டும்தான் செல்ல முடியுமாம். ஆண் வாசனையே கூடாதாம். அங்குள்ள தேவியைப் பிரார்த்தித்தால் விரைவில் திருமணம் நடந்து விடுமாம். எனக்குத் திருமணம் செய்து, என்னைப் பாண்டிய நாட்டை விட்டு அனுப்பி விடுவ தென்று எல்லாருமாக முடிவு செய்து விட்டீர்களா தேனாட்சி?" என்று பொய்க் கோபம் கொண்டவள் போல் இளவரசி கேட்டாள்.

செண்பகராமனுடன் தான் பேசிக் கொண்டிருந்ததைப் பற்றி தேவி அறிய விரும்பவில்லை என்பதைத் தேனாட்சி புரிந்து கொண்டாள்.

"தேவி! உங்களுக்குத் திருமணம் நடைபெற்றுப் பாண்டிய நாட்டிற்கு வாரிசாக ஒரு வீரன் பிறந்தால்தான் பாண்டியநாடு இழந்த பெருமையை மீண்டும் அடையும். இன்றுள்ள சூழ்நிலையில், சொக்கநாத நாயக்கரிடமிருந்து அரசுரிமையைப் பறிக்க அரசாங்க அதிகாரிகளே சதி செய்கிறார்கள். பாண்டிய பூமியை யார் யாரோ கவர நினைக்கிறார்கள் என்று நினைக்கும்போது, நாம் ஏன் அடைய நினைத்துத் திட்டமிடக் கூடாது என்று நமது அரசர் உங்களுக்கு உடனே திருமணத்தை நடத்திவிடத் திட்டமிட்டிருக்கிறார்?" என்றாள்.

நாட்டு நடப்பைப் பற்றித் தேனாட்சி இவ்வளவு விவரங் களைத் தெரிந்து வைத்திருப்பது முத்தம்மாளுக்கே வியப்பாக இருந்தது.



தென்காசியை அடைந்த மறுநாள் காலை, சேரநாட்டின் எல்லையிலுள்ள சக்தி கோயிலுக்கு இளவரசியும், தேனாட்சியும், பணிப் பெண்கள் காவல் வீரர்கள் சூழப் புறப்பட்டுச் சென்றனர். செண்பகராமன் வரவில்லை. மலை உச்சியிலுள்ள சக்தி கோயிலை அடைந்தபோது உச்சி வேளையாகிவிட்டது.

சிறப்பு ஆராதனைகள், அபிஷேகங்கள் முடித்து, ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும்போது, பாண்டிய வீர்கள் சிலர் விரைந்து ஓடி வந்து இளவரசியிடம் முக்கிய செய்தி ஒன்றைத் தெரிவித்தனர்.

"நமது எல்லையைக் கடந்து வந்த அயல்நாட்டு ஒற்றர்கள் இருவரைச் சிறைப்பிடித்து வைத்திருக்கிறோம். உங்கள் முன்னால் கொண்டு நிறுத்த விரும்புகிறோம்" என்றனர்.

"அயல்நாட்டு ஒற்றர்களா? எந்த நாட்டைச் சேர்ந்த வர்கள் என்று தெரியாதா?" என்று கேட்டாள் முத்தம்மாள்.

"சேர நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று தோன்றுகிறது" என்றான் வீரருள் ஒருவன்.

"சேர நாட்டவர்கள் இப்போது நமக்கு விரோதிகளா?" இளவரசி முத்தம்மாள் கேட்டாள்.

"பாண்டிய நாட்டின் விரோதிகளா இல்லையா என்று கூற முடியாது. ஆனால் மதுரை நாயக்க வேந்தருக்கும் சேர நாட்டவருக்கும் தீராத பகை. சேர நாட்டவர்கள் மதுரை நாயக்க நாட்டின் மீது படை எடுக்கத் திட்டமிட்டுள்ளனர். அப்படியென்றால் சேரர்களின் படைகள் தென்காசியைத் தானே முதலில் தாக்கும்?" என்றான் மற்றொரு வீரன்.

பிறகு முத்தம்மாளின் கட்டளைப்படி ஒற்றர்களை அவள் முன் கொண்டு நிறுத்தினர்.

ஒற்றர்களில் ஒருவருடைய விழிகளை எங்கோ சந்தித்த நினைவு தேனாட்சிக்கு எழுந்தது.

## 5

தென்காசி அரண்மனையில் மேல்மாடத்து நிலா முற்றத்தில் அமர்ந்து, தொலைவில் தெரியும் மலைச் சிகரத்தைப் பார்த்தவாறு சிந்தனையிலாழ்ந்திருந்தார் வரகுண ராம குலசேகர பாண்டியன்.

மங்கிய நிலவொளியில், மலைத்தொடர், பெரும் யானைகள் படுத்துக் கிடப்பதுபோல காட்சியளித்தது. மலையாள மின்னல் கீற்றுகள் மேற்குப் பகுதியில் மழை பெய்வதை அடையாளங்காட்டின. அருகே அமர்ந்திருந்த பாண்டிய அரசி மீனலோசனி, அரசரின் மௌனத்திற்கும் ஆழ்ந்த சிந்தனைக்கும் என்ன காரணமிருக்கும் என்று யோசித்தபடி அவர் முகத்தை நோக்கியவாறிருந்தாள். அதுபோன்ற நேரங்களில் வீணையை மீட்டி இன்பநாதத்தை எழுப்பி நடுநிசிவரையில் கவலையை மறந்திருக்கச் செய்யும் அரசி அன்று வீணையை மீட்டவில்லை. அவளருகே வீணை உறங்கிக் கிடந்தது.

குலசேகர பாண்டியர், தேவியின் பக்கம் திரும்பிப் பெருமூச்சு விட்டார்.

"இந்த நேரம் முத்தம்மாள், மலைக் கோயிலில் பூசை ஆராதனை அபிஷேகங்களை முடித்து, மலை வீட்டிற்கு வந்திருப்பாள்" என்றார்.



'ஆம்' என்பது போல் தலையை அசைத்த மீனலோசனி, "ஒரு நாழிகையும் மகளைப் பிரிந்திருக்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதனால் குற்றாலத்தில் இரண்டு நாள்கள்கூட அவளைத் தங்கவிடாமல் உடனே அழைத்து விட்டீர்களே, மகளிடம் உங்களுக்கு மட்டும்தான் பாசமா? எனக்கில்லையா? குற்றால அருவியை விட்டுவர மனமில்லையாம் அவளுக்கு. ஒரு நாள்கூடத் தங்கவிடாமல் அழைத்து விட்டீர்களாம். என்னிடம் வருத்தப்பட்டுக் கொண்டாள்" என்றாள்.

"முத்தம்மாளைப் பிரிந்து ஒரு கணம்கூட இருக்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் மலைக்கோயிலில் கன்னிபூசை நடத்தி இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. அவளுடைய திருமணம் அதனால்தான் தடைப்படுகிறதோ என்ற கவலை எனக்கு ஏற்பட்டது. உடனே முத்தம்மாளை அழைத்தேன்" என்றார் பாண்டிய மன்னர்.

"திருமணத்திற்குப்பின் அவள் கணவர் வீட்டிற்குச் செல்ல வேண்டியவள்தானே. அப்போது என்ன செய்வீர்கள்...?" என்று இதழ்களில் முறுவல் மிளிரக் கேட்டாள் அரசி.

மன்னரும் மெல்ல நகைத்தார். "ஆமாம் பெரிய கவலைதான். பாண்டிய இளவரசி கன்னியாகவே என்றும் இருந்து விடமுடியுமா? பாண்டிய பரம்பரை முத்தம்மாளுடன் முடிவடைந்து விடலாமா? அது மட்டுமன்று. நான் நாயக்கமாதேவி மங்கம்மாளிடம் செய்த சபதம் என்ன ஆவது?" என்றார்.

நாயக்க அரசி மங்கம்மாவிடம், தன் கணவர் பாண்டிய மன்னர்விடுத்த சூளுரையைப் பாண்டிய அரசி அறிவாள்.

பண்டைய பெருமை குன்றி பாண்டியர்கள், பாளையக் காரர்களாகக் கை அகல நாட்டை ஆளும் கொடிய

காலத்தை அரசி உணர்ந்துதானிருந்தாள். பாண்டிய அரசருக்குள்ள மனவேதனையையும் இழந்த பெருமையை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்று அவருக்குள் இருக்கும் வேகத்தையும் அவள் அறிவாள். மங்கம்மாவிடம் தன் கணவரிட்ட சபதம் நிறைவேறுமா என்ற கவலை அரசிக்கு எப்போதும் உண்டு.

மங்கம்மாவின் அகந்தையையும், துச்சமாகப் பேசக்கூடிய குணத்தையும் பாண்டிய அரசி அறிவாள்.

"இழந்த மதுரை மகுடத்தை மீண்டும் அடையாவிட்டால் அப்படி பாண்டிய வாரிசு ஒருவர் மதுரை நாட்டை ஆளும் நிலையை ஏற்படுத்தாவிட்டால், என் பெயரை வரகுணராம குலசேகரன் என்பதை மாற்றிக் கொண்டு தென்காசியைச் சுற்றியுள்ள பகுதியையும் துறந்து காட்டிற்குச் சென்று விடுகிறேன்" என்றும் தன் கணவர் சூளுரைத்துவிட்ட செய்தியையும் அரசி அறிவாள்.

பாண்டிய அரசர் தன் சபதத்தை எப்படி நிறைவேற்றப் போகிறார் என்ற கவலை பாண்டிய அரசிக்கு எப்போதும் உண்டு.

இந்த நிலையில் தன் மகள் தன் அருகேயே இருக்க வேண்டும் என மன்னர் விரும்புகிறார். அதே போது மகளுக்கு விரைவில் திருமணம் நடைபெற வேண்டும் என்றும் ஆசைப்படுகிறார். பாண்டியர் வாரிசு மீண்டும் உதயமாக முத்தம்மாளுக்குத் திருமணம் நடைபெற வேண்டும் என்று எண்ணுகிறார். இவையெல்லாம் எப்படி நடக்கப் போகின்றனவோ?

ஒரு பக்கம் சபதம் செய்து அதை நிறைவேற்ற முனைந்திருக்கிறார் மன்னர். மறுபக்கம் நாயக்க மன்னர் சொக்கநாதர் தங்கியிருக்கக் குற்றாலத்தில் குடில்



அமைத்து உபசாரம் செய்கிறார். பாண்டிய மன்னரின் போக்கே பிடிபடுவதில்லை.

"தேவி! சொக்கநாதருக்கு மனநோய் என்று திருச்சிராப் பள்ளியிலும் மதுரையிலும் பெரும் வதந்தி. மதுரை நாட்டில் நடைபெறும் சம்பவங்களை நானும் கேள்விப்பட்டேன். சொக்கநாதர் விரைவில் குணமடைந்தால்தான் மதுரை நாட்டிற்கும் நல்லது. நமக்கும் நல்லது. மதுரை நாடு நம் நாடு, அதை நாம் அடையவேண்டுமானால், சொக்கநாத ரோடு மட்டுமே போரிட வேண்டும். அவருக்கு ஏற்பட்டுள்ள பல விரோதிகள் நாட்டைக் கவர்ந்துவிட்டால், பல எதிரிகளுடன் போரிட வேண்டியிருக்கும். அது கடினம். அதனால்தான் சொக்கநாதர் உடல் நலத்துடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சொக்கநாதருக்கு எந்தவித உடல் நோயுமில்லை என்று நான் நினைக்கிறேன். பல தோல்விகள் அவருக்கு மனக்குழப்பத்தை ஏற்படுத்தி யுள்ளன.

"சில நாள்கள் அவர் மதுரையினின்று மாறுதலாக வெளியூரில் தங்கியிருந்தால் நல்லதென நான் எண்ணி னேன். நாயக்க அரசி மங்கம்மாளும் அதுபோலவே நினைத்து, எனக்கு ஓலை அனுப்பினாள். உடல் நோயும், உளநோயும் தீர்க்கும் மூலிகைகள் நிறைந்த குற்றால அருவிச் சூழல்தான் ஏற்ற இடம் என்று நான் முடிவு செய்து சொக்கநாதரைத் திருக்குற்றாலம் வருமாறு அழைத்தேன். இதில் பகை உணர்ச்சி, விரோத மனப்பாங்கு ஏதுமில்லை என்று முடிவு செய்தேன். மங்கம்மாளும், அரசர் சொக்கநாதரை அழைத்துக் கொண்டு திருக்குற்றாலம் வந்துவிட்டாள். வேண்டிய உதவிகள், வசதிகள் செய்து கொடுத்துள்ளேன். மதுரை மன்னருக்கு உபசரணை ஏதும் குறைவில்லாமல் நடைபெறுகிறதா என்று பார்க்கக் குற்றாலம்

சென்றேன். அங்கு மிக மகிழ்ச்சியாக முத்தம்மாள் தங்கியிருப்பதைக் கண்டேன். கன்னி பூசை நினைவிற்கு வந்தது. தென்காசிக்குத் திரும்புமாறு உடனே அழைத்தேன்'' என்று பாண்டிய மன்னர் மூச்சுவிடாமல் சொன்னது பாண்டிய அரசிக்குச் சிறிது நகைப்பையும் ஏற்படுத்தியது.

''எதற்காகச் சிரிக்கிறாய் தேவி?'' என்று பாண்டிய மன்னர் கேட்டார்.

''பாச உணர்ச்சி, பகைவருக்கும் அருளும் மனப்பான்மை கொண்ட பாண்டிய அரசால் எடுத்த சபதத்தை எவ்வாறு நிறைவேற்ற முடியும் என்று நினைத்தேன், சிரிப்பு வந்தது'' என்றாள் அரசி.

பாண்டிய அரசர் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக, தேவி! என் திட்டம் சரிவா நடைபெறுமானால் மதுரை மகுடத்தை நான் அடைந்துவிடுவேன்'' என்றார்.

எப்படி என்று கேட்பது போல் பாண்டிய அரசி புருவத்தை உயர்த்தினாள்.

''கன்னி பூஜை நடத்தியவுடனேயே, முத்தம்மாள் திருமணத்திற்கு வழி பிறந்து விட்டது. இன்று பகல் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. சேரநாட்டு மன்னருக்கு ஒரு மகன் இருக்கிறான். அவருக்கு நம் தூதுவரை அனுப்பி மணத் தொடர்பு கொள்ளப் போகிறேன். சேர நாட்டரசர் சொக்கநாதருக்குப் பகைவர். சேரநாட்டு இளவரசரை முத்தம்மாளுக்கு மணம் புரிந்தால் சேரநாட்டவர் உதவி நமக்குக் கிடைக்கும். எளிதில் சொக்கநாதரை வென்று விடலாம். பிறகு மதுரை மகுடத்தை அணிவது எளிதான காரியம்'' என்றார்.



உடனே மறுமொழி கூறாமல் சிறிது மௌனத்திற்குப் பிறகு பாண்டிய அரசி கேட்டாள். ''சொக்கநாதருடனா போர் புரியப் போகிறீர்கள்...?''

''ஆமாம்; அந்தப் போர் ஒரு நாளிலேயே முடிந்துவிடும்.''

''முன்பே சொக்கநாதருக்கு எதிராகப் பலர் சதி செய்வதாகக் கூறினீர்களே?''

''ஆம். அவர்களின் சூழ்ச்சி வெற்றியடையும் முன்பாக நான் மதுரை அரியணையில் அமர்ந்துவிட வேண்டும். மதுரை நாட்டை இரண்டாகப் பங்கு போட்டுக் கொள்ளச் சிலர் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். பாண்டிய நாடு இரண்டாகப் பிரிந்து விட்டால் பிறகு என் எண்ணத்தை என் - சபதத்தையும் நிறைவேற்றுவது மிகக் கடினம்.''

''உங்கள் திட்டம் வெளியே தெரிந்து விட்டாலோ...?''

''நியாயமான கேள்வி, தேவி! வெளியே தெரிந்து விட்டால், சொக்கநாதர் தென்காசி மீது படையெடுக்க மற்ற பாளையக்காரர்களை ஏவிவிடுவார். பாண்டிய நாட்டின் பரம்பரை என்று சொல்லக் கூடியவன் நான் ஒருவன் தான். என்னை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணம் மங்கம்மாவுக்கு உண்டு. அதனால், என்னைச் சிறைப்படுத்த படைவீரர்களை நாயக்க அரசியே ஏவிவிடுவாள். அதுமட்டுமன்று மதுரை நாட்டைத் துண்டாடிப் பங்குப் போட்டுக் கொள்ள நினைக்கும் நாயக்க நாட்டுத் தளபதியும், அமைச்சரும், இராயசமும் முதலில் என்னை ஒழித்துவிட முயல்வார்கள். அதனால் நான் மிக்க கவனத்துடன் இருக்க வேண்டும்'' என்றார். அவர் குரலில் ரகசியத்தின் முக்கியமும் ஒலித்தது.

"மதுரையைத் துண்டாட, சொக்கநாதருக்கு எதிராகச் சதி செய்ய தளபதியும், இராயசமும் முனைந்திருக்கிறார்களா?" என்று வியப்புடன் கேட்டாள் பாண்டிய அரசி.

"ஆமாம், தேவி! வேலியே பயிரை மேய்கிறது. சொக்கநாதரின் சகோதரரும் மதுரை மகுடத்தை அடையக் காத்திருக்கிறார்" என்றார்.

பாண்டிய அரசி மேலும் அறிய ஆவலுடன், பாண்டிய அரசரின் முகத்தை நோக்கினாள்.

## 6

"தேவி! வேலியே பயிரை மேயும் கதை உனக்குத் தெரியுமா? உனக் குத் தெரியாது. நமது பாண்டிய நாட்டில் அப்படி நேராது. தாயாதிகளுக்குள் சண்டை ஏற்படுமே தவிர, அவர்கள் சூழ்ச்சி செய்து நாட்டை அபகரிக்கத் திட்டமிடுவார்களே தவிர, படைத்தளபதி, முதலமைச்சர் போன்றோர் நாட்டை அடையச் சதி செய்தனர் என்று நானறிந்தவரை கேள்விப்பட்டதில்லை. ஆனால், நாயக்கர்கள் ஆளும் மதுரை நாட்டில் இப்போது சூழ்ச்சி தலைவிரித்தாடுகிறது" என்று கூறிய பாண்டிய மன்னர், தன் பட்டத்து அரசியிடம் மதுரையிலும் திருச்சி என்றழைக்கப்படும் திருச்சிரப்புரத்திலும் நடைபெறும் சதித்திட்டத்தை விவரிக்கலானார்.

பாண்டிய அரசி மீனலோசனி கேட்டாள். "சொக்கநாத மன்னருக்கு எதிராக நடைபெறும் சூழ்ச்சிகளை அவ்வளவு துல்லியமாக நீங்கள் எப்படி அறிந்தீர்கள்?"



பாண்டிய மன்னர் மெல்ல நகைத்தார். ரகசியக் குரலில், "தேவி! அது நமது ஒற்றர் படையினரின் திறமை. மற்றவரிடம் உன்னிடம் கூட – நமது ஒற்றர்களின் திட்டப்பணியைத் தெரிவிக்கக்கூடாது என்றாலும் பாண்டிய நாட்டுப் பேரரசி உனக்கு நாட்டு நடப்பு விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டும். குற்றாலத்தில் சொக்கநாதர் தங்கியிருக்கும் குடிலின் பாதுகாவலர்கள் பாண்டிய நாட்டு வீரர்கள். இராணி மங்கம்மாள் சொக்கநாதருடன் கடுமையாக விவாதிப்பதைக் கேட்டறிந்து உடனுக்குடன் அவர்கள் நமக்குத் தெரிவிக்கிறார்கள். மற்றும் நீ இந்தச் செய்தியை வெளியே மூச்சு விடக்கூடாது" என்றார்.

அரசி தலையசைத்தாள். மௌனமாக, அரசர் சொல்வதைக் கேட்டு வரலானாள்.

"ஒருநாள் மங்கம்மாளும், சொக்கநாதரும் உரத்த குரலில் விவாதித்தனர். அவர்களுடைய விவாதத்தினின்று பல உண்மைகள் வெளிவந்தன. அவற்றை ஆராய்ந்து உறுதிப்படுத்த நான் நமது ஒற்றர்களை ஏவினேன்" என்று கூறிய பாண்டிய மன்னர் குற்றாலத்துக் குடிலில் மங்கம்மாவிற்கும், சொக்கநாத நாயக்கருக்கும் நடைபெற்ற விவாத்தைத் தானே நேரே கேட்டதுபோல் விவரித்தார்.

மதுரை நாட்டின் தளவாயாக இலிங்கமன் பொறுப்பேற்றிருந்தார். அவாது நடவடிக்கைகள் மங்கம்மாவுக்குப் பிடிக்கவில்லை.

"தளவாய் இலிங்கமனைப் பெரிதும் நம்புகிறீர்கள். அவருக்குப் பெரும் சலுகை கொடுத்து விட்டீர்கள், அவர் என்ன சொல்கிறார்; என்ன செய்கிறார் தெரியுமா?" மங்கம்மாள் கேட்பது அவர் காதில் விழுகிறது.

"இலிங்கமன்படைத்தலைவர் பதவியை ஏற்றபிறகு மதுரை நாட்டிற்கு நற்பெயரைத்தானே கொண்டு வந்திருக் கிறான்! அவன் மீது உனக்கு ஏன் வெறுப்பு?" என்று சொக்கநாதர் கேட்கிறார்.

"தளவாய் இலிங்கமனை நீங்கள் மிகவும் நம்புகிறீர்கள். மதுரை நாட்டு அரசி என்ற முறையில் நான் கேட்கிறேன். அமைச்சரும் தளவாயும் எப்போதும் ஒன்று சேர்ந்து பேசுகிறார்கள். அவர்கள் என்ன பேசுகிறார்கள், என்ன திட்டமிடுகிறார்கள் என்று ஒரு நாளாவது நீங்கள் சாராம் சத்தைக் கேட்டறிய முயன்றதுண்டா? சொல்லுங்கள்" மங்கம்மாள் குரலில் அதிகாரம் பொங்கி நிற்கிறது.

வழக்கத்திற்கு மாறாக சொக்கநாதர் இதழ்களில் மெல்லிய சிரிப்புக் கோடுகள் புலப்படுகின்றன. தன் கணவர் மதுரை அரசர் சொக்கநாதர், தான் கேட்கும் கேள்வி களுக்கு ஒன்றும் பதில் கூறாமல் தலையசைப்பார்; அவர் மனநோய் கொண்டிருக்கிறார் என்றெண்ணிய மங்கம்மாள் அவரது மறுமொழியையும் அதற்கு முன்பு அவர் புன்னகை யையும் கண்டு திடுக்கிடுகிறாள்.

"மங்கம்மா! சந்தேகம் எனும் கொடிய விதையை நீ மனத்தில் விதைத்துக் கொண்டுள்ளாய். அது பூத்துக் காய்த்துக் கடைசியில் சந்தேக விஷக் கனியைத்தான் தரும். நான் இராயசம் இரங்கப்பனிடம் ஒவ்வொரு நாள் இரவும் அந்தரங்கமாக நடந்த சம்பவங்களைக் கேட்டு அறிவது உனக்குத் தெரியாது. நீ உறங்கி விடுவாய். அப்போது இராயசத்தை அழைப்பேன். அவன் காலை முதல் இரவு அந்தக்கண நேரம்வரை நடந்ததை விவரமாகச் சொல்வான்" சொக்கநாதர் கூறினார். அவர் முணு முணுப்பை மங்கம்மாள் கேட்க விரும்பவில்லை.



"உண்மையைச் சொன்னால் உங்களுக்குக் கோபம் வருகிறது. பேசத் துடிக்கிறீர்கள். நான் இராயசத்தைக் குறை கூறுவது உங்களுக்குப் பிடிக்கவில்லை. உங்களுக்குத் தெரியாமல் இராயசம் உங்கள் பெயரால் உத்தரவிடுகிறார். மதுரையினின்று திருச்சிராப்பள்ளிக்கு நாம் சென்றது அவருக்கு மிகவும் சாதகமாகிவிட்டது. மதுரையைச் சுற்றி யுள்ள பகுதிகளிலும் அவர் மக்களைக் கொடுமைப் படுத்தி வரி வசூலிக்க ஆணையிட்டது உங்களுக்குத் தெரியுமா?" மங்கம்மாள் அவரை நெருங்கிக் கோபமாகக் கேட்கிறார்.

ஆம், அவருக்குத் தெரியாது. இலிங்கமன் மதுரை நாட்டுத் தளபதி. அரசரின் உத்தரவுகளைக் கேட்டெழுதி அதை நிறைவேற்ற உத்தரவு அனுப்புவர். இராயசம் ரங்கப்பன் ஆலோசனை கூறுபவர். பிரதானி சென்னப்பர் முக்கிய அமைச்சர். சென்னப்பர் இளவயதினர். அவரது தந்தை கிருஷ்ணப்பர் சொக்கநாதரின் அபிமானம் மிகப் பெற்ற அமைச்சராக இருந்தவர். அவர் இறந்தபிறகு அவர் மகன் சென்னப்பரை அமைச்சராக ஆக்கிக் கொண்டார் சொக்கநாதர்.

**கா**லம் எப்பொழுதும் போல் செல்வதில்லை, அது ஒரு நதியைப் போன்றது. வளைந்து செல்லும், மேட்டிலிருந்து பள்ளத்தில் குதிக்கும், மறுபடியும் அதனால் மேட்டில் பாயமுடியாது. கரையைத் தாண்டும்.

படைத் தளபதி இலிங்கமனுக்கு ஒரு நாள் ஒரு யோசனை உதித்தது. மதுரை, தஞ்சை, செஞ்சி என்று நாட்டைப் பிரித்துக் கொண்டு விஜயநகர மன்னர்களின் பிரதிநிதிகள் ஆளுவதுபோல் திருச்சியின் சுற்றுப்புறப் பகுதிகளைக் கொண்ட பகுதிக்குத் தான் ஓர் அரசராக ஏன் ஆகக்கூடாது என்ற ஆசை அவருக்குத் தோன்றியது.

"இலிங்கமா, உன் யோசனை பயங்கரமானது என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் மிக ஆபத்தானது என்று சொல்வேன்" என்று சென்னப்பர் கூறினார். மேலும் அறியும் ஆவல் அதில் புலப்பட்டது.

சென்னப்பரின் தோளில் தன் கையைத் தோழமையுடன் வைத்து, "சென்னப்பரே! நீங்கள் வயதில் என் பிள்ளைக்குச் சமமானவர். ஆனால் அந்தஸ்திலோ மிக உயர்ந்தவர். உங்கள் தந்தை எனக்கு மிகவும் வேண்டியவர். சிறு பிராயத்திலிருந்து உங்களைக் கவனித்து வருகிறேன். உங்கள் மதிக்கூர்மை என்றாவது ஒரு நாள் மிகப் பெரிய அளவில் பயன்படப் போகிறது என்று கணித்துவிட்டேன். என் தீர்க்க தரிசனம் பொய்க்கவில்லை..." என்று கூறியது கேட்ட சென்னப்பரின் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை சலீர் என்று குளிர்ந்தது.

சென்னப்பர் குழைவது இலிங்கமனுக்குத் தெரிந்தது. புகழாஸ்திரத்தை இன்னும் அதிகமாக வீசினார். சென்னப்பர் மயங்கி விட்டார்.

"திருச்சிராப்பள்ளி நாட்டிற்கு நீங்கள் அரசர். நான் தளபதி, எப்பொழுதும் பிரதானியாக இருப்பது அலுப்பைத் தருகிறது. போர்க்களத்திலே வீர சாகசங்களைச் செய்யத் துடிக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?" என்றார் சென்னப்பர்.

"ஆகா! பலே சென்னப்பரே! தங்களைப் போன்ற வீர இளைஞர்கள் தாம் தளபதியாக இருக்கவேண்டும். அப்படியென்றால் பிரதானியாக யார் இருப்பது?" என்று இலிங்கமன் கேட்டார்.

"இராயசம் ரங்கப்பரைத் தவிர வேறு யார் பிரதானியாக இருக்கத் தகுந்தவரிருக்கிறார்கள்?" சென்னப்பர் கேட்டார்.



CPL565776

இலிங்கமன் சற்று யோசித்தார்.

565776

"ஒன்றும் யோசிக்காதீர்கள் தளபதி!, இல்லை - இல்லை மன்னிக்கவும். திருச்சிராப்பள்ளி நாட்டரசரே! ரங்கப்பர் நமது பக்கம். நாள்தோறும் என்னை அவர் சந்திக்கத் தவறுவதில்லை. மன்னர் சொக்கநாதரின் மனநிலை, அவரது திட்டங்கள், அவர் தரும் வாய்மொழி அனைத்தையும் அவர் அப்படியே ஒன்றுவிடாமல் சொல்லி விடுவார். சொக்கநாதரை அரியணையிலிருந்து இறக்கிவிட வேண்டும் என்பதில் அவருக்கு மிகுந்த துடிப்பு..." என்று சென்னப்பர் உற்சாகமாகக் கூறினார்.

894.8113
VIK

"அது துரோகமல்லவா? என்ன இருந்தாலும் சொக்கநாதர் நல்லவர். நமக்கு அவர்மீது மனிப்பட்ட விரோதமில்லை. அவர் மீது தனிப்பட்ட முறையில் வெஞ் சினம் எனக்கு இருந்தால் ஒரு நொடியில் அவரைத் தீர்த்துவிட்டு மதுரை அரியணையில் அமர்வதற்கு அதிக நேரம் பிடிக்காது. ஆனால் எனக்கு அத்தகைய பேராசை இல்லை. மதுரைப் பகுதியை அவர் வைத்துக் கொள்ளட்டும். திருச்சிராப்பள்ளியை நாம் வசப்படுத்திக் கொண்டால் பிறகு தஞ்சையும், செஞ்சியும் எளிதில் வீழ்ந்துவிடும். அதனால் துரோக சிந்தனை கூடாது என்றேன்" என்றார்.

இலிங்கமனின் இதயத்தை ஊடுருவது போல் சென்னப்பர் மிகச் சாதுர்யமாகப் பார்த்தார்.

"மன்னர் அவர்களே!" என்று மீண்டும் தொடங்கினார்.

"அப்படி அழைக்க வேண்டாம்; தளபதி என்று இப்பொழுது அழைத்தால் போதும். ஏனென்றால் நமது நாடு பிடிக்கும் திட்டம் வெளியே ஈ, எறும்புக்குக் கூடத் தெரிந்து

...MARA PUBLIC LIBRAR...

விடக்கூடாது. சிறு நிழல்கூட வெளிச்சத்தைக் காட்டி விடும்'' என்றார் இலிங்கமன்.

''அதுவும் நியாயமே! நான் இப்பொழுது சொல்ல வந்தது என்னவென்றால், ரங்கப்பன் துரோக சிந்தனை கொண்டிருக்கிறார் என்று நீங்கள் நினைத்துவிடக்கூடாது. ரங்கப்பரும் நம் திட்டத்தை ஆதரிக்கிறார் என்று சொல்ல வந்தேன். அவர் நமக்குப் பிரதானியாக இருக்கத் தகுதி வாய்ந்தவர்'' என்றார் சென்னப்பர்.

''ஆகா! உங்கள் திட்டமே என் திட்டம்'' என்று இலிங்கமன் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இவ்வாறு நாள்தோறும் மூவரும்கூடி ரகசியமாகப் பேசுவது வழக் கமாயிற்று. ஒரு நாள் இலிங்கமன் தம் திட்டமொன்றைக் கூறினார். 'செஞ்சியின் மீது உடனடியாகப் படையெடுத்துச் செல்வது என் திட்டம். மன்னரிடம் அனுமதி பெறப் போகிறேன்'' என்று இலிங்கமன் தொடங்கினார்.

சென்னப்பர் சிரித்தார். இலிங்கமன் கோபத்துடன் அவரைப் பார்த்தார்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?'' இலிங்கமன் கேட்டார்.

"செஞ்சியின்மீது படையெடுப்பதற்கு இதுவா தருணம்? நமது திட்டத்தை நிறைவேற்ற, தக்க சமயத்தைப் பார்க்காமல் வடக்கே தொலைவிலுள்ள செஞ்சிக்குப் படைகளுடன் செல்வதாகக் கூறுகிறீர்களே?'' தன் சந்தேகத்தைச் சென்னப்பர் தெரிவித்தார்.

இலிங்கமனின் கோபம் பறந்தது. பெரிதாக நகைத்து "சென்னப்பரே! இராயசத்தை அழைத்து என் யோசனையைப் பற்றி அவரது கருத்தைக் கேளுங்கள்...'' என்றார்.



இராயசம் வந்தார், சிறிது யோசித்தார். இலிங்கமனை நோக்கி, "நிஜமாகவே செஞ்சி மீது படையெடுக்கப் போகிறீர்களா?'' என்று கேட்டார்.

இலிங்கமன் இருகைகளையும் கொட்டி, "சென்னப்பரே! பார்த்தீர்களா, பார்த்தீர்களா! இராயசம் என் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டு விட்டார். அவர் அமைச்சராவதற்கு மிகத் தகுதியானவர். நமதுபுரட்சித் திட்டத்திற்கு ஏராளமான பணம் வேண்டும். படை வீரர்கள் நம் கையிலிருக்கவேண்டும் செஞ்சியை நோக்கிப் படைகள் செல்ல நாற்பதாயிரம் வீரர்களைத் தயார் செய்வேன். செஞ்சிப் படையெடுப்பு என்றால் எளிதா? அரசர் துளிக்கூடச் சந்தேகப்படமாட்டார். கோட்டை முற்றுகையின் போது நமது வீரர்களுக்கு உணவுப் பொருள்கள் வேண்டும். ஒரு மாதத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தயார் செய்து கொள்வேன். திருச்சிராப்பள்ளியிலிருந்து அவ்வப்போது வரவழைத்துக் கொள்ளலாம் என்ற பேச்சு எழாமல் செய்து விடுவேன். உணவுப் பொருள்கள், வெடி மருந்து எலிலாவற்றையும் கையுடன் கொண்டு செல்ல ஏற்பாடு செய்துவிடுவேன். அவ்வப்போது தேவையானவற்றை மட்டும் வரவழைப்பதென்ற பேச்சுக்கே இடம் வைக்கக்கூடாது.

இலிங்கமன் சொல்லி வருவதைச் சென்னப்பர் மிகக் கவனமாகக் கேட்டார்.

"செஞ்சிப் போரில் வெற்றி கிட்டாமல், தோல்வியடைந்து படைகள் சேதமானால், நமது திட்டம் என்ன ஆவது?'' சென்னப்பர் கேட்டார்.

இதற்க இலிங்கமன் பதில் கூறுமுன்பு, இராயசம் முந்திக் கொண்டார்.

"நீங்கள் கேட்டதைத் தளபதி அபசகுனமாக எடுத்துக் கொள்ள மாட்டார். கேட்க வேண்டிய கேள்விதான். எழவேண்டிய சரியான சந்தேகம்தான்... எனக்குத் தெரிந்தவரையில் தளபதி செஞ்சிக் கோட்டை அருகே செல்வார். ஆனால் போரிட மாட்டார்.சமாதானம் செய்து கொள்ள விரும்பும் செஞ்சி மன்னரிடமிருந்து குறைந்தது இருபதாயிரம் வராகனாவது கிடைக்குமா எனப் பார்ப்பார்."

இராயசம் இவ்வாறு கூறியவுடன் சென்னப்பர் ஒரு கணம் அயர்ந்து விட்டார். இலிங்கப்பனும் திடுக்கிட்டார். இராய்சத்தின் புத்தி சாதுர்யத்தை எவ்வாறு மெச்சுவது என்றே அவருக்குத் தெரியவில்லை.

"புதிதாக அமையப் போகும் திருச்சிராப்பள்ளி நாட்டிற்கும் தகுந்த அமைச்சர் கிடைத்துவிட்டார்!" என்று கூறி இலிங்கமன் கைகொட்டிக் கூத்தாடினார்.

சென்னப்பரின் முகம் சுருங்கியது. 'சொக்கநாதர் கூறுவதைமட்டும் எழுதி அதை நிறைவேற்றும் இராய சத்திற்கு இப்படி ஓர் அறிவாற்றலா? புத்திக் கூர்மையா? நம்மைவிடத் திறமையுடையவர் என்று இலிங்கமன் பாராட்டும் அளவிற்கு அறிவு மிகுந்தவரா இராயசம்? ஹூம்' என்று பெருமூச்சு விட்டார்.

சென்னப்பரின் முகமாறுதலைக் கவனித் இராயசம் அவதுக்கு உற்சாகமூட்ட விரும்பி இலிங்கமனைப் பார்த்துக் கூறுவதுபோல், "தளபதி அவர்களே! நமது திட்டம் வெற்றிகரமாக முடிய வேண்டுமென்உறால் அது நமது பிரதானியால்தான் முடியும்" என்றார்.

இலிங்கமன் வியப்புடன் இராயசத்தை நோக்கினார். சென்னப்பரும் ஆவலுடன் அவர் என்ன சொல்லப் போகிறார் என்று எதிர்பார்த்தார்.



"தளபதியாரே! திருச்சிராப்பள்ளியினின்று தலை நகரத்தை மீண்டும் மதுரைக்கு நமது அரசர் மாற்றினார் என்றால்தான் நாம் பயமின்றித் திட்டத்தை நிறைவேற்ற முடியும்" என்றார் இராயசம்.

"அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?" சென்னப்பர் கேட்டார்.

"நாம் தான் செய்ய முடியும். குறிப்பாக நீங்கள் தான் செய்ய முடியும். மன்னருக்கு யோசனை கூறலாம்" என்றார் இராயசம்.

"திருச்சிராப்பள்ளியிலிருந்து மதுரைக்குத் தலைநகரை மாற்றுவதற்கான காரணங்களைத் தக்கவாறு அடுத்துச் சொல்ல வேண்டும். மன்னர் பெரும் பொருள் செலவிட்டு மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குத் தலைநகரை மாற்றியுள்ளார். மீண்டும் மாற்ற வேண்டும் என்றால் பொக்கிஷம் காலியாகிவிடும். அது நல்ல யோசனையாக எனக்குத் தோன்றவில்லை" என்றார் சென்னப்பர்.

இது கேட்டு இலிங்கமன், வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

இராயசம் விட்டாரில்லை. "மன்னர் ஒப்புக் கொள்ளா விட்டால், அரசியிடம் சொல்லிப் பாருங்களேன். இந்தத் திட்டம் நிறைவேறினால் நமக்குப் பலவிதத்தில் நன்மை. இராணி மங்கம்மாளுக்குத் திருச்சிராப்பள்ளி வாசம் பிடிக்கவில்லை. தினமும் மீனாட்சி அம்மையைத் தரிசிக்க முடியாத வேதனை அவர்களை வாட்டுகிறது. தஞ்சையுடன் அடிக்கடி சமர் செய்யும் ஒரே நோக்கத்துடன் தானே மதுரையினின்று திருச்சிக்கும் மன்னர் வந்தார்? போர் இப்பொழுது ஒரு வகையில் அடங்கியிருக்கிறதே" என்று இராயசம் கேட்டார்.

சென்னப்பர் தலையைப் பலமாக அசைத்தார். "நடக்காத காரியம்; வேறேதாவது யோசனை சொல்லுங்கள். மதுரைக்குச் சென்றால் மீண்டும் மாளிகையைப் புதுப் பித்துக் கட்ட வேண்டாமா?" சென்னப்பர் கேட்டார்.

இது கேட்டவுடன் இலிங்கமன் பெரிதாக நகைத்தார். "ஐயோ! மக்கள் என்ன நினைப்பார்கள், நமது மன்னரின் மதியைப் பற்றி? மதுரையினின்று பெரிய மாளிகையை இடித்து அதன் கதவுகளையும், தூண்களையும் திருச்சிராப் பள்ளிக்குக் கொண்டு வந்தாரய்யா! இதைவிடப் பைத்தியக் காரச் செயல் வேறு உண்டா? மறுபடியும் மதுரைக்குச் செல்வதென்றால் பாளையக்காரர்கள் எள்ளி நகையாடுவர். மக்கள் மன்னருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்பர்" என்று சிரிப்பை அடக்க முடியாமல் வெடிச் சிரிப்புடன் பேசினார்.

அங்கே சிறிது நேரம் மௌனம் நிலவியது. இப்பொழுது இராயசம் கையைச் சொடுக்கிக் கொண்டு, "எனக்கு நல்தொரு யோசனை உதித்துவிட்டது. 'மன்னருக்குப் பைத்தியம் பிடித்துவிட்ட'தென்ற புரளியைக் கிளப்பிவிட வேண்டும்" என்றார்.

"மன்னருக்குப் பைத்தியம் என்று சொன்னால் மங்கம்மாள் சும்மா இருப்பாளா?" சென்னப்பர் கேட்டார்.

"இருப்பார். மங்கம்மாளின் மனத்தில் எவ்வளவோ கனவுகள், இலட்சியங்கள்! தாம் சொல்வதை மன்னர் கேட்பதில்லை என்று மங்கம்மாளுக்கு மிக மிக ஆத்திரம். சிறிது காலம் சொக்கநாதர் எதிலும் தலையிடாமல் இருந்தால் நல்லது என்று மங்கம்மாள் எண்ணுகிறாள். அதனால், 'மன்னருக்குப் பைத்தியம், ஒய்வு தேவை' என்று



கூறி நாமே அவரைத் தனி அறையில் அடைத்துவிடலாம்" என்றார் இராயசம்.

"மங்கம்மாளின் மனநிலையை நீங்கள் எப்படி அறிவீர்கள்?" என்று இலிங்கமன் கேட்டார்.

இராயசம் கம்பீரமாக இருவரையும் நோக்கி, "அது தான் என் சாமர்த்தியம். இராயசத்திற்குத் தெரியாமல் எதுவும் நடக்காது என்பது உங்களுக்குத் தெரியாதா? மங்கம்மாள் தன் தந்தைக்கு அனுப்பிய ஓலையிலிருந்து அறிந்தேன். நான் அறியக்கூடாதென்று புதுவிதமாக, ஓலையைத் தானே எழுதினாள் அரசி. எனக்குத் தெரியாமல் போய் விடுமா? அந்தச் செய்தி எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதப்படவில்லை. பனை ஓலை, பட்டுத்துகில், பதனிடப் பட்ட தோல் ஆகியவற்றில் எழுதித்தான் நாம் பார்த்திருக் கிறோம். ஆனால் பாதிரிமார்கள் புதிதாக காகிதம் என்று பெயரிட்டு ஒன்றை உபயோகிக்கிறார்கள். பாதிரிமார்களிட மிருந்து வெள்ளை நிறக் காகிதத் தாள்களை மங்கம்மாள் பெற்றுப் பாதுகாத்து வைத்திருக்கிறார். கடுக்காயைக் காய்ச்சிக் கருமை நிறத்தில் வர்ணக்குழம்பு ஒன்று தயாரித்திருக்கிறார். மயில் இறகைக் கூர்மையாக்கி வெள்ளைக் காகிதத்தில் அந்தக் கறுப்பு மையால் எழுதுகிறார். அந்த மையால் எழுதினால் காலத்திற்கும் அழியாதாம். தன் தந்தைக்கு மனம் விட்டு எழுதியுள்ளார். மதுரை நாட்டின் நிலைமை மோசமாகிறது என்றும், மன்னர் மனம் போன போக்கில் நடந்து கொள்கிறாரென்றும், அவர் நடவடிக்கைகளைப் பார்த்தால் அவருடைய மனம் பேதலித்துவிட்டதென்றே தோன்றுகிறது என்றும் நான்கு பக்க நாடுகளிடம் பகை ஏற்பட்டுவிட்டது என்றும் குறிப்பிட் டுள்ளார். தன் தந்தையை நாகலாபுரத்திலிருந்து உடனே புறப்பட்டு வருமாறு எழுதியுள்ளார்."

இராயசம் சற்று நிறுத்தி இருவரது முகத்தையும் உற்று நோக்கினார். "பிறகென்ன, வியப்பாக இருக்கிறதா? இன்னும் சொல்கிறேன். தனக்குக் குழந்தை பிறக்காத ஏக்கம் அரசியாருக்கு இப்பொழுதுதான் பெரிதாகத் தெரிகின்றது. அடுத்து நாட்டை ஆள்வதற்கு வாரிசு இல்லையே என்ற கவலை ஏக்கத்தை மிஞ்சுகிறது - கவலையும் ஏக்கமும் பிரம்மாண்டமான எண்ணத்தை உள்ளத்தில் உருவாக்கிவிட்டது" என்றார்.

இலிங்கமனும், சென்னப்பரும் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். நிமிர்ந்து உட்கார்ந்தனர். இலிங்கமன் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். சென்னப்பர் நிதானமாக, "இராயசம் அவர்களே! உங்களுக்குத் தெரிந்தவை எல்லாம் எங்களுக்குத் தெரிய நியாயமில்லை. இருந்தாலும் சில விவரங்கள் அனைவரும் அறிந்தவை தாம். ராணி மங்கம்மாள் வாரிசு இல்லையே என்று வருத்தப்பட நியாயமில்லை. முத்துவீரப்பர் அவளுடைய புதல்வரல்லவா? முத்துவீரப்பர் இருக்கும்பொழுது மங்கம்மாள் ஏன் வருத்தப்பட வேண்டும்?"

புதிய புதிய புதிர்கள் புற்றிலிருந்து புறப்படுவதுபோல் புறப்படுகின்றன. ஒரு விதத்தில் இந்தச் செய்தியும் நமக்கு உதவியாகத்தானிருக்கப் போகிறது. வாரிசற்ற மதுரையை அடுத்து ஆளப்போவது யார்? இப்பொழுதே நாம் அந்தப் பிரச்னையைக் கிளப்புவோம். மக்களிடையே கிளர்ச்சியை ஏற்படுத்துவோம்" என்றார்.

இலிங்கமன் கண்களை மூடிக்கொண்டு சிறிதுநேரம் சிந்தித்தார். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர் போல், "இதோ பாருங்கள் பிரதானியாரே! இராயசம் அவர்களே! முடிவாக நான் ஒன்று கூறுகிறேன்" என்றார்.



இராயசமும், பிரதானியும் அவர் கூறப்போவதைக் கவனத்துடன் கேட்க அவரிடம் நெருங்கி அமர்ந்தனர்.

'செஞ்சியின் மீது நான் படையெடுக்கும் திட்டத்திற்கு எவ்வாறாவது மன்னரின் அனுமதி பெற்று விடுகிறேன். படைகளுடன் நான் புறப்பட்டுச் சென்றவுடன் நீங்கள் இருவரும் இரண்டு முக்கிய திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். மதுரைக்குத் தலைநகரை மாற்றுமாறு அரசரைப் பிரதானி வற்புறுத்த வேண்டும். இராயசம் அரசர் இடாத உத்தரவுகளை இட்டுப் பொதுமக்களிடம் மன்னர் மீது அதிருப்தியை வளர்க்க வேண்டும். இரண்டிலும் நீங்கள் சாமர்த்தியமாகச் செயலாற்றுவதைப் பொறுத்திருக்கிறது நாம் வெற்றியடைவது. செஞ்சி முற்றுகையை ஒரு மாத காலத்திற்கு மேலும் நான் நீட்டிக் கொண்டே போவேன். அதற்குள் நீங்கள் உங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்" என்றார்.

செஞ்சி படையெடுப்பிற்கு முன்பு மூவரும் பலமுறை கூடிப் பேசினர். தங்கள் திட்டம் ஒருவருக்கும் தெரியக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்தனர். ஆனால் இராயசம் சிறு தவறு செய்துவிட்டார். தன் ஆசை நாயகியின் வீட்டிற்கு அவர் சென்றபொழுது ஒரு நாள் மிக உற்சாகமாக வருங்கால நல்வாழ்வைப் பற்றிய தனது திட்டத்தை அவளிடம் தெரிவித்தார். அதனால் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

# 7

அபரஞ்சி முகவாட்டத்துடன் மஞ்சத்தில சாய்ந்து கொண்டிருந்தாள். தாய்க்கிழவி எவ்வளவோ வற்புறுத்தியும் சாப்பிட வர அவள் மறுத்துவிட்டாள். "மதுரையிலிருந்து பட்டர் வந்து போனார்" என்று தாய்க்கிழவி சொன்னாள்.

சோமநாத பட்டர் வந்தார் என்றால் அபரஞ்சியின் முகம் மலர்வது வழக்கம். ஒல்லியான உடல், தீர்க்கமான மூக்கு, ஆழ்ந்த கண்கள், சிவந்த மேனி, நெற்றியில் விபூதியும், குங்குமமும் பளிச்சென்று துலங்க, இடையில் அணிந்து வந்த மஞ்சள் பட்டாடை மீது நீல உத்திரீயத்துடன் ஜவ்வாது மணம் வீச பட்டர் வரும்போது அந்த வீடே கலகலப்பாக இருக்கும். ஆவணி மூல வீதியில் சிறு சந்துக்குள் நுழைந்து சென்றால் அபரஞ்சியின் வீட்டை அடையலாம். வீட்டின் முகப்பும், நுழையும் பாதையும் பார்க்கச் சகிக்காமல் இருந்தாலும் உள்ளே நுழைந்தவுடன் விசாலமான கூடம் இருக்கும்.

கூடத்தின் எதிர் எதிரே அறைகள் விளங்கும். சரவிளக்குகள் ஒளி பரவச் செய்யும். இரத்தினக் கம்பளமும், ஊதுவத்தியும், அகில் புகை வாசனையுமாக அங்கே நுழைபவர் உள்ளத்தைக் கவர்ந்திழுக்கும். அபரஞ்சி அந்த வீட்டின் அழகு மகள். எவராலும் வயதைக் குறிப்பிட முடியாவண்ணம் பருவத்தின் எழில் தேவதை அவள் மேனியை அபிஷேகம் செய்திருந்தாள். கவிஞர்கள் பாடி விட்டுச் செல்வர். பட்டுச் சரிகை இழைத்த புடைவையை எடுத்து அவள் மேனியில் சார்த்தி அழகு பார்க்க சௌராட்டிர வணிகர் வருவர். நாடெங்கும் சுற்றிவரும் காஷ்மீரத்துக்



குங்குமப் பூ வியாபாரி தந்தப் பேழையில் விலையுயர்ந்த குங்குமப் பூ முதலிய வாசனைத் திரவியங்களைக் கழலடியில் காணிக்கையாக்குவர்.

யார் வந்தாலும் அவளுக்குப் பிரியமிருந்தால் தான் அந்த முகத்தாமரை இதழ் விரிந்து சிறு முறுவல் பூக்கும். செம்பவளவாய் விரிந்து ஒரு சிறு சொல் உதிரும். இல்லாவிட்டால் கூடத்து அறையை விட்டு வெளியே வரமாட்டாள். அவள் அத்தை மகள்களோ, மூத்த சகோதரியோ சிரித்துப் பேசி வீணை முதலிய கருவியுடன் இசை எழுப்பி வந்தவர்கள் முகக் கோணலை நிமிர்த்த முயல்வார்கள். பூஞ்சிட்டுகள் போன்ற மங்கையர் பாதச் சலங்கை ஒலிக்க நடனமிடும் அழகைப் பார்த்து அவர்கள் திருப்தியடைய வேண்டியதுதான்.

இராயசம் ரங்கப்பன் வந்து விட்டாரென்றாலும் அபரஞ்சி குதித்தோடி வருவாள். எவ்வளவோ இளைஞர்கள், இலட்சணமானவர்கள், செல்வர்கள் இருக்க நடுத்தர வயதினர் – ஆனால் அதிக இலட்சணமில்லாத இராயசத்திடம் அபரஞ்சிக்கு என்ன அவ்வளவு மோகம் என்று தாய்க்கிழவிகூட சில சமயம் ஆச்சரியப்படுவாள்.

அபரஞ்சியின் அந்தரங்கமோ வேறு விதமானது. தன்னைப் பேரழகி என்று பலரும் மெச்சுவதை மட்டும் அவள் விரும்பவில்லை. இளமை கொலுவிருக்கும் எழில்மேனி கொண்ட அவள் சமூகத்தில் பெரும் அந்தஸ்துடன் வாழவேண்டும் என்று ஆசைப்பட்டாள். 'என் கணவர், என் எசமானர், என் தலைவர்' என்று ஒருவரை அழைத்துக் கொள்வதில் பெருமையடைய வேண்டும் என்று விரும்பினாள். முத்துப் பல்லக்கில் சிவிகை சுமப்போர் சுமந்து வரும்போது, திரையை விலக்கி எட்டிப் பார்த்தால் தன்னை

மிக மரியாதையுடன் மக்கள் வணங்கவேண்டும் என்ற உயர் கௌரவத்தை எதிர்பார்த்தாள். தோளின்மீது தன் குழந்தையைத் தவழவிட்டுப் பார்க்க ஆசைப்பட்டாள். மடியில் குழந்தையைக் கிடத்திக் கொஞ்ச ஆசை கொண்டாள். தொட்டிலிலிட்டுத் தாலாட்டுப் பாட ஆர்வங்கொண்டாள். பிள்ளைக் கனியின் பவளச் செவ்வாயை முத்தமிட்டு மகிழத் துடித்தாள்.

அவளுடைய உள்ளத்தின் ஒரு மூலையிலிருந்து ஆசையைத் தூபமிட்டு வளர்த்தவர் இராயசம்தான்.

இராயசம், மன்னர் சொக்கநாதரின் அந்தரங்க அதிகாரி என்பதைப் புரிந்து கொண்ட அபரஞ்சி, தன்னை அவர் நெருங்க அனுமதித்ததுடன் தன் இதயத்திலும் அவருக்கு நெருக்கமாக இடமளித்தாள். அவளுடைய ஆசைக் கனவுகளை அவர் வளர்த்தார்.

"என்றாவது ஒரு நாள் உன்னை மாளிகையின் மேல் மாடத்தில் இலவம் பஞ்சு மெத்தை விரித்த கட்டிலில் ஒய்யாரமாக இருக்க வைக்கிறேன்" என்று ஆசையுடன் அவர் கூறுவார்.

'அந்த ஒரு நாள் எப்போது வரும்?' அபரஞ்சி கொஞ்சுங்குரலில் கேட்பாள். அடிக்கடி கேட்பாள்.

'மாளிகை எங்கே கட்டப்படும்? எப்போது கட்டப்படும்?' என்று கேட்பாள்.

"அபரஞ்சி! திருச்சிராப்பள்ளியில் உனக்காக ஒரு மாளிகை கட்டிக் கொண்டிருக்கிறேன். வெகு சீக்கிரம் உன்னை அழைத்துச் செல்வேன்" என்று கூறி மாங்கனி போன்ற அவள் கன்னத்தை மெல்லக் கிள்ளியபடியே ஆசையை வளர்ப்பார்.



அபரஞ்சி அவரது வார்த்தையைப் பெரிதும் நம்பியிருந்தாள். திருப்பரங்குன்றம் கோயிலில் அவரைத் திருமணம் செய்து கொண்டு குலமகளாக மாறிவிடப் போகிறோமென்று கனவு கண்டாள்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து மதுரைக்கு ஏதாவதொரு காரணத்தை வைத்துக் கொண்டு இராயசம் வந்துவிடுவார். அபரஞ்சியைச் சந்திக்காவிட்டால் அவரது மண்டையே வெடித்துவிடுவது போலாகி விடும்.

சமீப காலமாக முன்போல் இராயசத்தால் அபரஞ்சியைச் சந்திக்க முடியவில்லை. அபரஞ்சியின் தவிப்பு அதிகமாகியது. ஒரு நாள் நம்பிக்கை மிகுந்த பாங்கி ஒருத்தியை அழைத்துத் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று இராயசத்தைச் சந்தித்து வருமாறு சொல்லி அனுப்பினாள். பாங்கியும் இராயசத்தை ரகசியமாகச் சந்தித்தாள். விரைவில் மதுரை வருவதாகவும் மிகமிக நல்ல செய்தியைக் கொண்டு வருவதாகவும் அவர் சொல்லி அனுப்பினார். மதுரைக்குத் தான் வரும் நாளையும் குறிப்பிட்டார்.

இராயசத்தைப் பார்த்துச் செய்தியை அறிந்து திரும்பிய பாங்கி, வழியில் அவளுடைய உயிர்த் தோழியை எதிர்பாராத விதமாகச் சந்தித்தாள். மதுரையில் அரச குடும்பத்தவர்கள் இருந்தபோது, இருவருக்கும் மிக நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது.

திருச்சிராப்பள்ளிக்குத் தான் வந்த விவரத்தை ஒன்று விடாமல் தெரிவித்தாள் அபரஞ்சியின் பாங்கி. இராயசத்துக்கும் அபரஞ்சிக்கும் உள்ள தொடர்பையும், சமீப காலமாக இராயசம் மதுரைக்கு வராமலிருப்பதையும், அவரைக் காணாது வருத்தமுற்ற அபரஞ்சி தன்னை இராயசத்திடம் அனுப்பி வைத்ததையும் ஒன்றுவிடாமல்

தெரிவித்தாள். அத்துடன் தன்னிடமிருந்து சிறுபேழை ஒன்றை அவளிடம் காட்டினாள். அதில் முத்துப் புல்லாக்கு ஒன்று பளபளத்தது. அபரஞ்சிக்கு அதை அன்பளிப்பாக இராயசம் கொடுத்திருந்தார் என்பதையும் தெரிவித்தாள்.

முத்துப்புல்லாக்கு ஒளி வீசியது. கண்ணைக் கவர்ந்தது. அந்தப் புல்லாக்கை மங்கம்மாவின் நகைப் பெட்டியில் ஒருமுறை பார்த்திருந்தது பாங்கியின் உயிர்த் தோழியான அரண்மனைப் பணிப்பெண்ணின் நினைவுக்கு வந்தது.

அரண்மனைப் பணிப்பெண், அபரஞ்சியின் பாங்கியைப் பார்த்து, "உன் தலைவி அதிர்ஷ்டசாலி! இந்தப் புல்லாக்கு விலை மதிப்பற்றது தெரியுமா?" என்று கேட்டாள்

அபரஞ்சியின் பெருமையைத் தன் தோழியிடம் தெரிவிக்க விரும்பிய பாங்கி, "எங்கள் தலைவியின் அதிர்ஷ்டம் யாருக்கும் வராது. நீயே பார்க்கப் போகிறாய், ஒரு நாள் என் அருமை அபரஞ்சி அரச மாளிகையில் ராணி போல் வாழப்போவதை!" என்று பெருமை பொங்கக் கூறினாள்.

பாங்கி சொல்வதைக் கேட்கக் கேட்க அவளுடைய தோழிக்கு வியப்புத் தாங்கவில்லை. மனத்தில் ஒரு நொடி கூட அந்தச் செய்தியை அடக்கி வைக்க முடியவில்லை. தான் கேட்டறிந்தவற்றை அன்றே மங்கம்மாளிடம் தெரிவித்து விட்டாள். மங்கம்மாள் ஒரு கணம் திடுக்கிட்டாள். ஆனால் தன் திகைப்பை வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை. நகைப் பேழையைத் திறந்து பார்த்தாள். அதில் முத்துப் புல்லாக்கைக் காணவில்லை. திகைத்த மங்கம்மாள் இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று முடிவு செய்தாள். இராயசத்தின் மீது அவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. தன் பணிப்பெண்ணிடம் ரகசியமாக இராயசத்தின் நடவடிக்கைகளைக் கண்காணிக்குமாறு கட்டளையிட்டாள்.



அபரஞ்சியிடம் முத்துப் புல்லாக்கைக் கொண்டு கொடுத்தாள். பாங்கியின் முத்துப் புல்லாக்கு ஒளியிலும் அழகிலும் மதிப்பிலும் மகிழ்ந்துவிடாத அபரஞ்சி இராயசம் என்ன சொல்லி அனுப்பினார் என்று ஆவலுடன் கேட்டாள். இராயசம் வருவதாகக் கூறிய நாளைத் தெரிந்து கொண்டாள்.

அபரஞ்சி தன் சோகத்தை மறந்து புது உற்சாகங் கொண்டு இராயசம் வரும் நாளை எதிர்பார்த்திருந்தாள். குறிப்பிட்ட நாளன்று இராயசத்தைக் காணவில்லை. இரவு முழுவதும் விழித்திருந்தாள். அபரஞ்சிக்கு வேதனை அதிகமாகியது. இருப்புக் கொள்ளவில்லை. முகவாட்டத்துடன், உணவு உண்ணாமல் ஒருவரையும் சந்திக்க விரும்பாமல் அபரஞ்சி சோகமே உருவாக இருந்தாள். சாதி வழக்கத்துக்கு மாறாக இப்படி ஒரு பெண் ஒரே ஒருவரிடம் மனத்தைப் பறிகொடுத்து இருப்பாளா என்று தாய்க்கிழவி வியப்படைந்தாள்.

இராயசம் முத்துப் புல்லாக்கைப் பரிசாக அளித்ததைத் தாய்க் கிழவி அறிவாள். 'இது என்ன பிரமாத நகை? நவரத்தினங்கள் இழைத்த சடைபில்லையையும், வைரம் பதித்த தங்க ஒட்டியாணத்தையும், வங்கியையும், மாணிக்கச் சிலம்பையும் அளிக்க வரிசையாக வாசலில் காத்திருப்பவர் பலர் இருக்கிறார்கள்'' என்று தன் மகளைச் சமாதானப் படுத்தத் தாய் முயன்றாள்.

"அம்மா! என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். நான் அவரிடமிருந்து இந்தப் புல்லாக்கை மட்டும் எதிர்பார்க்கவில்லை. அவர் ஒரு நல்ல செய்தியைச் சொல்லப் போகிறார் அந்த நல்ல செய்தியை நான் எதிர்பார்த்திருக்கிறேன். என்னைத் தனியே விட்டுச் சென்றால் உங்களுக்குக்

கோடிப் புண்ணியம் உண்டு!'' என்று அபரஞ்சி நயமாகவும், கண்டிப்பாகவும் சொல்லிவிட்டாள்.

"அதென்னடி நல்ல செய்தி?'' என்று அபரஞ்சியைக் கேட்காமல், அவளுடைய பாங்கியை நோக்கிக் கேட்டாள் தாய்க்கிழவி.

"அடி, பாங்கி! நான் பார்த்து உன்னை இந்த வீட்டில் வேலைக்குச் சேர்த்தேன். என்னிடம் நீ ஒன்றும் மறைக்கக் கூடாது. உனக்கு ஊதிய உயர்வு தருவேன். ஊர் போய் வர விடுமுறை அளிப்பேன். இராயசம் இங்கு வந்து அபரஞ்சியிடம் சொல்லப்போகும் அந்த நல்ல செய்தியை நீ என்னிடம் உடனே சொல்லிவிட வேண்டும்'' என்று தாய்க்கிழவி கட்டளையிட்டாள்.

"அதெப்படியம்மா அந்தச் செய்தியை நான் அறிவது?'' என்று பாங்கி கவலையுடன் கேட்டாள்.

அவளையழைத்து அவளிடம் மிக ரகசியமாக ஒரு யோசனை கூறினாள் தாய். அதைக் கேட்ட பாங்கி, "ஐயோ!'' என்று வாயைப் பொத்திக் கொண்டு பயந்தாள்.

இரட்டை வடத் தங்கச் சங்கிலி ஒன்றை அவள் கழுத்தில் அணிவித்து, "இந்த நகையை இப்பொழுது வைத்துக் கொள், செய்தியைச் சொன்ன பிறகு வேறு பரிசு தருகிறேன்'' என்றாள்.

குறிப்பிட்ட நாளுக்கு மறுநாள் இராயசம் மதுரைக்கு வந்தார்.



## 8

"மிகவும் அவசரமாக வந்திருக்கிறேன். அதிகாலையில் ஊர் திரும்பிவிட வேண்டும்'' என்று கூறினார் இராயசம்.

அபரஞ்சியும் இராயசமும் இரவு முழுவதும் தூங்கவில்லை. "அபரஞ்சி, என் அமுதே, கண்ணே! அந்த நல்ல நாள் என்று வரும் என்று கேட்டாயே? அந்த நாள் வந்துவிட்டது. நான் பிரதானியாகிறேன்'' பேச்சைத் தொடங்கினார் இராயசம்.

அபரஞ்சி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் முகத்தைத் தன் முகத்தருகே திருப்பி, "என்ன, அபரஞ்சி! நான் சொன்னது நல்ல செய்தியில்லையா? முகத்தைத் திருப்பிக் கொள்கிறாயே?'' என்று இராயசம் கேட்டார்.

அவரது மார்பில் தவழ்ந்த முத்துமாலையை விலக்கி, அடர்ந்திருந்த உரோமங்களைத் தன் விரல்களால் கோதிக் கோலமிட்ட அபரஞ்சி, 'ஆசை மனைவியாகத் தான் அப்பொழுதும் என்னை வைத்துக் கொள்வதாக உங்கள் அபிப்பிராயமோ?'' என்று சிணுங்கிப் பொய்க் கோபத்துடன் கேட்டாள்.

இராயசம் அதைக் கேட்டுப் பலமாகச் சிரித்து, "பைத்தியமே! ஆசை மனைவி என்றால் ஆசை நிறைந்த அருமை மனைவி என்று அர்த்தம். சமயபுரம் மாரியம்மன் கோயிலில் நமது திருமணம் நடைபெறும்'' என்றார்.

அபரஞ்சி அவரை நோக்கி முகத்தைத் திருப்பாமலேயே, "பிரதானி என்றால்?'' என்று போலிக் கோபத்துடன் கேட்டாள்.

"நான் இப்பொழுது பார்க்கும் வேலை, அரசரின் வாய் மொழிக் கட்டளைகளைக் குறித்துக்கொண்டு உத்தரவிடுவது. இனிமேல் மந்திரி, மன்னருக்கு யோசனை கூறுவது. அரச கட்டளைகள் நிறைவேறுகின்றனவா என்று கண்காணிப்பது என்று பல முக்கியப் பணிகள். பிரதானி என்றால் என்ன வென்று புரிகிறதா?" என்று அபரஞ்சியின் முகவாயைப் பிடித்து மெல்ல அசைத்தார்.

"அரசருடன் மிக நெருங்கிய பதவியாயிற்றே. இராயசம் பதவி. அதைவிட்டு மந்தியாவதால் என்ன பலன்?" அபரஞ்சி மெய்யாகவே தெரியாமல் கேட்டாள்.

இராயசம் மெல்லச் சிரித்து, அவள் மூக்கை மெல்ல அசைத்து, "இன்னும் குழந்தையைப் போலவே இருக்கிறாய் இராயசத்தைவிடப் பெரியவர் பிரதானி. நான் இராய சத்திற்கு எந்த உத்தரவும் இடலாம்" என்று கூறி அபரஞ்சியை அணைத்துத் தூக்கித் தன்மடி மீது கிடத்திக் கொண்டார். அவள் நெளிந்து நழுவினாள்.

"அப்படியென்றால், இதுவரை நீங்கள் பிரதானிக்கு அடங்கித்தானே நடந்தீர்கள்?" அவரது மூக்கைப் பிடித்து மெல்ல அசைத்தாள்.

"பைத்தியமே! ஒருவரிட்ட உத்தரவை நிறைவேற்றுவ தென்றால் அடங்கி நடப்பதென்று அர்த்தமன்று. ஆனால், இதுவரை பிரதானியாயிருந்தவர் எனக்கு மிகவும் வேண்டியவர். அவரும் நானும் மற்றவரும் சேர்ந்து திட்ட மொன்று வகுத்துள்ளோம். அந்தத் திட்டம் நிறைவேறி விட்டால், அபரஞ்சி, நீ ஓர் அரசி!" என்று மிகக் கம்பீர மாய் அவள் மேனி வீணையை மெல்ல மெல்ல மீட்டினார்.

"திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் திருமணம் என்று முன்பு சொன்னீர்களே, அதற்குள் ஊரையே மாற்றிவிட்டீர்களே?" அபரஞ்சி கேட்டாள்.



"அபரஞ்சி! நம் சொந்த நாட்டில், திருமணம் செய்து கொள்ளாமல் வேறு நாட்டுக் கோயிலில் செய்து கொள்வ தென்பது அவ்வளவு சிறப்பாக இருக்காது" என்றார் இராயசம்.

"புரியும்படி சொல்லுங்கள். எது சொந்த நாடு. எது அந்நிய நாடு?" அபரஞ்சி புரியாமல் தான் கேட்டாள். தளவாயும், பிரதானியும் தாமும் சேர்ந்து முடிவு செய்துள்ள திட்டத்தை இராயசம் விவரித்தார்.

"எங்கள் திட்டம் என்ன தெரியுமா? திருச்சிராப்பள்ளி நாட்டின் அரசராகிறார் இலிங்கமர். இப்பொழுது பிரதானி யாக இருப்பவர் தளபதியாகிறார். நான் பிரதானியா கிறேன். நீ பிரதானியின் மனைவி. சரிதானா, புரிகிறதா?" என்று கூறியதை அபரஞ்சி விழி இமைக்காமல் நோக்கிய வாறு கேட்டாள்.

"பிரதானி, பிரதானி என்கிறீர்களே! அமைச்சர், மந்திரி என்று புரியும்படி சொல்லுங்களேன்" என்று கூறி களுக் கென்று சிரித்தாள் அபரஞ்சி. அதற்குமேல் அவளைப் பேசவிடவில்லை சென்னப்பர். அங்கே பேச்சுக்கு வேலை இல்லாமல் போய்விட்டது. முனகலும் மெல்லிய சிரிப்பும் பரவி, மெல்ல அதுவம் அடங்கியது.

இருள் பிரிவதற்கான அறிகுறிகள் வெளியே புலப் பட்டன. களைப்பையும் பொருட்படுத்தாமல் இராயசம் அபரஞ்சியின் இதழ்களில் முத்திரையை மெல்லப் பதித்துப் புறப்பட்டார். அவரைத் தன்னருகே இழுத்துத் தன் மீது சாய்த்துக் கொண்டு, "மீண்டும் எப்பொழுது சந்திப்போம்?" என்று கொஞ்சம் குரலில் கேட்டாள் அபரஞ்சி.

மஞ்சத்தில் சிறு குழந்தையைப் போல் துவண்டு கிடக்கும் அபரஞ்சியைப் பிரிய மனமில்லாமல் புறப்பட்ட இராயசம்,

"உன்னை விட்டுப் பிரிய மனமில்லைதான். இங்கேயே இரவும் பகலும் இருந்துவிடத்தான் ஆசை. ஆனால் உனக்குக் கொடுத்த வாக்கை நிலைநாட்ட வேண்டும். அடுத்த முறை அரச பல்லக்கு உன்னை அழைத்துச் செல்ல வரும். திருச்சிராப்பள்ளியில் பிரதானிக்கு என்று கட்டப் பட்டிருக்கும் புதிய மாளிகையில் நாம் சந்திப்போம்" என்றார்.

அந்த இன்ப நினைவிலேயே கண்ணயர்ந்த அபரஞ்சி விழித்தெழும்போது கதிரவன் சுறுசுறுப்பாக உச்சி வேளையை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தான்.

கட்டிலுக்கடியில் இதுவரை மறைந்திருந்த பாங்கி, அபரஞ்சி உறங்கியவுடனே மெல்ல எழுந்து வந்து, தாய்க்கிழவியிடம் அந்தச் செய்தியைத் தெரிவித்தாள். அத்துடனில்லாமல் அவளது வருகைக்காக செய்தி அறியக் காத்திருந்த மங்கம்மாளின் அரண்மனைப் பணிப் பெண்ணிடமும் தெரிவித்தாள்.

இராயசத்தின் நடவடிக்கைகளைக் கவனிக்க, மங்கம்மா நியமித்த வேவுபார்ப்பவர்களுள் அவளும் ஒருத்தி. அபரஞ்சியின் பாங்கியிடமிருந்து தான் அறிந்தவற்றை அரசியிடம் இரு நாள்களுக்குள் அவள் தெரிவித்தாள்.

மங்கம்மாள் அப்பொழுது தான் விழித்துக் கொண்டாள். தொடர்ந்து இராயசத்தின் நடவடிக்கைகளை அறிந்து அவள் செயலாற்றுவதற்குள் இலிங்கமன் செஞ்சியை நோக்கிப் படைகளுடன் புறப்பட்டு விட்டார். மளமளவென்று செயல்திட்டங்கள் நடைபெறத் தொடங்கின. திருச்சியி லிருந்து மதுரைக்கு மீண்டும் தலைநகரத்தை மாற்றுமாறு பிரதானி சென்னப்பர் சொக்கநாதரை வற்புறுத்தத் தொடங்கினார்.



அதிகப் பொருட்செலவாகுமே என்று கவலை தெரிவித்த சொக்கநாதருக்குச் சென்னப்பர் சில யோசனைகளைக் கூறினார். அவை மேலும் வருவாயை அளிக்கும் என்று அவர் கருத்துத் தெரிவித்தார். அவர் கூறிய வரிவிதிப்பு யோசனைகள் சொக்கநாதரைச் சற்றும் சிந்திக்கவிட வில்லை. இராசயமும் அதற்கு ஆமாம் பாட்டுப் பாடினார். அரசர் இடாத உத்தரவுகளை இட்டதாகக் கூறி இராயசம் மதுரைப் பகுதியில் புதிய வரிவசூலுக்குத் துரிதப்படுத்தினார்.

சொக்கநாதர் முன்பே மனக்குழப்பத்துடன் இருந்தார். மங்கம்மாவின் கண்டிப்பும் சேரவே அவர் குழம்பினார். உடல் நலிவுற்றது. ஒருவருடனும் பேசுவதற்குப் பிடிக்க வில்லை. "மறுபடியும் மதுரைக்கே போய்விடலாம்" என்று அடிக்கடி கூறத் தொடங்கினார். இடமாற்றம் மன்னருக்கு மன அமைதியைக் கொடுக்கும் என்று நினைத்த மங்கம்மாள், முதலில் குற்றாலத்திற்கு அவரை அழைத்துச் செல்ல முடிவு செய்தாள். அதைத் தவிர மற்றொரு திட்டமும் அவள் மனத்திலிருந்து. அதை மன்னரிடம் தெரிவிக்கத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தாள்.

குற்றாலத்தில் பாண்டிய சிற்றரசர் சபதம் செய்யச் சென்ற பிறகு மன்னரிடம் தன் மனத்திலிருக்பபதை எல்லாம் கொட்டித் தீர்த்தபொழுதுதான் இராயசம், பிரதானி, தளபதி ஆகியோர் பற்றிய தன் எண்ணத்தை மங்கம்மாள் தெரிவித்தாள்.

மங்கம்மாவின் கருத்தைச் சொக்கநாதர் ஒப்புக் கொள்ள வில்லை. "மங்கம்மா! என் பிரியமானவளே! நீ அதிபுத்தி சாலியாக இருக்கலாம். ஆனால் போர் விஷயத்தில் தலையிடாதே. செஞ்சிக் கோட்டையை முற்றுகையிட இலிங்கமன் யோசனை கூறியபோது நான் என் சம்மதித்

தேன், தெரியுமா? இரண்டு காரணங்கள். ஒன்று செஞ்சி நம்மவர்கள் நாடு. அது சுல்தான் வசமாகிவிட்டது. நம் நாட்டை நாம் இழக்கலாமா? செஞ்சியிலிருந்து சுல்தானின் பிரதிநிதி சாகோசியை விரட்டிவிட்டு, நம் நாட்டோடு சேர்த்துக் கொள்ளவேண்டும். அல்லது நமது உறவினர் ஒருவரைப் பிரதிநிதியாக அங்கே நியமிக்க வேண்டும். அப்பொழுதுதான் தஞ்சையிலுள்ள ஏகோஜி நமக்கு அஞ்சிப் பணிந்திருப்பான். புரிந்ததா படையெடுப்பின் காரணம்?" என்று இடைவிடாமல் பேசினார். வழக்கத்தைவிட சொக்கநாதர் அதிகம் பேசியதால் அவருக்குக் களைப்பு அதிகமாகியது.

மங்கம்மாள் அவரைத் தாங்கிப் பிடித்துப் படுக்கையில் கிடத்திச் சற்று நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு அமைதியாக அந்த இடத்தை விட்டுச் சற்று வெளியே உலாவச் செல்லலாம் என்று அவளுக்குத் தோன்றியது.

மாலைக் கதிரவன் மெல்ல மலைவாயிலில் வீழ்ந்து கொண்டிருந்தான். வெளியே இருந்த காவலனிடம் அரசரைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு மங்கம்மாள் அருவிக் கரையை நோக்கி நடந்தாள்.

மலைச்சாரலில் இயற்கை விநோதங்கள் அவள் கவனத்தைக் கவரவில்லை.

மதுரை நாட்டின் வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்கலானாள். சொக்கநாதருக்குப் பிறகு தன் நிலை; நாட்டின் நிலை என்ன ஆவது? வாரிசற்ற நாட்டின் நிலை பிற்காலத்தில் என்னவாகும் என்ற எண்ணம் அவளை வாட்டத் தொடங்கியது. அதற்கு ஒரு முடிவு ஏற்படுத்த வேண்டும் என்ற ஆவேசம் அவளுள்ளத்தில் எழுந்தது.



மங்கம்மாள் உலவச் சென்ற மறுகணமே அந்தக் குடிலினுள் இருவர் நுழைந்தனர். ஒருவர் இராயசம்; மற்றொருவர் அவருடைய அந்தரங்க உதவியாளர். இராயசத்தைக் கண்டவுடன் காவல் வீரன் பயபக்தியுடன் வணங்கி அவரை உள்ளே செல்ல அனுமதித்தான். அவருடைய அந்தரங்க உதவியாளனைத் தடுத்து நிறுத்தி உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

இராயசம் சென்னப்பர். காவலாளனைத் தன் பதவியைக் காட்டிப் பயமுறுத்த முயன்றார்.

"என் உதவியாளனைத் தடுக்க நீ யார்?" என்று அவர் சீறினார்.

பாண்டிய மன்னரால் நியமிக்கப்பட்டிருந்த அந்த வீரன் சற்றும் நிலை குலையாமல், அமைதி இழக்காமல், "நான் இந்தக் குடிலைக் காக்கும் காவல்காரன்" என்றான்.

"உன்னை நியமித்தது யார் தெரியுமா? அரசி நியமித்திருக்கிறாள். அரசிக்கும், அரசருக்கும் இராயசம் நான். அரசரிடும் வாய்மொழி உத்தரவை நிறைவேற்றுபவன் நான். ஒரே நொடியில் உனக்குச் சீட்டுக் கிழித்துவிடுவேன்..." என்று இராயசம் சீறினார்.

அப்பொழுதும் அவன் அமைதி இழக்காமல் பணிவுடன், "ஐயா! என்னை மன்னிக்க வேண்டும். என்னை இந்தக் குடிலின் காவலுக்கு நியமித்தவர் பாண்டிய மன்னர். அவரது உத்தரவுக்குத் தான் பணிவேன். அதற்கும் மேலாக அரசியார் வெளியே செல்லும்போது என்னை எச்சரித்துச் சென்றிருக்கிறார், ஒருவரையும் அனுமதிக்கக்கூடாது என்று. உங்களையும் நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் உங்கள் பதவிக்கு மதிப்பளிக்கிறேன். அதற்குமேல் வற்புறுத்

தாதீர்கள். என் கடமையை நிறைவேற்ற அனுமதியுங்கள்'' என்றான்.

"என்ன சொன்னாய், பாண்டிய மன்னரா? பாளையக்காரர் என்று சொல்லு" என்று சீறினார் அவர். "அப்படியே இருக்கட்டும் ஐயா, பாளைக்காரராக இப்போது இருந்தாலும் வெகு சீக்கிரத்தில் மீண்டும் பாண்டிய மன்னராக ஆகப்போகும் பாண்டிய மன்னர்" என்று அவன் கூறவும் அவனிடம் வாதித்தால் மரியாதைக் குறைவு ஏற்படும் என்று இராயசம் தன்னுடன் வந்த உதவியாளனை வெளியே நிறுத்தி உள்ளே சென்றார்.

மனத்தில் பலவிதச் சிந்தனைகளின் ஓட்டத்தால் குழம்பியிருந்த சொக்கநாதர், உடலும் உள்ளமும் பலங் குன்றிய அந்த நிலையிலும் பற்பல சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தார். மனைவி, மங்கம்மாளிடம் திடீர் மனமாற்றம் ஏன் ஏற்பட்டது. எதற்காகக் கண்ணீர்விட்டு அழுவதுடன் ஆத்திரத்துடன் குமுறுகிறாள் என்பது அவருக்கும் புரியவில்லை. சோ நாட்டின்மீது படைகளை ஏவுவதற்கு இதுதான் தாக்க தருணம் என்று சில மாதங்களுக்கு முன்பு ஒற்றர்கள் கூறியிருந்ததும் அவருக்கு நினைவுக்கு வந்தன. மைசூர்க்காரர்கள் மதுரைமீது படையெடுத்தவரைப் படைகளைத் திரட்டுகிறார்கள் என்ற செய்தியும் அவருக்குக் கிடைத்திருந்தது. அவற்றைப் பற்றி எல்லாம் கலந்து ஆலோசித்து, சிந்தித்து உத்தரவிட்டுச் செயலாற்ற முடியாமல் குற்றாலத்திற்குத் தன்னை அழைத்து வந்து விட்டாளே மங்கம்மாள், இவள் என்னதான் மனத்தில் திட்டமிட்டிருக்கிறாள்? ஒன்றும் தெரியாத மௌடீகன் நான் என்பதுபோல் என்னிடம் பேசுகிறாள். பாண்டியனிடம் சீறி விழுகிறாள். ஹூம்?



இராணி மங்கம்மாளை அவர் அழைத்தார். குரல் அவர் காதுகளுக்கு மட்டுமே கேட்கிறது. அதோ வெளியில் நிற்கும் காவல்காரன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே? கையைத் தட்டுவோமா? சந்திரப்பா நீயும் எங்கே போய்விட்டாய்? ஐயோ, ஏன் கையைத் தூக்கக் கூட முடியவில்லை...?

சொக்கநாதர் கண்கள் வாசல் வழியை வெறித்து நோக்கின. அப்பொழுதுதான் இராயசம் உள்ளே நுழைந்தார்.

"யாரது...?" சொக்கநாதர் குரல் கொடுத்தார். குரல் வெளியே வரவில்லை. பார்வை மங்கித்தான் தெரிந்தது.

"யார் அங்கே.... சந்திரப்பனா?" என்று கேட்டார். சந்திரப்பன் சொக்கநாதரின் சொந்த அலுவல்களைக் கவனிக்கும் பணியாள். அவரைக் குளிப்பாட்டுவது; கால் கையைப் பிடிப்பது; காலைக்கடன்களுக்கு மெல்ல அழைத்துச் செல்வது போன்ற அந்தாங்கப் பணிகளைச் செய்து வந்தான்.

"அரசே! நான்தான் இராயசம் வந்திருக்கிறேன்" என்று இராயசம் மேல் உத்தரீயத்தை இடுப்பில் எடுத்துக் கட்டிக் கொண்டு தண்டனிட்டு வணங்கினார்.

சொக்கநாதர் கையை மேலே மெல்லத் தூக்க முயன்றார். பிறகு தலையை அசைத்து அவரை மிக அருகே அழைத்தார். 'எங்கே வந்தாய், என்ன விசேஷம்?' என்று கேட்பது போன்ற சைகை அவரிடமிருந்து எழுந்தது.

"மன்னர் அவர்களே! செஞ்சியிலிருந்து தளபதி தகவல் அனுப்பியுள்ளார். மூவாயிரம் வராகன் உடனே வேண்டுமாம். நமது படைகள் செஞ்சியைச் சூழ்ந்த செய்தி அறிந்தவுடன் பீஜப்பூரிலிருந்து படைகள் செஞ்சியின் உதவிக்கு வந்து

கொண்டிருக்கின்றனவாம். இதை அறிந்த ஏகோஜி தஞ்சையிலிருந்து திருச்சிராப்பள்ளிக் கோட்டையைத் தாக்கத் திட்டமிட்டிருக்கிறார்.'' இராயசம் குரலில் படபடப்பு இருந்தது அவர் தெரிவித்த செய்தியில் பாதி உண்மை. பாதி கற்பனை. பயமுறுத்தும் நோக்கமும் நிறைந்திருந்தது.

சொக்கநாதரிடம் பரபரப்பு எழுந்ததை இராயசம் கண்டு கொண்டார்.

''இலிங்கமன் செய்தி அறிவித்திருக்கிறார். என்றால் உடனே பணத்தை அனுப்ப வேண்டியதுதானே?'' என்று சொக்கநாதர் கூறினார். மெல்ல. அவர் நா அசைத்தால் கூட இராயசம் புரிந்து கொள்வார்.

இராயசம் மிகவும் பணிவாகத் தலையை அசைத்தார். முன் ஏற்பாடாகக் கொண்டு வந்திருந்த உத்தரவில் அரசரின் முத்திரையைப் பதித்துக் கொண்டார்.

மறுபடியும் தொண்டையைக் கனைத்துக் கொண்டார் இராயசம்.

''இன்னும் என்ன விஷயம்?'' என்று கேட்பதுபோல் சொக்கநாதர் புருவம் மேலெழுந்தது.

''பிரதானி அடிக்கடி கூறுவது போல் தலைநகரை மாற்ற இதுவே நல்ல சமயம். தஞ்சையிலிருந்து மிக எளிதில் ஏகோஜியின் படைகள் திருச்சிராப்பள்ளியைத் தாக்கி விடும். அதனால்...'' என்றார்.

சொக்கநாதர் தலையை அசைத்தார். ''மதுரையிலிருந்து நிம்மதி எனக்குத் திருச்சிராப்பள்ளியில் இல்லை. ஹூம்... எதற்கும் மங்கம்மாவைக் கேட்கிறேன்...'' என்று மெல்லிய குரலில் கூறினார்.



மீண்டும் மிகப் பணிவுடன் தலையைத் தாழ்த்திக் தன் வாயருகே கையைப் பொத்தி, ''அரசர் கோபிக்கக்கூடாது. என்னை மன்னித்துவிட வேண்டும். நான் புகார் சொல்வதாக நினைக்கக் கூடாது'' என்று பூர்வ பீடிகையுடன் தொடங்கினார் இராயசம்.

இப்படியொரு முன்னுரையை எடுத்துரைத்தால் ஏதோ பெரிய விஷயம் பின்புறத்திலிருக்கும் என்பது அரசருக்குத் தெரியும்.

'சொல்லு' என்பதற்கடையாளமாக 'ஹும்' என்ற குரல் கொடுத்தார் சொக்கநாதர்.

''அரசியார் அறிவும் ஆற்றலும் பிரகாசிக்கத்தக்க யோசனைகள், நடவடிக்கைகள் எடுக்க வல்லவர்கள்.''

''ஹூம்''

''நான் குறை கூறுவதாக எண்ணினால் என்னை மன்னித்து விடுங்கள். சொல்லக்கூடாது என்றே இதுவரை நினைத்திருந்தேன். மற்றவர் குறைகளைக் கண்டுபிடித்து எடுத்துக்கூறித் திருத்த முயலும் அரசியின் மீதே குற்றஞ் சொல்கிறேனே பாவி என்றெண்ணி எனக்குத் தண்டனை தா நினைத்தால் சொல்லிவிடுங்கள்; வாயை அடக்கிக் கொள்கிறேன்.''

''ஹூம்'' என்று சொக்கநாதர் குரல் அழுத்தமாக வந்தது.

''இராணியார் திடீர் திடீர் என உத்தரவு பிறப்பிக் கிறார்கள். அதனால் வரிவசூல் பாதிக்கிறது. கஜானாவுக்குப் பொருள் போய்ச் சேருவதில்லை. உங்கள் உத்தரவு எதுவானாலும் அது ரத்து செய்யப்படுகிறது...''

சொக்கநாதர் விழிகள் பெரிதாயின. "ஹும்..." என்ற கடும் ஒலி அவருடைய சினத்தைப் புலப்படுத்தியது.

"என் உத்தரவை மறுத்து வேறு உத்தரவு இடுவதற்குத் தைரியம் ஒருவருக்கு இருக்கிறதா?" சொக்கநாதர் குரல் மெல்லியதாக இருந்தாலும் அதில் அழுத்தம் இருந்தது.

இராயசம் எதிர்பார்க்கவில்லை. சொக்கநாதர் உடல் ஆத்திரத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. இராயசம் பயந்து ஒடிப் பின் வாங்கினார்.

"உங்கள் உத்தரவை மறுத்து வேறு உத்தரவிட எனக்குத் தைரியம் இருக்கிறது" என்ற குரல் கேட்டது.

மங்கம்மாள் உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

## 9

பிரதானி சென்னப்பர், காவிரிக்கரை ஓரமாக இருந்த மாந்தோப்பின் நடுவே இருந்த குடிலின் வெளியே ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்.

அவர் எதிரே விதவிதமான மாம்பழங்கள் நறுக்கப்பட்டு பெரிய வெள்ளித் தட்டில் வைக்கப்பட்டிருந்தன. ஒரு கிண்ணத்தில் தேன் இருந்தது.

தேனினுமினிய அழகிகள் இருவர் மிக மரியாதையுடன் நின்று கொண்டிருந்தனர். ஒருத்தி பாட, மற்றொருத்தி ஆடுவதற்கு ஆயத்தமான நிலையில் இருந்தாள். காவிரியில் தென்றல் தவழ்ந்துவந்து இதமாக வீசிக் கொண்டிருந்தது.



பரங்கியன் ஒருவனிடமிருந்து பெற்றுவந்த மதுவை அவர் சுவைத்திருந்தார். அதன்பிறகு பல்சுவை விருந்துண்டிருந்தார். மது, விருந்து இவற்றிற்குப் பிறகு மாதிருவர் மகிழ்விக்க வந்திருந்தனர்.

தளபதியும், இராயசமும், அவரும் வகுத்த திட்டப்படியே அனைத்தும் இதுவரை நடந்துவந்து கொண்டிருந்தன. இன்னும் சில நாள்களில் அவர் திருச்சிராப்பள்ளி நாட்டின் படைத்தளபதி. படைத்தளபதி என்றால் மன்னரைவிட அதிக மரியாதை, செல்வம் செல்வாக்கு உண்டு.

மதுரை நாயக்க அரசரின் படைப்பிரிவுக்குப் பல உபதளபதிகள் உண்டு. மதுரை நாட்டுக் குதிரைப்படை பலம் மிகுந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரபுக் குதிரைகளை மிகவும் கவனத்துடன் நாயக்க மன்னர்கள் போஷித்துக் காப்பாற்றி வந்தனர். நாட்டு வருமானத்தில் பெரும்பங்கு படைகளுக்குச் செலவு என்றால் அதில் பாதி குதிரைப்படைகளுக்குச் செலவிட்டனர்.

மதுரைக் குதிரைப் படைகளில் முரட்டுப் பலமுள்ள வீரர்கள் பலர் இருந்தனர். ருஸ்தம்கானின் திறமை மிகுந்த தலைமையின்கீழ் குதிரைப்படை இயங்கியதால் பல யுத்தங்களில் சொற்பப் படைவீரர்களைக் கொண்டு சொக்கநாதர் வெற்றியை அடைந்திருக்கிறார்.

ருஸ்தம்கானுக்குச் சொக்கநாதரிடம் மதிப்பு அதிகம். அவருள்ளத்தில் சிறுவயதிலிருந்து நெடுநாளைய கனவு ஒன்று இருந்தது. மதுரை மகுடத்தை, தான் அடைய வேண்டும் என்ற கனவு அது. தனது மூதாதையர் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு சில ஆண்டுகள் மதுரை மகுடத்தை அணிந்து மதுரை நாட்டை ஆண்ட செய்தியை அவர்

அறிந்திருக்கிறார். அதுபோல் தானும் என்றாவது ஒருநாள் மதுரை அரியணையில் அமரவேண்டும் என்று கனவு கண்டார்.

தன் மனத்தில் அடித்தளத்தில் இருந்த மகுட ஆசையை அவர் வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை. ஆசைப்பூ நன்றாகக் காய்த்துக் கனியும் தருணத்தை அவர் எதிர்பார்த்திருந்தார்.

சொக்கநாதருக்கு ருஸ்தம்கானிடம் தனிப்பட்ட மதிப்புண்டு. எந்தப் போர் தொடங்கினாலும் அவர் ருஸ்தம்கானை அழைத்து அவருடைய யோசனையைக் கேட்காமலிருக்கமாட்டார்.

செஞ்சி மீது படையெடுப்பைத் தொடங்கியபோது இலிங்கமன் ருஸ்தம்கானைக் கலந்து கொள்ளவில்லை. அவரைக் கலந்து கொண்டால் தன் திட்டம் நிறைவேறாது என்பது அவருக்குத் தெரியும். அதற்கேற்றாற்போல் அச்சமயம் ருஸ்தம்கான் கடும் காய்ச்சலால் படுத்த படுக்கையாயிருந்தார். நோய் தெளிந்த பிறகு ருஸ்தம்கான் செய்தியை அறிந்தார்.

செஞ்சி மீது படையெடுத்துச் சென்றதைப் பற்றி அரசரும் தன்னிடம் தெரிவிக்கவில்லை என்பதறியும் போது அவருக்கு முதலில் சினமெழுந்தது. மன்னரைச் சந்திக்க அரண்மனைக்கு விரைந்தார். மன்னர் திருச்சிராப் பள்ளி அரண்மனையிலில்லை என்பதை அறிந்தார். பிரதானியையும் இராயசத்தையும் சந்தித்து செஞ்சிப் படை எடுப்பு விவரம் அறிய முயன்றார். மன்னரின் திடீர் உத்தரவின் பேரில் இலிங்கமன் செஞ்சி மீது படை யெடுத்துச் சென்றிருக்கிறார் என்றும் தங்களுங்கு விவரம்



ஏதும் தெரியாதென்றும் தங்களையும் மன்னர் கலந்தாலோசிக்கவில்லை என்றும் சென்னப்பர் போலி வேதனையுடன் தெரிவித்தார்.

ருஸ்தம்கானுக்கு மிகுந்த சினம் ஏற்பட்டது. தன் கோபத்தை வெளிக்குப் புலப்படுத்திக் கொள்ளவில்லை. சென்னப்பர் சொல்வதை அப்படியே நம்பிவிடவில்லை. உண்மை நிலையை அறிய வேண்டும் என்ற துடிப்பு அவரிடமிருந்தது. சென்னப்பரைத் தன் கைக்குள் போட்டுக் கொண்டால் பல உண்மைகள் வெளிப்படும் என்றெண்ணினார்.

ஒரு நாள் காலையில் ருஸ்தம்கான் சென்னப்பர் இல்லத்திற்குச் சென்றார். அப்பொழுது சென்னப்பர் விழித்திருக்கவில்லை. விழித்தெழும் வரையில் காத் திருந்தார்.

அதிகாலையில் தன்னைத் தேடி ருஸ்தம்கான் வந்திருப்பது சென்னப்பருக்கு ஆச்சரியத்தை அளித்தது. சில நாள் களாக அவர் மனத்தில் போட்டுக் கொண்டிருந்த திட்டம் அவ்வளவு சீக்கிரம் பலித்துவிடும் என்று அவர் நினைக்க வில்லை. ருஸ்தம்கானின் நட்பைப் பெற்று அவருடன் நெருங்கிப் பழகவேண்டும். அதனால் பிற்காலத்தில் தான் தளபதியான பிறகு மிக உதவியாக இருக்கும் என்றெண்ணி னார். ருஸ்தம்கானைத் தான் தேடிப்போய் நட்பைப் பலப்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக அவரே அங்கு வந்து நிற்கிறார்!

மதுரை நாட்டின் பிரதானி அல்லவா, சென்னப்பர்! அதனால் அவருக்கு வணக்கம் தெரிவித்து, தான் கொண்டு வந்திருந்த பேழையை அவரிடம் சமர்ப்பித்தார் ருஸ்தம்கான்.

அந்தச் சிறு பேழைக்குள் ஆணிமுத்து பளபளத்துக் கொண்டிருந்தது. பிரமிப்பும் ஆவலும் சேர சென்னப்பர் முகம் ஜ்வலித்தது. தான் காண்பது உண்மைதானா என்று உணர அவருக்குச் சிறிது நேரம் சந்தேகமாயிருந்தது.

உண்மைதான். அதோ வெளிவாயிலில் குதிரை நிற்கிறது. சற்றுத் தொலைவில் ருஸ்தம்கானின் அந்தரங்கத்திற்குப் பாத்திரமான குதிரை வீரன் ரகீம் நிற்கிறான்.

ருஸ்தம்கான் கம்பீரமாக முகத்தில் முறுவலுடனும் மரியாதையுடனும் நிற்பது கனவன்று. உண்மைதான். தன் கையில் பேழையும், பேழையுள் ஆணிமுத்து பிரகாசிப்பதும் உண்மைதான். இவ்வளவு காலம் மதுரை நாட்டுக்கு உழைத்திருந்தாலும் அவர் இன்னும் ஒரு முத்துமாலையைத் தன் மனைவிக்கு அன்பளிப்பாகக் கொடுத்ததில்லை.

"ருஸ்தம், என்ன இது?" என்று குரலில் ஆவல் பிரதிபலிக்கக் கேட்டார் சென்னப்பர்.

உங்களுக்கு அளிக்க வேண்டும் என்று நீண்ட நாள்களாக நான் பாதுகாத்து வைத்திருக்கிறேன். இன்று தான் வேளை வந்தது, பிரதானி அவர்களே!" என்று ருஸ்தம் நயமாகக் கூறினார்.

"ஓ, ஓ! நன்றி மிகவும் நன்றி. இந்தப் பிரதானியையும் உனக்கு 'நினைவு இருக்கிறதா?' சென்னப்பர் குழைந்தார்.

"என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? உங்களுக்குச் சந்தித்துப் பேசி சுக சௌக்யங்களை விசாரிக்க நேரம் கிடைக்கவில்லை. எப்பொழுதும் தங்கள் நினைவுதான். ஐயா! நீங்கள் இடும் உத்தரவை ஏற்று நாலு திக்குகளிலும் எங்கே போர் புரியவேண்டுமோ அங்கெல்லாம் நானும் எனது குதிரையும் காத்திருக்கிறோம்."



"ஆமாம், ஆமாம் ருஸ்தம்! உனக்கு ஓய்ச்சல் ஒழிவே இல்லை... சேதுபதி நாட்டில் நீ பட்டிருக்கும் கஷ்டம் நானறிவேன்."

"பிரதானி அவர்களே! சேதுநாட்டையே நமது அரசர் காலடியில் சேர்த்திருப்பேன். ஆனால் நம் அரசரின் எண்ணம், முடிவு ஏதும் ஒரு நிலையாக இருப்பதில்லை. அவருடைய திட்டம் திடீரென்று மாறுகிறது. அதற்குத் தக்கபடி என் வாளையும் மாற்றிச் சுழற்ற வேண்டியிருக்கிறது. அது போகட்டும். சேது நாட்டுப் போரால் என் படைவீரர்கள் பலரை நான் இழந்தாலும், நல் முத்துகள், பவழங்கள் எனக்கு ஏராளமாகக் கிடைத்தன என்பதை நான் மறுக்க முடியாது. பொதுவாக என் வசம் கிடைக்கும் முத்து, பவழ, மாணிக்கக் குவியல்களில் மன்னருக்கு ஒரு பகுதி கொடுத்து விடுவேன். நானும் ஒரு பகுதி வைத்துக் கொள்வேன். இதை ஏன் மறுக்க வேண்டும்? ஐயா, உங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இந்த ஆணி முத்தை மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்தேன். ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று ருஸ்தம் மேலும் அவரிடம் நெருங்கிக் கூறினார்.

"ருஸ்தம்! இப்படி உண்மையை மறைக்காமல் சொல்லும் படைத்தலைவரை நான் இதுவரை பார்த்ததில்லை. அதனால் தான் மன்னருக்கு உன்மீது அலாதியான நம்பிக்கை... இருந்தாலும்" என்று கூறி, ருஸ்தம் உள்ளத்தை ஆராய்வதைப் போல் கூர்ந்து நோக்கினார் சென்னப்பர்.

தன் முகத்துணர்ச்சியை அறியவிடாமல் ருஸ்தம் பெரிதாக நகைத்தார்.

"பிரதானி அவர்களே! உங்களைப்போல் மனம் விட்டுப் பாராட்டுபவர் இன்று யார் இருக்கிறார்கள்? மன்னருக்கு இப்பொழுதெல்லாம் என்மீது பிரியம் குறைகிறதோ என்று சந்தேகம் தோன்றுகிறது. போர் விஷயங்களில் என்னைக் கலந்து கொள்வதே இல்லை - அவரைச் சந்திக்கவும் முடிவதில்லை. எந்த விஷயமானாலும் இராணி அம்மாளிடம் பேச வேண்டியிருக்கிறது" என்று கூறி மெல்லத் தன் குறையைத் தெரிவிப்பது போல் சென்னப்பர் மனத்தை அறிய முயன்றார்.

ருஸ்தம்கானைத் தன்னிடமிழுக்க வலைபோடச் சொற்களைச் சென்னப்பர் வீசினார்.

"ஆமாம், ஆமாம், ருஸ்தம்! செஞ்சி விஷயத்தில் அவர் நடந்து கொண்ட முறை எனக்கும் பிடிக்கவில்லை. எல்லாம் அந்தப் பெண்மணி செய்யும் வேலை" என்று தணலில் சாம்பிராணியைத் தூவினார் சென்னப்பர்.

"அரசர் அந்தப் பெண்மணியின் பேச்சைக் கேட்கிறார். அவருக்கே அது ஒரு நாள் தீங்காக முடியப்போகிறது" என்று கூறிய ருஸ்தம் உதட்டை மடித்தார். பிறகு ஏதோ சொல்லக்கூடாததைச் சொன்னதுபோல், "பிரதானி அவர்களே! பொறுத்தருள வேண்டும். நான் அரசியவர்களைக் குறை கூறிவிட்டேன்..." என்று சொல்லிவிட்டு சென்னப்பர் முகத்தைக் கூர்ந்து நோக்கினார் வேறு விதமான உணர்ச்சிகள் ஏதாவது தெரிகின்றனவா என்று.

"ஓ! அதெல்லாம் ஒன்றுமில்லை. ருஸ்தம்! உங்கள் அபிப்பிராயம் தான் எனக்கும். வரவர என் பேச்சுக்கு மதிப்புக் குறைகிறது என்று நான் உணர்கிறேன். நாடு இன்று இருக்கும் நிலைமையில் தக்க ஆலோசனைகளை அரசர் ஏற்காவிடில் மிகவும் துன்பத்துக்கள்ளாவார் என்று



தோன்றுகிறது" என்று ருஸ்தம்கானைச் சமாதானப்படுத்தி அவர் சார்பாகப் பேசுவது போல் பேசினார்.

"பிரதானி அவர்களே! என் மனத்தில் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகத்தையும் நீக்கி விட்டீர்கள். நான் கேள்விப்பட்ட இரண்டு செய்திகளை உங்களிடம் சொல்லி விடலாமென்று தோன்றுகிறது. ஒரு வேளை உங்களுக்கும் தெரிந்திருக்கலாம்..." என்று ருஸ்தம் பாதி நிறுத்திப் பேசினார்.

'சொல்லுங்கள் ருஸ்தம்! சொல்லுங்கள். எனக்குத் தெரிந்ததாயிருந்தால் நான் உடனே சொல்லிவிடுகிறேன்..." என்ற சென்னப்பர், ருஸ்தம் என்ன சொல்லப் போகிறாரோ என்று ஆவலுடன் எதிர்பார்த்தார். அந்தக் கணத்தில் அவர் உள்ளத்தில் பரபரப்பு மிகுந்திருந்தது.

"சொக்கநாதருடைய தம்பியை உங்களுக்குத் தெரியுமா?" ருஸ்தம் கேட்டார்.

"முத்து அழகாத்திரியைத்தானே சொல்லுகிறீர்கள்?" என்றார் சென்னப்பர்.

"ஆமாம்! அவரேதான். அவருடைய நடவடிக்கைகள் சந்தேகத்துக்கிடமளிப்பதாக இருக்கின்றன. அவர் தனக்கு ஆதரவாக ஆட்களை ரகசியமாகச் சேர்த்து வருகிறார்."

"ஓ! இந்தச் செய்தி எனக்குத் தெரியாதே! முத்து அழகாத்திரிக்குத் தென்பாண்டிச் சீமை மக்களிடையே செல்வாக்கு உண்டு. பாளையக்காரர்கள் சிலர் அவரை அதிகம் மதிப்பார்கள்..."

"பிரதானி அவர்களே! அவர் மதுரை நாட்டின் மகுடத்தை அணிய விரும்புகிறார்..."

ருஸ்தம் இவ்வாறு கூறிவரும்போது சென்னப்பரைச் சந்திக்க சிலர் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

ருஸ்தம்கான் விடைபெற எழுந்தார். "பிறகு சந்திக்கிறேன் பிரதானி அவர்களே!" என்று கைகூப்பினார்.

சென்னப்பரும் விடை கொடுக்க எழுந்தார் என்றாலும் ருஸ்தம்கானிடம் இன்னும் நிறையப் பேசித் தன் திட்டத்தை வெளிப்படுத்த விரும்பினார்.

"ருஸ்தம்!" என்று குரலில் அன்பு ததும்ப அழைத்து அவரது தோளைத் தொட்டு, "திறமை மிகுந்த வீரரே! உங்களைச் சந்தித்ததில் நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன். பரிசு அளித்ததற்கும் நன்றி. நாளைப் பகல் உணவுக்கு இங்கே வந்துவிட வேண்டும். சாப்பிட்டுக் கொண்டே நாம் பேசுவோம். பேச வேண்டியவை இன்னும் நிறைய இருக்கின்றன" என்றார் சென்னப்பர்.

"ஆகா! பிரதானி அழைத்தால் அதற்கு மறுப்புச் சொல்ல முடியுமா? நாமிருவரும் இன்னும் இன்னும் நெருங்க வேண்டும். இந்த நாட்டு விஷயத்தில் இன்னும் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்றார் ருஸ்தம்.

"உண்மைதான், மிக மகிழ்ச்சி. எனக்கு காவிரிக்கரையில் ஒரு மாந்தோப்பு இருக்கிறது. தெரியுமா? அங்கே வந்துவிட வேண்டும். உங்களுக்காகக் காத்திருப்பேன்" என்று கூறி சென்னப்பர், ருஸ்தம்கானை விருந்திற்கு அழைத்து வழியனுப்பி வைத்தார்.

சென்னப்பர் சிறந்த விருந்துக்கு ஏற்பாடு செய்தார். பரங்கி கொண்டு கொடுத்த மதுவையும் ருஸ்தம் கானுக்கு ஊற்றித்தர, சிறப்பாக மேல்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட கண்ணாடிக் கோப்பைகளை வைத்திருந்தார். அவர் வரும்வரை அமைதியாக இல்லாமல் தான் கொஞ்சம் கொஞ்சமாக மதுவைச் சுவைக்கத் தொடங்கினார்.



போதை அவர் தலைக்கேறும் சமயத்தில் ருஸ்தம் வந்து சேர்ந்தார். பாடவும் ஆடவும் ஆயத்தமாக நின்ற அழகிகளை ஒருமுறை பார்த்த ருஸ்தம், அவர்களை அங்கிருந்து அனுப்பிவிடுமாறு சென்னப்பரிடம் சொன்னார்.

மதுக்கோப்பையைச் சென்னப்பர் ருஸ்தம்கானிடம் நீட்டினார்.

ருஸ்தம் சிரித்துக் கொண்டே வேண்டாம் என்று தலையசைத்தார்.

"என்ன ருஸ்தம் இது? உங்களுக்காக அந்தப் பரங்கியனை வரவழைத்து மேல்நாட்டு மதுவகைகளைக் கொண்டு வருமாறு கூறினேன். நீங்கள் மறுக்கிறீர்களே!" என்று உபசாரம் செய்தார்.

"பிரதானி அவர்களே! நான் மது அருந்துவதில்லை" என்றார் ருஸ்தம்.

சென்னப்பர் பெரிதாக நகைத்து, "மது அருந்தாத குதிரைக்காரரோ, படைத்தலைவரோ உண்டா? ஆச்சரியமாயிருக்கிறதே. சாப்பிடுங்கள் ருஸ்தம்! மனம்விட்டுப் பேச மதுவைப் போல் உற்சாகம் தருவது வேறு உண்டோ? இன்று நீங்களும் நானும் மிக நெருங்கி வரவேண்டும்" என்றார்.

"ஆகா நெருங்கித்தானே வரவேண்டும்? இதோ வருகிறேன்" என்று கூறி அவர் அருகே நெருங்கி

உட்கார்ந்து "பிரதானி அவர்களே! சேனை வீரர்கள் தாராளமாகக் கள் குடிப்பார்கள். அவர்களுக்கு மேல்நாட்டு மதுவைப் பற்றித் தெரியாது. ஆனால் நான் மதுவைத் தொடுவதில்லை. பிற மாதின் வாசனையே கூடாது. அதனால்தான் இங்கே இருந்த பெண்களை உடனே அனுப்புமாறு சொல்லிவிட்டேன்" என்றார்.

"விசித்திரப் பிறவியாக இருக்கிறீர்கள் ருஸ்தம்! உங்களைப் போன்ற வீரர்கள் நிறையக் குடிக்கிறார்களே! ஹூம்... போகட்டும்... இவ்வளவு ஒழுக்கமும் கட்டுப் பாடும், ராஜ விசுவாசமுமுடைய உங்கள்மீது அரசருக்கு இப்பொழுது நம்பிக்கை குறைந்து வருகிறது. ஒழுக்கத்தைப் பெரிதும் வற்புறுத்தும் இராணி மங்கம்மாள், உங்கள் குணத்துக்காக மிகவும் பாராட்டி, உங்களை உயர்ந்த நிலையில் வைத்திருக்க வேண்டாமா?" என்று சென்னப்பர் கூறியபோது அதிக போதையால் அவர் வாய் குழறியது.

"பாருங்கள் ருஸ்தம்! உங்களைப் போன்ற தீய வழக்கங்களே இல்லாதிருக்க முயன்றும் முடியவில்லையே? நாங்கள் மூன்று பேர் உயிர் நண்பர்கள். உங்களுக்குத் தெரியுமே தளபதி, இராயசம் இருவருக்கும் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு விதப்பழக்கம், இராயசத்திற்குப் பெண் என்றால் சபலம். எனக்கு மதுவில் மோகம்..." என்று அந்தரங்கத்தைக் கூற முயன்றார்.

ருஸ்தம் மெல்லச் சிரித்து, "நீங்கள் பரவாயில்லை. உங்கள் உடலைக் கெடுத்துக் கொள்கிறீர்கள். இராயசம் மற்றவர் உடலையல்லவா கெடுக்கிறார்!" என்றார். இதைக் கேட்ட சென்னப்பர் பெரிதாக நகைத்து, "ருஸ்தம்கானுக்கு என்று தனி ஒற்றர் படை இருக்கிறதா? இராயசத்திற்கு மதுரையில் அழகி அபாஞ்சியின் தொடர்பு இருக்கிறது. திருச்சிராப்



பள்ளியிலிருந்து வாரம் இரண்டு முறையாவது வீட்டிற்குச் சென்று விடுகிறார்..." என்றார்.

"பாவம், இராயசத்துக்கு இந்த வயதில் இப்படியோர் ஆசை" என்றார் ருஸ்தம்.

"பெண்ணாசையோடு பிரதானியாக வேண்டும் என்ற ஆசை வேறு..." சென்னப்பர் தடுமாறி வரும் சொற்களை உகுத்தார். அந்தரங்கத்தைக் கூறுகிறோம் என்ற எண்ணம் தோன்றவில்லை அவருக்கு.

ருஸ்தம் நிமிர்ந்து உட்கார்ந்தார். சென்னப்பருக்கு இதயத்தின் அடித்தளத்தில் இராயசத்தைப் பிடிக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டார்.

"என்ன சொல்கிறீர்கள் பிரதானியாரே! இராயசத்திற்கு உங்கள் பதவி மீது ஆசையா?" என்று கேட்டுக் கொண்டே மதுக்குப்பியிலிருந்த மதுவைக் கோப்பையில் தானே ஊற்றிச் சென்னப்பரிடம் நீட்டினார்.

சென்னப்பர் தலையைப் பலமாக அசைத்து, "நீங்கள் அருந்தாமல் நான் மட்டும் குடிப்பது சரியன்று..." என்று குழறிக்கொண்டே, "ருஸ்தம்! இராயசம் மீது தவறில்லை. அவருக்கு அத்தகைய ஆசையை உண்டு பண்ணியதே தளபதி இலிங்கமர்தான்..." என்றார்.

ருஸ்தம்கான் ஒருகணம் திடுக்கிட்டார். ஆசையை ஊட்டியது தளபதியா?

ஏதோ மிகப் பெரிய செய்தி சென்னப்பர் மனத்திலிருக் கிறது என்பதை நொடியில் உணர்ந்து ருஸ்தம் அதை எப்படியாவது அறிய விரும்பினார். சென்னப்பரைத் தன் கைக்குள் போட்டுக் கொள்ள எண்ணிய ருஸ்தம்,

"இலிங்கமர் போக்கு எனக்கு வரவரப் புரியவில்லை. செஞ்சிமீது படையெடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஆசையை ஒரு வேளை இலிங்கமரே அரசருக்கு ஏற்படச் செய்திருப்பாரோ?" என்று கேள்வி ஒன்றைத் தூக்கி வீசினார்.

சென்னப்பர் சிரித்தார். "ருஸ்தம்! இந்த மாம்பழத்தை யாவது சாப்பிடுங்கள்" என்றார்.

ருஸ்தம் மாம்பழத் துண்டங்களை மெல்லச் சுவைத்தார்.

"சென்னப்பரே! உங்கள் மதியூகம் எப்பேர்ப்பட்டது! உங்கள் யோசனையை அரசர் ஏற்றிருந்தால் செஞ்சிப் படையெடுப்பிற்குச் சம்மதித்திருப்பாரா? எவ்வளவு பொருட் செலவு... அத்துடன் எதிரியின் படைபலம் அறியாது இறங்கியது தவறு..."

சென்னப்பரின் அந்தரங்க நினைவு வேலை செய்தது. மிகவும் ரகசியமாகப் பேசுகிறோம் என்ற நினைப்பில், "ருஸ்தம்! நான் தவறு செய்து விட்டேனா இல்லையா என்பது எனக்கே புரியவில்லை. செஞ்சியின்மீது படை யெடுத்துச் செல்வதன் அவசியத்தைத் தளபதி இலிங்கமர் என்னிடம் வெகுவாக எடுத்துச் சொன்னார். அவருடைய திட்டம் சரி என்றே எனக்குத் தோன்றியது..." என்று அவர் கூறி முடிப்பதற்குள் ருஸ்தம் கேட்டார்:

"மதுரையின் பொருளாதார நிலை சரிவர இல்லை. தெற்குச் சீமையிலும் கிழக்குச் சீமையிலும் மக்கள் உண்ண உணவின்றி வாடுகிறார்கள். நமக்குப் பகைவர்கள் நாலா புறமும் இருக்கிறார்கள். மேற்கே மைசூரான் சில கோட்டை களைத் தன் வசப்படுத்தியிருப்பதாகச் செய்தி கிடைத் திருக்கிறது. மறவர் நாட்டிற்குள் நுழையவே முடியவில்லை.



காடுகளுக்குள் புகுந்திருந்து மறைவாகத் தாக்குகிறார்கள். எதிரிகளைப் பிடிக்க முடியவில்லை. தஞ்சையில் ஏகோஜியைத் தலை எடுக்கவிடாமல் எளிதில் நசுக்கியிருக்கலாம். நமது அரசர் தக்க சமயங்களில் மெத்தனமாக இருந்து விடுகிறார். பீஜப்பூர் சுல்தான் நமக்கு உதவிக்கு வருவாரா என்பது சந்தேகமே. போர் வீரர்களுக்கு ஊதியம் பாக்கி. கஜானா சாவியை இராணி மங்கம்மாள் தன் வசமே வைத்துக் கொண்டிருக்கிறாள். வேலைக்குப் பணம் இல்லாமல் கஜானாவில் பணம் பாசி பிடிக்கிறது. இராணியிடம் எடுத்துக்கூற ஒருவருக்கும் துணிவு இல்லை. செஞ்சி மீது படையெடுக்கிறார்களாம். உங்களுக்கும் அந்தத் திட்டம் சரி என்று தோன்றியதா?"

ருஸ்தம் சற்றுக் கடுமையாகவே பேசினார். சென்னப் பருக்குப் போதை அதிகமாக இருந்தது. உள் மனத்தில் ருஸ்தம்கானின் தொடர்பு வேண்டும் என்ற எண்ண மிருந்தது. அதே சமயம் இலிங்கமன் திட்டப்படி புதிய திருச்சிராப்பள்ளி நாடு உதயமாகி அதற்குத்தான் ஒரு தளபதியாக வேண்டும் என்ற பேராசையும் மிக இருந்தது. அந்த எண்ணங்கள் இயற்கையாக வெளியே வந்தன.

சொற்கள் தடுமாற, போதையால் பார்வை மங்க, ஆனால் உள்ளத்திலிருப்பதை ருஸ்தம்கானிடம் அப்படியே சொல்லி அவர் ஆதரவைப் பெற வேண்டும் என்ற வேட்கை மிக, "ருஸ்தம்! நீங்கள் சொன்னது ஒரு பக்கம் சரி. ஆனால் மற்றொரு பக்கத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும். தளபதி இலிங்கமருக்குத் தகுதிக் குறைவு உண்டா? எவ்வளவு போர்க்களங்களில் வெற்றி கண்டிருக்கிறார்? எவ்வளவு நாள்களுக்கு அவர் இந்த நிலையில் இருப்பது? எனக்கு மட்டும் வீரதீரப் பிரதாபங்களைப் புலப்படுத்த ஆசை இல்லையா?

"நீங்கள் இப்பொழுது சொன்னீர்கள், மைசூரான் சில கோட்டைகளைக் கைப்பற்றி விட்டான் என்று. அவனை அடியோடு ஒழிக்காமல் விட்டு வைத்திருப்பதே தவறு. நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். என் பேச்சு எடுபடவில்லை. நானே தளபதியாகிவிட்டால், ஏகோஜியைச் சும்மா விடுவேனா? திருச்சிராப்பள்ளி நாட்டை ஏற்படுத்துவோம். லிங்கமன் அரசர். நான் தளபதி; பிரதானி யாக இருக்க இராயசத்துக்கு ஆசை. திறமை உடையவர் தான். ஆனால் என்னைவிடத்தான் புத்திசாலி என நினைக்கிறார். பிறகு எங்கள் இருவருக்கும் மனத்தாங்கல் வரலாம்.

"இப்பொழுது சொல்லுங்கள் நீங்கள் தளபதியாக இருக்கிறீர்களா? நான் எப்பொழுதும் போல் பிரதானி யாகவே இருக்கிறேன். உம்... சொல்லுங்கள். ருஸ்தம்கான் உங்கள் நல்வாழ்வுக்காக இதோ இன்னொரு கோப்பை மதுவை ஊற்றிக் கொள்கிறேன்! புதிய திருச்சிராப்பள்ளி நாடு வெகு சீக்கிரம் உதயமாகும். இலிங்கம நாயக்கர் அரசராவார். ருஸ்தம்கான் தளபதி. சென்னப்பர் வழக்கம் போல் பிரதானி. பிரமாதமான கூட்டு. நண்பர்களின் கூட்டு வாழ்க!" சென்னப்பர் நிதானம் தவறித் தரையில் சாய்ந்தார்.

ருஸ்தம்கான் அந்த இடத்தைவிட்டு எழுந்தார். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு தட்டிலிருந்த சில மாம்பழத் துண்டங்களைச் சுவைத்துக் கொண்டு குதிரை ஏறி விரைந்தார்.

அவர் மனத்தில் பெரிய பெரிய திட்டங்கள் அப்பொழுதே உதயமாகிவிட்டன.



தோப்பின் வழியே சற்றுத் தொலைவு சென்றவுடன், நடனமாட வந்த பெண் ஒருத்தி மரத்தின் மறைவில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

## 10

மரத்தின் மறைவில் நின்று கொண்டிருந்த அந்த மங்கையை, "ஏய்" என்று கை சொடுக்கி ருஸ்தம் அழைத்தார். அச்சமும், போலியாக வரவழைக்கப்பட்ட நாணமும் சேர அவள் நடந்து வந்த ஒயில் அவருக்கே சிரிப்பை அளித்தது. நடனமாடும் போதுதான் அரைகுறை ஆடை அணியவேண்டும். அதற்குப் பிறகு ஏன் இப்படி? இந்த மர மறைவில் ஏன் நிற்கிறாள்?

"பெண்ணே! ஏன் இந்த மரத்தின் மறைவில் நிற்கிறாய்? பகல் வேளையிலேயே உன் காதலன் வருவதாகக் கூறினா னோ?" என்று கண்களைச் சிமிட்டினார்.

அவள் நெளிந்தாள் புழுவைப் போல. ருஸ்தம் அவள் அருகே இரண்டு அடி எடுத்து வைத்தார். தோப்பின் வெளியே குதிரை நின்றிருந்தது. அந்த வெயில் வேளை யிலும் காவிரியின் குளிர்நீரில் தவழ்ந்து வந்த காற்று குளுமையை அளித்தது. மாங்குயில் சுகமாகக் கூவியது.

"பெண்ணே, உன் பெயர் என்ன? பதில் பேச மாட்டாயா? ஊமையா?" என்றார் ருஸ்தம், சட்டென அவள் கரத்தைத் தாவிப் பற்றினார்.

"என் பெயர் ரூபமதி.." என்று கூறியவுடன் நிஜமாகவே அவளுக்குப் பயம் வந்தது. பிற பெண்களைக் கண்டாலே

தனக்குப் பிடிக்காது என்று கூறிய குதிரைக்காரர் தன் கையைப் பற்றி விட்டாரே என்று நினைக்கும்போது ஒருவித அச்சம் அவளைக் கவ்வியது.

ருஸ்தம் மெல்லச் சிரித்தார். "ரூபமதி! அழகான பெயர், உன்னைப் போலவே. உம்; நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே? இங்கே ஏன் நிற்கிறாய்?" அவர் பிடி அழுத்தியது.

ரூபமதிக்கு வியர்த்தது. தன் விழிகளின் ஓரத்தால் மெல்ல அவரை நோக்கி, "ஐயோ... என் கையைத் தொட்டுவிட்டீர்களே" என்றாள் குரலில் அச்சத்தைக் கூட்டியவாறு.

"தொட்டால் என்ன?" என்று கேட்டார் ருஸ்தம் அவளை மிகவும் நெருங்கி.

"மதுவும் மாதும் உங்களுக்குப் பிடிக்காது என்றீர்களே? இப்போது மட்டும் தொடலாமா?" அவளுக்குப் பயம் போய்விட்டது. களுக்கென்று சிரித்துவிட்டாள்.

ருஸ்தம் திடுக்கிட்டார். பிடித்திருந்த பிடியைச் சற்றுத் தளர்த்தினார். பிடி இளகியதும் ரூபமதி கண் இமைக்கும் நேரத்தில் அங்கிருந்து ஓடத் தொடங்கினாள்.

ருஸ்தம் இதை எதிர்பார்க்கவில்லை. இவள் ஏன் தன்னிடமிருந்து தப்பி ஓடுகிறாள்?

ஒரே பாய்ச்சலாக ருஸ்தம் அவளைத் தொடர்ந்து ஓடினார். மரங்களிடையே ரூபமதி வளைந்து வளைந்து ஓடினாள்.

குதிரை மீதே எப்போதும் சவாரி செய்து பழக்கப்பட்டுப் போன ருஸ்தம் ஓடுவதற்குச் சிரமப்பட்டார். ஆனால் பரவேர்



ஒன்று தடுக்கியதால் கீழே விழுந்த ரூபமதியை ருஸ்தம் தாவிப் பிடித்துவிட்டார். நிலைகுலைந்து வீழ்ந்ததால் அவளது ஆடைகள் சரிந்தன. அவளுடைய மேனி அழகு அந்த நிழல் படர்ந்த தோப்பில் பளிச்சென ஒளிவீசியது. இப்பொழுது அவள் கரத்தை மட்டும் அவர் சேர்த்துப் பிடிக்கவில்லை. அவள் எதிர்பாராமல் அவளையும் சேர்த்து இறுக அணைத்தார்.

"ஏய், அவ்வளவு எளிதில் என்னிடமிருந்து தப்ப முடியுமா?" ருஸ்தம் சிரிப்பில் காமல் கொப்பளித்தது.

குதிரைப் படைத் தலைவர் இப்படிச் செய்வார் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அவள் திணறினாள்.

"என்னை விடுங்கள், விட்டு விடுங்கள்" அவள் திணறினாள்.

"ஹூ ஹூம்... விட்டு விட்டால் தப்பி ஓடிவிடலாம் என்று நினைக்கிறாயா?" ருஸ்தம் பல்லைக் கடித்துக் கொண்டு பேசினார்.

பலமாக அணைக்கப்பட்டிருந்த நிலையிலும் ரூபமதி மெல்லச் சிரித்தாள்.

"நான் ஏன் தப்பி ஓட வேண்டும்?" என்று கேட்டாள். "ஐயோ மூச்சுத் திணறுகிறது, உயிர் போய் விட்டால் ஒரேயடியாக இந்த உலகத்தைவிட்டே ஓடிவிடுவேன்" என்றாள்.

ருஸ்தம் தன் அழுத்தத்தை மெல்லக் குறைத்துக் கொண்டார்.

அவளைத் தூக்கி நிறுத்தி "என்னைப் பார்த்தவுடன் நீ ஏன் ஓடினாய்?" என்று கேட்டார்.

"பெண்களைக் கண்டால் பிடிக்காது என்று சொன்னீர்களே, அதனால் ஓடினேன்" என்றாள் ரூபமதி.

"பெண்ணே, பொய் சொல்லாதே! ஓடிப்போவதென்று நீ முடிவு செய்திருந்தால், இங்கே மரத்தின் மறைவில் ஏன் நிற்கிறாய்? நான் வருவேனென்று தெரியாதா? நீயும் ஒரு பெண். பெண்களை எனக்குப் பிடிக்காது என்று உனக்குத் தெரியாதா?" ருஸ்தம் அவளது தோளை ஒரு கையால் அழுத்தினார்.

அவரது முரட்டுத்தனமாக கரத்தின் அழுத்தத்தால் 'ஆ' என்று மெல்லச் சிணுங்கிய ரூபமதி, "தெரியும்" என்றாள்.

"தெரியுமா? என்ன தெரியும்?"

"நீங்கள் வருவீர்கள் என்று தெரியும்."

"பெண்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. அதனால் ஓடினேன் என்று சொன்னாயே, பிறகு ஏன் மரத்தடியில் நின்றாய்!"

"உங்களைச் சந்திக்க வேண்டும்; என் கதையைக் கூறவேண்டும் என்று தான்..."

ரூபமதி இவ்வாறு கூறியது கேட்டு ருஸ்தம் திகைத்தார்.

"உன் கதையா? என்ன சொல்கிறாய்?"

"ஆமாம், ஐயா, எனக்கு இங்கிருந்து விடுதலை கொடுங்கள், மதுரை என்னுடைய சொந்த ஊர். அங்கே சென்றுவிடுகிறேன். என் பெற்றோர் அங்கே இருக்கிறார்கள்" என்று ரூபமதி கூறும்போது அவள் விழிகள் மழைக்கால மேகமாயின.



"உன் பெற்றோர் அங்கே என்ன செய்கிறார்கள்?"

"நெசவுத் தொழில். சமீப காலமாகத் தொழில் நன்றாக நடக்கவில்லை. என்னுடைய அண்ணனும் மேற்கே படைவீரர்களுடன் சேர்ந்து சண்டை போடச் சென்றவன் அங்கே இறந்து போய்விட்டான். நான்தான் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியதாயிற்று."

"உன்னால் எப்படிக் காப்பாற்ற முடியும்? நீ என்ன வேலை செய்வாய்?"

இதைக் கேட்ட ரூபமதி சற்று நாணமுற்றவளாய் தோளில் அழுத்தியிருந்த ருஸ்தத்தின் கரத்தை மற்றொரு கரத்தால் மெல்ல நகர்த்தி, "ஸாப்! நான் என் பெற்றோரைக் காப்பாற்றினேன். காப்பாற்றி வருகிறேன். என்ன வேலை என்று கேட்டீர்களே? எனக்குக் கொஞ்சம் பாடத் தெரியும். ஆடவும் தெரியும். மதுரையில் என் பிழைப்பு ஒருவிதமாக நடந்து கொண்டிருந்தது. என் அப்பா அம்மா இரண்டு வேளையும் நன்றாகச் சாப்பிட்டார்கள்..." என்றாள்.

"நீ சாப்பிடவில்லையா?" ருஸ்தம் அவளது வலக்கை விரலை இழுத்துச் சொடுக்கினார்.

'இல்லை' என்பதற்கு ரூபமதி தலையை அசைத்தாள். அவள் நெஞ்சில் வேதனை வந்து அடைத்தது.

"மனம் விட்டுச் சொல்கிறேன் ஸாப்! இலை போட்டுச் சாப்பிட்டு ஒரு வருடமாகிறது. அவ்வப்போது கிடைத்ததைச் சாப்பிடுவேன். பாலோ மோரோ குடிப்பேன். கோதுமை, பருப்பு, வேர்க்கடலை என்று சாப்பிடுவேன். லட்டும் அதிரசமும் கிடைக்கும், பொங்கலும், புளியோதரையும் கிடைக்கும். ஒரு வாய் ரசம் சோற்றுக்கு நாக்குச் செத்துவிட்டது என் பிழைப்பு. இரவு இல்லை பகல் இல்லை

என்று வருபவர்கள் எதிரே ஆட வேண்டும், பாட வேண்டும்...''

ருஸ்தம் அவளுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினார். ''சரி மதுரைப் பிழைப்பைவிட்டு இங்கே ஏன் வந்தாய்?''

அவள் தன் தலையைத் தொட்டுக் காட்டி, ''எழுத்து, பிரதானியிடம் இராயசம் என்னை அறிமுகப்படுத்தினார். பிரதானி திருச்சிராப்பள்ளிக்கு அழைத்து வந்து விட்டார். நான்தான் அரண்மனை நாட்டியக்காரியாம்...'' என்றாள்.

''எந்த அரண்மனைக்கு?'' ருஸ்தத்தின் நெற்றி சுருங்கியது.

''ஸாப்! பயமாயிருக்கிறது. என்னைக் காப்பாற்றுங்கள் ஸாப்!'' ரூபமதி நடுங்கியவாறே ருஸ்தத்தின் மார்பில் நெருங்கிச் சாய்ந்து கொண்டாள்.

ருஸ்தம் எவ்வளவோ பெண்களைச் சந்தித்திருக்கிறார் என்றாலும் இப்படியொரு மென்மையான, பூப்போன்ற மெல்லுடல் கொண்ட ஒரு பெண் வலியவந்து அணைப்பதை அவர் அநுபவித்ததில்லை.

ரூபமதி நடிக்கிறாளா? ஏதாவது தந்திரம் செய்கிறாளா? கபடமாக மறைத்து வைத்திருக்கும் குறுவாளால் குத்திவிட முயல்கிறாளா?

ருஸ்தம் சற்றுத் தள்ளி நின்றார். ''பெண்ணே! உண்மையிலேயே பயப்படுகிறாயா? அல்லது நடிக்கிறாயா? என்று கேட்டார்.

அவள் மேனி நடுங்கியது. உண்மைதான் என்பதை குஸ்தம் விரைவில் உணர்ந்தார்.



''பெண்ணே! உன்னைக் காப்பாற்றும்படியாக உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? எந்த அரண்மனையின் நாட்டியக் காரியாகப் போகிறாய்? இப்பொழுது அரண்மனை நாட்டியக்காரியாக இருப்பவள் மன்னரின் அபிமானத்தைப் பெற்றவளாயிற்றே...'' என்று குஸ்தம் கேட்டார்.

''ஐயா, புதியதாகக் கட்டப்படும் அரண்மனையில்...''

''புதிய அரண்மனையா? அந்த அரண்மனையில் யார் அரசர்?''

''அவர்தான்... அவர்தான்... படைத்தலைவர்...'' ரூபமதி நடுங்கிய குரலில் சொன்னாள்.

''உனக்கெப்படி தெரியும்?''

''படைத்தலைவரும், பிரதானியும், இராயசமும் பேசிக் கொண்டிருந்தார்கள்.''

''பெண்ணே! உன்னை நம்பித்தானே, நீ இருப்பது தெரிந்தும் அவர்கள் ரகசியம் பேசினார்கள், இல்லையா? அதை வெளியே சொல்லலாமா? துரோகமல்லவா?''

ருஸ்தம் இவ்வாறு கேட்டவுடன், ரூபமதி சற்று விலகி நின்று அவரை நிமிர்ந்து நோக்கி, விழிநீரைத் துடைத்துக் கொண்டு, ''அரசருக்கு விரோதமாகச் சதி செய்வதை அறிந்த நான் தக்கவரிடம் சொல்வது தவறா? நானாக அவர்கள் பேசுவதைக் கேட்கவில்லை. நானிருப்பது தெரியாமல் மிகவும் உல்லாசமாகப் பேசினார்கள்'' என்றாள்.

''நீ இருப்பது தெரியாமல் பேசினார்கள். அப்படியென்றால் புதிய அரண்மனை நர்த்தகி நீ என்று உன்னிடம் கூறியபோது நீ எந்த அரண்மனை என்று அவர்களைக் கேட்கவில்லையா?'' ருஸ்தம் கேட்டார்.

"நான் கேட்கவில்லை. பிரதானி என் நாட்டியத்தை மிகவும் விரும்புகிறார். இன்று நீங்கள் வரும்போது உங்கள் மனசுக்குப் பிடிக்கும் விதத்தில் நடந்து கொள்ளுமாறு உத்தரவிட்டதும் பிரதானிதான். அவரது திட்டம் முழுவதையும் உங்களிடம் அவரே தெரிவித்திருக்கும்போது நான் கூறியது தவறா? சொல்லாமல் இருந்தால்தான் தவறு..." ரூபமதி அழுத்தந்திருத்தமாகப் பேசினாள்.

ருஸ்தம் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

"பெண்ணே! உன்னைச் சோதனை செய்யவே அவ்வாறு கேட்டேன். பெரிய சதியில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். நமது அரசர் மீது உனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டா?" ருஸ்தம் கேட்டார்.

"உண்டு ஐயா! அதனால்தான் அரசருக்கு எதிராக அவர்கள் செய்யும் சதியை உங்களிடம் தெரிவித்துவிட விரும்பினேன். நீங்களும் மன்னருக்கு மிக வேண்டியவராயிற்றே!" என்று கூறி விழிகளைச் சுழற்றினாள் ரூபமதி.

"நல்லது. நமது மன்னரை நாம் காப்பாற்ற வேண்டும். அதற்கு உன்னால் ஓர் உதவி ஆகவேண்டும்" என்று கூறி ரூபமதியின் முகமாற்றத்தை உற்று நோக்கினார் ருஸ்தம்.

ரூபமதி உற்சாகம் மிகுந்தவளாக, "சொல்லுங்கள் ஐயா! சொல்லுங்கள். இந்த ஏழைப் பெண்ணால் ஆகக்கூடிய உதவி ஏதேனும் உண்டா சொல்லுங்கள்..." என்றாள்.

"நீ ஏழையாயிருந்தாலும் ஆண்டவன் உனக்கு நிறைய அழகைக் கொடுத்திருக்கிறார். பிரதானியிடம் முன்பு போலவே பழகி அங்கு நடக்கும் விஷயத்தை உடனுக்குடன் எனக்குத் தெரிவிக்க வேண்டும். செய்வாயா?" என்றார்.



ரூபமதி ஒரு கணம் யோசித்தாள். "உம் அப்படியே செய்கிறேன். நான் உங்களை எங்கே, எப்போது சந்திப்பது?" என்று கேட்டாள்.

"முக்கிய செய்தியிருந்தால் இரவு பதினோரு மணிக்குக் குதிரை லாயத்திற்கு வந்துவிடு. முக்கியச் செய்தி இல்லாவிடில் மலைக்கோட்டை வாசலில் கையில் ஒரு மல்லிகைப் பூவுடன் நில். ஆபத்தான செய்தி என்றால், எந்த நேரமானாலும் குதிரை லாயத்திற்கு ஓடோடி வந்துவிடு. எந்தவித ஆபத்தும் நேராமல் உன்னைக் காப்பாற்றுகிறேன்" என்றார்.

"அவர்கள் சதித்திட்டம் முழுமையும் நான் அறிந்து சொல்கிறேன். எனக்கு என்ன தருவீர்கள்?" என்று ரூபமதி கேட்டாள். சொல்லில் அளவுக்கு மீறிய குழைவு இருந்தது.

"என்ன வேண்டுமானாலும் கேள். என் அந்தப்புரத்தில் உன்னையும் பீபியாகச் சேர்த்துக் கொள்ளட்டுமா?" ருஸ்தம் சிரித்துக் கொண்டே கேட்டார்.

ரூபமதி தலையை அசைத்து "ஐயோ, வேண்டாம். வேண்டாம். என் தந்தை கொன்று போட்டுவிடுவார். என்னை என் பெற்றோரிடம் சேர்த்து விடுங்கள். அதுவே போதும்" என்றாள்.

ரூபமதியைப் பற்றி முதலில் தவறாக நினைத்திருந்த ருஸ்தம், அவருடைய கோரிக்கையைக் கேட்டு வியந்தார். ரூபமதியின் உதவியைக் கொண்டு தன் நீண்டகால ஆசைகள் சிலவற்றை நிறைவேற்றத் திட்டமிட்டார்.

ARA PUBLIC LIBRARY

## 11

திருக்குற்றாலத்து இளந்தென்றலும், சித்ரா நதியின் சலசலப்பும் மந்திகளின் குறும்பும் காட்டுமலர்களின் நறுமணமும் மங்கம்மாவின் மனத்தைக் கவரவில்லை. அவள் சதா சிந்தனையிலாழ்ந்திருந்தாள். தன் கணவர் அரசர் சொக்கநாதருக்கு உடலில் ஏதும் கோளாறு இல்லை. மனத்தளவே பெரும் குழப்பம் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டாள். மதுரைப் பெரு நாட்டாட்சியைச் சீரும் சிறப்புடன் நடத்த மறுசிந்தனை தேவை என்பதைப் புரிந்து கொண்டாள். இரவெல்லாம் சிந்தித்தாள்.

சொக்கநாதரும் உறங்கவில்லை. அவர் மனமும் பல விதச் சிந்தனைக் குழப்பங்களில் சிக்கித் தவித்தது. மதுரையை அடுத்து விளங்கும் மறவர் நாடு, வடக்குப் பகுதியில் தஞ்சை நாடு, அதற்கும் வடக்கே செஞ்சி, அவுரங்கசீப்பின் பிரதிநிதிகள், மேற்கே மைசூர் நாட்டுச் சிக்க தேவராயன், தென்மேற்கே திருவாங்கூர் நாடு, இப்படி நான்கு புறமும் மதுரை நாட்டிற்குத் தொல்லை தந்து கொண்டிருப்பதை எப்படியும் மாற்றிவிட வேண்டும் என்று எப்போதும் சிந்தித்தார், சிந்தித்தார். அந்தச் சிந்தனையின் எதிரொலிதான் இலிங்கமனைச் செஞ்சிக்குப் படையெடுத்துச் செல்லுமாறு அனுப்பினார். இன்னும் இரண்டு சிறந்த வீர தளபதிகள் இருந்தால் திருவாங்கூரையும் மைசூர் சிக்க தேவராயரையும் சமாளித்து விடலாம். ஆமாம்; நல்ல யோசனை. 'ஹஹ்ஹா... ஹஹ்ஹா... நல்ல யோசனை' என்று வாய்விட்டுக் கூவினார்.



மங்கம்மாள் அறையின் வெளிக்கூடத்தின் விழிகளை மூடிய நிலையில் அமர்ந்திருந்தவள், அரசரின் குரல் கேட்டு விரைந்தோடினாள்.

படுக்கையில் அரசர் உட்கார்ந்து தனக்குத்தானே பேசிக் கொண்டும், உரக்கச் சிரித்துக் கொண்டும் இருப்பதைப் பார்த்து அவரருகே நெருங்கி, அவரைத் தன் தோள்மீது ஒரு குழந்தை போல் சாய்த்துக் கொண்டு, இப்படி இரவெல்லாம் தூங்காமல் ஏதாவது யோசனை செய்து கொண்டே இருந்தால் மனத்தொல்லையால் பித்துப் பிடித்துவிடும் நிலைதான் ஏற்படும். இரவு மூன்றாம் சாமம் முடியப் போகிறது. சற்றுத் தூங்குங்கள்'' என்று அன்புடனும் அதே சமயம் கண்டிப்புடனும் கூறினாள்.

சொக்கநாதர் மீண்டும் சிரித்தார். "மங்கம்மா! பிரச்னைகளுக்கு ஒரு முடிவு கண்டுபிடித்து விட்டேன்'' என்றார்.

"பிரச்னையா? நமக்கு என்ன பிரச்னை இருக்கிறது? பிரச்னைகளையெல்லாம் மறப்பதற்காகத்தானே நாம் இந்த அருவிக்கரைக்கு வந்தோம்?'' என்றாள் மங்கம்மாள்.

"என்ன சொல்கிறாய் மங்கம்மா? நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. நம்மைச் சுற்றி நான்கு புறமும் விரோதிகள்... அவர்களை அடக்க வேண்டும். அதற்கு நல்ல படைத்தளபதி வேண்டும். இலிங்கமன் வடக்கே போயிருக்கிறான். மேலும் இரண்டு பேர் வேண்டும்... நம்பிக்கை மிகுந்த இருவர் வேண்டும்'' என்று கூறி மங்கம்மாவின் முகத்தைத் திருப்பி நோக்கினார்.

"இதைத்தான் பிரச்னைகளுக்கு ஒரு முடிவு என்று நீங்கள் கூறுகிறீர்களா? புதிய பிரச்னையை அல்லவா ஏற்படுத்து கிறீர்கள்? நம்பிக்கை மிகுந்தவர்களைத் தேடிப்

பிடிப்பது இந்தக் காலத்தில் நடக்கிற காரியமா? நமது பலவீனத்தைப் பலர் புரிந்து கொண்டுவிட்டார்கள்... எனக்கு ஒருவர் மீதும் நம்பிக்கை இல்லை. நேற்றே சொல்லிவிட்டேன். இராயசமும், பிரதானியும் நமக்கெதிராக ஏதோ சூழ்ச்சி செய்கிறார்கள் என்று என் உள்ளுணர்வு கூறுகிறது..." என்று மங்கம்மாள் சொல்லும்போது அவள் குரலில் பய உணர்ச்சி பொங்கி நின்றது.

"மங்கம்மா! சந்தேகக் கண்களுடன் பார்ப்பது உன் பழக்கமாகி விட்டது. சந்தேகம் என்பது ஒரு நோய். அந்த நோய் உள்ளுக்குள்ளேயே வளர்ந்து மெல்லக் கொன்றுவிடும்... நீ இலிங்கமனை நம்பவில்லை. இராயசத்தின்மீது நம்பிக்கை இல்லை. பிரதானியைக் கண்டால் பிடிக்கவில்லை. அப்படி என்றால் நாம் தலைமுதல் கால் வரை அனைவரையும் மாற்றிவிட வேண்டும்" சொக்கநாதர் அழுத்தந்திருத்தமாகப் பேசினார். குரலில் இரண்டு நாள்களுக்கு முன்பிருந்த சோர்வில்லை. பேச்சுத் தடைப்பட்ட மெல்லிய குரலில் வருவது மறைந்து குரலில் பழைய கம்பீரம் இருந்தது. மறுபடியும் தனது தவறான திட்டங்களால் அரசர் மேலும் ஏதேனும் தொல்லையே உண்டாக்கப் போகிறாரோ என்று மங்கம்மாள் கவலைப்பட்டாள். இனி அரசரே தன்னிச்சையாக முடிவெடுப்பதைத் தடுத்துவிட வேண்டும் என்ற உறுதி அவளுள்ளத்தில் எழுந்தது.

சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. சாரல் காற்று வீசிக் கொண்டிருந்தது. எங்கோ ஒற்றைப் பறவை ஒன்று கூவியது. சில்வண்டுகளின் சுருதி கலையாத ஒலி விடாமல் எழுந்து கொண்டிருந்தது. கரிச்சான் குருவி ஒன்று எங்கோ இசைத்துக் கொண்டிருந்தது.

திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவரைப் போல் சொக்கநாதர், "மங்கம்மா! நான் மறந்தே விட்டேன். முத்து



அழகாத்திரி எங்கே போய்விட்டான்? அவனைத் தேடிப்பிடி. முத்து வீரப்பனை நான் கண்டு பேசிப் பல மாதங்கள் ஆகின்றன. அவன் எங்கே? என் மகன் எங்கே?" என்று கூவினார்.

மங்கம்மாள் திகைத்தாள். 'முத்து அழகாத்திரியின் நினைவு இவருக்கு இப்பொழுது ஏன் வந்தது?" என்று அவளுக்குப் புரியவில்லை.

முத்து அழகாத்திரி சொக்கநாதரின் சகோதரன். அவர் தந்தை அரசர் திருமலை நாயக்கரின் அபிமானத்திற்குரிய மற்றொரு மனைவியின் மகன். பட்டத்துக்கு உரிமையுடைய அரசியின் மகனாக சொக்கநாதர் பிறந்ததால் அழகாத்திரிக்கு மதுரை நாட்டுரிமை கிடைக்கவில்லை. அதுவே அழகாத்திரி மனத்தில் பெருங்குறையை அளித்து வந்தது. சொக்கநாதரைக் கண்டால் உள்ளூர அவருக்குப் பிடிக்காது என்றாலும் அரசபகை கூடாது என்ற வெளித்தோற்றத்திற்கு மிக வேண்டியவர் போல் பழகி வந்தார்.

அவருடைய எண்ணம் எல்லாம் அரசரை எதிர்த்துப் புரட்சி செய்ய எப்பொழுது தனக்கு வாய்ப்புக் கிடைக்கும், மதுரை மகுடத்தை அடையலாம் என்பதிலேயே இருந்தது. மெல்ல மெல்லச் சில பாளையக்காரரோடு நெருங்கிப் பழகலானார். நாட்டு வளப்பம் அறிய அரசரின் பிரதிநிதியாகச் செல்வதாகப் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று வரலானார். அங்குள்ள ஊர்ப் பெருந்தனக்காரர்களுடனும் நாட்டாண்மைக்காரர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொள்ளலானார். அழகாத்திரி வருகிறார் என்றால் அரசர் சொக்கநாதரே வருவதாக அனைவரும் எண்ணினார்.

போர், படையெடுப்பு என்றால் சொக்கநாதர் அந்தரங்கமாக அழகாத்திரியை அழைத்துப் பேசத் தவறமாட்டார்.

சமீப காலமாக அழகாத்திரி திருச்சிராப்பள்ளிக்கு வருவதில்லை. சொக்கநாதருக்கும் மனம் சரியில்லாது எப்பொழுதும் குழப்ப அலை மனத்தில் வீசிக் கொண்டிருக்கும் நிலையில் சொக்கநாதரின் உறவினர் ஒருவரையும் மங்கம்மாள் நெருங்கவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டாள். இப்பொழுது அழகாத்திரியின் நினைவு அரசருக்கு ஏன் வருகிறது?

"என்ன? நான் சொல்வது உன் காதில் விழுந்ததா? முத்து அழகாத்திரியை உடனே எங்கிருந்தாலும் அழைத்து வருமாறு செய்" என்று மீண்டும் சொக்கநாதர் உரத்த குரலில் கட்டளையிடுவது போல் பேசினார்.

மங்கம்மாள் அந்த அழுத்தமான குரலுக்கு அஞ்சவில்லை. இனி, தன் கணவரின் போக்குப்படி நாட்டில் எல்லாம் நடந்தால் எதிரிகளின் கை வலுத்துவிடும். ஆட்சிக் குதிரையின் லகானை நாம் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

"ஏன் – ஆட்சிப் பொறுப்பை, உத்தரவிடும் உரிமையை, திட்டமிடுவதை, குற்ற விசாரணையை நாமே ஏற்றால் என்ன? அரசி மங்கம்மாள் என்கிறார்கள். இராணி மங்கம்மாள் என்கிறார்கள். அந்தப்புரத்திற்குள் முகத்திரையிட்டு நாம் அடைந்து கிடப்பதில்லை. அப்படிப்பட்ட பயமற்ற உணர்வு நம்மிடமிருக்கும்பொழுது அரசர் பெயரால் நாமே ஆட்சியை ஏற்றுக் கொண்டால் என்ன?" இந்த எண்ணம் மங்கம்மாளின் உள்ளத்தில் பலமாக எழுந்தது.

"முத்து அழகாத்திரியை நான் அழைக்கமாட்டேன்" மங்கம்மாவின் குரலில் கண்டிப்பும் அழுத்தமும் இருந்தன.

மங்கம்மாவின் குரலில் இருந்த அழுத்தத்தையும் கண்டிப்பையும் உணர்ந்தார் சொக்கநாதர்.



"முத்து அழகாத்திரி மீதும் உனக்குச் சந்தேகமா? வெறுப்பா?" சொக்கநாதர் கேட்டார். குரலில் சற்றுத் தயக்கத்தை வரவழைத்துக் கொண்டார்.

"ஆமாம்; இரண்டும்தான்" மீண்டும் மங்கம்மாள் அழுத்தமாகப் பதில் சொன்னாள்.

"இப்படி ஒவ்வொருவர் மீதும் சந்தேகக் கண்கொண்டு பார்த்து அவதூறு சுமத்தினால் எல்லாருமே விரோதிகளாகி விடமாட்டார்களா?" சொக்கநாதர் குரலில் குற்றச்சாட்டு இருந்தாலும், குழைவும் இல்லாமலில்லை.

"இப்பொழுது மட்டும் அவர்கள் விரோதிகளாக இல்லை என்று சொல்ல முடியுமா? நம்மைச் சுற்றிலும் விரோதிகள் சூழ்ந்திருப்பதால் தான் நமக்கு உள்ளுக்குள்ளேயே உறவாடிக் கெடுக்கப் பார்க்கும் துரோகிகளை இனங்கண்டு ஒழித்துவிட விரும்புகிறேன்" மங்கம்மாள் குரலில் ஆத்திரம் மிகுந்திருந்தது.

சொக்கநாதர் சற்று அதிர்ச்சியடைந்துவிட்டார் என்றே சொல்லலாம். சமீபகாலமாக மங்கம்மாள் விருப்பப்படி தான் நடந்து கொள்வதாக அவர் உணர்ந்தார். வெளி உலகச் சந்திப்பைக்கூட அவள் மெல்ல மெல்லத் தடுத்து வருகிறாள் என்பதையும் புரிந்து கொண்டார். மங்கம்மாளும் ஒரு விரோதியாகி விடுவாளோ?

"அப்படிச் சொல்லப் போனால் நீயும் எனக்கு விரோதியாக நடந்து கொள்கிறாய் என்று நான் சொல்லிவிடலாம் அல்லவா? எனக்குப் பொன் விலங்கிட்டிருப்பதாக நான் கூறுவதை உன் உள்மனம் ஒப்புக் கொள்ளாமல் போகாது" சொக்கநாதர் குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னார்.

அந்தக் குரல் அம்புபோல் மங்கம்மாவைத் தைத்தது. அவள் உடலில் சொல்ல முடியாத வேதனை ஏற்பட்டது. அவள் இதயத்தை, சொக்கநாதரே அழுத்திப் பிழிவது போன்ற வலி ஏற்பட்டது. சொக்கநாதரா சொல்கிறார்? நான் ஒரே ஒருத்திதான் மிகுந்த நம்பிக்கையுடன் அவரையும், மதுரை நாட்டையும் காப்பாற்றி வருவதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். என்னைப் பார்த்தா என் உயிரினும் இனிய கணவர் விரோதி என்று கூறுகிறார்? நான் அவருக்கு விரோதியாமே? ஐயோ என்ன பேச்சு இது? சுயநினைவோடு பேசுகிறாரா? ஒவ்வொரு நாளும் அவர் இழந்துவரும் புத்திக் கூர்மையின் உச்சகட்டமாக இந்தக் கடுமையான சொல்லை வீசுகிறாரா?

"என்ன சொன்னீர்கள்?" மங்கம்மாவின் குரல் அவளுடைய அடிவயிற்றிலிருந்து பாய்ந்தது. அவள் துள்ளி எழுந்து சொக்கநாதரை நெருங்கி அவருடைய தோளைப் பிடித்து உலுக்கி, "என்ன சொன்னீர்கள்? நான் துரோகியா? இன்னொரு முறை என்னைப் பார்த்து நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள். பெரும் ஆபத்திலிருந்து இந்த நாட்டையும், உங்களையும் காப்பாற்றுவதற்காக இரவும் பகலும் எந்த நேரமும் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் செயலாற்றி வரும் என்னைப் பார்த்து இந்த வார்த்தையைச் சொன்னது நீங்கள்தானா? அல்லது உங்கள் உள்ளத்துக் குள்ளே குடிகொண்டிருக்கும் மாயப்பேயா? சொல்லுங்கள்" என்று கூறும்போது அவள் வார்த்தைகள் வெடித்துச் சிதறி உடைந்து தடுமாறின.



## 12

சக்தி கோயிலுக்குச் சென்றுவந்த பிறகு மறுநாளே தென்காசி மாளிகையில் செண்பகராமனும், தேனாட்சியும் சந்தித்துப் பேசிக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

"மலைக் கோயிலில் நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து செய்திகள் ஏதும் எனக்குத் தெரியவில்லையே?" என்று கேட்டாள் தேனாட்சி.

செண்பகராமன் அவள் முகத்தைப் பார்த்துச் சிரித்தான்.

"கேட்கக்கூடாதது எதையாவது நான் கேட்டு விட்டேனா?" தேனாட்சி கேட்டாள்.

"அப்படியொன்றுமில்லை. கேட்க வேண்டியதைத்தான் கேட்டிருக்கிறாய், ஆனால் நாட்டில் நடப்பவை எல்லாம் உன் செவிக்கு எட்ட வேண்டுமானால் உன் இருப்பிடத் திற்கு அவை வந்து நிற்குமா? அதனால்தான் சிரித்தேன்" என்றான் செண்பகராமன்.

"இப்போது இங்கேவந்து நின்றிருக்கிறது" என்று சொல்லி, தேனாட்சி சிரித்தாள். செண்பகராமனும் சிரித்தான்.

"செய்தி கேட்டறிய வந்தேன். மலைக்கோயிலில் சிறைபிடித்த சோநாட்டு ஒற்றர்களைப்பற்றி உன்னைக் கேட்டறியலாம் என்று வந்தேன்" என்றான் செண்பகராமன்.

"அவர்களைப் பற்றி உங்களிடமிருந்து அறிய விரும்பித் தான் செய்தி ஏதாவது இருக்கிறதா என்று கேட்டேன்.

அந்த இரு ஒற்றர்களைப் பற்றி அறிய இளவரசியார் மிக ஆவலுடன் இருக்கிறார்கள். அவர்கள் யார் என்று அடையாளம் தெரிந்ததா?'' என்று கேட்டாள் தேனாட்சி.

''அவர்களைப் பற்றி அறிய பாண்டிய அரசரே மிகுந்த ஆவலுடன் இருக்கிறார். உன்னிடம் அவர்களைப் பற்றிக் கேட்டறியத்தான் வந்தேன்'' என்றான் செண்பகராமன்.

''சேரநாட்டு ஒற்றர்கள் என்று அவர்களைச் சிறைப் படுத்தி அழைத்து வந்து இளவரசியின் முன் நிறுத்தி னார்கள்.''

''அந்த விவரம் தெரியும். வாய் திறந்த அவர்கள் இரவரும் ஏதும் பேசவில்லை என்பதும் தெரியும். அவர்களைப் பிணைத் திருந்த கயிற்றை அவிழ்த்து விடுமாறு இளவரசியார் உத்தரவிட்டதும் பாண்டிய வீரர்கள் அவ்வாறு செய்யாமல், ஒற்றர்களைத் தென்காசிக்கே அழைத்து வந்ததும் நான் அறிவேன்.''

''ஆமாம்; நீங்கள்தான் அவர்களைக் குதிரை மீதேற்றித் தென்காசிக்கு அழைத்துச் சென்றீர்கள். அதற்குப் பிறகு நடைபெற்றவற்றைச் சொல்லுங்களேன்'' என்றாள் தேனாட்சி.

''இளவரசியின் எதிரே ஒற்றர்களைக் கொண்டு நிறுத்தியதற்கு முன்பு நடைபெற்ற சம்பவங்கள் எனக்குத் தெரியும். ஆனால் ஒற்றர்களுடன் இளவரசி என்ன பேசினாள்; உங்கள் இளவரசியின் கட்டளையைப் பாண்டிய வீரர்கள் ஏன் நிறைவேற்றவில்லை? இளவரசி தன் தந்தையிடம் என்ன தெரிவித்தாள் என்ற செய்தியெல்லாம் எனக்குத் தெரியாது. அதை உன்னிடமிருந்து கேட்டறியத் தான் நான் வந்தேன்'' என்றான் செண்பகராமன்.



பாண்டிய வீரர்கள் ஏனோ இளவரசியின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை. அவர்கள் மிகுந்த பணிவுடனே சொன்னார்கள். ''தேவி, எங்களைப் பொறுத்தருளுங்கள். இவர்கள் சேரநாட்டு ஒற்றர்கள். இவர்களை உடனே நம் சேனைத்தலைவர் முன்பு கொண்டு நிறுத்த வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் எங்களுக்கு மரணதண்டனை கிடைக்கும். எங்களக்கு மரணதண்டனை கிடைக்க செய்வது தேவியின் திருவுளமாக இருக்க முடியாது என்று நினைக்கிறோம்'' என்றனர்.

''பாண்டிய இளவரசி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, சரி, சரி உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்'' என்று கூறிவிட்டாள்.

ஒற்றர்களுள் சற்றுக் கம்பீரத் தோற்றத்திலிருந்தவன் வீரர்களை அழைத்துச் செல்லும்போது ஒருமுறை திரும்பிப் பார்த்தான்.

இளவரசியும் திரும்பிப் பார்த்தாள். அப்போதே நினைத் தேன். இளவரசிக்கு ஏன் சேரநாட்டு ஒற்றர்கள்மீது அவ்வளவு பரிவு என்று. அது ஓர் புதிராகவே இருக்கிறது எனக்கு.

பாண்டிய அரசரிடம் இளவரசி அந்த ஒற்றர்களைப் பற்றி விசாரித்தறிய முயன்றிருக்கிறாள்.

நான் சும்மாயிருப்பேனோ? இளவரசியை மிக வற்புறுத்திக் கேட்டேன், அரசர் என்ன சொன்னார் என்று.

இளவரசி சொன்னாள். ''செண்பகம்! என் தந்தைக்கும் மிகக் குழப்பம்தான். அந்த இருவரும் சேரநாட்டு ஒற்றர் களாக இருக்க முடியாது என்றுதான் தோன்றுகிறது செண்பகம்! நீ என்னிடம் கேட்டது போலவே நான் என்

தந்தையைக் கேள்வி மேல் கேள்வி கேட்டேன்'' என்று கூறிய இளவரசி, 'செண்பகம்! நீ என்ன நினைத்து என்னைக் கேள்வி மேல் கேள்வி கேட்கிறாய் என்று எனக்குத் தெரியும். எனக்கு ஏன் அந்த ஒற்றர்களிடம் அவ்வளவு பரிவு ஏற்பட்டது என்று தானே கேட்கிறாய்?'' என்று செண்பகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

செண்பகம் சிரித்தாள்.

“அடி, செண்பகம்! உன்னிடம் என் அந்தரங்கத்தைச் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்? ஒற்றர்கள் இருவரும் உயரமான – கம்பீரமான – சிவந்த தோற்றமுடையவரைப் பார்த்தவுடன் சேரநாட்டு ஒற்றராக இவர் இருக்க முடியாது என்றே எனக்குத் தோன்றியது. என்னை அறியாமல் என் மனம் அவர் வசம் சென்றது. அதனால்தான் அவரைப் பிணைத்திருந்த கட்டை அவிழ்க்கச் சொன்னேன்.

காவல் வீரர்கள் நான் சொல்வதைக் கேட்கவில்லை. என் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை விடுதலை செய்திருப்பேன். வீரர்களுடைய நேர்மையான செயலில் நான் குறுக்கிட விரும்பவில்லை. தந்தையிடம் கூறி ஒற்றர்களை ஒரு நொடியில் விடுதலை செய்துவிடலாம் என்ற துணிவில் அப்போது மௌனமாக இருந்தேன். என் தந்தையிடமும் கேட்டேன். அந்தப் போதில் நான் தந்தை என்ற உரிமையுடன் பேசினேன். அரசாங்கத்தின் செயல் களில் மற்றவர் – சொந்த மகளேகூட தலையிடுவதைப் பாண்டிய அரசர் விரும்பமாட்டார் என்பது எனக்குத் தெரியும். “அப்பா, அவர்கள் சேர நாட்டு ஒற்றர்களாக இருக்கட்டுமே – நமக்கு அவர்கள் விரோதிகளா? பாண்டிய நாட்டிற்கு இப்போது விரோதிகள் யாருமில்லை என்று நீங்களே



அவ்வப்போது சொல்வீர்கள். நமக்கு விரோதி அல்லது எதிரி என்று யாரையாவது நாம் கொள்ள வேண்டுமென்றால் அவர் நமது பரம்பரை மதுரை மகுடத்தை அபகரித்துப் பாண்டிய நாட்டை ஆண்டுவரும் சொக்கநாத நாயக்கர் தான் என்று. அப்படி என்றால் இந்தச் சேர நாட்டவர்களை ஏன் சிறைப்படுத்தியிருக்கிறீர்கள்?''

பாண்டிய மன்னர் உடனே மறுமொழி கூறவில்லை. “அன்பு மகளே! நீ கேட்பதும் நியாயம்தான். சேரர்கள் நமக்கு விரோதிகளல்லர். ஆனால் சேர நாட்டரசர் மீது சொக்கநாதர் பகைமை பாராட்டுகிறார். சேரநாட்டுடன் பல முறை மோதியிருக்கிறார். இப்போதுள்ள நிலையில் நாயக்கரும் சேரரும் ஒருவரோடொருவர் விரோதம் பாராட்டுகிறார்கள். சேரநாட்டின்மீது படை எடுக்க வேண்டும் என்று சொக்கநாதர் திட்டமிடுகிறார். அவரது திட்டத்தை முறியடிக்கச் சேர மன்னர் முடிவு செய்துள்ளார். சேர நாட்டில் படைகள் திரட்டப்படுகின்றன. சேர நாட்டவர் படைகள் முதலில் நமது நாட்டைக் கடந்துதானே மதுரையை அடையும்? நாம் அவர்களை அவமதிக்கலாமா? நாயக்க நாட்டவர்களிடமிருந்து மதுரை மகுடம் சேரர்களைச் சென்றடைய விடலாமா? அதனால்தான் சேரர்கள் நம் நாட்டைக் கடந்து செல்வதைத் தடுக்க விரும்புகிறேன். நம் எல்லையில் நடமாடிய சேரநாட்டு ஒற்றர்களைச் சிறைப் படுத்தியது தவறா, நியாயமா என்று இப்போது நீயே சொல்!'' என்றார்.

என்னால் மறுமொழி கூற முடியவில்லை. ஒன்று மட்டும் நான் கேட்டேன். “தந்தையே! நாம் பாளையக்காரர்கள் என்ற நிலையிலிருந்து மாறி நாயக்க மன்னருக்குக் கப்பம் செலுத்தும் சிற்றரசராக வாழாமல் சுதந்தரமாக எப்பொழுது வாழப்போகிறோம்?''

தந்தை என்னை அன்புடன் தட்டிக் கொடுத்து, "மகளே, முத்தம்மா! அதைத்தான் நான் திட்டமிடுகிறேன். எனக்கு ஒரு மகன் இருந்தால் அவனை வீரனாக வளர்த்து மதுரை அரியணையில் அமர்த்த முடிவு செய்திருப்பேன். எனக்கு மகன் மகள் இரண்டும் நீயே! அந்த மங்கம்மாளிடம் சபதம் செய்திருக்கிறேன். மதுரை அரியணையில் பாண்டியரின் வாரிசை அமர வைக்காமல் நான் ஓயமாட்டேன். சூளுரைத்திருக்கிறேன். என் இலட்சியம் நிச்சயம் ஈடேறும். உன்னை மணக்கவிருக்கும் மணவாளனிடம் ஒரு நிபந்தனை போடுவேன், உன்னை மணக்கப் போகிறவன் மதுரையை மீட்டுத் தருவதை ஓர் இலட்சியமாக உறுதியாகக் கொள்ள வேண்டும் என்று.

என் தந்தை – பாண்டிய அரசரின் சுதந்தர வேட்கை என்னை மெய் சிலிர்க்க வைத்தது. அந்த ஒற்றர் தலைவனைச் சிறையில் சென்று சந்திக்கட்டுமா?"

இளவரசி முத்தம்மாள் இவ்வாறு கேட்டவுடன் தேனாட்சி அதிர்ச்சியடைந்தாள்.

"தேவி! உங்களுக்கென்ன பித்து பிடித்துவிட்டதா? சிறைச்சாலைக்கு நீங்கள் செல்வதா? நாட்டிலுள்ளவர்கள் என்ன நினைப்பார்கள்?" என்று தேனாட்சி கேட்டாள்.

முத்தம்மாள் மௌனமாயிருந்தாள். பிறகு, பேச்சைச் சற்று மாற்ற விரும்பி, "தேனாட்சி! மலைக்கோயிலில் நாம் பிரார்த்தனையை முடித்தவுடன் ஒற்றர்கள் இருவரையும் சிறைப்பிடித்து வந்தார்கள். அவர்கள் இருவரையும் எவ்வாறு சிறைப்பிடித்தார்கள் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தேவி! நான் விசாரித்தறிந்தேன். சேர நாட்டு ஒற்றர்களை நமது வீரர்கள் சிறைப்பிடித்தார்களா? விந்தை



தான்! நமது வீரர்கள் விரித்த வலையில் அவர்களாகவே வந்து வீழ்ந்துவிட்டனர்" என்று தேனாட்சி கூறினாள்.

"நமது வீரர்கள் வலை விரித்திருந்தார்களா? நகைச்சுவையாகச் சொல்கிறாயா?" என்று இளவரசி கேட்டாள்.

"இல்லை தேவி! உண்மையிலேயே நமது வீரர்கள் வலை விரித்துத் தானிருந்தார்கள்" என்று கூறி சேர ஒற்றர்கள் சிக்குண்ட கதையைத் தேனாட்சி விவரித்தாள்.

## 13

**பா**ண்டிய நாட்டையும் சேர நாட்டையும் இடையே நீண்டு படுத்திருந்த மலைத்தொடர்தான் பிரித்தது. அடர்ந்த காடுகள் சூழ்ந்த மலைமீது ஏறி மறுபுறம் இறங்கத் துணிந்தவர் மிகக்குறைவுதான். உயர்ந்த மரங்களின்மீது குடிலமைத்துக் கொண்டிருக்கும் தேனீக்களின் சேமிப்பை அபகரிக்க நினைப்பவர்கள்தாம், கொடி வழி அறிந்து அங்கு செல்வார்கள். உயிர்காக்கும் சில மூலிகைகளைத் தேடிச் செல்பவர்கள்கூட மலையைத் தாண்டி மறுபக்கம் இறங்கத் துணியமாட்டார்கள். ஆனால் எல்லையைக் கடந்து பாண்டிய நாட்டிற்குள் நுழையும் சில இடங்களும் உண்டு. அந்த இடங்களில் பாண்டியர்களின் எல்லையைக் காவல் வீரர்கள் எச்சரிக்கையுடன் எதிரிகள் வராமல் கண்காணிப்பார்கள்.

எல்லைக் காவல் வீரர்களுக்கு எதிரிகளிடம் அச்சமில்லை. காட்டு யானைகளிடம்தான் பயம். எதிர்பாராத விதமாக அவை காவல் வீரர்கள் தங்கியுள்ள பாடிவீட்டைத்

தாக்கும். அதனால் தங்கியுள்ள குடில்களைச் சுற்றி இரவில் தீப்பந்தங்களை எரிய வைத்திருப்பார்கள். முறை போட்டுக் கொண்டு தாரை தப்பட்டைகளை முழங்கிக் கொண்டு பாட்டும் கூத்துமாக இரவை ஓட்டுவார்கள்.

அடர்ந்த கானகத்து மையிருளில் தனிமையில் தீவட்டியின் ஒளியும், பல குரல்களின் ஏற்றத் தாழ்வுகளுடன் வீரர்கள் பாடும் இனிமையான குரலும் அச்சத்தை அளிக்கும். ஒருவேளை அதனால்தான் காட்டு மிருகங்கள் அந்தப் பக்கம் வரத் தயங்கினவோ?

மலைக் கோயிலுக்கு இளவரசி சக்தி பூசை செய்யவரும் போது காட்டு யானைகளின் தொந்தரவு இருக்கக்கூடாது என்று யானைகளைப் பிடிக்கப் பெருங்குழிகளை வெட்டி வைத்திருப்பார்கள். அந்தப் பெரும் பள்ளங்கள் இருப்பது தெரியாமல் மேலே தழைகளையும், செடிகளையும், தென்னை ஓலைகளையும் பாப்பி மூடியிருப்பார்கள். குழியில் விழப் போகிறோம், பள்ளங்கள் தங்களை அடிமைப்படுத்தப் போகின்றன என்று அறியாத யானைகள் அவற்றில் வீழ்ந்து விடும்.

சேர ஒற்றர்கள் எவ்வாறு அகப்பட்டுக் கொண்டார்கள் என்பதைத் தேனாட்சி விவரித்து வந்ததைக் கேட்ட இளவரசி முத்தம்மாள் வியப்பால் கண்கள் அகல விரிய, "ஓ! யானை களை அப்படித்தான் பிடிப்பார்களா?" என்று கேட்டாள்.

"ஆமாம் தேவி! யானைகள் அதிக எண்ணிக்கையில் நமக்குத் தேவை. கோயில்களுக்கு, படைகளுக்கு, பளு தூக்குவதற்கு" என்று தேனாட்சி விவரித்து வந்தாள்.

"கோயில்களில் யானை இருப்பதே ஒரு கம்பீரம். இறைவன் வீதி உலா வரும்போது யானை அசைந்து



அசைந்து செல்வதே ஓர் அழகு. நமது நாட்டுப் படைகளில் யானைகள் அதிகம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். பளு தூக்குவதற்கு யானையைப் பயன்படுத்துகிறார்களா?" என்று முத்தம்மாள் கேட்டாள்.

"ஆமாம், தேவி! கோயில் கோபுரங்களைக் கட்டும்போது பெரிய பெரிய கற்களைத் தூக்க யானை உதவும். மேலும் காட்டில் மரங்களை வெட்டிக் கொணர யானை இல்லா விட்டால் எவ்வளவு பேர் சேர்ந்து வேலை செய்ய முடியும்?" என்றாள் செண்பகம். யானையைப் பற்றிய எல்லாச் செய்தி களும் அறிந்திருக்கிறோம் என்பதைப் புலப்படுத்திக் கொள்ள விரும்பினாள்.

"அது மட்டுமா? யானையைப் பிடிக்க வெட்டப்பட்டுள்ள குழி பகைவரையும் பிடித்துவிடப் பயன்படுகிறது" என்று கூறி மெல்ல நகைத்தாள் தேனாட்சி.

தேனாட்சி தொடர்ந்து என்ன சொல்லப் போகிறாள் என்பதைக் கேட்க ஆவலுடன் அவளை நோக்கினாள் முத்தம்மாள்.

"யானையைப் பிடிக்க வெட்டப்பட்டுள்ள குழிகளில் சோ நாட்டு ஒற்றர்கள் இருவரும் விழுந்துவிட்டனர்!" என்றாள்.

"ஓ! யானைக் குழியில் வீழ்ந்து விட்டார்களா?" பரபரப்புடன் கேட்டாள் முத்தம்மாள். "எலும்பு முரிந்து ஏதாவது படுகாயம் ஏற்பட்டிருக்குமே?" என்று கவலையுடன் கேட்டாள். பிறகு அவளே தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். "அவர்கள் இருவருடைய உடலில் ஒரு சிறு சிராய்ப்புக்கூட இல்லை என்பதைக் கவனித்தேன்" என்று கூறி, தேனாட்சியை நோக்கினாள்.

சேர நாட்டு ஒற்றர்களிடம் இளவரசி மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறாள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட தேனாட்சிக்கு மனத்தில் வியப்புடன் கவலையும் தோன்றின. பாண்டிய இளவரசிக்கு ஒற்றர்களிடம் ஏன் பரிவு ஏற்பட்டுள்ளது என்று அவளுக்குப் புரியவில்லை. ஒற்றர்களில் ஒருவன் கம்பீரமாகவும் அழகாகவும் இருக்கிறான் என்பதால் இளவரசியின் பார்வை அவன்மீது வீழ்ந்ததா? பரிவு ஏன் ஏற்பட்டது? இளவரசியின் கடைக்கண் படுவதால் ஒற்றர்கள் மன்னிக்கப்படலாம், நாட்டிலே அதைப் பற்றிய பேச்சிற்கு இடமேற்படக்கூடும். இளவரசியின் நலனில் உண்மையிலேயே மிக அக்கறை கொண்ட தேனாட்சி இளவரசியின் உள்ளத்தை அறிந்து கொள்ள விரும்பினாள்.

“யானைக் குழியில் விழுந்த இரு ஒற்றர்களுக்கும் உடலில் சிறு சிராய்ப்புக்கூட ஏற்படவில்லை என்பது ஆச்சரியமாகத் தானிருக்கிறது. அவர்கள் மிகத் தந்திரசாலிகளாக இருப்பார்கள் என்று தோன்றுகிறது. நல்லவேளையாக நமது காவல் வீரர்கள் அவர்களைப் பிடித்துப் பிணைத்து, அழைத்து வந்தனர். ஆ! நேற்றே உங்களை ஒன்று கேட்க நினைத்தேன். கயிற்றால் கட்டப்பட்டதிலிருந்து அவர்களை அவிழ்த்து விடுமாறு ஏன் கட்டளையிட்டீர்கள்? ஒற்றர்கள் மீது பாசங்கொள்வதை அரசர் சம்மதிக்கமாட்டார் என்பதை நான் சொன்னால் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டீர்கள் என்றெண்ணுகிறேன்” என்று இளவரசியின் முகத்தைக் கூர்ந்து நோக்கியவாறு கேட்டாள்.

“அடி தேனாட்சி! நீ பெரிய கள்ளி என்று எனக்குத் தெரியும். என் முகத்தினின்றே நீ என் மனத்தை அறிந்து கொள்ளும் சக்தி படைத்தவள் என்பதும் எனக்குத் தெரியும். உன்னிடம் ஏதும் ஒளிக்க முடியாது என்பதும் எனக்குத்



தெரியும். ஒற்றர்களுள் ஒருவரைக் கண்டவுடன் என் மனம் சஞ்சலமடைந்து விட்டது. அதன் காரணத்தை என்னால் அறிய முடியவில்லை” என்றாள் பெருமூச்சுடன். தேனாட்சியிடம் மனம் விட்டுப் பேச இளவரசி எப்போதுமே தயங்கியதில்லை.

இளவரசி தன்னைத்தானே ஒருமுறை கேட்டுக் கொண்டாள். ‘ஒற்றர்கள் இருவருள் கம்பீரமாகத் திகழ்பவர் மீது உனக்கு ஏற்பட்டுள்ளது பாசமா காதலா?’ அவள் தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள். “பாசம் – பாசம் கொள்ள அவர் என்ன உறவின் முறையா? தெளிவாய்ச் சொல்லேன் காதல்தான் என்று!”

“காதலா – கண்டவுடனே காதல் ஏற்பட்டுவிடுமா?”

“ஆம்; ஒரு கணத்தில் தோன்றுவதுதான் காதல் உணர்வு. பிறகு அது வளரும்.”

“ஓ! எனக்கே இப்போது கவலை ஏற்படுகிறது. முன்பின் அறியாதவர் மீது ஏன் என் மனம் லயித்து விட்டது?”

“அதுதான் காதலின் சக்தி. காதல் சக்திக்கு வேற்றுமை உணர்வு கிடையாது. அது சாதி மதம் பார்க்காது. செல்வம், ஏழைமை என்பதை எல்லாம் அது நோக்காது.”

“ஐயோ! என் தந்தைக்குத் தெரிந்தால்?”

இளவரசி மௌனமாகத் தனக்குத்தானே சிந்தித்தாள். தனக்குத்தானே கேள்வி கேட்டுக் கொண்டாள். சோதனை செய்து கொண்டாள் என்றும் கூறலாம்.

“தேவி! கற்சிலையாகி விட்டீர்களே! உங்கள் முகம் பல மாறுதல்களைப் பிரதிபலிக்கின்றன. உதடுகள் மெல்ல

அசைகின்றன. மெல்லச் சிரித்துக் கொள்கிறீர்கள். இப்போது உங்கள் விழிகளில் ஏன் கவலையும், பயமும் தோன்று கின்றன?'' என்று தேனாட்சி கேட்டவுடன், இளவரசி முத்தம்மாள் உடலில் சிறு சிலிர்ப்பு ஏற்பட்டது.

"தேனாட்சி! நீ சொல்வது போல் எனக்குக் கவலையாக இருக்கிறது. சேரநாட்டு ஒற்றர்களுள் ஒருவர் மீது எனக்கு ஏற்பட்டுள்ள பிரிவு காதலாக மாறிவிடுமோ? அதனால் ஏற்படும் பின் விளைவுகளை நான் நினைக்காமல் என் மனத்தைக் கட்டுப்படுத்தப் தவறிவிட்டேனே!'' என்றாள் முத்தம்மாள் மிகக் கவலையுடன்.

"அதனால் என்ன தேவி? நடந்தவற்றை மறந்து விடுங்கள். கனவு என்று தள்ளிவிடுங்கள்'' என்றாள்.

தலையை அசைத்தாள் முத்தம்மாள்.

"அதெப்படி முடியும்? நொடிக்கு நொடி என் சிந்தனை எல்லாம் சிறையில் அடைபட்டிருக்கும் அந்தச் சேரநாட்டு ஒற்றர்மீதே இருக்கிறது தேனாட்சி! எனக்கு ஓர் உதவி செய்வாயா?'' என்று கேட்டாள்.

தேனாட்சி சிரித்தாள். "நேரே சிறைச்சாலைக்குச் சென்று, அவரைச் சந்திக்க வேண்டும் என்று கேட்கப் போகிறீர்கள். அப்படித்தானே?''

இளவரசி முத்தம்மாள் பொய்க் கோபத்துடன் அவள் கன்னத்தில் மெல்லக் கிள்ளி "நீ ஒரு கள்ளி என்று சொன்னேனே! என் மனத்தை நன்றாகப் புரிந்து கொண்டாய். நீ சிறைக்குச் சென்று, என் மனத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்தியவரைப் பற்றிய முழு உண்மைகளைத் தெரிந்து வா'' என்றாள்.



தென்காசி பாண்டியர் அரண்மனைக்கருகே இருந்த சிறைக்கூடத்திற்குத் தேனாட்சி செல்வது கடினமானதாக இல்லை. செண்பகராமனின் உதவி இருந்தது.

சிறைக்கூடத்தில் தனித்தனி அறைகளில் சேர நாட்டு ஒற்றர்கள் அடைபட்டிருந்தனர். ஓர் அறையில் இருந்தவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான்.

மற்றோர் அறையில் இருந்தவன் சிறைக் கம்பிகளைப் பிடித்தவாறு யார் வருகையையோ எதிர்பார்ப்பது போல் நின்று கொண்டிருந்தான்.

தேனாட்சி அருகே நெருங்கியவுடனேயே அவன் முகமலர்ச்சியுடன், "வருக, வருக! உன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

தேனாட்சி திடுக்கிட்டாள். "என் வருகையை எதிர் பார்த்திருக்கிறாரா?'' என்று வியப்புற்றாள்.

"என்னையா? என்னை நீங்கள் அறிவீர்களா?'' என்று கேட்டாள் தேனாட்சி.

"ஆகா, நன்றாக அறிவேன். உங்கள் இளவரசி நலமாயிருக்கிறார்களா?'' என்று விசாரித்தான்.

தேனாட்சிக்கு மேலும் அதிர்ச்சி ஏற்பட்டது. அதற்கு அடுத்து அவன் கூறியவை கேட்டு, தேனாட்சி திகைத்து நின்றாள்.

## 14

சிறைக் கூடத்திற்குச் சென்று சேர நாட்டு ஒற்றர்களுள் ஒருவரைச் சந்தித்து வந்த தேனாட்சி, இளவரசி முத்தம்மாளிடம் அங்கு நடைபெற்ற உரையாடலை விவரித்தாள்.

முத்தம்மாள் மிக வியப்புடன் தேனாட்சி சொன்னதைக் கேட்டாள்.

"என்னைத் தனக்கு முன்பே தெரியும் என்றா சொன்னார்?" என்று இளவரசி வியப்புடன் கேட்டாள்.

அவள் உடல் இலேசாகப் புல்லரித்தது. சற்று இமைகளை மூடிக்கொண்டு, மலைக் கோயிலருகே பாண்டிய வீரர்கள் ஒற்றர்களைக் கட்டி இழுத்து வந்து நிறுத்தியபோது கண்ட அந்தத் தோற்றத்தை மீண்டும் மனக்கண்ணில் கொண்டு வர முயன்றாள்.

"தேவி! அவர் நமது நாட்டின் ஒவ்வொரு மூலையையும் நன்கு அறிந்தவர் போல் தோன்றுகிறார். என்னிடம் பேசிய அந்தச் சில நிமிடங்களிலே, அவர் நமது மன்னரைப் பற்றிப் பேசினார்" என்றாள் தேனாட்சி.

முத்தம்மாள் ஆவலுடன், "என்ன பேசினார்? கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்கிறாயே? உன் குணமே இப்படித்தான், விரைவாக விவரமாகச் சொல்லக்கூடாதா?" என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"தேவி! சொல்வதற்குள் மிகவும் அவசரப்படுகிறீர்கள். உங்கள் மனத்திற்குள் இருக்கும் ரகசியத்தை என்னிடம்



கொஞ்சம் கொஞ்சமாகத் தானே சொல்கிறீர்கள்? அதுமட்டும் என்ன நியாயம்?" என்று தானும் சிணுங்குவது போல் நடித்தாள் தேனாட்சி. பிறகு இருவரும் ஒருவரையொருவர் கண் இமைக்காமல் நோக்கியவாறு சில கணம் இருந்தனர். பிறகு இருவரும் அடக்க முடியாத சிரிப்பை உதிர்த்தனர்.

"தேவி! அந்த வீர இளைஞரைப் பார்த்தால் ஒற்றர் என்று சொல்லத் தோன்றவில்லை" என்றாள் தேனாட்சி.

"அவரை இளைஞர் என்று அழைப்பது சரி. வீரர் என்று எப்படிச் சொல்கிறாய்?" இளவரசி முத்தம்மாள் கேட்டாள். பிறகு மெல்லிய குரலில், "அவர் வீராக இருந்தால், சிறைபட்டவுடன் பாண்டிய வீரர்களைத் தாக்கிவிட்டுத் தப்பி ஓடியிருக்க மாட்டாரா?" என்று கூறி தேனாட்சியின் விழிகளை உற்று நோக்கினாள்.

"அப்படிச் சொல்ல முடியாது. சூழ்நிலை, சமயம், சந்தர்ப்பம் ஆகியவற்றை அனுசரித்து நடக்கும் அறிவும் ஒரு வீரனுக்கு இருக்க வேண்டும். ஆற்றல் மட்டும் இருந்தால் போதாது" என்றாள் தேனாட்சி.

"ஓகோ! அவருக்கு அறிவாவது இருக்கிறது என்று சொல்கிறாயோ?" என்று முத்தம்மாள் கேட்டாள்.

"சிறைக்கூடத்தில் அவருடன் பேசிய அந்தச் சொற்ப நேரத்தில் அவரது அறிவுக் கூர்மையை அறிந்து கொண்டேன்" என்று கூறி நிறுத்திய தேனாட்சியை இளவரசி பார்த்த பரிதாபமான பார்வை, 'இன்னும் சொல்லு தொடர்ந்து சொல்லு' என்று கேட்டுக் கொள்வது போல் தோன்றியது.

சிறைக்கூடத்தில் ஒற்றருடன் தான் பேசியதை விவரித்தாள் தேனாட்சி.

"பாண்டிய மன்னர் நாயக்க மன்னருக்குக் கப்பம் கட்டும் சிற்றரசராகத் திகழ்வதை அவர் வெறுத்துப் பேசுகிறார் தேவி!"

"காலத்தின் கொடுமை இப்படி நேர்ந்திருக்கிறது. விரைவில் பாண்டிய அரசர் நாயக்க மன்னரிடமிருந்து பாண்டிய மகுடத்தை மீட்டு விடுவார் என்று நீ சொல்வது தானே?" இளவரசி கேட்டாள்.

"ஒற்றரிடம் நாம் ஏன் பாண்டிய அரசரின் திட்டத்தைப் பற்றிப் பேச வேண்டும்?" என்று கேட்ட, தேனாட்சி, "தேவி! அவர் சேரநாட்டு ஒற்றர் என்று எனக்குத் தோன்றவில்லை. ஏன் அவ்வாறு கூறினேன் என்று நீங்கள் கேட்கவில்லையே?" என்று கேட்டாள் தேனாட்சி.

"நீதான் சொல்லிக் கொண்டிருக்கிறாயே, நான் கேட்டுத்தான் சொல்ல வேண்டுமா?"

"சேர நாட்டு மன்னரைப் பற்றி அவமரியாதையாக அவர் பேசுகிறார். பாண்டியர்கள் இன்னும் பலமுடனிருந்தால் சேரர்களை வென்று விடலாம் என்று சொல்கிறார். தன் தாய்நாட்டைப் பற்றிக் குறைவாகப் பேசுவதால் அவர் சேரநாட்டு ஒற்றராக இருக்க மாட்டார் என்று..."

"அடி பைத்தியமே! அதுவும் ஓர் நடிப்பு. நம்பி விட்டாயா? பேதையே, உம், அப்புறம் சொல்லு."

"சொல்வதற்கு என்ன இருக்கிறது? உங்களைப் பற்றி விசாரித்தார்.

"விசாரித்தாரா?"

"ஆம்; பாண்டிய மன்னரின் மூத்த மகளா, இளைய மகளா என்று கேட்டார். ஒரே மகள் என்று சொன்னேன். தானும்



ஒரே மகன் தான் என்று சொல்லி அவர் பெருமூச்சு விட்டார்".

"இருக்கட்டுமே! நமக்கென்ன அதைப்பற்றி?"

"உங்கள் அழகை வர்ணித்தார். எந்த அரசகுமாரன் உங்களை அடையக் கொடுத்து வைத்திருக்கிறானோ என்று கூறி மீண்டும் பெருமூச்சு விட்டார்!"

"பைத்தியமாக இருப்பார்போல் தோன்றுகிறது."

"ஆமாம், அவர் ஒரு காதல் பைத்தியம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

"ஏதாவது முறை தவறிப் பேசிவிட்டாரா?"

"இல்லை, இல்லை. அவர் அப்படிப்பட்டவராகத் தோன்றவில்லை, காதல் பைத்தியத்துடன் காரியப் பைத்தியமாகவும் இருப்பார் என நினைக்கிறேன். என்னையும் மிக வர்ணித்தார்.

"ஓ! உன் மீது அவருக்குக் காதல் ஏற்பட்டிருக்குமா?"

தேனாட்சி, ஒரு கணம் திடுக்கிட்டு, பிறகு பெரிதாக நகைத்து, "அதெல்லாம் இல்லை. அவர் என்னைப் புகழ்வதன் மூலம் பாண்டிய மாளிகையில் நடப்பதை அறிய எண்ணியிருக்கலாம்" என்றாள்.

"நமது மாளிகையில் ஏதாவது ரகசியம் இருக்கிறதா? அதை அவர் அறிவதற்கு உன்னைப் புகழ்கிறார் என்றால் ஏதோ பின்னணி இருக்கவேண்டும்" இவ்வாறு கூறிவிட்டு பாண்டிய இளவரசி சற்று நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு –

"தேனாட்சி! அவர் பேசும் தமிழில் பாண்டிய நாட்டு மணம் வீசுகிறதா? சேர நாட்டு மணம் வீசுகிறதா? சேர

நாட்டு வாடை இருக்கிறதா?" என்று முத்தம்மாள் வினவினாள்.

"நான் கவனித்தேன். அதிலிருந்துதான் அவர் சேர நாட்டவராக இருக்கமாட்டார் என்ற முடிவுக்கு வந்தேன். சேரநாட்டவர்கள் பேசுவது நமது வழக்கிலிருந்து மாறுபட்டிருந்ததை அறிந்திருக்கிறேன். அவர் மதுரை நாயக்க மன்னரும் அவர் குடும்பத்தாரும் பேசும் கொச்சைத் தமிழில் பேசுகிறார். மதுரை மன்னர் சொக்கநாத நாயக்கரும் அவரது குடும்பத்தவரும் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன், இவர் பேசுவது ஏறத்தாழ அவர்கள் பேசும் தமிழ் ஒலிக்கேற்றவாறு இருக்கிறது. ஆனால், சற்று நிதானமாகப் பேசுகிறார். சற்றுச் செயற்கைத்தனமுமிருக்கிறது. அவர் என்னைப் பாராட்டி, வர்ணித்தபோது சற்று எனக்குக் கூச்சமாக இருந்தது. அவர் என்னிடமிருந்து ஏதோ எதிர்பார்க்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன். அதனால்தான் வேற்று மனிதரான அவர் என்னை வர்ணிக்கும்போது கோபப்படாமல் அமைதியாக இருந்தேன்."

"சரி தேனாட்சி! அவர் உன்னை என்ன கேட்டார்?" முத்தம்மாளுக்கு ஆவலும் பரபரப்புமிருந்தன என்பது அவள் கேள்வியிலிருந்து தெரிந்தது.

"தேவி! அவர் உங்களைப் பற்றி அறியப் பல கேள்விகளைக் கேட்டார். சுற்றி வளைத்து அவர் பேச்சு இருந்ததால் என்னதான் அவர் வீரராயிருந்தாலும் சற்றுத் தடுமாறுகிறார் என்பதைப் புரிந்து கொண்டேன். அவர் உங்களைப் பற்றியே வினவினார்" என்றாள் தேனாட்சி.

முத்தம்மாள் பெருமூச்சு விட்டாள். பிறகு சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு " தேனாட்சி! என் அந்தரங்கத்திற்கு உரியவளே! உன்னிடம் ஒன்று கேட்கலாமா?" என்று முன்னுரையுடன் பேச்சைத் தொடங்கினாள்.



தேனாட்சி பரபரப்புடன், "தேவி! என்னிடம் என்ன வார்த்தை இது? ஒன்று கேட்கலாமா என்று என்னை நீங்களா கேட்பது? ஓராயிரம் கேளுங்கள். ஓர் இலட்சம் கட்டளையிடுங்கள். இந்த அடிமை அதற்காகத் தானே காத்திருக்கிறேன். 'அந்தரங்கத்திற்கு உரியவளே' என்று நீங்கள் அழைத்ததே எனக்கு மிகப் பெரிய பெருமைதான். சொல்லுங்கள் தேவி!" என்றாள்.

"தேனாட்சி! இரண்டு நாள்களாக என் மனம் ஒரு நிலையில் இல்லை."

"எனக்கு எப்போதோ புரிந்துவிட்டது தேவி! அன்று மலைக்கோயிலில் அவர்களைச் சந்தித்த மறு நொடியே உங்கள் இதய மாற்றம் முகத்தில் பிரதிபலிப்பதைக் கண்டு கொண்டேன். உங்கள் மனத்தில் ஏற்பட்டிருப்பதற்குப் பெயர் காதல். அந்த நோய் யாருக்கு வரும், எப்படி வரும் என்று சொல்ல முடியாது. ஆனால் கண்டவுடனேயே உங்களுக்குக் காதல் ஏற்பட்டதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது. உங்கள் மனத்தையும், குணத்தையும் நான் அறிவேன். எந்த அழகிய இளைஞனையும் நீங்கள் இலட்சியம் செய்ததில்லையே! பெயர் ஊர் தெரியாதவரிடம் உங்களுக்கு ஈடுபாடு எவ்வாறு ஏற்பட்டது என்பது அதிசயமாக இருக்கிறது. உம்; உங்கள் மனத்தில் குடிகொண்டு விட்ட அந்த பெயர் ஊர் தெரியாத இளைஞர் உங்கள் மனத்தில், சலனத்தை, சஞ்சலத்தை ஏற்படுத்திவிட்டார். இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்" என்று மூச்சு விடாமல் பேசினாள் தேனாட்சி.

"அவர் பெயர் என்ன, ஊர் என்ன என்று விசாரித்து வருமாறு தான் உன்னை அனுப்பினேன். ஆனால் நீ என்னைப் பற்றியும் பாண்டிய மாளிகையைப் பற்றியும் அவரிடம் தெரிவித்து வந்து விட்டாய்" இளவரசி மேலும் தொடர்வதற்குள் தேனாட்சி குறுக்கிட்டு, "தேவி! இன்னும் சிறிது நேரம் அவருடன் நான் பேசியிருந்தால் அவரைப் பற்றிய முழு விவரங்களையும் கேட்டறிந்திருப்பேன்... ஆனால் சிறைக்கூடக் காவல்காரர்களின் கெடுபிடி அதிக மாயிற்று. பயங்கரக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் சேர ஒற்றர்களிடம் நான் அதிக நேரம் பேசுவதைச் சிறைக்கூடக் காவல் தலைவர் விரும்பவில்லை. அதனால் நான் புறப்பட்டு விட்டேன். மீண்டும் சந்திப்பதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டேன்" என்றாள்.

"அப்படியா? மீண்டும் சந்திப்பதாகச் சொல்லி வந்தாயா? என் மனத்தைப் புரிந்து கொண்டவள் நீ. உன்னிடம் நான் சொல்ல விரும்பியதே அந்தச் சந்திப்பைப் பற்றித்தான். தேனாட்சி! நாம் சிறைக்கூடத்திற்குச் செல்கிறோம். அவரைச் சந்திக்கிறோம். நான் அவருடன் சிறிது நேரம் பேசினால் அவரைப் பற்றி அறிந்து கொண்டு விடுவேன். அதற்கு நீ ஏற்பாடு செய்" என்றாள் பாண்டிய இளவரசி முத்தம்மாள்.

இளவரசியின் மனநிலையைப் புரிந்து கொண்ட தேனாட்சி காதல் இப்படிக்கூட படுத்துமா என்று வியப்படையவில்லை. அவளும் அந்த நோய்க்கு ஆட்பட்டவள் தானே! எனினும் சிறைக்கூடத்திற்கு இளவரசியை அழைத்துச் செல்வது அவ்வளவு எளிதன்று. அதனால், செண்பகராமனிடம் அதற்கான வழிமுறைகளைக் கேட்டறிவோம் என்று எண்ணினாள்.



"தேனாட்சி! ஏன் பேசாமடந்தையாகி விட்டாய்? பாண்டிய இளவரசி சிறைக்கூடத்திற்குச் செல்வது சரியா என்று எண்ணுகிறாயா?" என்று கேட்டாள்.

"அப்படி நினைக்கவில்லை. எப்போது செல்வது, எப்படிச் செல்வது, யாராவது பார்த்துவிட்டால் மக்களிடையே செய்தி பரவிவிடுமே என்ற கவலைதான்" என்றாள் தேனாட்சி.

"என்ன செய்வாயோ எனக்குத் தெரியாது. இன்று நான் அவரைச் சந்தித்தாக வேண்டும்" என்று உறுதியாகக் கூறிவிட்டாள் இளவரசி.

காதல் வயப்பட்டுவிட்ட இளவரசியை என்ன கூறியும் சமாதானப்படுத்த முடியாது என்றுணர்ந்த தேனாட்சி செண்பகராமனிடம் சென்று யோசனை கேட்டாள்.

அவனுக்கும் வியப்பு அதிகமாகியது. "உன் இளவரசிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? ஒற்றர்கள் கடுந்தண்டனை பெறக்கூடிய குற்றவாளிகள். பாண்டிய இளவரசி சிறைக் கூடத்திற்குச் சென்று குற்றவாளியைச் சந்திப்பது முறையன்று" என்று சொல்லிப் பார்த்தான்.

தேனாட்சியின் பிடிவாதத்தின் முன்னே அவன் சமாதானங்கள் தவிடு பொடியாயின. செண்பகராமன் கூறிய யோசனைப்படி அன்று நடு ஜாமத்தில் இளவரசியும் தேனாட்சியும் சிறைக்கூடத்திற்கு மாற்றுருவில் சென்றனர்.

சிறைக்கூடத்தின் இரண்டு அறைகளிலும் சேரநாட்டு ஒற்றர்கள் இல்லை. கம்பியை வளைத்து மேலே உள்ள சாளரம் வழியே தப்பிச் சென்று விட்டதை அறிந்தனர்.

சிறைக்கூடக் காவல் வீரர்களும் அப்போதுதான் அதை உணர்ந்து திடுக்கிட்டனர்.

## 15

சிறைக் கோட்டத்தினின்று, சேர நாட்டு ஒற்றர்கள் தப்பியோடியது எவ்வாறு என்பது அனைவருக்கும் வியப்பாக இருந்தது.

பாண்டிய மன்னர் வரகுணராமன், சிறைக் கோட்டத் தலைவரை அழைத்து விவரங் கேட்டார். கடைசியாக ஒற்றர்களைப் பார்த்தது எப்போது என்று வினவினார். சிறைக் கோட்டத்தில் பல அறைகளில் குற்றவாளிகள் இல்லை. கொலைக் குற்றம் புரிந்ததற்காகச் சிறையில் அடைக்கப்பட்டு அரசரின் தீர்ப்பிற்காகக் காத்திருப்பவர்கள் ஓரிருவர் இருந்தனர்.

அவர்களுள் ஒருவன் கூறிய தகவலிலிருந்து இரவு இரண்டாம் சாமத்திற்கு மேல் இருவர் அங்கு வந்ததாகவும் அதற்குப் பிறகு அவர்களில் ஒருவர் சிறையில் அடை பட்டவர்கள் காணவில்லை என்று கூக்குரலிட்டதாகவும் பிறகு அவர்கள் சந்தடியின்றி அங்கிருந்து சென்று விட்ட தாகவும் தெரியவந்தது.

தேனாட்சியும், முத்தம்மாளும் முக்காடிட்டுக் கொண்டு சிறைக் கோட்டத்திற்குள் நுழைந்தனர். இரவு உணவுக்காக சிறை நுழைவாயிலில் காவல்காரர், அருகே இருந்த மண்டபத்திற்குச் சென்றிருந்த வேளை. இருவரும் உள்ளே விரைந்து சென்றனர். மங்கிய அகல் வெளிச்சத்தில் அவர்கள் சேர ஒற்றர்கள் இருக்குமிடத்தை அடைந்தனர்.

அந்த அறை இருள் நிறைந்திருந்தது. அதற்கு அடுத்த அறையும் அப்படியே. அருகிலிருந்த விளக்கை எடுத்து



வந்த தேனாட்சி, அறையில் ஒருவருமில்லாதிருப்பதையும், அறைக்கதவு திறந்திருப்பதையும் கண்டு திடுக்கிட்டாள். அவள் தான் முதலில் கூக்குரலிட்டாள்.

இளவரசி முத்தம்மாள் அவளை அதட்டி, "உன் அறிவு மழுங்கிவிட்டதா? இப்படிக் கத்துகிறாயே? நாம் இங்கு மிக ரகசியமாக வந்திருப்பதை மறந்து விட்டாயா? வந்த சுவடு தெரியாமல் திரும்பி விடுவோம்" என்று அவளை அழைத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக ஒருவரும் அறியாவண்ணம் சிறைக் கோட்டத்தின் வெளியே வந்தாள்.

முத்தம்மாளின் படபடப்பு அடங்க வெகுநேரம் பிடித்தது.

"தேனாட்சி! நாளையே நாம் மீண்டும் குற்றாலம் சென்று விடுவோம். இங்கிருந்தால் அரசர் நம்மை அழைத்து விசாரிக்கலாம் என்றாள்.

தேனாட்சி ஏதும் பேசவில்லை. முத்தம்மாளே தொடர்ந் தாள்: "தேனாட்சி! குற்றாலத்துச் சாரலை விட்டு வரவே எனக்கு மனமில்லை. மலைக்கோயில் பூசைக்காக வந்தேன். பூசை முடிந்து விட்டது. இனி இங்கு என்ன வேலை?" என்றாள்.

மறுநாள் பொழுது புலர்ந்தவுடனேயே தந்தையிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு மீண்டும் குற்றாலத்திற்குத் தன் தோழி தேனாட்சியுடன் புறப்பட்டாள் முத்தம்மாள்.

குற்றாலம் செல்லும் பாதையில் சிவிகையிலமர்ந்து சென்று கொண்டிருந்தபோது அமைதியாகச் சிந்திக்க முத்தம் மாளுக்கு நேரம் கிடைத்தது. தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

"முத்தம்மா! உனக்கென்ன வந்து விட்டது? ஊர், பெயர் தெரியாதவனிடம் உனக்கு ஏன் அவ்வளவு பாசம்?

இளவரசியான நீ சிறைக் கோட்டத்திற்குச் செல்லலாமா? இரவு வேளையில் ஒருவரும் அறியாமல் நீ சென்றதை மற்றவர் அறிந்தால் என்ன ஆகும்?''

இந்தக் கேள்விக்கு அவளால் மறுமொழி கூற இயல வில்லை.

குற்றாலத்தை அடைந்தவுடன் தேனாட்சியிடம் அவள் கேட்ட முதல் கேள்வி: ''தேனாட்சி! அவர்கள் ஏன் தப்பிச் சென்றார்கள்? சிறையில் நீ அவரைச் சந்தித்தபோது என்னைச் சந்திக்க ஆவலுடன் இருப்பதாக உன்னிடம் சொன்னார் அல்லவா?''

''ஆமாம் தேவி! ஆனால் எனக்கு முதலில் சந்தேகம் இருந்தது. அவர் சேர நாட்டு ஒற்றராக இருக்க மாட்டார் என்று. ஆனால் சேர நாட்டு ஒற்றராக அவர் இருந்திரா விட்டால் ஏன் தப்பிச் சென்றிருக்க வேண்டும்? ஒற்றர் களுக்குக் கடுந்தண்டனை உண்டென்று அறிந்திருந்த தனால்தான் அவர்கள் தப்பிச் சென்றிருக்கலாம் என்று நினைக்கிறேன். எனக்குக் குழப்பமாயிருக்கிறது.''

தேனாட்சி இவ்வாறு கூறியது கேட்ட முத்தம்மாளுக்கும் குழப்பமாயிருந்தது. அமைதியாயிருந்த அவள் மனத் தடாகத்தில் கவலை அலைகள் வட்டமிட்டுச் செல்லத் தொடங்கின. தந்தைக்குத் தெரியாமல் சில காரியங்களைச் செய்கிறோமே என்ற கவலை மேலெழுந்து அவளைக் கலக்கத்தில் ஆழ்த்தியது.

அருவிக்கு நீராடச் செல்லவில்லை. மஞ்சத்தில் சாய்ந்தவாறு அடுத்து என்ன செய்யலாம் என்று சிந்திக்க லானாள். காலை உணவு செல்லவில்லை. தாயிடம் தெரிவித் திருக்கலாம். தன் மனத்தில் எழுந்த மாறுதலை ஏனோ



அவளுக்குச் சொல்லத் தோன்றவில்லை. உள்ளத்தில் உள்ளவற்றைத் தேனாட்சியிடம் கொட்டி இதற்கு மாற்று மருந்து தெரிவிக்குமாறு கேட்க முடிவு செய்தாள். அப்போது –

முத்தம்மாளின் அருகே மெல்ல வந்தாள் தேனாட்சி. ''தேவி! சொக்கநாதர் தங்கியிருக்கும் குடிலுக்குச் சென்று அங்குள்ள நிலையை அறிந்து வருகிறேன்'' என்றாள்.

முத்தம்மாள் கவலை நிறைந்த முகத்துடன் அவளை நோக்கினாள்.

''தேனாட்சி! மலைக் கோயிலுக்குச் சென்று வந்தால் திருமணம் நடைபெறும் என்று சொன்னார்கள். திருமணம் நடைபெறுகிறதோ, இல்லையோ என் மன அமைதி குலைந்துவிட்டது. குற்றால அருவியில் குதூகலமாக இருக்கக்கூடிய நான், சோர்வுடன் இங்கே அடைந்து கிடக்கும்படியாகிவிட்டதே...'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினாள்.

இளவரசி எப்போதும் இதுபோல் பேசியதேயில்லை. தேனாட்சிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''தேவி! வருத்தப்படாதீர்கள். எல்லாம் நன்மைக்கே. எதற்கும் கலங்காத உங்கள் மனம் கலங்குகிறது. ஏன் கலங்குகிறது? இதுவரை எந்த ஆடவரும் உங்கள் இதயத்திற்குள் புகுந்ததில்லை. கண்டவுடனேயே அந்தச் சேர நாட்டு ஒற்றர்பால் உங்கள் மனத்தைப் பறி கொடுத்துவிட்டீர்கள். உங்கள் மனம் உங்களைத் தவறான முறையில் செல்ல வழி காட்டாது. அதனால் நன்மை ஒன்று நடக்கப் போகிறது என்பது உறுதி'' என்றாள்.

இவ்வாறு கூறிவிட்டாளே தவிர இளவரசிக்கு ஏற்பட்டிருக்கும் மனச்சோதனையினின்று அவளை எவ்வாறு விடுவிக்கலாம் என்று எண்ணலானாள். அதுவே அவளுக்குக் கவலையாக இருந்தது.

"தேவி! கவலைப்படாதீர்கள். மிக விரைவில் உங்கள் எண்ணம் ஈடேறும். குற்றாலத்தைச் சுற்றிக் குறி சொல்லும் மலைக்குறத்திகள் பலர் இருக்கிறார்கள். நான் அவர்களுள் ஒருத்தியை அழைத்து வருகிறேன்" என்று ஆறுதல் கூறினாள். அவள் நேரே மதுரை அரசர் சொக்கநாத நாயக்கர் தங்கியிருக்கும் குடிலை நோக்கிச் சென்றாள்.

செல்லும் வழியிலே பாறை ஒன்றின் அருகே சடைமுடியுடன் காவி உடையணிந்த சாமியார்கள் இருவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். அவர்களிடம் பேச வேண்டுமென்று அவளுக்கு ஆர்வம் ஏற்பட்டது. அதுபோல் அவர்களுக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

சாமியார்களின் அருகே நெருங்கிச் சென்றபொழுது அவர்களுள் ஒருவர் மிக உரிமையுடன், "பெண்ணே! இங்கே சித்திர சபை என்று ஓர் இடம் இருக்கிறதாமே? அதற்கு வழி எப்படி?" என்று கேட்டார்.

தேனாட்சி சற்று நின்று, சித்திரசபை இருக்கும் கோயிலுக்குச் செல்லும் வழியைக் கூறினாள். சாமியார்களுக்கு அவள் சொல்லும் வழி தங்களுக்குப் புரியவில்லை என்று சுற்றி வளைத்துத் தெரிவித்தார்கள்.

"நான் அந்தப் பக்கம்தான் போகிறேன்" என்னுடன் வாருங்கள், வழி காட்டுகிறேன்" என்று கூறி அவர்களை அழைத்தாள் தேனாட்சி.



தேனாட்சி முன் நடக்க, சாமியார்கள் இருவரும் பின் தொடர்ந்தார்கள். அவர்கள் பல செய்திகளைப் பேசிக் கொண்டே வந்தார்கள். அவர்கள் பேச்சினின்று அவர்கள் வடக்கேயிருந்து வருவதாகத் தெரிந்தது. அவர்களுள் ஒருவர் குரு என்றும் மற்றவர் சீடர் என்றும் அவள் அறிந்தாள்.

"சாமி! உங்களிடம் நேற்று ஒரு செய்தியைச் சொல்ல மறந்துவிட்டேன். ஊத்து மலை நாட்டுப் பாளையத் தலைவர் மகளுக்கு நீங்கள் மந்திரித்த பொற்காசு ஒன்று கொடுத்தீர்களே, அதன் பலனால் அவள் விருப்பம்போல் திருமணம் நடந்துவிட்டதாம். திருமணத்திற்கு நல்ல நாளைக் குறிக்க உங்களைத் தேடி நாலா திக்கிலும் ஆட்களை அனுப்பியிருக்கிறார்களாம்" என்று கூறிய சீடரைப் பார்த்துப் பெரிய சாமியார் மெல்லச் சிரிப்பது தெரிந்தது.

"ஊத்துமமைல பாளையக்காரருக்காகவா நான் செய்தேன்? அந்தப் பெண் நல்ல குணவதி; அவள் நல்ல மணாளனை மணக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பொற்காசைப் பூசையில் வைத்து மந்திரித்துக் கொடுத்தேன். மேலும் அந்த மங்கையின் கைகளில் ஓடும் ரேகைகள், அவள் தீர்க்க சுமங்கலியாக நல்ல மணாளனை மணந்து நீடுழி வாழ்வாள் என்பதைத் தெரிவிக்கின்றன" என்றார்.

அவர்கள் பேசுவதைக் கேட்டவாறிருந்த தேனாட்சி திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு உடனே ஒரு யோசனை தோன்றியது. 'பாண்டிய இளவரசியின் மனக்குறையைத் தீர்க்க இந்தச் சாமியாரின் அருளாசியைக் கேட்போமே? மலைக் குறத்தியை அழைத்து வந்து இளவரசியின் கை பார்த்து, குறி சொல்லச் சொல்வதைவிட இந்தச் சாமியார்களையே அழைக்கலாமே? கை பார்த்துச் சொல்வார். இளவரசியின் மனம் போல மாங்கல்யம் நடைபெற

ஆசி வழங்குவார்' என்று எண்ணியவுடன் அவர்கள் பக்கம் அவள் திரும்பி, "சாமி! இந்த ஊரிலே எவ்வளவு நாள்கள் தங்குவீர்கள்?" என்று கேட்டாள்.

"ஏன், எதற்காகக் கேட்கிறாய்?" என்று சாமியாரின் சீடர் கேட்டார்.

"சீடா, அப்படியெல்லாம் கேட்கக்கூடாது. இளவரசியின் தோழி கேட்கிறாள் என்றால் ஏதோ முக்கிய காரியம் ஏதாவது இருக்கும்" என்றார் குரு.

தேனாட்சிக்கு வியப்பு ஏற்பட்டது. 'நான் இளவரசியின் தோழி என்பது இவருக்கு எப்படித் தெரியும்?'

தேனாட்சி திகைத்து நின்றதைப் பார்த்த சாமியார், "ஏனம்மா, திடீரென்று மௌனமாக நின்று விட்டாய்?" என்று கேட்டார்.

"சாமி! நான் இளவரசியின் தோழி என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று வியப்பால் விரிந்த விழிகளுடன் அவரை நோக்கிக் கேட்டாள்.

சாமியார் மெல்ல நகைத்தார். அவர் பார்வை தேனாட்சியை ஊடுருவியது.

சீடர் குறுக்கிட்டு, "பெண்ணே! முக்காலும் உணர்ந்த முனிவரிடம் நீ அவ்வாறு கேட்கலாமா?" என்றார்.

"சாமி! மன்னித்துக் கொள்ளுங்கள். தவமுனிவர்களுக்கு எல்லாம் தெரியுமென்பதை நான் மறந்து விட்டேன். நான் உங்களை ஒன்று கேட்கலாமா சாமி?" என்று பெரிய சாமியாரை நோக்கி இரு கரங்களையும் கூப்பினாள்.

"நன்றாகக் கேள், இளவரசியின் அந்தரங்கத் தோழியே! உன் இளவரசியின் மனத்தில் இருவிதக் கலக்கம். அதைத்



தீர்க்க வேண்டும் என்றுதானே கேட்கப் போகிறாய்?" என்று பெரிய சாமியார் கூறியவுடன் தேனாட்சிக்கு ஏற்பட்ட திகைப்பிற்கு அளவில்லை.

அவள் தொடர்ந்து பேசுவதற்குள் பெரிய சாமியார் குறுக்கிட்டு, "பெண்ணே! சித்திர சபையைப் பார்த்து விட்டு வருகிறேன். இளவரசி எங்கு தங்கியிருக்கிறாள்? இடத்தைச் சொல்லிவிட்டுப் போ. நான் அங்கே வருகிறேன்" என்றார்.

இளவரசி தங்கியிருக்கும் இடத்தைக் குறிப்பிட்ட தேனாட்சி, நாயக்க மன்னர் சொக்கநாதர் தங்கியிருக்கும் இடத்திற்குச் செல்ல முற்பட்டவள், அங்குச் செல்லாமல் இளவரசி முத்தம்மாளிடம் நடந்தவற்றைச் சொல்வதற்காக விரைந்தாள்.

## 16

**தே**னாட்சி விரைந்து வந்து பாண்டிய இளவரசி முத்தம்மாளின் எதிரே நின்றாள்.

"என்ன தேனாட்சி! ஓடி வந்தவள் போல் மூச்சு வாங்குகிறதே?" என்று முத்தம்மாள் கேட்டாள்.

"ஆமாம், தேவி! உங்கள் கவலை எல்லாம் தீரப் போகிறது. சில நாள்களாக உங்கள் மனத்தில் குடிகொண்டிருக்கும் வேதனை மாறி நல்ல காலம் வரப்போகிறது" என்று தேனாட்சி சொல்வதைக் கேட்க முத்தம்மாளுக்கே வியப்பாய் இருந்தது. இப்போதுதான் சொக்கநாதர் தங்கியிருக்கும் குடிலுக்குப் போய் வருவதாகச் சொல்லிச் சென்றவள், 'நல்ல காலம் வருகிறது, வருகிறது' என்று

உடுக்கை அடித்து வருகிறாளே என்றெண்ணி தேனாட்சி என்ன சொல்லப் போகிறாள் என்று நினைத்தவளாய் அவள் முகத்தையே உற்று நோக்கினாள்.

தான் அருவிக் கரைக்குச் செல்லும் வழியில், இரண்டு தவப் பெரியவர்களைச் சந்தித்ததையும் அவர்களுள் பெரியவர் வருங்காலத்தை உணர்ந்து உரைக்க வல்லவர் என்பதையும், அவர் இங்கு வருவதாக ஒப்புக் கொண்டுள்ளார் என்பதையும் தேனாட்சி, இளவரசி முத்தம்மாளிடம் விவரித்தாள்.

முத்தம்மாள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். "காவியுடை அணிந்த சாமியார்கள் பலர் சொல்லி விட்டார்கள், இப்போது இவர் ஒருவர்" என்று கூறி பெருமூச்சு விட்டு, என் மனத்திலுள்ளதைச் சாமியாரால் சொல்ல முடியுமா, அல்லது தீர்மானிக்கத்தான் முடியுமா? நீ ஏன் இங்கு அவரை வருமாறு அழைத்தாய்?" என்று கடிந்து கொண்டாள்.

"தேவி! எளிதில் நான் ஒருவரையும் நம்பமாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியாதா? மலைக் குறத்தியைவிட மகிமையுள்ளவர் அந்தச் சாமியார் என்று என் உள்மனம் சொல்கிறது" என்று அழுத்தமாகச் சொன்னாள் தேனாட்சி. அதே சமயத்தில், அவர்களை நோக்கி இருவர் வருவது தெரிந்தது.

சொன்னது போல் இரண்டு தவப் பெரியவர்களும் இளவரசி முத்தம்மாளின் இருப்பிடம் தேடிவந்து விட்டனர். குடிலின் சாளரத்தின் வழியே, அவர்கள் வருவதைக் கண்ட இளவரசியின் உடலில் இலேசான சிலிர்ப்பு ஏற்பட்டது. அந்த விழிகள் அவள் உள்ளத்தை ஊடுருவுவன போல் தோன்றின.



தன் தந்தைக்குத் தெரியாமல் சாமியாரை வரவேற்று, அவரிடம் தன் திருமண விஷயமாகப் பேசுவது முறை தானா என்று ஒரு கணம் எண்ணினாள் முத்தம்மாள். "தேவி! தவமுனிவரை வணங்குங்கள்" என்று தேனாட்சி வற்புறுத்தினாள்.

கால்மேல் கால் போட்டுக் கொண்டு தண்டத்தின் மீது கரத்தை ஊன்றிக் கொண்டும், ஒரு கரத்தில் மணிமாலையை உருட்டிக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தவாறும் பெரிய சாமியார் உட்கார்ந்திருந்தார். அவரது விழிகள் இங்கு மங்கும் அலை பாய்ந்தன. அவரது சீடர் அவர் அருகே மிக மரியாதையுடன் கைகட்டியவாறு நின்று கொண்டிருந்தார்.

முத்தம்மாள் சாமியாரை வணங்கி விட்டுச் சற்றுத் தொலைவில் மரியாதையுடன் நின்றாள்.

"உங்கள் வருகை முன்பாகவே எனக்குத் தெரியாததால் உங்களை முறையாக வரவேற்று உபசரணை செய்ய முடியவில்லை. என்னைப் பொருத்தருளுங்கள்" என்றாள் தேனாட்சி, மிகவும் மரியாதை நிறைந்த குரலில்.

தேனாட்சியை நோக்கிப் புன்சிரிப்புடன், "தேனாட்சி! உபசாரம், மரியாதை இவையெல்லாம் உள்ளத்தில் இருந்தால் போதும். பாண்டிய இளவரசிக்கு இப்போது மனத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் மற்றவர்களுடன் பேசவும் பிடிக்காது. இருந்தாலும் தன் எதிர்காலத்தைப் பற்றிய பெரும் கவலையால் யார் எதைச் சொன்னாலும் ஏற்கக்கூடிய மனநிலை இல்லை. வட தேசத்திலிருந்து வந்திருக்கும் எங்களைக் காணும் மனநிலை உன் இளவரசிக்கு இல்லை என்பது தெரிகிறது" என்று மெல்லத் தாடியை உருவியவாறு கேட்டார் பெரிய சாமியார்.

தேனாட்சி பதறிய வண்ணம், "அப்படியெல்லாம் நினைக்காதீர்கள் சாமி! எங்கள் இளவரசி பெரியவர்களிடம் மதிப்பு, மரியாதை மிக உடையவர்கள், தெய்வபக்தி நிறைந்தவர்கள். சில நாள்களாக இளவரசியின் மனத்தில் ஒரு குழப்பம். தன் எண்ணம் ஈடேறுமா என்ற கவலையில் இருக்கிறார்கள். குற்றாலமலைச் சாரலில் குறி சொல்லும் குறத்திகள் சிலர் உள்ளனர். அவர்களை அழைத்து வரப் புறப்பட்டேன். வழியில் உங்களைச் சந்தித்தேன். இளவரசியின் கையைப் பார்த்துக் குறி சொல்லுங்கள் சாமி" என்று மிகப் பணிவுடன் பேசினாள்.

சாமியார் சிரித்தார். "தேனாட்சி! உன் தலைவியின் குணத்தை நீ நன்றாகவே அறிந்திருக்கிறாய்! அவள் கைரேகையைப் பார்த்துத் தான் குறி சொல்ல வேண்டும் என்பதில்லை. உன் இளவரசியின் முகம், விழிகள், சற்றே நடுங்கும் அவளது உடல் ஆகியவற்றினின்றே என்னால் சொல்ல முடியும்" என்றார்.

இளவரசி முத்தம்மாள் ஒரு கணம் சாமியாரின் முகத்தை உற்று நோக்கினாள். அந்தக் குரலை அவள் எங்கோ கேட்டிருப்பது போன்ற உணர்வு தோன்றினாலும் அவள் அவரை வணங்கி எழுந்து பயபக்தியுடன் நின்றாள்.

"இளவரசி! இவ்வளவு நாள்கள் உன் திருமணத்தைப் பற்றியே சிந்திக்காத நீ சில நாள்களாக நினைக்கத் தொடங்கியிருக்கிறாயல்லவா?" என்றார் தவமுனிவர்.

முத்தம்மாள் விழிகள் விரிய ஒரு கணம் சாமியாரைப் பார்த்துவிட்டு தேனாட்சியின் பக்கம் திரும்பி நாணத்தால் தலை குனிந்தாள்.



சாமியார் இப்போது இளவரசியை அருகில் அழைத்து மெல்லிய குரலில், "இளவரசி! உன் நாட்டிற்குள் நுழைந்த வேற்று நாட்டவர் ஒருவர் மீது உனக்கு ஏற்பட்ட அன்பு தெய்விகமானது. ஆனால் நீ நினைப்பதுபோல் அவர் ஒற்றரல்லர்" என்றார்.

திடுக்கிட்ட முத்தம்மாள் சாமியாரை நேருக்கு நேர் நோக்கினாள். அவர் இன்னும் நல்ல செய்தி சொல்ல மாட்டாரா என்ற ஏக்கம் அவளுள் எழுந்தது.

இளவரசி முத்தம்மாளின் மிக அருகே தவமுனிவர் உட்கார்ந்திருந்தார். இளவரசியின் எழிலை அணு அணுவாக அவர் ரசிப்பது போலிருந்தது. அவர் கூறுவது ஒவ்வொன்றும் அவள் உள்ளத்துணர்வைப் பிரதிபலிப்பதாக இருந்தது. முத்தம்மாளுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு எல்லையில்லை. முனிவரின் முகத்தை ஒருகணம் பார்த்தாள். மறுகணம் தேனாட்சியை நோக்கினாள். பிறகு தலையைக் குனிந்து கொண்டாள். அவள் பரபரப்படைந்திருக்கிறாள் என்பது முனிவருக்குப் புரிந்து விட்டது. குற்றாலத்துக் குளிர்ச்சாரல் நிலையிலும் அவள் நெற்றியில் முத்து முத்தாய் வியர்வைத் துளிகள் அரும்பின.

"இளவரசி! மலைக்கோயிலில் பிரார்த்தனை செலுத்தி முடிந்தவுடனேயே உன் மனத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது என்பது உண்மைதானே?" என்று முனிவர் கேட்டார். பிறகு அவர் தொடர்ந்து, கேட்டார்:

"முத்தம்மாள். அது தானே உன் பெயர்? அழகான பெயர். பாண்டியரின் பெருமை குன்றிய நிலையிலும் அவர்களின் செல்வ வளத்தின் நினைவாக உனக்கு முத்து என்று அழகிய பெயரைச் சூட்டியுள்ளனர்" முனிவர் இவ்வாறு கூறியபோது முத்தம்மாள் துணுக்குற்றாள்.

பாண்டியர்கள் பெருமை குன்றியிருக்கிறார்களாம். இந்தச் சாமியாருக்குப் பாண்டியர்களைப் பற்றி என்ன தெரியும்? அவள் சற்றுக் கோபத்துடன் சாமியாரை நோக்கினாள்.

அதைச் சாமியார் கவனித்து விட்டார். "பெண்ணே! ஒரு காலத்தில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டியர்கள் பெருமையுடன் ஆண்டார்கள். ஆனால் இப்போது அவர்கள் நிலை என்ன? தென்கடலில் முத்துக் குளிக்கும் உரிமை பாண்டியர்களிடமில்லையே! தமிழ் வளர்த்த மதுரையில் இருந்து அரசாளாமல் தென்காசியில் அல்லவா அரசாளுகிறார் உன் தந்தை பாண்டியர்? அவருக்குப் பாளையக்காரர் என்று பெயர் சூட்டியிருக்கிறார் மதுரை நாயக்க மன்னர். அதனால்தான் 'பெருமை குன்றி' என்று சொன்னேன். உனக்கேற்ற மணாளனை உன் தந்தை தேடுகிறார், தேடுகிறார் அப்படித் தேடுகிறார். அவர் இன்னும் தன்னைப் பாம்பரைப் புகழ்பெற்ற பாண்டியன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். தனக்குச் சமதையான மருமகனைத் தேடுகிறார். சேரர்களிடம் சம்பந்தப் படுத்திக் கொள்ள முடியுமா? மைசூர்க்காரர்கள் பாண்டியர்களைச் சமமாகக் கொள்ள மாட்டார்கள். விஜயநகரத்திலிருந்தா மாப்பிள்ளை வருவார்? அதனால் நீயே ஒரு வரனைத் தேர்ந்தெடுத்து விட்டாய்! ஒற்றராக வந்த அந்த இளைஞன் முதல் பார்வையிலேயே உன் மனத்திற்குள் புகுந்து விட்டான். அப்படித்தானே?"

பாண்டியர்களைப் பற்றி குறைவாகப் பேசியபோது அவளுக்கு எழுந்த சீற்றத்தில், அந்த இடத்தைவிட்டு எழுந்து உள்ளே சென்று தேனாட்சியிடம் சொல்லி சாமியாரை உடனே அங்கிருந்து போகச் சொல்ல வேண்டும் என்று ஆத்திரம் ஏற்பட்டது.



தவமுனிவர் தொடர்ந்தார்:

"இளவரசி! பாண்டியர்களைப் பற்றி நான் உண்மையைத் தானே சொன்னேன். உன் முகம் மாறிவிட்டதே?" என்று கூறி விஷமத்தனமாக அவர் சிரித்ததை அவரது சடை முடி மறைத்தது. சீடர் மிக பயபக்தியுடன் வாய் பொத்தி நின்றார்.

"நீங்கள் உண்மையைச் சொல்லவில்லை. நீங்கள் நினைப்பது போல் பாண்டியர்கள் யாருக்கும் அடிமை அல்லர். சரியான நேரம், காலத்தை எதிர்பார்த்திருக்கிறார், பாண்டிய மன்னர்." என்று இளவரசி சீறினாள்.

"எதற்கு?" சாமியார் கேட்டார்.

"இழந்த மதுரை மகுடத்தை மீண்டும் பெற..." முத்தம்மாள் அழுத்தமாகச் சொன்னாள். சொல்லிவிட்டு தாம் ஏன் இவரிடம் வாதிடுகிறோம் என்று தன்னையே நொந்து கொண்டாள்.

"சாமி! என்னை மன்னித்து விடுங்கள். பாண்டியர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. மாபெரும் நாட்டை இழந்தது எங்களுடைய முன்னோர்களின் துரதிர்ஷ்டம். என் தந்தையைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் யாருக்கும் அஞ்சாதவர். சொக்கநாத நாயக்கரே அவரிடம் அச்சம் கொண்டிருக்கிறார். இப்போது நாட்டையே ஆட்டிப் படைக்கும் அரசி மங்கம்மாளிடம் என் தந்தை சபதம் செய்திருக்கிறார். குற்றாலத்தில் உடல் நலமின்றி இருக்கும் நாயக்க மன்னருக்குக் குடில் அமைத்துக் கொடுத்து, தக்க மருத்துவரை அளித்துப் பல விதங்களில் என் தந்தை உதவுவது மனிதாபிமானத்தால். இருந்தாலும் என் தந்தை தக்க தருணத்தை எதிர்பார்த்திருக்கிறார். மதுரை அரியணையில் மீண்டும் பாண்டிய அரசர் அமரும்

காலம் வெகு தொலைவில் இல்லை..." இளவரசி வீறு கொண்டெழுந்து பேசியதைக் கேட்கக் கேட்க தேனாட்சிக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும், இளவரசிக்கு அருள் வாக்குக்கூற வீடு தேடி வந்திருக்கும் சாமியாரிடம் இப்படி தர்க்கம் செய்கிறாளே என்ற கவலையுமிருந்தது.

தவமுனிவர் பெரிதாகச் சிரித்தார். "இளவரசி! உனது நாட்டுப்பற்றை நான் பாராட்டுகிறேன். உன்யோகம்தான் உன் தந்தைக்குப் புதுவாழ்வு அளிக்கப் போகிறது. விரைவில் நீ மதுரை இளவரசியாகப் போகிறாய், ஆனால்..." என்று கூறி நிறுத்தினார்.

"மதுரை இளவரசியாகப் போகிறோம்" என்று அவர் கூறியபோது முத்தம்மாள் மேனியில் புதுச்சிலிர்ப்பு ஏற்பட்டது. ஆனால்... ஆனால் என்ற வார்த்தை ஒன்றைச் சொல்கிறாரே! அதையடுத்து என்ன சொல்லப் போகிறார்?

தொடர்ந்து அவர் கூறப் போவதை ஆவலுடன் எதிர்பார்த்து, தவமுனிவரது விழிகளை முத்தம்மாள் நோக்கினாள். மெல்ல நகைத்தார் சாமியார்.

"இளவரசி! மலைக்கோயிலில் உன் எதிரே சேரநாட்டு ஒற்றர்கள் இருவரைக் கொண்டு நிறுத்தினார்களல்லவா? அவர்களுள் ஒருவரை நீ விரும்புகிறாய் அல்லவா? மனம் விட்டுப் பேசேன்..." என்று அவர் கூறியபோது முத்தம்மாள் முகம் ஜிவ்வென்று சிவந்தது. மேனியெங்கும் வியர்வை வெள்ளம், அவள் தலையை அசைத்தாள்.

"இல்லை... இல்லை... சேரநாட்டு ஒற்றரை நான் விரும்பவில்லை" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினாள்.

சாமியார் நகைத்தார், அவர் சிரித்தது, நீ பொய் சொல்கிறாய் என்று கூறுவது போலிருந்தது. அவர்



தேனாட்சியை நோக்கி "இளவரசியின் அந்தரங்கத் தோழி தானே நீ? நீ சொல்லு, உன் இளவரசியின் இதயத்தில் ஒரு சிறு மூலையில் கூட சேர நாட்டவர் மீது அன்பு ஏற்படவில்லையா?" என்று கேட்டார்.

தேனாட்சி என்ன சொல்வது என்று தெரியாமல் தவித்தாள்.

"நீ சொல்லு தேனாட்சி! உண்மையைச் சொல்லு. என் தவ வலிமையை இளவரசி பொய்யாக்கி விடுவாள் போலிருக்கிறதே. உன் இளவரசிக்காக நீ சிறைக் கூடத்திற்குத் தூது சென்றாய் அல்லவா?" என்ற கேட்டார்.

தேனாட்சி பரிதாபமாக இளவரசியைப் பார்த்தவாறே தலையை அசைத்தாள்.

"பிறகு நீயும் உன் இளவரசியும் சிறைக்கோட்டத்திற்கு நள்ளிரவில் சென்றீர்களல்லவா?" என்று தவமுனைவர் கேட்டபோது முத்தம்மாள் இருகரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டாள். ஏனோ துக்கம் வந்து தொண்டையை அடைத்துக் கொண்டது.

"அவர் சேரநாட்டு ஒற்றர் என்று எனக்குத் தெரியாது. என் தந்தை அறிந்தால், என்ன ஆகுமோ தெரியாது" என்று கூறும்போது வார்த்தைகள் சரிவர வரவில்லை.

மீண்டும் தவப் பெரியவர் மெல்ல நகைத்தார். "நீ சந்திக்கச் சென்ற அந்த ஒற்றர்கள் சிறைக் கூடத்தினின்று தப்பிவிட்டார்கள். அதைக் கேள்விப்பட்ட உன் தந்தை பாண்டிய அரசர் என்ன செய்யப் போகிறார்?" என்று கூறி தவப்பெரியவர் இளவரசியின் முகத்தை உற்றுப் பார்த்தார். கிண்டலும் கேலியும் நிறைந்திருந்தன.

அச்சத்தால் இளவரசி முத்தம்மாள் நடுநடுங்கினாள். "என்ன செய்வது? ஏதாவது வழி சொல்லுங்களேன்" என்று முனிவரைக் கெஞ்சுவதுபோல் அவள் பார்வை இருந்தது. தேனாட்சி தவித்தவாறு நின்றாள்.

தவமுனிவர் எழுந்தார். ஒன்றுமே சொல்லாமல் எழுந்து விட்டாரே என்று தேனாட்சி நினைத்து, அவரிடம் கேட்க வாயெடுத்தாள்.

"இளவரசி! கவலைப்படாதே. உண்மையிலேயே நீ அந்த ஒற்றரை விரும்பியிருந்தால், உன் மனம்போல், மாங்கல்யம் ஏற்படுவது உறுதி" என்று கூறியவர், "மறுபடியும் சொல்கிறேன்; உன் மனம் அவரை விரும்பியது தெய்வக் கட்டளை. பாண்டியர்களின் தகுதிக்கு எள்ளளவும் அவர் குறைந்தவரல்லர். விரைவிலேயே உண்மையை அறிவாய். கடவுள் அருள் உனக்குப் பூரணமாக உண்டு. எக்காரணங் கொண்டும் மனத்தை மாற்றிக் கொள்ளாதே" என்று கூறிவிட்டு ஒரு கணங்கூடத் தாமதிக்காமல் தன் சீடருடன் அங்கிருந்து புறப்பட்டு எங்கோ சென்றார்.

அவர்கள் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் பாண்டிய வீரர்கள் அந்தக் குடிலுக்குள் நுழைந்து தேனாட்சிக்கு வணக்கம் தெரிவித்து "தென்காசிச் சிறையிலிருந்து தப்பி ஓடிய ஒற்றர்கள் இந்தப் பக்கமாக வந்ததாகக் கேள்விப் பட்டோம், உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்டனர்.

தேனாட்சி திடுக்கிட்டாள். இவ்வளவு நேரம் அவள் சந்தேகப்பட்டது, இப்போது உறுதியாகி விட்டது.

'சிறைக் கோட்டத்திலிருந்து தப்பிய ஒற்றர்கள் தாம் இப்போது வந்து சென்ற இரண்டு சாமியார்களாக இருப்பாரோ?' என்று எண்ணினாள்.



## 17

தென்காசிச் சிறைக்கூடத்திலிருந்து தப்பி வந்த ஒற்றர்கள் குற்றாலத்தில் எங்கோ ஒளிந்து கொண்டிருக்க வேண்டும் என்று பாண்டிய வீரர்கள் அறிந்து குற்றாலத்திற்கு விரைந்து வந்தார்கள். அவர்கள் பல பகுதிகளாகப் பிரிந்து தேடத் தொடங்கினார்கள். இளவரசி தங்கியிருந்த குடிலுக்கும் வந்தார்கள். அவர்கள் உள்ளே நுழையும்போது தான் காவியுடை அணிந்திருந்த சாமியார்கள் வெளியேறினர். பாண்டிய வீரர்கள் சந்தேகப்படவில்லை.

தவமுனிவர் கூறியவற்றால் மனவேதனையும், பயமும் மேலிட, பஞ்சணையில் சாய்ந்து முகத்தைத் தலையணையில் புதைத்துக் கண்ணீரால் நனைத்த முத்தம்மாள் செவியில், வெளிக்கூடத்தில் காவல் வீரர்களும் தேனாட்சியும் பேசிக் கொண்டது வீழ்ந்தது.

தேனாட்சி வீரர்களைப் பார்த்து அதட்டும் குரலில் "இங்கு எதற்கு வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"உங்களுக்குத் தெரியாதா தென்காசிச் சிறையிலிருந்து குற்றவாளிகள் தப்பி ஓடிவிட்டார்கள்" என்றார் வீரருள் ஒருவர்.

"அது எங்களுக்குத் தெரியும். அவர்கள் இருக்குமிடத்தில் தேடாமல் இங்கே வந்து தேடுகிறீர்களே!" என்றாள் கடுமையாக தேனாட்சி.

"குற்றாலத்திற்கு அவர்கள் வந்ததாகத் தகவல். அதனால்..." என்ற வீரர்களைப் பார்த்துத் தேனாட்சி

சீற்றமுடன், "அதனால் என்ன? அவர்கள் இங்கே ஒளிந்திருப் பார்கள் என்று எண்ணி விட்டீர்களா?" என்றாள். அவள் குரலில் நையாண்டி இருந்தது.

"இருக்கமாட்டார்கள் என்று எங்களுக்குத் தெரியும், ஆனால்..."

"ஆனால்...?"

"எதற்கும், இளவரசியை எச்சரிக்கையாக இருக்குமாறு சொல்லச் சொல்லி எங்களை மன்னர் அனுப்பினார்கள்."

"நாங்கள் ஏன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்?"

"சேர ஒற்றர்களால் பாண்டிய இளவரசிக்கு ஏதாவது தொல்லை நேரலாம்."

"ஒற்றர்கள் இளவரசியை ஏன் தொல்லைப்படுத்தப் போகிறார்கள்?"

"பாண்டிய நாட்டவர்கள் அவர்களுடைய விரோதிகள். பாண்டியர்களிடம் தாங்கள் சிறைப்பட்டோமே என்ற ஆத்திரமிருக்கும். அதனால் இளவரசிக்கு..."

தேனாட்சி ஒரு கணம் திகைத்தாள். அவர்கள் சொல்வதுபோல் நடக்கலாம். ஒற்றருள் ஒருவர் இளவரசி யைக் கவர்ந்து செல்ல இங்கு வரலாம்.

தேனாட்சி, வீரர்களைப் பார்த்து, "அப்படியென்றால் உங்களில் ஒருவர் இங்கே காவலுக்கு இருங்கள். சேர ஒற்றர் வந்தால் உடனே அவர்களைப் பிடித்துக் கட்டிப் போடலாம்" என்றாள்.

பாண்டிய வீரர்கள் தலையசைத்து "இங்கே காவலிருக்க எங்களுக்குக் கட்டளையில்லை. உங்களை எச்சரித்துச்



செல்லவே இங்கு வந்தோம்" என்று கூறி விடைபெற்றுக் கொண்டனர். அவர்கள் போக்கு தேனாட்சிக்கு எரிச்சலைத் தந்தது.

இரண்டு சாமியார்களும் நாயக்க மன்னர் சொக்கநாதர் தங்கியிருந்த குடிலுக்குச் சென்றனர். வாயில் காப்பவன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான். ஆனால் மிகவும் பணிவாக, "சுவாமி! அரசியின் அனுமதியின்றி ஒருவரும் அரசரைக் காண இயலாது" என்றான்.

"அரசி எங்கே இருக்கிறாள்?" என்று அதட்டும் குரலில் கேட்டார் தவமுனிவர்.

"அருவியில் நீராடச் சென்றுள்ளார்" என்றான் காவல் காப்பவன்.

"தான் மட்டுமே சென்றுள்ளார்களா? அரசரை அழைத்துச் செல்லவில்லையா?"

காவல் வீரன் மறுமொழி பகரவில்லை. சாமியார் மீண்டும் கேட்டார்.

"சுவாமி! அந்த விஷயங்கள் எல்லாம் எனக்குத் தெரியாது. நான் காவல் காப்பவன். இட்ட கட்டளையை நிறை வேற்றுபவன்."

"ஓகோ! உனக்கு ஊதியம் கொடுப்பவர் யார்? அரசரா, அரசியா?" என்று சாமியார் கேட்டார்.

"இருவருமல்லர்; தென்காசி பாண்டியர்" என்றான் வீரன்.

சாமியார் திகைத்தார். அதை வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல் "தென்காசிப் பாண்டியரா?" என்று மட்டும் கேட்டார்.

“ஆமாம் சுவாமி! அரசரின் உடல் நலம் பெறும் வரை குற்றாலத்தில் அவரைத் தங்க வைத்து மருத்துவ சிகிச்சை செய்து, குணப்படுத்தும் வரை ஆகும் செலவு எல்லாம் பாண்டிய மன்னருடையது” என்று பணிவுடன் கூறினான்.

“ஓ! கப்பம் கட்டுவது போதாதென்று இது வேறா?” சாமியார் குத்தலாகக் கேட்டார்.

வீரன் மறுமொழி பேசவில்லை. சாமியார் விடுவதாக இல்லை.

“ஒரு பக்கம் மதுரை அரசருக்கு மருத்துவ உதவி அளிக்கிறார்; மறுபக்கம் மதுரை மகுடத்தைப் பறிக்கத் திட்டமிடுகிறார். உங்கள் பாண்டிய அரசர் மிகக் கெட்டிக் காரர்” என்று கூறிய சாமியார் காவல்காரனை நெருங்கி, “மதுரை நாயக்க அரசருக்குத் தென்காசிப் பாண்டியர் மருத்துவ உதவி செய்கிறாரா அல்லது நாயக்க அரசரை வீட்டுக் காவலில் வைத்திருக்கிறாரா?” என்று கேட்டார்.

பாண்டிய நாட்டுக் காவல் வீரனுக்குக் கோபம் பொங்கியது. கை வாளைத் தொட்டது.

“சுவாமி! தவமுனிவர் என்பதற்காக உங்களுக்கு மரியாதை அளிக்கிறேன். எல்லையை மீறி உங்கள் பேச்சு செல்கிறது. ஒரு காவல்காரனிடம் பேசும் பேச்சாக இல்லை. ஏதாவது சொல்ல வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றினால் அரசியிடம் சொல்லுங்கள். இங்கே நின்று தொந்தரவு செய்யாதீர்கள்” என்று கடுமையான குரலில் கூறினான்.

“யார் யாரிடம் எதைச் சொல்ல வேண்டுமோ அவர் களிடம் தான் நான் சொல்லுவேன், தம்பி! நீ மிகக் கோபக்காரனாக இருக்கிறாயே! உள்ளதைச் சொன்னேன்.



அரசரைக் காண ஒரு தவசிக்குத் தடை என்றால், காண ஒருவரையும் நீ விடமாட்டாய் அல்லவா?” என்று கூறி அவனைக் கீழ்க் கண்ணால் நோக்கினார்.

“முதலிலேயே சொல்லி விட்டேனே, அரசி உத்தா விட்டால் நிறைவேற்றக் காத்திருக்கிறேன்” என்றான்.

“அரசர் உத்தரவிட்டால்?”

இதைக் கேட்ட காவல் வீரன் உடனே மறுமொழி கூறவில்லை. பிறகு அவன் மெல்ல நகைத்து, “அரசர் எழுந்து வந்து கட்டளையிடும் நிலையிலில்லை” என்றான்.

“நான் வந்திருப்பதாக அரசரிடம் சென்று சொல்லு” என்றார் தவமுனிவருள் ஒருவர்.

“நான் என்றால்? யார் என்று சொல்வது?”

“வடக்கை இருந்து முத்து வீரப்ப சுவாமிகள் வந்திருப்பதாகச் சொல்லு. கேட்டவுடனேயே அவர் அழைத்து வரச் சொல்லுவார். என்னைத் தடுத்து நிறுத்தியதற்காக உன்னைக் கோபிப்பார்.’

காவல் வீரன் அரசரிடம் செய்தி சொல்லத் திரும்பிய போது அவனைத் தொடர்ந்துசென்ற காவியுடை முனிவர் அவன் பின்புறமாகச் சென்று, கழுத்தில் மற்றொரு கரங்கொண்டு இடுக்கி அவன் வாயில் துணியை வைத்து அடைத்து அறைத்து வைத்திருந்த கயிற்றால் கட்டித் தன் சீடரிடம், “இவனை ஒதுக்குப் புறமாக உருட்டி விடுகிறேன். சற்று நேரம் எழுந்து வராமல் பார்த்துக்கொள்” என்று கூறி அரசரிருக்கும் இடம் சென்றார்.

அரசர் எதிரே உருவிய வாளுடன் ஒருவர் நிற்பதையும் மன்னர் தி கைத்துச் செய்வதறியாது இருப்பதையும் கண்ட

சாமியார் மறைந்திருந்து அவர்கள் நடவடிக்கையைக் கவனிக்கலானார்.

சொக்கநாதர் மஞ்சத்தில் உட்கார்ந்திருந்தார். அவர் முகத்தில் அச்சம் தெரிந்தது. அவருடைய பயத்திற்குக் காரணம் இருந்தது. எதிரே நின்றிருந்தவரின் கரங்களில் பளபளக்கும் வாள் இருந்தது.

சொக்கநாதர் குரலில் முதலில் அழுத்தமும், கம்பீரமும் இருந்தன.

"யாரது" என்று கேட்ட அந்தக் குரலில் இயற்கையான அரச கம்பீரம் இருந்தது.

ஒரு மெல்லிய சிரிப்பு. அந்தச் சிரிப்புக்கு உடையவர் தன் சகோதரர் முத்து அழகாத்திரி என்பதை அவர் உடனே புரிந்து கொண்டுவிட்டார். கொஞ்சினாலும் கோபமாக இருந்தாலும் அந்தச் சிரிப்பில் கவர்ச்சி இருக்கும். முத்து அழகாத்திரியைக் காண வேண்டும் என்றுதான் அவர் துடித்துக் கொண்டிருந்தார். சிலமாதங்களாகவே முத்து அழகாத்திரி அவரைச் சந்திக்க வருவதில்லை. அவர் எங்கு இருக்கிறார் என்று அவருக்குத் தெரியவில்லை.

ஒரு தாயின் வயிற்றில் அவர்கள் இருவரும் பிறக்கவில்லை என்றாலும், சொக்கநாதரின் தந்தை திருமலை நாயக்கரின் அபிமானத்தை மிகவும் பெற்றவளின் மகன் முத்து அழகாத்திரி. அக்னி சாட்சியாக மணம் புரிந்து கொண்ட பட்டத்து அரசிக்குப் பிறந்தவர் சொக்கநாதர் என்பதனால் மதுரை மகுடம் அவருக்குக் கிடைத்தது. முத்து அழகாத்திரியின் தாய் திருமலை அரசரின் அன்பைப் பெற்றவள். பட்டத்து அரசியாக இல்லாவிட்டாலும், அவள் செல்வாக்கு மிக்கவள். அவள் விருப்பப்படி திருமலை



அரசர் ஆடிக்கொண்டிருந்தார் என்று பெயர் எடுத்தவள். அதனால் முத்து அழகாத்திரிக்கு மிகுந்த செல்வாக்கு அரண்மனையில் இருந்தது. அரசாங்கத்தில் இருந்தது. நாட்டு மக்களிடையே இருந்தது. பாளையக்காரர்களிடம் இருந்தது.

சொக்கநாதரிடம் அழகாத்திரி மிகுந்த மரியாதை கொண்டவராக இலட்சுமணர்போல் விளங்கினார், பக்கபலமாக இருந்தார். முத்து அழகாத்திரி சொல்லும் யோசனைகளை மிகுந்த கவனத்துடன் கேட்டு, எற்று அதன்படி நடப்பார் சொக்கநாதர்.

ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்து இருவரிடையே மெல்லிய விரிசல் ஏற்பட்டது. அரசி மங்கம்மாவின் போக்கு முத்து அழகாத்திரிக்குப் பிடிக்கவில்லை. அரசரிடம் மெல்லச் சொல்லிப் பார்த்தார். அழுத்தமான சாட்சியங்களுடன் கூறிப் பார்த்தார். சொக்கநாதர் கேட்கவில்லை. தன்னைப் பற்றி அழகாத்திரி குறை கூறுகிறார் என்பதையறிந்த மங்கம்மாள் முத்து அழகாத்திரியின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஒற்றர்களை நியமித்தாள். நேரிடையே மோதாமல் மறைமுகமாக அவரை ஒழித்துக் கட்டத் திட்டங்கள் தீட்டலானாள். அவருடைய ஒவ்வொரு சிறு நடவடிக்கைகளையும் உடனுக்குடன் தெரிவிக்குமாறு ஒற்றர்களிடம் ஏற்பாடு செய்தாள்.

முத்து அழகாத்திரி மங்கம்மாளின் எதிர்ப்பைப் புரிந்து கொண்டார். சொக்கநாதரைத் தன் கைப்பாவையாக்க மங்கம்மாள் திட்டமிட்டிருக்கிறாள் என்பதைஅறிந்து கொண்ட முத்து அழகாத்திரிக்கு நாட்டாசை மெல்ல மெல்லத் தலைதூக்கியது. பாளையக்காரர்களுள் சிலர் அழகாத்திரிக்குத் தூபம் போட்டனர்.

மங்கம்மாள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கட்டளைகளை மறைமுகமாகப் பிறப்பிக்கும் போக்கை விரும்பாத பாளையக்காரர்கள், அழகாத்திரி மதுரை மன்னரானால் தாங்கள்சுதந்தரமாகத் தங்கள் பகுதிகளை ஆட்சி புரியலாம் என்ற எண்ணத்தில் அழகாத்திரிக்குப் பக்பலமாக இருந்து வேண்டிய உதவி புரிய முன்வந்தார்கள்.

எல்லாம் மிக ரகசியமாகவே நடைபெற்றன. சொக்கநாதரை எதிர்க்க முத்து அழகாத்திரிக்கு விருப்பம் இல்லை தான் என்றாலும், மதுரை நாட்டு நடப்பைக் கூர்ந்து கவனித்த பிறகு உறுதியான முடிவிற்கு வந்தார். திருக்குற்றாலத்திற்குச் சொக்கநாதரை அழைத்துச் சென்று சிகிச்சை செய்கிறோம் என்ற பெயரில் சிறைப்படுத்தியிருக்கிறாள் மங்கம்மாள் என்றெண்ணிய அழகாத்திரி சொக்கநாதரையும் மங்கம் மாளையும் சிறையிலிட்டு, மதுரை மகுடத்தைத் தான் அடையவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

இராயசமும், பிரதானியும் கூட்டுச் சதியில் ஈடுபட்டிருக்கும் செய்தியும் அவருக்குக் கிடைத்தது. அரசு ஊதியத்தில் வாழும் அதிகாரிகள் புரட்சிப் பூமாலையை அணிய முற்பட்டபோது, பரம்பரை உரிமை படைத்த தான் ஏன் மதுரை அரியணையில் அமரக்கூடாது என்றெண்ணினார்.

சொக்கநாத நாயக்கரின் திருக்குமாரன் முத்துவீரப்பன் இருக்குமிடம் தெரியவில்லை. அவன் எங்கு சென்றுள்ளான் என்று அறியமுடியா நிலை. அவன் மட்டும் இருந்திருந்தால் அழகாத்திரி மதுரை அரசைக் கைப்பற்ற நினைத் திருக்கமாட்டார். அவனை எங்கோ மறைத்துவிட்டார்கள் அல்லது இந்த உலகத்தை விட்டே ஒழித்துவிட்டார்கள் என்று அழகாத்திரி எண்ணினார். அப்படிச் செய்தவள் மங்கம்மாளாகத்தான் இருக்க வேண்டும் என்று அழகாத்திரிக்குச் சந்தேகம் உண்டு.



ஒரே வாரிசான முத்துவீரப்பனை ஒழித்துவிட்டு தன் கணவர் சொக்கநாதரை இயங்க முடியாமல் செய்து விட்டுத் தானே ஆட்சியைக் கைப்பற்ற மங்கம்மாள் முடிவு செய்திருக்கிறாள் என்று, அழகாத்திரி உறுதியான முடிவுக்கு வந்தார். அவருடைய முடிவைப் பாளையக்காரர்கள் பலர் ஆமோதித்தனர்; ஆதரித்தனர். தேவைப்படும்போது இரண்டு நாள்கள் அவகாசத்தில் படைகளைக் கொடுத்து உதவு வதாக வாக்குறுதியும் தந்தனர்.

அழகாத்திரி உறுதியான முடிவுக்கு வந்தார், சொக்க நாதரைச் சிறையிலிட்டு மதுரை அரியணையில் அமர்வது என்று.

குற்றாலத்தில் சொக்கநாதர் தங்கியிருப்பதையும், மங்கம்மாள் இரவு பகலென்று அவரைவிட்டு அகலாது அவரருகே இருப்பதையும் அறிந்த அழகாத்திரி தக்க தருணத்தை எதிர்நோக்கியிருந்தார்.

அன்று மங்கம்மாள் அருவியில் நீராடச் சென்றிருக்கும் வேளையில் அழகாத்திரி தன் மெய்க்காப்பாளருடன் சொக்கநாதர் எதிரே தோன்றினார். வாளை உருவி அவர் நெஞ்சின் நேரே நீட்டினார்.

அதுவரை மன்னர் என்ற மரியாதையுடன், சகோதர பாசமும் கொண்டு திகழ்ந்த அழகாத்திரி தன் நெஞ்சைத் திடப்படுத்திக் கல்லாக்கிக் கொண்டு, "உம்; உடனே புறப்படுங்கள்" என்று கர்ஜித்தார்.

## 18

கண் இமைக்கும் நேரத்திற்குள் நேர்ந்துவிட்டது. சொக்கநாத நாயக்கர் எதிர்பார்க்கவில்லை – தன் மீது பற்றும் பாசமும், மதிப்பும் மரியாதையும் கொண்ட தம்பி அழகாத்திரி ஏதோ கோபத்தால் பேசுகிறான் என்று முதலில் எண்ணினார்.

பளபளக்கும் வாளை அவன் நீட்டியபோது அவருக்கு ஒன்றும் புரியவில்லை. நெஞ்சுக்கு நேராக அந்த வாள் நீண்டது. இப்படியும் அப்படியும் அசைந்தது. அது எந்த நொடியும் மார்பில் கோலம் வரைந்துவிடும்.

ஹ... ஹ... ஹ...

சொக்கநாதர் தலையை அசைத்தார். "இது என்ன, அழகாத்திரி! விளையாட்டா? எப்போதுமே சற்றுத் தொலைவில் நின்று கை கட்டிப் பேசும் நீயா இப்படி...?"

அழகாத்திரி நகைத்தார். 'உங்களிடம் எனக்குள்ள மதிப்பும் மரியாதையும் குறையவில்லை. பக்தியும் குறைய வில்லை. பக்தியும் பாசமும் கைகோத்து என் நெஞ்சில் நர்த்தனமிடுவதால்தான், கூர்மையான வாளை மிக நிதானமாக, உங்கள் மார்பின் எதிரே நீட்டுகிறேன். இல்லாவிடில் இந்த வாள் தன் பசிக்கு எப்போதோ பச்சை ரத்தத்தைப் பருகியிருக்கும்..." என்று பேசிக் கொண்டே வாளை இப்படியும் அப்படியும் நகர்த்தினார்.

"அழகாத்திரி!" நாயக்க அரசர் கூவினார். "என்ன, என்னைக் கொலை செய்யத் துணிந்துவிட்டாயா? நான் உனக்கு என்ன துரோகம் செய்தேன்?" அவர் குரலில் நடுக்கம் இருந்தது.



"நீங்கள் எனக்குத் துரோகம் செய்யவில்லை அண்ணா! இந்த நாட்டுக்குத் துரோகம் செய்து விட்டீர்கள்" அழகாத்திரியின் குரலில் கடுமை இல்லை; ஆனால் அதே சமயம் உண்மையை எடுத்துச் சொல்லும் அழுத்தம் இருந்தது.

"நீ என்ன சொல்கிறாய்? எனக்கு ஒன்றுமே புரிய வில்லையே. என் உடல் நடுங்குகிறதே. ஒரே குழப்பமாக இருக்கிறதே..." சொக்கநாதர் உடல் நடுங்கியது. நா குழறியது.

"உங்களுக்கு ஒன்றுமே புரியாதுதான். புரியும் சக்தியை இழந்து பல நாள்களாகின்றன. நல்லது தீயது எனப் பகுத்தறியும் சக்தியை இழக்குமாறு செய்துவிட்டார்கள். வீராதி வீரர் என்ற பெயர் பெற்ற நீங்கள் இப்படி ஒரு பெண்ணுக்கு அடிமையாகிவிடலாமா?" அழகாத்திரியின் குரல் சற்றே கடுமையாக ஒலித்தது.

அழகாத்திரி நினைப்பது போல் சொக்கநாதர், புரியும் சக்தியை இழக்கவில்லை. அவர் உடலில் ஏற்பட்ட பலக் குறைவும், அவருக்கு ஏற்பட்ட குழப்பங்களுந்தான் அவரது சிந்தனையைத் தடைப்படுத்தின.

"அழகாத்திரி! நான் பெண்ணுக்கு அடிமையாகி விட்டேனா? என்ன சொல்கிறாய்?" என்று கேட்டவர் பெரிதாகச் சிரித்தார்.

"ஓ! தஞ்சை இளவரசி மோகனாங்கியின் மீது மையல் கொண்டு அவளுக்கு அடிமையாவது போல் பித்துப் பிடித்துப் போனேன். அதற்காகப் பெரிய யுத்தம் ஒன்றையே நடத்தினேன். தஞ்சைக் கோட்டையும் இடிந்தது. அது

நடந்து பல ஆண்டுகளாகிவிட்டன. அதை ஏன் இப்போது நினைவுபடுத்துகிறாய்? உன் அண்ணி மங்கம்மாவின் காதில் விழுந்துவிட்டால் உன்னைத் தண்டிக்கத் தயங்கமாட்டாள். இப்பொழுதே இந்தக் கணமே உன்னைச் சிறைப்படுத்தக் கட்டளையிடுவாள். சிரச்சேதம் செய்யுமாறு சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கத்தியை உறையில் இடு. உம், சற்று விலகி நில்'' என்று கூறினார்.

அழகாத்திரியின் கத்தி அவர் மார்பின்மீது மெல்ல உராய்ந்தது. "அண்ணா! மங்கம்மாள் என்று கூறிப் பயம் காட்டுகிறீர்களா? அண்ணன் என்ற மதிப்பை உங்களுக்கு என்றும் தருவேன். ஆனால் மங்கம்மாளுக்கு, அந்தச் சூழ்ச்சிக்காரிக்கு ஒரு நாளும் அண்ணி என்ற உயர் பதவியைத் தரவே மாட்டேன். 'யாரைக் கண்டு நான் பயப்படுகிறேன்?' என்று கேட்டீர்களே! மங்கம்மாள் எனும் இந்த நாட்டுக்கு வந்துள்ள தாடகையை, சூர்ப்பனகையைக் கண்டு நீங்கள் அஞ்சாமல் நடப்பதில்லை என்று இந்தக் கணம் உறுதி தாருங்கள். அவளுடைய காவலிலிருந்து விடுபட்டு வருவதாக சத்தியம் செய்யுங்கள்'' என்று கடுமையாகப் பேசினார்.

"அழகாத்திரி! உன் பேச்சு மிக நன்றாக இருக்கிறது. நான் ஏன் சத்தியம் செய்யவேண்டும்? அதிகம் பேசாதே போ! போ! போய்விடு. மங்கம்மாள் வரும் சமயம்தான். உன்னை யார் உள்ளே விட்டார்கள்? வெளியே காவல் காரனில்லையா? அவன் பொல்லாதவன். தென்காசிப் பாண்டியரால் நியமிக்கப்பட்டவன். போ, போய்விடு!'' சொக்கநாதர் தைரியத்தை வெளிக்குப் புலப்படுத்தினாலும் உள்ளே அவர் நடுங்கினார்.

"ஏ மங்கம்மா! எங்கே போய் விட்டாய்! நீ நினைத்தபடியே அழகாத்திரி பொல்லாதவன்தான். அவன் கெட்ட



எண்ணத்தோடு இங்கே வந்திருக்கிறான். அவனுக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடு' என்று மனத்தில் நினைத்தவர், வெளியே "மங்கம்மா, எங்கே போய் விட்டாய்? சீக்கிரம் வா! நீ நினைத்தது போல் அழகாத்திரி நமக்குத் துரோகம் இழைக்க முனைந்துவிட்டான்'' என்று சொக்கநாதர் கூவினார்.

அழகாத்திரியின் சீற்றம் உச்சநிலையை அடைந்தது. அவாது ஒரு கரத்தைப் பிடித்துத் தாதாவென்று இழுத்துத் தன்னுடன் வந்த பழிபாவத்திற்கும் கொலைக்கும் அஞ்சாத வீரனிடம், 'இவரை வெளியே இழுத்துப்போ! யாராவது எதிர்க்க வருகிறார்களா என்று நான் சுற்றுமுற்றும் பார்த்துக் கவனித்துக் கொள்கிறேன்'' என்றார்.

'என்ன நடக்கிறது, ஏன் நடக்கிறது' என்ற புரியாத நிலையில் சொக்கநாதர் முன்னே செல்ல முடியாமலும் பின்னே நிற்க முடியாமலும் தயங்கினார்.

சொக்கநாதரை வெளியே இழுத்துச் செல்வது ஒன்றும் அவர்களுக்குக் கடினமாக செயலாகப்படவில்லை.

தவமுனிவர்கள் வேடத்திலிருந்த இரண்டு சாமியார் களாலும் ஏதும் செய்ய முடியவில்லை. அந்தக் குடிலுக்குக் காவலாக நின்ற பாண்டிய வீரனையும் செயலிழக்கச் செய்து விட்டதால் எதிர்ப்பு ஏதுமில்லை.

மறைவான இடத்திலிருந்த சீடர் குருவை நெருங்கி, "நாமொன்று நினைக்க இங்கு வேறொன்று நடக்கிறதே! அழகாத்திரியை மடக்கி நிறுத்துவோமா?'' என்று பரபரப் புடன் கேட்டார்.

அவர்கள் அழகாத்திரியை முன்பே அறிவார்களா? குரு சைகை காட்டி சீடரை அமைதியாக இருக்குமாறு கூறினார்.

இன்னும் சற்று மறைவாக அவர்கள் நின்று கொண்டார்கள். குரு மெல்லிய குரலில் தன் சீடரிடம் கூறினார். "நாம் இப்போது அழகாத்திரியை எதிர்த்தால் நமது காரியங்கள் பாழாகிவிடும். அழகாத்திரி தக்க படை பலத்துடன்தான் வந்திருப்பார். என்ன நடக்கிறதென்று சற்றுப் பொறுமையாக இருந்து கவனிப்போம்" என்றார்.

"என்னால் பொறுமையாக இருக்க முடியவில்லை ஐயா! அரசரைச் சிறைப்பிடித்து அழைத்துச் செல்கிறான் அழகாத்திரி. நாம் இந்தத் தருணத்தில் அவனை விட்டுவிட்டால் பிறகு அரசருக்குப் பெரிய ஆபத்து நேரிடலாம்" என்றார் சீடர்.

"எனக்குத் தெரியும், அரசருக்கு ஏற்பட்ட எதிர்ப்புகளில் அழகாத்திரியின் எதிர்ப்பு சாதாரணமானதன்று என்று. மதுரை மகுடத்தை அடைய பாளைக்காரர்களின் பக்கபலம் அவருக்கு இருக்கிறது. அதிலும் இங்கே எதிர்ப்பை இருக்காது என்று அறிந்து தக்க தருணம் பார்த்துத்தான் அழகாத்திரி வந்திருக்கிறார். என்னிடம் வாள் இருக்கிறது. இவர்களை எதிர்த்து நிற்கத் துணிவும் வலிவும் இருக்கின்றன. ஆனால், இது தக்க தருணமன்று. அழகாத்திரியின் ஆட்கள் நம்மை மிக எளிதில் சூழ்ந்து விடுவார்கள். அரசரைக் காப்பாற்றுவது முக்கியமா? நம்மைக் காப்பாற்றிக் கொள்வது முக்கியமா? இது போன்ற இடர்மிகுந்த வேளையில் நொடியில் முடிவெடுக்கவேண்டும். அதனால் மறைந்து நின்று பொறுத்திருந்து பார்ப்போம்" என்றார். சீடர் வாயை மூடிக்கொண்டு விட்டார்.

மன்னர் சொக்கநாத நாயக்கரை இருபுறமும் பிடித்துக் கொண்டு அழகாத்திரி குதிரை அருகே அவரை அழைத்துச் சென்றார். ஓய்வு எடுத்துக் கொண்டிருந்ததால் அரசருக்



கான சிறப்பு ஆடை அணிந்து கொள்ளாமல் சொக்கநாதர் எளிய உடை அணிந்திருந்தார். அதனால் மதுரை அரசரைச் சிறை செய்து அழைத்துச் செல்வதாக ஒருவரும் அறியவில்லை. அழகாத்திரியை யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. குதிரைமீது அரசர் ஏற்றப்பட்டார். அழகாத்திரியும் அவருடன் வந்த வீரர் ஒருவருமாக இருபுறமும் சூழ, குதிரைகள் பறந்தன.

அவர்கள் அங்கிருந்து சென்ற பிறகு சிறிது நேரத்தில் அருவியில் நீராடிவிட்டு மங்கம்மாள் அங்கு வந்தாள். அங்கு நடைபெற்ற சம்பவங்கள் ஒன்றையும் அவள் அறியவில்லை.

சாமியார்கள் இருவரும் தென்காசிப் பாண்டியர் நியமித்திருந்த வீரனை விடுவித்து, "தம்பி! இப்போது போய் உங்கள் அரசியிடம் நடந்த சம்பவங்களை ஒன்று விடாமல் சொல். உன்னை மிகவும் பாராட்டுவார்கள்" என்றார்.

காவல் வீரனின் கோபம் உச்சநிலையை அடைந்தது.

"இங்கே என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் பேசிக்கொண்டதிலிருந்து நீங்கள் போலி சந்நியாசிகள் என்பதையும், மதுரை மன்னருக்கு ஆபத்து ஏற்பட்ட இந்தத் தருணத்திலும் நீங்கள் அமைதியாக இருந்துவிட்டதால் சதியில் நீங்களும் சம்பந்தப்பட்டிருக்கிறீர்கள் என்றும் எனக்குத் தெரிந்தது. அரசரை எங்கே கொண்டு செல்கிறார்கள்? இயங்க முடியாமல் என்னைத் தடுத்துவிட்ட உங்களை நான் சும்மாவிடப் போவதில்லை" என்று கூவினான்.

துறவி அமைதியாக "தம்பி! கோபப்பட்டு, கூச்சலிட்டுப் பயனில்லை. தலைக்குமேல் ஆபத்து வந்துவிட்டது. இனி

நடக்கப் போவதைப் பார்ப்போம். இனி உங்கள் இராணிக்கு ஆபத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்வது தான் விவேகம். நீ ஒருவனே எவ்வளவு பேரை எதிர்த்துத் தாக்குவாய்?'' என்று கேட்டார்.

அவர் கேட்டதில் நையாண்டி இந்ததை உணர்ந்த தென்காசி வீரன், ''காவியுடை அணிந்திருப்பதால் நான் உங்களிடம் ஏமாந்துவிட மாட்டேன், என்னை நீங்கள் தடுத்திராவிடில் அரசரை அவர்கள் கவர்ந்து சென்றிருக்க விட்டிருக்கமாட்டேன். அரசியாரிடம் நீங்கள்தான் இதற்குத் தக்க மறுமொழி கூறியாக வேண்டும்'' என்று படபடப்புடன் பேசினான்.

துறவி மெல்ல நகைத்தார். ''தம்பி! நீ பெரும் வீரன் என்பதை நானறிவேன். அத்துடன் திறமையும் வேண்டும் தம்பி! ஒன்றை நீ யோசித்தாயா? குடிலின் வாயிலில் நீ கவனமாகக் காவல் காத்து நிற்கிறாய். அப்படியிருக்க அழகாத்திரி என்பவர் எப்படி உள்ளே நுழைந்தார்? அதற்கு நீ என்ன மறுமொழி கூறப்போகிறாய்?'' என்று அவர் கூறியவுடன் காவல் வீரன் திகைத்தான்.

''தம்பி! அதற்குத்தான் அறிவும் வேண்டும் என்பது. விழித்து நிற்பதால் பயனில்லை. உன்னை நான் கட்டிப் போட்டிராவிட்டால் நீ அவர்களைத் தடுத்து நிறுத்தி நடத்திய போரில் உயிரிழந்திருப்பாய். கவலைப்படாதே! நான் பார்த்துக் கொள்கிறேன். அதோ இராணி வருகிறார்கள். நான் பேசுகிறேன். நீ மௌனமாயிரு. அது போதும்'' என்றார்.

''முடியாது. நீங்கள் ஏதோ சூழ்ச்சி செய்கிறீர்கள். சூழ்ச்சிக்கு நான் இரையாகமாட்டேன். நடந்தவற்றை நான்



அரசியாரிடம் சொல்லித்தானாக வேண்டும்'' என்று கூறி இராணி மங்கம்மாளை நோக்கி விரைந்து சென்று ''பாண்டிய அரசி அவர்களே! ஆபத்து ஆபத்து!'' என்று உடல் நடுங்க மிகுந்த பயத்துடன் கூறினான்.

## 19

**தெ**ன்காசிக் காவல் வீரன் 'ஆபத்து ஆபத்து' என்று கூவியதைக் கேட்ட நாயக்க அரசி மங்கம்மாளுக்கு ஒருகணம் ஏதும் புரியவில்லை.

சொக்கநாதரைக் குதிரை மீதேற்றி அழைத்துச் சென்ற திசையைச் சுட்டிக்காட்டி அவன் ஏதோ கூற முயன்றான். வார்த்தைகள் வரவில்லை. அவனிடம் பதற்றம் தெரிந்தது.

மங்கம்மாள் குடிலுக்குள் விரைந்தாள். இங்கும் அங்கும் கண்களைப் பரவ விட்டாள்.

''அரசர் எங்கே?'' என்று கேட்டாள். சில நாள்களாக அரசர், குற்றாலத்திலிருந்து மதுரைக்குச் சென்று விட வேண்டும் என்ற பிடிவாதத்துடன் இருந்ததை அவள் அறிவாள். ஒரு வேளை அரசர் புறப்பட்டுவிட்டாரா? காவல் வீரன் தடுத்தும் கேளாமல் புறப்பட்டு விட்டாரா? குதிரை மீதுசென்றிருப்பாரா அல்லது இரட்டைக் குதிரை பூட்டிய தேர் போன்ற புதிய வண்டி ஒன்றை மதுரையினின்று கொண்டு வந்து அதில் அழைத்துச் சென்றிருப்பார்களா?

''அரசர் எங்கே?'' என்று சுற்றுமுற்றும் பார்த்து உரத்த குரலில் கேட்டாள் மங்கம்மாள்.

வீரனுக்கு வார்த்தைகள் உடைந்து வந்தன.

அவன் கூறியதிலிருந்து யாரோ அரசரைக் குதிரை மீதேற்றி அழைத்துச் சென்றிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டாள்.

அழகாத்திரி என்ற பெயரைச் சொல்லத் தெரியவில்லை காவல் வீரனுக்கு.

'உள்ளே இரண்டு சாமியார்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்னைத் தடுத்து விட்டார்கள். இல்லாவிட்டால் அரசரை அழைத்துச் சென்றவர்களைத் தடுத்திருப்பேன்' என்று கூறிய அந்த வீரன் தொடர்ந்து கவலை தோய்ந்த குரலில், "இப்போது என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லையே? எங்கள் பாண்டிய அரசர் அறிந்தால் என் தலையையே வாங்கிவிடுவாரே" என்று கூறியபோது அந்த வீரனுக்கு அழுகை வந்தது.

மங்கம்மாளுக்கும் ஒன்றும் புரியவில்லை. திகைத்து நின்ற மங்கம்மாளை நோக்கி, "இராணி மங்கம்மா! நீங்களும் இங்கிருந்து சென்றுவிடுவது நல்லது" என்ற குரல் கேட்டது.

காவியுடைச் சாமியார்கள் இருவரும் அவள் எதிரே வந்தனர். துணிவுடன் பெயர் சொல்லித் தன்னை அழைக்கும் அவர்கள் யார்? அருவியில் நீராடச் சென்று வருவதற்குள் இப்படியோர் அதிர்ச்சி தரும் நிகழ்ச்சியா? ஐயோ...

"யார் நீங்கள்? இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று குரலில் கம்பீரத்தையும், துணிவையும் வரவழைத்துக் கொண்டு கேட்டாள் மங்கம்மாள். அவளுக்குக் காவியுடைச் சாமியார்களிடம் மதிப்பு அதிகம். துறவி என்று யார் வந்தாலும் மிகுந்த மரியாதையுடன் வரவேற்பாள். உபசரணைக்குக் குறைவிராது. ஆனால், அரசருக்கு ஏற்பட்ட



அந்த நிலைக்குத் துறவியும் காரணமாக இருப்பாரோ? என்ற ஐயம் எழவே துறவி என்றும் பாராமல் கடுமையாகப் பேசினாள்.

"இவர்கள் என்னைக் கட்டிப் போட்டிராவிட்டால் அரசருக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது" காவல் வீரன் குரலில் புதிய தெம்புடன் கூறினான்.

"அரசியார் அவர்களே! நடந்து போனவற்றை விசாரிக்க இப்போது நேரமில்லை. உங்களை நோக்கியும் ஆபத்து நெருங்குகிறது. முக்கியமாக உங்களைக் குறி வைத்தே அவர்கள் வந்தனர். அரசரைச் சிறைப்படுத்திச் சென்று விட்டனர்" என்றார் தவமுனிவர் வடிவிலிருந்தவர்.

அவரைக் கூர்ந்து நோக்கிய மங்கம்மாள் சற்றே அதிர்ச்சியடைந்தாலும் அதை வெளியே புலப்படுத்தாமல் கேட்டாள்: "அரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு சென்றனரா?"

"ஆமாம். மதுரை மகுடத்தை அடையும் ஆசையில் அரசரைச் சிறைப்படுத்தி விட்டார்கள். அரசரை ஆட்டிப் படைக்கும் உங்களையும் சிறைப்படுத்தி இருட்டறையில் தள்ளுவது அவர்கள் திட்டம். அதனால்தான் நான் சொல்லுகிறேன். இனியும் தாமதப்படுத்தாதீர்கள். ஆபத்து உங்களை நெருங்கு முன்பு நீங்கள் பாதுகாப்பான இடத்திற்குச் செல்வது நல்லது" என்றார் காவியுடைச் சாமியார்.

அந்த ஆபத்து நிறைந்த வேளையிலும் மங்கம்மாள் அஞ்சாமல், "நீங்கள் யார்! இந்தச் செய்தியெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

மெல்லிய சிரிப்புடன், "அரசியார் அவர்களே! நான் யார், நீங்கள் யார் என்று ஆராய இப்போது நேரமில்லை என்று முன்பே சொல்லிவிட்டேன். உங்கள் மைத்துனர் மிகப் பொல்லாதவர் என்று உங்களுக்கே தெரியும். அவர் எதிர்பார்த்தபடி நல்ல சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. உங்களையும் வெளியே விட்டுவைப்பதால் அவருக்குத்தான் ஆபத்து. அதனால், உங்களையும் அவர் சிறைப்படுத்தி விடுவார். அருவிக் கரைக்கு அவரது ஆட்கள் உங்களைத் தேடிச் சென்றுள்ளனர். அங்கே உங்களைக் காணாமல் மீண்டும் இங்கு வருவார்கள். இந்தத் தென்காசிக் காவல் வீரன் நிறையப் பேசுகிறான். ஆனால் அவனால் மட்டும் உங்கள் மைத்துனரைத் தடுத்து நிறுத்த முடியாது."

"மைத்துனரா – யாரை இவர் சொல்கிறார்?" மங்கம்மாள் கேள்விக் குறியுடன் சாமியாரை நோக்கினாள்.

"மைத்துனர் யார் என்று உங்களுக்குப் புரியவில்லையா? அவர்தான் உங்கள் கணவரின் சகோதரர் அழகாத்திரி."

"அழகாத்திரியைப் பற்றி நான் முன்பே அரசரிடம் எச்சரித்திருக்கிறேன். அரசர் நம்பவில்லை. என்னையே சந்தேகித்தார். ஐயோ! இப்போது என்ன செய்வது? மதுரைக்கு உடனே தகவல் தெரிவித்து, படை வீரர்களை வரவழைக்க வேண்டுமே – என்ன செய்வது என்று தெரியவில்லையே?" மங்கம்மாள் கையைப் பிசைந்து கொண்டாள்.

"என்ன செய்வது என்று நான் சொல்கிறேன். இப்போது நீங்கள் தப்பிச் செல்வதுதான் சரி. இல்லாவிடில் இந்த நாட்டை நீங்கள் மறந்துவிட வேண்டியதுதான். அரசர் சொக்கநாதனைவிட உங்களிடம்தான் அழகாத்திரி வெஞ் சினம் கொண்டுள்ளான். அதனால், ஏன் எதற்கு என்று



கேட்காமல் நீங்கள் சில நாள்கள் மறைந்திருப்பது நல்லது. சொல்லிவிட்டேன். பிறகு உங்களிஷ்டம்" என்று கூறிய தவசியை மங்கம்மாள் வைத்த கண் எடுக்காது நோக்கி நின்றாள்.

"அப்படி நீங்கள் போக மறுத்தால் பலவந்தமாக உங்களை ஓரிடத்திற்குக் கொண்டு சேர்த்து விடுவேன்" என்றார் தவசி... அவர் குரலிலிருந்த உரிமை, உறுதி கண்டு மங்கம்மாள் மேலும் திகைத்தாள்.

"மறைந்திருப்பதா? எங்கே? எங்கே...? காட்டிலும் புதரிலுமா?" என்று கேட்கும்போது சொற்கள் பயத்தால் தடுமாறின.

"மதுரை நாட்டு மகாராணியைக் காடுகளில் மறைந் திருக்கச் செய்வோமா? இதே திருக்குற்றாலத்தில் சிறிது தொலைவிலுள்ள குடிலில், குறுக்கு வழியாகச் சென்று விடலாம்" தவமுனிவர் கூறுவதைக் கேட்டு மங்கம்மாள் வாய் திறவாது நின்றாள்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"ஆமாம்; இங்கே தென்காசி பாண்டியர் மகள் தங்கியிருக்கும் குடிலொன்று இருக்கிறது. அங்குச் சென்றுவிடுங்கள்."

இதைக் கேட்ட மங்கம்மாள் முகம் சிவந்து, "தென்காசிப் பாண்டியரின் குடிலுக்கா? நாங்கள் தங்குவதற்கேற்ற குடிலை ஏற்படுத்தி மருத்துவர் உதவியையும் அவர் அளித் ததை, அரசரின் உடல் நலத்தை முன்னிட்டே ஏற்றுக் கொண்டேன். அதனால், பாண்டியன் செருக்கு அதிகமாகி யுள்ளது. ஒருநாள் என்னிடம் கடுமையாக விவாதித்தார். மதுரை மகுடம் அவர்களுடைய பரம்பரை மகுடமாம்

என்றாவது ஒருநாள் மதுரை மகுடத்தை அடைந்தே தீர்வதாக என்னிடம் சபதம் செய்துள்ளார். பாளையக்காரர்கள் எல்லாம் பயந்து நடுநடுங்கிக் கப்பம் செலுத்தி வாழும்போது பாண்டியன் மட்டும் சுதந்தரமாக வாழ நினைக்கிறான். அவனுக்குள்ள திமிர் கொஞ்ச நஞ்சமன்று. அவருக்குச் சொந்தமான குடிலிலா மறைந்து கொள்ளுமாறு எனக்கு யோசனை சொல்கிறீர்கள்? நீங்கள் யார் என்று முதலில் சொல்லுங்கள்..."

காவியுடைச் சாமியார்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்.

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால், தென்காசிப் பாண்டியரின் கையாளாகக்கூட நீங்கள் இருப்பீர்கள் என்று தோன்றுகிறது. அழகாத்திரியிடமிருந்து தப்ப வைத்து தென்காசிப் பாண்டியரிடம் என்னைச் சிக்க வைக்கச் சதி செய்கிறீர்கள் என்று தோன்றுகிறது" என்று கோபமாகக் கூறி, தென்காசிக் காவல் வீரனைப் பார்த்து, "தம்பி! நீயும் சில மாதங்களாக எங்களுக்குச் சகல வித உதவிகளையும் செய்து கொண்டிருக்கிறாய். உன்னை நான் பெரிதும் நம்புகிறேன். இந்த இக்கட்டான வேளையில் நீ ஓர் உதவி செய்யவேண்டும். நான் ஓர் ஓலையைத் தருகிறேன், மதுரைக்கு உடனே விரைந்து சென்று தளபதியிடம் கொடுத்து வா. நாளைக் காலைக்குள் நமது படைவீரர்கள் இங்கு வந்து விடுவார்கள். அதுவரை நான் எங்காவது மறைந்திருக்கிறேன். அப்படியே நான் அழகாத்திரியிடம் அகப்பட்டுக் கொண்டு சிறைப்பட்டாலும் சரியே; ஆனால் தென்காசிப் பாண்டியரிடம் சரண் அடையமாட்டேன்" என்றாள்.

தவமுனிவருள் ஒருவர் சிரித்தார். "நாயக்க மாதேவியே, உங்கள் தவறான திட்டங்களுக்கு எல்லையே இல்லை.



சொக்கநாதருக்குச் சரியான யோசனை கூறாமல் அவரை இந்த நிலைக்கு ஆக்கியவரே நீங்கள்தான். ஊர் உலகம் அப்படிப் பேசுகிறது. இப்போது நீங்கள் எடுக்கும் முடிவு உங்களுக்கும் நாட்டிற்கும் பெரும் அழிவை உண்டாக்கப் போகிறது. அழகாத்திரியிடம் நாட்டை ஒப்படைக்கத் திட்டமிடுபவர் நீங்கள்தான். நண்பர் யார், விரோதி யார் என்று உங்களுக்குத் தெரியவில்லை. ஒவ்வொருவர் மீதும் உங்களுக்குச் சந்தேகம். உங்கள் மகன் முத்துவீரப்பன் மீதும் உங்களுக்குச் சந்தேகம் தான். அதனால் உங்கள் அழிவுகாலத்தை நீங்களே தேடிக் கொள்கிறீர்கள் என்று நான் சொன்னால் என்னையும் சந்தேகப்படுகிறீர்கள்..."

முத்துவீரப்பன் பெயரைச் சாமியார் உச்சரித்தவுடன் மங்கம்மாள் வியப்புற்றாள். அதிர்ச்சியை வெளியே புலப்படுத்திக்கொள்ளாமல், "சுவாமி! இந்த நாட்டு விவகாரம் அனைத்தையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது. மன்னரைச் சுற்றிச் சூழ்ச்சி நடக்கிறது. ஒருவரையும் நம்ப முடியவில்லை. நான் இதைத்தான் மன்னரிடம் அவ்வப்போது கூறுவேன், வற்புறுத்துவேன். முத்து வீரப்பனை நான் ஒருபோதும் சந்தேகித்ததில்லை. உங்களுக்கு யாரோ தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். என் வயிற்றில் பிறக்கவில்லையே தவிர, அவன் மீது எனக்கு வாஞ்சை அதிகம். ஒரு வாரிசைப் பெற்றுக் கொள்ளும் அதிர்ஷ்டத்தை நான் செய்யவில்லை. வாரிசு ஒன்று உருவாகும் என்று நான் எதிர்பார்த்திருந்ததால் முத்துவீரப்பன் மீது அதிகம் கவனம் செலுத்தவில்லை. ஆனால் நான் அவனை வெறுக்கவில்லை. நாட்டில் இன்றுள்ள பயங்கரமான சூழ்நிலையில் முத்து வீரப்பன் இப்போது இருந்தால் பகைவர்களின் சூழ்ச்சியை முறியடிப்பான் என்பது திண்ணம்..." அரசி மங்கம்மாள் மனம் விட்டுப்

பேசத் தொடங்கினாள். அந்த சூழ்நிலையின் முக்கியம் அவளுக்கும் புரியவில்லை. அதனால் முத்து வீரப்பனைப் பற்றி, தவமுனிவர் கூறியவுடன் மனந்திறந்தும் பேசத் தொடங்கிவிட்டாள்.

"அரசியார் அவர்களே! சூழ்நிலையின் பயங்கரத்தை நீங்கள் உணரவில்லை. உங்கள் மகன் முத்து வீரப்பனிடம் நீங்கள் கொண்டுள்ள பற்றுதலை அறிய நான் மகிழ்கிறேன். நன்றியும் தெரிவிக்கிறேன். ஆனால் யாருக்கு யார் நன்றி தெரிவிப்பது?... ஹூம்! தென்காசிப் பாண்டியர் அமைத்துள்ள குடிலுக்குச் சென்று சில நாள்கள் மறைந்திருங்கள் என்று நான் சொன்னால் கேட்க மறுக்கிறீர்கள். உங்கள் முத்து வீரப்பன் சொன்னால் இப்படித்தான் மறுப்பீர்களா? அல்லது அவனும் ஏதோ சூழ்ச்சி செய்கிறான் என்று சொல்வீர்களா?" என்று சாமியார் கேட்டார்.

"ஓ! ஓ...! முத்து வீரப்பனை ஒருநாளும் நான் சந்தேகிக்க மாட்டேன். என் செல்வன் எங்கிருக்கிறானோ? அரண்மனை வாழ்வையும் சுக போகங்களையும் விட்டுவிட்டு எங்கெல்லாம் அலைகிறானோ...? எங்கோ மேற்குக் கடற்கரை ஊர்களுக்கெல்லாம் சென்றிருப்பதாக ஒற்றர்கள் கூறினார்கள். மாறுவேடத்தில் சென்றாலும், சேரர்கள் அவனை அடையாளம் கண்டுவிட்டால் அவனுக்கு ஆபத்தல்லவா? அவனுக்கு ஆபத்து என்றால் மதுரை நாட்டின் எதிர்காலம் என்னாவது? பரம்பரையற்றுப் போய் மதுரை மகுடம் மாற்றானிடம் சிக்கிக்கொள்வதா? அவன் எங்கிருக்கிறானோ, எப்போது வருவானோ...? தன் தந்தையைச் சிறைப்படுத்தி விட்டார்கள் என்பதை அறிந்தால் அவன் துடிதுடித்துப் போவான். ஹூம்... தவமுனிவரே! நான் இப்போது என்ன செய்யவேண்டும்?" மங்கம்மாள் மிக உருக்கமாகப் பேசினாள்.



சாமியார் சிரித்தார். 'அம்மா...' என்றழைத்தார்.

மங்கம்மாள் திடுக்கிட்டாள். அந்தக்குரல் அவள் உள்ளத்தில் ஆயிரமாயிரம் பாச மலர்களைத் தூவின. அவள் உடல் சிலிர்த்தது.

"அம்மா! நான்தான் முத்து வீரப்பன் சொல்கிறேன். உடனே நீங்கள் பாண்டியர் குடிலுக்குச் சென்றாக வேண்டும்" என்று கூறி, தாடி மீசை முதலியவற்றை மெல்ல நீக்கினார்.

மங்கம்மாள் 'ஹா' என்று வியப்பால் கூவினாள். தவமுனிவர் வடிவில் இதுவரை இருந்தவர் முத்துவீரப்பன் என்பதை அறிந்த அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

முத்துவீரப்பன் காவல் வீரனை நோக்கி, "அரசியாரை உடனே, பாண்டிய இளவரசி தங்கியிருக்கும் குடிலுக்கு அழைத்துப் போ" என்று கூறினான். கட்டளையாகவும் அது இருந்தது.

## 20

ரூபமதி, மிக வேகமாக வந்து குதிரை லாயத்துக் குட்டிக் கதவைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். குதிரைகள் நின்றவாறே தவம் செய்து கொண்டிருந்தன. குதிரைச் சாணத்தின் நாற்றமும் பச்சைப் புற்களின் ஒருவித மணமும் சூழ்ந்திருந்த அந்த லாயத்துக்குள் நுழைந்து, ருஸ்தம்கானின் இருப்பிடத்தை அடைவது அந்த இருளில் சற்றுக் கடினந்தான்.

அதற்கு முன்பு ஒருமுறை அவள் அங்கு வந்திருக்கிறாள். தலை முதல் கால் வரை நீண்டு தொங்கும் அங்கியை அணிந்து முஸ்லிம் பெண்கள் போன்ற தோற்றத்தில் வருமாறு அப்போது ருஸ்தம்கான் சொல்லியிருந்தார். அத்தகைய வேடத்தை எப்போதாவது ஒரு முறைதான் பயன்படுத்து மாறும் சொல்லியிருந்தார்.

தலை முதல் பாதம் வரை மற்றவர் உருவத்தை அறியாது மறைத்திருப்பது ரூபமதிக்குப் பிடித்திருந்தது. ஆடவரின் கழுகுக் கண்களுக்கு விருந்தாகாதிருக்கலாம். அதே போது யாரையும் தலை குனிந்து விழிகளைத் தாழ்த்திக் கொள்ளாமல் நேரே பார்க்கலாம். அன்று அவள் ருஸ்தம் கானை எப்படியாவது சந்தித்துவிட விரும்பினாள். மலைக் கோட்டைக்கருகே கையில் மல்லிகைப் பூவுடன் நிற்கச் சொல்லியிருந்தாரே – அப்படி நின்று பார்ப்போம் என்று நினைத்து நீண்ட நேரம் நின்றாள். தன்னை யாராவது அணுகி ஏதும் கேட்கிறார்களா என்று பார்த்தாள். அவள் அழகிய தோற்றத்தை ரசித்து ஒரு முறைக்கு இருமுறை குறுக்கும் நெடுக்குமாக அவளருகே சென்றவர்கள், அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூத்துப் பேச முயன்றார்களே தவிர மல்லிகைப் பூ அடையாளத்திற்காக அன்று – அவ்வளவுதான்.

அதனால், அவள் அன்று இரவே ருஸ்தம்கானைச் சந்திக்க முடிவு செய்தாள்.

குதிரைகள் கனைக்கும் சப்தம். தங்கள் அமைதி கலைக்கப்பட்டதால் சடசடவென்று சப்தமிட்டுப் பறந்து புறாக்கள். எப்போதும் உள்ளத் துணிவு மிகுந்த ரூபமதி சற்றுப் பயந்தாள். பிறகு துணிவுடன் லாயத்திற்கு அருகே இருந்த கதவைத் தட்டினாள்.



கதவு திறக்கப்பட்டது. யார் என்று கேட்காமலேயே, பணிப்பெண் ஒருத்தி அவளை வரவேற்று முன் கூடத்திற்கு அழைத்துச் சென்றாள்.

விசாலமான கூடத்தின் மேலே தொங்கும் கண்ணாடிச் சரவிளக்குகள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. தரையில் ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அந்தக் கம்பளம், சுவரில் மாட்டப்பட்டிருந்த தந்தத்தினாலான பொருள்கள் யாவும் போரின் போது எதிரி நாட்டு மாளிகையிலிருந்தும் அங்குள்ள செல்வர்களின் வீடுகளிலிருந்தும் கொள்ளை யடிக்கப்பட்டவை.

ரூபமதி வியப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தாள். இவ்வளவு ஒளி விளக்குகளை அவள் வீட்டிற்குள் கண்டதில்லை. நாம் வந்திருப்பதை அவருக்கு எப்படித் தெரிவிப்பது என்று யோசித்தாள். பிறகு முகத்தை மறைத்திருந்த நீண்ட அங்கியைக் களைந்து நின்றாள். தன்னை அடையாளம் தெரிந்து கொள்வார்களல்லவா!

உள்ளேயிருந்து யாரோ வரும் காலடி ஓசை கேட்டது.

தட்டிலே ஒரு பாத்திரத்தில் பாலை ஏந்தி ஒரு பெண் வந்தாள். "உட்கார், ரூபமதி" என்று அவள் அன்புடன் உபசரித்ததைக் கண்ட ரூபமதி திடுக்கிட்டாள். 'நம் பெயர் இவளுக்கு எவ்வாறு தெரிந்தது?'

"எசமானர் இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடுவார். இங்கே உட்கார்ந்திரு" என்று கூறி பாலைக் கொடுத்து, "வேறேதாவது சாப்பிட வேண்டுமா?" என்று கேட்டாள். அவள் பேசிய தமிழ் கொச்சையாக இருந்தாலும், பெயர் சொல்லி அவள் அழைத்தாலும் அதில் மரியாதை இருந்தது. ரூபமதி அவளையே உற்றுப் பார்த்தவாறிருந்தாள். எதும்

பேசவில்லை. அவளைப் பார்த்தால் பணிப்பெண்போல் தோன்றுகிறது. ஆனால் உடுத்தியிருக்கும் உடையோ அந்த வீட்டுப் பீபியைப்போல் தோற்றமளிக்கச் செய்தது.

ரூபமதி பேசாமல் தன்னை வெறித்துப் பார்த்து நிற்பதைப் பார்த்த பணிப்பெண் தனக்குள் சிரித்துக்கொண்டு, "உட்கார் ரூபமதி! எசமானர் இதோ வந்து விடுவார்" என்று கூறினாள்.

'என்னை எப்படித் தெரியும்? நான் வருவேனென்று எப்படித் தெரியும்?' என்று கேட்கவேண்டும் என்று தோன்றியது.

பணிப்பெண் போய்விட்டாள். அந்த வீட்டில் ஒருவருமே இல்லையோ என்ற அளவுக்கு நிசப்தமாக இருந்தது. நறுமணம் எங்கிருந்தோ பரவி வந்தது. வெளியே குதிரைக்கொட்டடி இருக்கும் நிலைக்கும் அங்கிருந்து எழும் துர்நாற்றத்திற்கும் சம்பந்தமேயில்லாது மிகுந்த வேற்றுமை காணப்பட்டது.

திடீரென அந்த அறையில் கலகலப்பு. கதவுகள் திறந்தன. குதிரைப் படைத்தலைவர் ருஸ்தம்கான் கம்பீரமாக அங்கே நுழைந்தார். அவர் போருடையில் இருந்தார். மார்பிலே கவசம் மின்னியது. சிவப்பு நிற மேலங்கியும், முழங்காலுக்குச் சற்று மேல் வரை தொங்கும் உடையும் காலிலே கனமான காலணியும் உடைவாளுமாக அவர் அங்கே வந்து, "ரூபமதி! வந்து நீண்ட நேரமாகிறதா?" கம்பீரமான குரலில் கனிவு இருந்தது. உடனே ஏதும் சொல்ல நாவெழாமல் கையிலுள்ள பால் குவளை அப்படியே இருக்க, திகைத்து நிற்கும் ரூபமதியைப் பார்த்து, "அடடா, பால் ஆறிப் போயிருக்குமே! ஏதோ மிக முக்கிய செய்தியைக் கொண்டு



வந்திருக்கிறாய் அல்லவா? சீக்கிரம் சொல்லு. ஒரு நொடி தாமதித்தாலும் நிலைமை வேறு விதமாக மாறிவிடும். இது இக்கட்டான நேரம். நான் போருக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று பரபரப்புடன் கூறினார் ருஸ்தம்கான்.

தான் கேள்விப்பட்ட செய்தியை ரூபமதி திக்கித் திணறிக் கூறினாள். "குற்றாலத்தில், உடல் நலமில்லாமல் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் மன்னர் சொக்கநாதரை அழகாத்திரி சிறைப்படுத்தி எங்கோ கொண்டு சென்று விட்டாராம். இராணி மங்கம்மாவையும் காணவில்லை."

இந்தச் செய்தியைச் சொல்வதற்குள் ரூபமதி நெஞ்சு மிகவும் படபடத்தது.

ருஸ்தம்கான் அவள் தோள்களைத் தொட்டு, "ரூபமதி! ஏன் நடுங்குகிறாய்? நீ சொல்லக் கூடாத எதையாவது சொல்லி விட்டாயா?" என்றார். அவர் அவ்வாறு கேட்டாரே தவிர, அவர் உள்ளத்தில் அந்தச் செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

செஞ்சியை நோக்கிப் படைகளுடன் செல்லும் நிலையிலிருந்தார் அவர். நம்பிக்கைக்குகந்த குதிரைப்படை வீரர்கள் கொள்ளிடக் கரையில் ஆயத்தமாக இருந்தனர்.

செஞ்சிக்குச் சென்ற தளபதி லிங்கமன் மேலும் உதவி கேட்டு செய்தி அனுப்பியிருந்தார். ருஸ்தம்கான் அதை நம்பவில்லை. அங்கே போர் நடக்கவேயில்லை! வீண் புரளியை அவர் பரவவிட்டுப் பணத்தையும் படைவீரர்களையும் திருச்சியிலிருந்து பெற விரும்புகிறார் என்று நம்பகமான செய்தி அவருக்குக் கிடைக்கவே, செஞ்சிக்குத் தாமே சென்ற நிலைமையை அறிவதுடன் உண்மையிலேயே

செஞ்சிக் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்ற விரும்பினார்.

ஆய்ந்தெடுத்த நூறு வீரர்கள் போதும் என்ற முடிவுடன் அன்று நள்ளிரவில் கொள்ளிடக்கரையினின்று புறப்பட முடிவு செய்திருந்தார். ரூபமதி இவ்வளவு நாள்கள் இல்லாமல் இன்று மல்லிகைப் பூவைக் கையில் ஏந்தி, மலைக்கோட்டை வாயிலில் நின்று கொண்டிருந்கும் செய்தி அவருக்குக் கிடைத்தது. அவளைக் கண்காணிக்குமாறு கட்டளையிட்டார்.

சிறிது நோத்திற்கெல்லாம் ரூபமதி ருஸ்தம்கான் வீடு நோக்கி முகத்தை மறைத்து வருகிறாள் என்ற செய்தி வந்தது.

முக்கியமான காரியம் ஏதோ இருப்பதால்தான் அவள் வருகிறாள் என்று உணர்ந்த ருஸ்தம்கான் தடை ஏதுமில்லாமல் அவள் வருவதற்கு வழிவகை செய்தார்.

சொக்கநாதரை அவரது சகோதரரே சிறைப்படுத்தி விட்டார் என்ற எதிர்பாராத செய்தி அவரைத் திடுக்கிட வைக்காமல் வேறு என்ன செய்யும்?

கூண்டினுள் உலவும் வேங்கையைப் போல் இங்குமங்கும் பின்புறத்தில் கைகளைக் கட்டிக்கொண்டு நடந்தார். பிறகு ரூபமதியின் அருகே வந்து, "ரூபமதி நமது அரசரைச் சிறைப்படுத்தி விட்டார்கள் என்ற செய்தி சென்னப்பனுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"சென்னப்பர் மதுரைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார். இராயசமும் அவருடன் செல்கிறார்" என்றாள்.

"அரசரை அழகாத்திரி சிறைப்படுத்தி விட்டசெய்தியைக் கேள்விப்பட்டவுடன் அவர்கள் இருவரும் என்ன பேசிக்



கொண்டனர்?" ருஸ்தம் அவள் முகத்தைக் கூர்மையாக நோக்கினார்.

"என்ன பேசிக் கொண்டார்கள் என்று தெரியாது. அவர்கள் கவலைப்பட்டுக் கலங்கினர் என்றே எனக்குத் தோன்றியது."

ருஸ்தம்கான் ஒரு கணம் நின்றார். "ஓகோ! அவர்களுக்குத் தெரியாமலேயே அழகாத்திரி அரசரைச் சிறைப்படுத்தி விட்டாரோ - அதனால் கலங்கியிருப்பார்கள். அவர்கள் என்னைத் தேடவில்லையா?" என்று கேட்டார்.

ரூபமதி கவலையுடன் அதற்கு மறுமொழி கூறமுடியாமல், "அதெல்லாம் தெரிந்தால் நான் ஏன் இப்படி ஊர் ஊராக அலைகிறேன்? ஸாப்! எனக்குப் பயமாக இருக்கிறது. நமது அரசரைச் சிறைப்படுத்தி விட்டார்கள் என்றால் மதுரை நாட்டிற்கு யார் அரசராவார்கள்? அரசரிடம் நீங்கள் மிக மதிப்பு வைத்திருக்கிறீர்களல்லவா? இராணியையும் க்ாணவில்லை என்று அறியும்போது எனக்குப் பயமாயிருக்கிறது ஸாப்!" ரூபமதி உண்மையிலேயே நடுங்கினாள்.

"ரூபமதி! பயப்படாதே! நீ கவலைப்படாமல் இரு. இன்னும் சில நாள்கள் வரை நீ இங்கேயே தங்கியிருக்கலாம். தேவைப்படும்போது நீ வெளியே சென்று செய்தியை அறிந்து வரலாம். உனக்கு உதவியாக, குதிரை வீரன் ஒருவன் இருப்பான். அவனிருப்பது உனக்கும் தெரியாது. மற்றவர்களும் அறிய மாட்டார்கள். அவன் உனக்கேதாவது ஆபத்து நேரும்போதுதான் உதவ ஓடிவருவான்" என்று கூறி நிறுத்தியவர் உள்ளே சென்று திரும்பி வந்து, "ரூபமதி! இன்னும் சில நாள்களில் இந்த நாட்டில் பல மாறுதல்கள் ஏற்படப்போகின்றன. சில நாள்களுக்கு, முன்பு நான்

சொன்னது நினைவிருக்கிறதா, இந்த நாட்டின் அரசனாவேன் என்று? அதற்கான சூழ்நிலையை இறைவனே ஏற்படுத்திவிட்டான். ரூபமதி! நான் மதுரை மகுடத்தை அணிந்து மதுரை சிங்காதனத்தில் வீற்றிருக்கும் நாள் மிக நெருங்குகிறது... அப்போது என் அந்தப்புரத்தில் நீ என் அருமை நாயகியாக வந்து சேர்ந்து விடுகிறாயா?" என்று கூறி அவள் கன்னத்தில் முத்தமொன்றை அளிக்க முயன்றபோது, ரூபமதி விலகி ஓடி, அறையில் ஓரமாக நின்று, "ஸாப்! என்னை மன்னித்து விடுங்கள். நான் முன்பே சொல்லியிருக்கிறேன். இரண்டு வேளை உணவும் உடுக்க உடையும், கௌரவமான வாழ்க்கையும் மட்டும் எனக்கு ஏற்படுத்திக் கொடுங்கள் போதும். அதற்கு மேல் எனக்கு ஒன்றும் வேண்டாம்..." என்று கூறும்போது அவள் குரல் நடுங்கியது. பிறகு அவள் தொடர்ந்து, "ஸாப்! அரசரைக் காப்பாற்றுவதற்கு உடனே விரைந்து செல்லுங்கள்" என்று சொன்னவள் பிறகு கவலை நிறைந்த குரலில், "ஐயோ! நீங்கள் அரசரைக் காப்பாற்றப் போகிறீர்களா? அல்லது நீங்களே அரசராகப் போகிறீர்களா? புரியவில்லையே! எனக்குப் பயமாக இருக்கிறதே" என்றாள்.

ருஸ்தம்கான் அவள் சொல்வதைக் கேட்டுப் பெரிதாகச் சிரித்தான்.

"என்ன சொல்கிறாய், ரூபமதி? அரசரை நான் காப்பாற்றப் போகிறேனா அல்லது நானே அரசராகப் போகிறேனோ எனக்கே தெரியவில்லை. சொக்கநாதரிடம் எனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. சாதாரணக் குதிரை வீரனாயிருந்த என்னைக் குதிரைப் படைகளுக்குத் தலைவனாக்கியவர் அவர். ஆனால் அவரால் இனி இந்த நாட்டை ஆள முடியாது. அவருக்கு விரோதிகள் அதிகமாகி விட்டனர். அவர்களை எல்லாம் அவர் எப்படி



வெல்லப் போகிறார்? அழகாத்திரி போன்றவர்கள் இந்த நாட்டின் அரசராக ஆசைப்படும்போது நான் ஏன் அரசராகக் கூடாது? ரூபமதி! கவலைப்படாமல் இங்கேயே இரு. நல்ல செய்தியுடன் உன்னை மதுரைக்கு அழைத்து வருவார்கள். அங்கே என் அந்தப்புரத்தில் இருக்க விரும்பினால் இரு. இல்லாவிடில் உன் விருப்பப்படி நாட்டியமாடி அலைந்து கொண்டிரு" என்று கூறிவிட்டு, அவள் எதிர்பாராத வகையில் அவள் கரத்தை எடுத்து முத்தமொன்று கொடுத்துவிட்டு, விரைந்து சென்று இருளில் மறைந்தார்.

அவர் போன திக்கையே பார்த்தவாறு சிறிது நேரம் நின்ற ரூபமதி, கதவைத் திறந்து கொண்டு வந்த வழியே தட்டுத் தடுமாறி வெளியே சென்றாள்.

கொள்ளிடக் கரையில் காத்திருந்த நூறு குதிரை வீரர்களிடம் ருஸ்தம்கான் குதூகலமாகக் கூறினார்:

"என் அருமை வீரர்களே! தெற்குப் பக்கமாகத் திரும்புங்கள். நாம் இப்போது செஞ்சியை நோக்கிச் செல்லவில்லை. மதுரையை நோக்கி விரைகிறோம். பொழுது புலர்வதற்குள் மதுரையை அடைந்து, மதுரை அரண்மனையைச் சூழ்ந்து கொள்கிறோம். நாளை மறுநாள் மதுரை மகுடத்தை அணிந்து நான் இந்த நாட்டின் அரசனாகிறேன். என் அருமை வீரர்களே! உங்களுக்கு வேண்டிய பொன்னும் மணியும் ஏராளமாகத் தருகிறேன். உங்களுடைய விசுவாசமிக்க ஒத்துழைப்பு மேலும் மேலும் உங்களுக்கு வேண்டியவற்றைத் தேடித் தரும். புறப்படுங்கள். வெற்றியை நோக்கிப் புறப்படுங்கள்" என்று உணர்ச்சி மிக்க கூறினார்.

"ருஸ்தம்கான் ஜிந்தாபாத்; ருஸ்தம்கான் வாழ்க! வாழ்க!" என்ற குரலோசை அந்த இருளைக் கிழித்து நாலு திக்கிலும் பரவியது.

## 21

மங்கம்மாள் அந்தக் குடிலுக்கு அழைத்து வரப்பட்டபோது அவள் அவமானத்தால் குன்றிப் போனாள். இப்படி ஒரு நிலை தனக்கு ஏற்படும் என்று அவள் கனவிலும் நினைக்க வில்லை.

நாயக்க மாமன்னரை, அவரது சொந்தச் சகோதரரே சிறைப்படுத்தி எங்கோ கண் காணாத இடத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டாரே! அவரைத் தடுக்க, மதுரை நாட்டில் ஒருவருமில்லாமல் போய் விட்டார்களே! பெரும் படைகள் இருந்தென்ன? அரண்மனையில் இருக்கும் மெய்க்காவலர்களைக் குற்றாலத்திற்கு அழைத்துவாராதது என் தவறுதான். மன்னரைத் தனியே இருக்க வைத்ததும் என் தவறுதானோ? இராஜ தந்திரத்தில் நான் ஒரு கெட்டிக்காரி என்று விளங்க வேண்டும் என்று தற்பெருமை கொண்டேன். அரசரை என் கைப் பாவையாக்கிக் கொள்ளலாம் என்று மனப்பால் குடித்தேன், விளைவு? இங்கே இந்தக் குடிலுக்கு வந்து அடைக்கலம் புகுந்துள்ளேன். இந்தக் குடில் யாருடையது?

மங்கம்மாள் பித்துப் பிடித்தவள் போல் மனத்திற் குள்ளேயே புலம்பினாள். அந்தக் குடில் தென்காசிப் பாண்டியருடையது என்பதை அறிந்தவுடன் அவள் மேலும் அதிர்ச்சிக்குள்ளானாள். ஆனால் தேனாட்சியும் முத்தம்மாளும் அவளை அன்புடன் வரவேற்றனர்.

மதுரை அரசி என்றறிந்தவுடன் அவர்களுக்கு ஒரு கணம் அதிர்ச்சி ஏற்பட்டது. பிறகு வியப்பும் ஏற்பட்டது.



மங்கம்மாளை அழைத்து வந்த காவல் வீரன், தேனாட்சியிடம் மிகவும் மெல்லிய குரலில் கூறியது, மங்கம்மாவின் செவிகளிலும் வீழ்ந்தது.

"அரசியாரை நீங்கள் மிகக் கவனத்துடன் பார்த்துக் கொள்ள வேண்டும். இவருக்கும் ஆபத்து ஏற்படலாம். யாராவது அரசியாரைத் தேடி வந்தால், அரசியார் இங்கே இல்லை என்று சொல்லிவிடுங்கள்" என்றான். பிறகு தொடர்ந்து, "நான் தென்காசிக்கு விரைந்து சென்று, பாண்டிய மன்னரிடம் தெரிவித்து வருகிறேன்" என்றான்.

தேனாட்சி கேட்டாள்: "சற்று முன்பு தென்காசியினின்று வீரர்கள் இங்கே வந்தனர். சிறையினின்று தப்பி ஓடிவந்த ஒற்றர்களைத் தேடுகிறார்களாம்! தென்காசி வீரர்கள் அருவிக்கரையின் பக்கம் ஒற்றர்களைத் தேடிக் கொண் டிருக்கலாம். நீ சென்று அவர்களில் சிலரை இங்குக் காவலுக்கு அனுப்பிவிட்டு, நீ தென்காசிக்குப் போகலாம்" என்றாள். கட்டளையிடுவது போன்ற குரலைக் கேட்டு, காவல் வீரன் அதை ஏற்பதாகத் தலையசைத்துப் புறப்பட்டான்.

தேனாட்சி வற்புறுத்தியும், மங்கம்மாள் உணவருந்த மறுத்துவிட்டாள். அடுத்து, என்ன நேருமோ என்ற கவலை மங்கம்மாளை ஆட்கொண்டது. ஒரு வேளை பாண்டி இளவரசி முத்தம்மாள், வேண்டிக் கொண்டால் மங்கம்மாள் உணவருந்துவாள் என்ற எண்ணத்தில் முத்தம்மாளை அணுகினாள் தேனாட்சி.

தன் தந்தையிடம் மங்கம்மாள் சூளுரைத்திருப்பது முத்தம்மாளின் நினைவிற்கு வந்தது.

"காலம் எப்படி மாறுகிறது பார்த்தாயா தேனாட்சி?" என்று பெருமூச்சு விட்டவாறு கூறினாள் முத்தம்மாள்.

"தேவி! மெல்லப் பேசுங்கள், நாயக்க தேவி அதிர்ச்சியுடன் இருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் நாம் ஏதும் சுட்டிக் காட்டக்கூடாது. அரசியார் ஏதும் உணவருந்தவில்லை. நான் வற்புறுத்தியும் மறுக்கிறார்கள். ஒரு வேளை நீங்கள் வந்தழைத்தால் அவர்கள் வரலாம்" என்றாள் தேனாட்சி.

முத்தம்மாள் பெருமூச்சு விட்டாள். "நாயக்க அரசியை நேருக்கு நேர் காண எனக்கு விருப்பம் தோன்றவில்லை. அவர்களுக்கு இங்கே அடைக்கலம் கொடுத்தது சரிதானா என்றும் எனக்குப் புரியவில்லை" என்றாள்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" தேனாட்சி வியப்புடன் கேட்டாள்.

"மதுரை அரசரைச் சிறைப்படுத்தி விட்டார்கள் என்றால் பெரும் கலகம் ஒன்று அங்கே நடைபெறப் போகிறது என்றே தோன்றுகிறது. பாளையக்காரர்கள் யாரை ஆதரிப் பார்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை என் தந்தையும், நாயக்க அரசருக்கு எதிராக மாறலாம். இரண்டு காரணங் களுக்காக அவர், நாயக்க அரசரை ஆதரிக்கமாட்டார் என்று தோன்றுகிறது" என்று கூறிய தென்காசி பாண்டியரின் அருமை மகள் முத்தம்மாள் தேனாட்சியின் கருத்தை எதிர்பார்ப்பவள் போல் கூறினாள்.

"எனக்கும் அந்தக் காரணம் தெரியும் தேவி" என்று கூறிய தேனாட்சி, மிகவும் மெல்லிய குரலில், "உங்கள் தந்தையிடம் சூளுரைத்த அரசிக்கு உதவக்கூடாது என்பது ஒன்று. இழந்த பாண்டிய மகுடத்தை மீண்டும் பெறுவதற்கு இந்தத் தருணம்தான் சரியான தருணம் என்பது மற்றொன்று, சரிதானே, தேவி?" என்று கேட்டாள் தேனாட்சி.

அவள் கன்னத்தை மெல்லத் தட்டிய முத்தம்மாள், "அடி தேனாட்சி! நீ பெரிய அறிவாளி. அரசாங்கத்தில் உனக்குப்



பெரும் பொறுப்பு அளிக்கவேண்டும்" என்று கூறும்போது, தேனாட்சி குறுக்கிட்டு, "பாண்டிய நாட்டு இளவரசியின் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமாகியிருக்கும் ஒரு பணிப்பெண் என்பதைவிடப் பெரும் பதவி வேறு வேண்டுமா?" என்றாள்.

"ஆ... என்ன சொல்லிவிட்டாய்? நீ பணிப்பெண்ணா? என் ஆருயிர்த் தோழி; அரச குடும்பத்தில் பெறாத ஆருயிரைவிட மேலானவள். என் மனத்தில் இருப்பதை அப்படியே சொல்லிவிட்டாய் தேனாட்சி! இரண்டு நாள் களாக நடைபெறும் சம்பவங்கள் பெரும் மாறுதல் ஒன்று நிகழப்போகிறது என்பதை மறைமுகமாக உணர்த்துகின்றன. தென்காசியினின்று பாண்டிய அரசர் வந்தவுடன் என்ன நடக்கும் என்றே புரியவில்லையே?" என்றாள் முத்தம்மாள். அவள் குரலில் கவலை இருந்தது.

"தேவி! என்ன நடக்கப் போகிறது என்பதை நாம் இப்போது சிந்திக்க வேண்டாம். நம்மிடையே அடைக்கலம் புகுந்திருக்கும், நாயக்க அரசி பசியுடன் இருப்பதை நாம் பார்த்துச் சும்மாயிருக்கக்கூடாது. தமிழ்ப் பண்பில் வளர்ந் தவர்கள் பாண்டியர்கள். நீங்கள் ஒரு வார்த்தை கூறி அழைப்பது நல்லது; மரியாதையும் கூட" என்றாள் தேனாட்சி.

முத்தம்மாள் அரைமனத்துடன் அரசி மங்கம்மாள் இருப்பிடம் சென்றாள். அதுவரை அவர்கள் பேசுவதைக் கதவின் மிக நெருக்கமாகக் கேட்டுக் கொண்டிருந்த மங்கம்மாள், பரபரப்புடன் அருகே உள்ள இருக்கையில் அமர விரைந்தாள்.

முத்தம்மாளும், மங்கம்மாளும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர்.

முத்தம்மாளை மங்கம்மாள் பல ஆண்டுகளுக்கு முன்பு பார்த்திருக்கிறாள். இப்போது முத்தம்மாள் பெண்களுக்கே உரிய பருவ தேவதையின் ஆட்சியால் எழில் வடிவமாக நின்றாள். பாண்டியர் பரம்பரைப் பெண்களுக்குரிய செழுமையும் கம்பீரமும் முத்தம்மாளிடம் குடிகொண்டிருந்தன. பாண்டியரின் அடையாளச் சின்னத்தை இருவிழிகளும் புலப்படுத்தின. இராஜ கம்பீரத்துடன் அரசகுலப் பெண்களுக்கான இயற்கை அழகும் ஒன்றுசேர நின்ற முத்தம்மாளைச் சில நொடிகள் இமை கொட்டாது நோக்கினாள் மங்கம்மாள்.

யார் முதலில் பேசுவது என்று இருவரும் மௌனமாக இருந்தனர்.

முத்தம்மாள் பேச்சைத் தொடங்கினாள். "வாருங்கள் தேவி! பசியோடு இருக்கிறீர்களே, சிறிது பாலாவது பருகுங்கள்; உச்சி வேளை நெருங்குகிறது" என்றாள். அந்தச் சொற்களை விருந்தோம்பலுக்கான வார்த்தைகளைச் – சொல்வது, அவ்வளவு கடினமாக அவளுக்குத் தோன்றவில்லை; என்றாலும் வார்த்தைகள் வேகமாக வெளிவர மறுத்தன. அரசியிடம் அவளுக்கிருந்த கோபமும் அதற்குக் காரணம்.

மங்கம்மாள் மீண்டும் ஒருமுறை முத்தம்மாளைப் பாதம் முதல் கூந்தல் வரை கம்பீரமாக நோக்கினாள்.

"உன் பெயர்தானே முத்தம்மாள்?" என்று கேட்டாள். 'ஆம்' என்று தலையை அசைத்தாள் முத்தம்மாள்.

"பாண்டியருக்கு ஒரே மகள்தானே நீ?" என்று கேட்டாள் மங்கம்மாள்.



"ஆமாம், ஒரே வாரிசு" என்றாள் முத்தம்மாள். அந்தச் சொற்களில், உரிமையும் கம்பீரமும் இருந்தன.

"இராணி மங்கம்மாள் அவர்களே! நான் பாண்டிய குலத்தின் ஒரே வாரிசு! எனக்குச் சகோதரர்கள் இல்லை. நான் பெண்ணாக இருந்தாலும் என்னை என் தந்தை ஓர் ஆண்மகனுக்குரிய கம்பீரத்துடன் வளர்த்திருக்கிறார். எங்கள் பரம்பரையின் கௌரவத்தை நிலைநாட்ட நான் உறுதி பூண்டிருக்கிறேன். எந்த நாட்டு இளவரசனுக்காவது நான் மாலையிட நேர்ந்தாலும் ஒரு நாளாவது மதுரை நகரத்து அரியணையில் வீற்றிருக்கும் நிலையை ஏற்படுத்துவேன். அதனால் நீங்களும் நானும் நேருக்கு நேர் சந்தித்துப் போராடுமாறு நேரலாம். இன்று என்னை அலட்சியத்துடன் பார்க்கிறீர்கள். மாறுதல் நேரும் காலம் வெகு தூரத்தில் இல்லை."

இப்படி அவளுடைய மனத்தினுள்ளே பெரும் குரல் ஒலி எழுப்பியது. இயற்கையாக கருமை கலந்த பளபளப்புடன், திகழும் அவள் முகத்தில் சீற்றத்தால் செம்மையும் சேர கருஞ்சிவப்புச் சாந்து பூசியதுபோல் மாறியது.

அந்த வேளையிலும், அரசரின் சொந்தச் சகோதரரே, மன்னரைச் சிறைப்படுத்திச் சென்ற ஆபத்து நிறைந்த அந்த வேளையிலும், மங்கம்மாவின் அகந்தை மாறவில்லை.

"ஓ! ஒரே வாரிசு! அடுத்து தென்காசி அரியணையில் நீதான் அமரப் போகிறாயா? உன்னை மணக்கப் போகிறவர் பாண்டிய நாட்டவரா? அல்லது வேற்று நாட்டவரா? பாண்டிய நாட்டவர் என்றால் பழைய பாண்டிய பரம்பரையைச் சார்ந்தவர் யாரையாவது தேடிப் பிடிக்கவேண்டும். சாதாரணக் குடிமகனுக்கு உன்னைத் திருமணம் செய்து

கொடுத்தால் எங்கள் மாமன்னர் ஏற்க வேண்டுமல்லவா? வேற்று நாட்டு இளவரசருக்கு மணம் புரிவிக்க உன் தந்தை முடிவு செய்திருந்தால் அந்த சம்பந்தத்தையும் எங்கள் அரசர் ஒப்புக் கொள்ள வேண்டும். பாவம், ஆண் வாரிசு இல்லாமல் பெண்ணை மட்டும் பெற்றுவிட்டால் அடுத்த வாரிசு குறித்து சங்கடம் வரத்தான் செய்யும்" என்று சற்றுக் குத்தலாகவும்; அரசி என்ற ஆணவத்துடனும் தீர்மானமான முடிவைச் சொல்லும் தகுதியுடையவள் என்ற அதிகார மனநிலையிலும் மங்கம்மாள் கூறினாள். ஏனோ ஒருவித எரிச்சல் அவளுள்ளத்தில் அதுபோது எழுந்தது. பசி, களைப்பு, அரசர் சிறைப்படுத்தப்பட்டார் என்ற கவலை ஏதும் அவளை அப்போது பாதிக்கவில்லை.

முத்தம்மாள் அவள் முகத்தையே கண் இமைக்காமல் நோக்கியவாறிருந்தாள். மங்கம்மாளின் பேச்சில் இருந்த அகந்தை அவளுக்குப்புரிந்தது. பாண்டியர்களை ஒரு பொருட்டாகவும் அவள் எண்ணவில்லை என்பதையும் உணர்ந்தாள். தக்க மறுமொழி அளிக்க வேண்டும் என்ற துடிப்புடன் முனைந்தவள், சட்டென்று தன்னை அடக்கிக் கொண்டு, தோழி தேனாட்சியை விளித்து, 'தேனாட்சி! இங்கே வா, நாயக்க அரசியாருக்குப் பசி, தாகம், களைப்பு ஏதும் இல்லை. அதைவிட அவர்கள் உள்ளத்தில் தென்காசி பாண்டியர்களின் வாரிசைப் பற்றிப் பயங்கரக் கவலைதான் இருக்கிறது தேனாட்சி! நீயே அவர்களுடன் பேசிக் கொண்டிரு. அல்லது நீயே மீண்டும் அவர்களை உணவு கொள்ள வற்புறுத்தி அழைத்துப் பார். பாண்டிய வம்சம், ஆண்வாரிசின்றி இந்தத் தலைமுறையுடன் முடிவடைந்து விடும் என்று மனப்பால் குடிக்கிறார். பாண்டிய குலம் என்று ஒன்று இருந்தது என்ற சுவடே தெரியாமல் மறைத்துவிட நினைக்கிறார்: அவர்களுடைய எண்ணம்



நிறைவேறாது என்று அழுத்தமாக அவர்களுக்கு எடுத்துச் சொல்.

"நாயக்க அரசரைச் சிறைப்படுத்திக்கொண்டு சென் றிருக்கும் இந்த நிலையில் தென்காசியினின்று உதவி வந்தால் தான், மதுரை மகுடத்தைக் காத்துக் கொள்ள முடியும் என்பதையும், பாண்டியர்களுடன் வீண் பகை கொள்ள வேண்டாம் என்பதையும் எடுத்துச் சொல்" என்றாள்.

என்ன செய்வது; என்ன சொல்வது என்று தேனாட் சிக்குப் புரியவில்லை. உணவருந்தக் கூப்பிடுவதனால் தானே இவ்வளவு விவாதமும் பிடிவாதமும்? மங்கம்மாளை வற்புறுத்தாமலேயே இருந்து விட்டால்... தேனாட்சி எண்ணினாள்.

தேனாட்சியிடம், முத்தம்மாள் பேசியதை மங்கம்மாள் கேட்டுக் கொண்டிருந்தாள். 'ஓகோ! பாண்டியர் தயவில் நான் இருப்பதாக நினைத்துக் கர்வத்துடன் பேசுகிறாள் முத்தம்மாள். இவளுடைய அகந்தையை இப்போதே ஒடுக்க வேண்டும்' என்ற எண்ணத்துடன் மிக ஏளனக் குரலுடன், 'முத்தம்மாள் தானொரு பாண்டிய இளவரசி என்ற நினைப்பில் பேசுகிறாள். நான் நினைத்தால் நாளைக்கே இவள் ஒரு சாதாரண தமிழ்ப்பெண், நினைவிருக்கட்டும். இன்னும் சிறிது நேரத்தில் மதுரையினின்று உதவிக்குப் படைகள் வந்து விடும். அப்போது உன் நிலையையும் உன் தந்தை பாண்டிய பாளைக்காரர் நிலையையும் நீ எண்ணிப் பார்!" என்றாள்.

வெளியே சிலர் வரும் காலடி ஓசை கேட்டது. முத்து வீரப்பன் உதவியாளர்கள் சிலருடன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

## 22

வைகையாற்றங்கரையில், வேனிற் காலத்தில் அரச குடும்பத்தவர் வசிப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த மாளிகையில், மன்னர் சொக்கநாதரைக் கொண்டு சேர்த்தனர், அழகாத்திரியின் கையாட்கள்.

நெடுந்தொலைவு குதிரைமீது அமர்ந்து பயணம் செய்த களைப்பும், இடையே மறைவான ஓரிடத்தில் குதிரை மீதிருந்து இறக்கப்பட்டபோது அவருக்கு ஏற்பட்ட அவமரியாதையும் ஒன்று சேர்ந்து அவரை மூர்ச்சையடையும் நிலைக்குக் கொண்டு வந்தன.

அவரது அழகிய தலைமுடி, தோள்வரை சுருள் சுருளாகத் தொங்கி அசைந்தாடிய தலைமுடி வெட்டப்பட்டது. கடும் காய்ச்சல் வந்தவர்களுக்கு இருப்பதுபோல் ஒரு சாண் மட்டும் வைத்துத் தலைமுடி வெட்டப்பட்டது.

"ஏய், என்ன செய்கிறீர்கள்?" என்று சொக்கநாதர் பதறினார். அவர் திமிர முடியாதவாறு அவரது கரங்கள் அழுத்தமாகப் பிடித்துக் கொள்ளப்பட்டன. அழகிய மீசையும் குறுக்கப்பட்டது.

சொக்கநாதர் பயங்கரமாகக் கூவினார்; அலறினார், வசைமாரி பொழிந்தார்.

"ஏய், நான் யார் தெரியுமா?" என்று அதட்டலான குரலில் கேட்டார்.

"சாமி, சும்மா இருங்க" என்று மட்டும், மழித்தல் பணியைச் செய்தவர் கூறினார்.



"உங்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?" சொக்கநாதர் தன் அதிகாரக் குரலுடன் அவர்களை மிரட்டிப் பார்த்தார்.

"சற்று சும்மாயிருங்க சாமி" என்று கூறிவிட்டு அவர்கள் தங்கள் பணியை முடித்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமலேயே சென்றனர். பிறகு –

குவளையொன்றில் மோரைக் கொண்டு சொக்கநாதர் முன்பு நீட்டினான் ஒரு குதிரை வீரன். "களைப்பாக இருக்கும்; உம் குடியுங்கள். இப்போது புறப்பட்டால்தான் மதுரைக்குப் பொழுது சாய்வதற்குள் போய்ச் சேரலாம்" என்றான் அந்த வீரன்.

"நீ யார்?" என்று சொக்கநாதர் எரிச்சலுடன் கேட்டார்.

"உங்களையே யார் என்று கேட்க வேண்டிய நேரம் இது!" என்று கூறி அந்தக் குதிரைக்காரன் நகைத்தான்.

தன்னை அவன் அவமரியாதை செய்கிறான் என்று உணர்ந்த சொக்கநாதருக்குக் கோபம் உச்ச நிலையை அடையவே, அவர் தன் கரத்திலிருந்த குவளை மோரை அவன் முகத்தில் வீசினார். வெகுண்டு, காலால் அரசரை எட்டி உதைக்க முயன்றவனை அப்போது வந்த அழகாத்திரி தடுத்து "மடையா! அவருடன் உனக்கு என்ன பேச்சு? பொழுது சாய்வதற்குள் அவரை மதுரைக்குக் கொண்டு சேர்க்காவிடில் உன் தலை உன் வசமில்லை" என்று எச்சரித்து விட்டுக் குதிரை மீது தாவி ஏறினார்.

சொக்கநாதரைக் குண்டுக் கட்டாகக் கட்டி குதிரை மீதேற்றி, அவர் பின்பக்கம் அவரைப் பிடித்தவாறு அமர்ந்து குதிரையை விரட்டினான் ஒரு வீரன்.

மாலை வெயில் சுள்ளென்று ஒரு பக்க முகத்தில் அடிக்க, சொக்கநாதர் சோர்வுடன் குதிரை மீது குனிந்த தலையுடன் பயணம் செய்தார். வைகைக் கரையை அடையும்போது அவர் மயக்க நிலையில் இருந்தார்.

அந்த உல்லாச மாளிகையின் காவல்காரர்களுக்கு அந்த மாளிகை அறையில் அடைபட்டிருப்பவர் மன்னர் சொக்கநாதர் என்று தெரியாது... யாரோ சித்த சுவாதீன மற்றவரை அங்கே கொண்டு சேர்த்திருக்கிறார்கள் என்று நினைத்தார்.

அறைக்கதவு வெளியே தாளிடப்பட்டது. பசியும் தாகமும் சொக்க நாதரை வாட்டி எடுத்தன. ஒரு சாமம் கடந்த பிறகு, வழிநடைக் களைப்பு நீங்கிக் கண் விழித்தார். அரசர் ஒரு வாய் தண்ணீருக்கு ஏங்கலானார்.

சோறும், தண்ணீரும் வேண்டாம் என்று பிடிவாதம் பிடிப்பதால் எந்தவிதப் பலனுமில்லை என்ற முடிவுக்கு வந்து "யாரங்கே?" என்று கூவினார்; கதவைப் படபட வென்று தட்டினார்.

"மங்கம்மா எங்கே சென்று விட்டாய்?" என்று கதறினார்.

"ஏ, அழகாத்திரி! என்னை என்ன செய்யப்போகிறாய்? நா வறளுகிறது; குடிக்கத் தண்ணீர் கொடுத்துவிட்டு என்னைச் சித்திரவதை செய்" என்று கூறினார்.

நடுநிசிக்குப் பிறகு கதவு திறக்கப்பட்டது. ஒரு தட்டில் குழம்பு ஊற்றிய சோறும், மட்கலயம் நிறையத் தண்ணீரும் ஒருவன் கொண்டு வைத்து மீண்டும் கதவைத் தாளிட்டுச் சென்றான்.



அவருக்கு அப்போதிருந்த பசியில் ஒரே வாயில் சோற்றை அடைத்து விழுங்கி, தண்ணீரை மளமளவென்று குடித்துத் தீர்த்தார்.

வயிற்றில் வீழ்ந்த சோறும் தண்ணீரும் அவர் சோர்வைச் சற்றுப் போக்கின. 'ஐயோ, இதென்ன கொடுமை? என் தம்பி அழகாத்திரியா இப்படிச் செய்துவிட்டான்? ஏ அழகாத்திரி! உனக்கு நான் என்ன தீங்கிழைத்தேன்? ஏ, மங்கம்மா! எங்கே சென்றுவிட்டாய்?" என்று கூவியபடி கதவைத் படபடவென்று தட்டினார். ஒருவரும் வரவில்லை. அமைதியான இரவில் அவர் கூக்குரல் மட்டுமே எதிரொலித்தது.

எவ்வளவு நேரம் அவ்வாறு, கதவருகே நின்று கூவினா ரோ, தெரியாது. கை, கால் சோர்ந்து, குரல் கம்மிப் போய்க் கதவருகே வீழ்ந்தார்.

மறுநாள் பொழுது விடிந்து சுற்றுப்புறச் சூழலில் கதிரவன் ஆட்சி தொடங்கியபோது, கதவு திறக்கப்பட்டது. வீரர்களும் மற்றும் சில பிரமுகர்களும் சூழ அழகாத்திரி அங்கே வந்து நின்றான். அவருடன் இராயசமும், பிரதானியும் வந்திருந் தனர்.

சொக்கநாதர் கண் விழித்தார். திறந்திருந்த கதவுகளின் வழியே கதிரொளி புகுந்து அவர் கண்களைக் கூசச் செய்தது.

சொக்கநாதர் நிமிர்ந்து பார்த்தார். நின்றுகொண் டிருப்பவர்களுடைய கால்கள் பெரும் கம்பங்கள் போல் காட்சியளித்தன. அந்தக் கால்களை ஒரே வெட்டாக வெட்டிச் சாய்த்துவிட வேண்டும் என்ற வெறி அவருக்கு ஏற்பட்டது.

உடைவாளைத் தேடினார். ஆடை சரிந்திருந்த நிலையில் அவர் கரங்கள் இடுப்பைச் சுற்றித் துழாவின. "எங்கே என் வாள்?" என்று கூவினார்.

உட்கார்ந்தபடியே ஒரு சுற்றுச் சுழன்று, எழுந்து, "யாரடா நீங்கள்? எங்கே வந்தீர்கள்? என் வாள் எங்கே?" என்று பல்லைக் கடித்தபடியே சப்தமிட்டுப் பாய்ந்து எதிரே இருந்தவர் மேலங்கியைப் பிடித்து உலுக்கினார்.

"மங்கம்மா – எங்கே போய்விட்டாய்? நேற்றிலிருந்து உன்னைத் தேடுகிறேன்" என்று விழிகளைச் சுற்றிலும் சுழலவிட்டபடியே கேட்டார்.

"அண்ணா, சற்று அமைதியாயிருங்கள்... இராயசத்தின் அங்கியைப் பிடித்திருப்பதைத் தயவுசெய்து விட்டு விடுங்கள். உங்கள் மேலங்கி கிழிந்திருப்பதுபோல் அவரது அங்கியும் ஆடையும் கிழிக்கப்படலாமா?" அழகாத்திரி மெல்ல ஆனால் அழுத்தமான குரலில் சொக்கநாதர் முகத்தருகே சென்று கூறினார்.

குரல் கொடுத்தவரை ஒருமுறை உற்றுப் பார்த்தார். தன் உடைவாளை மீண்டும் ஒருமுறை தேடினார். "யாரது அழகாத்திரியா? தம்பி! என்னை இந்தக் கோலத்திற்கு உள்ளாக்கியது யார்? குற்றாலத்தில் இருந்த என்னை இங்கே கொண்டு வந்து தள்ளியது யார்?" என்று தலையில் கரத்தை வைத்துக்கொண்டு குழந்தை போல் விம்மினார். அழகாத்திரியைப் பார்த்தவுடனே அவரது சீற்றம் தணிந்தது. துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. தலைமுடி வெட்டப்பட்டிருந்தது. தோள்வரை தொங்கிய தலைமுடி குட்டையாக்கப்பட்டிருந்ததைக் காண அவருக்கு அழுகையே வந்துவிட்டது. தன்னை யாரோ அவமானப்படுத்துகிறார்கள் என்று எண்ணினார்.



"தம்பி! என்னை அலங்கோலப்படுத்தியது யார்? என் தலைமுடி என்ன பாவம் செய்தது?" என்று தேம்பியவாறு கேட்டார்.

"அண்ணா! அமைதியாக இருங்கள். எல்லாம் முன் ஜென்மத்தில் செய்த பாவத்தின் விளைவு" என்று ஏதோ சொல்ல முயன்ற அழகாத்திரியை நோக்கி, "என்னடா சொல்கிறாய்? முன் ஜென்மத்தில் செய்த பாவமா? என் பாவபுண்ணியத்தை நீ கண்டிருக்கிறாயா? சித்திர குப்தனா நீ? அண்ணாவாம், அண்ணா! மகாராஜா – மாமன்னர் – சக்கரவர்த்தி என்று நீ மரியாதையுடன் அழைத்ததுபோக அண்ணன் உறவு கொண்டாட முனைந்து விட்டாயா? என் அருமை மங்கம்மாள் எங்கே?" சொக்கநாதர் அழகாத்திரியின் மேலங்கியை அழுத்தமாகப் பிடித்திருந்தார். சர் என்று அது கிழிந்து தொங்கியது.

அழகாத்திரி அருகிலிருந்தவர்களைப் பார்த்து, "நான் அப்போதே சொன்னேனே, பார்த்தீர்களா? சொக்கநாதர் மிகவும் குழம்பிப் போயிருக்கிறார்" என்றார்இ.

"யாரடா குழம்பியிருப்பது?" சொக்கநாதர் அவனைப் பிடித்து உலுக்கினார்.

"மங்கம்யாள் எங்கே? அரசி எங்கே?" என்று அடித் தொண்டையிலிருந்து வார்த்தைகள் வரக் கத்தினார்.

அங்கே ஏனோ சிரிப்பொலி எழுந்தது. "ஏன் சிரிக்கிறீர்கள்?" மீண்டும் சொக்கநாதர் சுற்றிலும் ஒருமுறை பார்த்துக் கேட்டார்.

"அரசி மங்கம்மாளைக் காணவில்லையே எங்கே போயிருப்பார்கள் என்று ஒருமுறை நினைத்தோம். சிரிப்ட வந்தது" என்றது ஒரு குரல்.

"யாரடா அது பேசுவது? இதில் என்ன சிரிப்பு இருக்கிறது?" என்று கூறி உற்றுப் பார்த்தவரின் கண்கள் எதிரே, இராயசம் பட்டுவிட்டார்.

"ஓ! இராயசமா? துரோகி! உன்னைப் பற்றி மங்கம்மாள் சொல்லும்போது நான் நம்பவில்லை. என் முத்திரை மோதிரத்தைத் திருட்டுத்தனமாக வைத்துக் கொண்டு நீ போலி உத்தரவுகளைப் போட்டு வருகிறாயா? செஞ்சிக்குப் படை எடுத்துச் சென்றவர்களைப் பற்றிச் செய்தி ஏதாவது வந்ததா? பிரதானி எங்கே?" என்று கேட்டவாறு அவனை நோக்கிப் பாய்ந்தார்.

"அண்ணா! இராயசத்தைக் குறை கூறிப் பயன் என்ன? மங்கம்மாளிடம்தான் எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன. அவர்களது கட்டளைப்படியே எல்லாம் நடக்கும். இப்போதுகூட உங்களை மதுரைக்கு அழைத்துவர அவர்கள் தான் சொன்னார்கள். உங்கள் மனநிலை சரியில்லையாம். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுமாறு சொன்னார்கள். நீண்ட காலமாக முடி வெட்டப்படாமல் காடு போல் தலை மயிர் வளர்ந்திருப்பதால்தான் மனக்கோளாறு அதிகமாகி விட்டதாம். அதனால் நாவிதரை அழைத்து மொட்டை அடிக்கச் சொன்னார்கள். அடடா நாங்கள் பட்டபாடு. சிறு பிள்ளைபோல் நீங்கள் செய்த அட்டகாசத்தால் நாவிதர் ஒருவரின் கரத்தில் பெரிய காயம் ஏற்பட்டுவிட்டது. அதனால் அவர் தொடர்ந்து தன் பணியைச் செய்ய முடியாமல் சென்றுவிட்டார்.

"அண்ணா! செஞ்சிக்கு அவசரமாக உதவி அனுப்ப வேண்டும் என்று பிரதானி சொன்னார். உங்கள் அதிகாரத்தைப் பறித்துக் கொண்ட மங்கம்மாள், உதவிக்குப் படைகளையோ, பணத்தையோ, உணவுப் பொருள்களையோ, அனுப்ப மறுத்து விட்டார்கள். செஞ்சியில் நமது படைகளுக்குப் பலத்த அடி..." அழகாத்திரி முடிக்கவில்லை. சொக்கநாதர் சீறிப் பாய்ந்து, "ஏய் துரோகிகளா, பொய்யா சொல்கிறீர்கள்? இலிங்கமன் தோற்றான் என்றால் வேறு யார் வெற்றியடைய முடியும்? வேண்டிய உதவிகளை அனுப்புமாறு இராயசத்திடம் முன்பே உத்தரவிட்டு விட்டேன். துரோகிகளே! சதி செய்து மதுரை மகுடத்தை அபகரிக்கப் பார்க்கிறீர்களா? மங்கம்மாள் மீது அபாண்டமாகப் பழியைச் சுமத்துகிறீர்கள். மங்கம்மாள் எங்கே?" என்று கூறியவாறு அழகாத்திரியின் தலைமுடியைத் தாவிப் பற்றி உலுக்கத் தொடங்கினார். அழகாத்திரி மிகச் சாமர்த்தியத்துடன் அவர் பிடியினின்று விலகினார்.



"மங்கம்மாள் அந்தச் சாமியார்களோடு உல்லாசமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்" என்று ஒரு குரல் கேட்டது.

"யாரடா அவன்? அபாண்டம் பேசும் உன் நாக்கைத் துண்டிக்கிறேன்" என்று கூறிப் பாய்ந்து அருகேயிருந்த வீரனின் உடைவாளைப் பறித்து மங்கம்மாளைப் பற்றி அவதூறு சொன்னவனைத் தேடினார்.

"ஆமாம் அண்ணா! அவன் சொல்வது முற்றிலும் உண்மை. உங்களிடமிருந்து செய்திகளை மறைக்கிறாள் மங்கம்மாள். உங்கள் மகன் முத்துவீரப்பன் நாட்டிற்கு வந்துவிட்டானே அந்தச் செய்தியை அவர்கள் சொன்னார்களா?" என்று அழகாத்திரி சீண்டுபவதுபோல் மெல்லக் கேட்டார்.

"யார் என் அருமை மகன் முத்துவீரப்பனா? வந்துவிட்டானா? மதுரை மகுடத்தின் உண்மை வாரிசு வந்துவிட்டானா? எங்கே அவன்? என் கண்மணி எங்கே?"

சொக்கநாதர் அழகாத்திரியைப் பார்த்துக் கேட்டார். அவர் கரத்திலிருந்த வாள் கீழே நழுவியது.

"முத்து வீரப்பன் வந்துவிட்டானென்றால் என் கவலை தீர்ந்தது" என்று கூறிய சொக்கநாதர், "அழகாத்திரி! மங்கம்மாள் எங்கே? அவளை நான் உடனே சந்திக்க வேண்டும்" என்று கெஞ்சினாள். பிறகு, "முத்துவீரப்பன் எங்கே?" என்று மீண்டும் கேட்டார்.

"யாருக்குத் தெரியும்? மங்கம்மாவைத்தான் கேட்க வேண்டும்" என்று மிக அமைதியாகச் சொன்னார் அழகாத்திரி.

"மங்கம்மாள் எங்கே?" சொக்கநாதர் கூவினார்.

"அந்தச் சாமியார்களைக் கேட்க வேண்டும்" இப்படிக் கூறியது கேட்டு அங்கிருந்தவர்கள் மெலிதாக நகைத்தனர்.

சொக்கநாதர் புரிந்துகொண்டார். தன்னைக் கேலி செய்வதற்காகவே இங்கே கூடியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்த அவர், "துரோகி! உன்னுடைய செயல்கள்தாம் இவை. என்னிடம் உண்மையை மறைத்தாய்...!" என்று கூறியவாறு இராயசத்தின் மீது பாய்ந்து அவரைக் கீழே தள்ளி அவர் மீது ஏறி அமர்ந்து அவர் முகத்தில் பலமாகக் குத்தினார். வெறிபிடித்தவர் போல் அவரது தோள்களைப் பற்றி உலுக்கினார். திடீரென பலங்கொண்ட மட்டும் அவர் தோளைக் கடித்தார்.

ஒரு கணத்தில் நிகழ்ந்துவிட்ட இந்தச் சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த அழகாத்திரி, அருகிலிருந்தவர்களை நோக்கி, "பார்த்தீர்களா? நான் அப்போதே சொன்னேன். அரசருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று. அதைக்



கண்கூடாகப் பார்க்கிறீர்களல்லவா? அரசரைப் பிடித்துக் கட்டுங்கள்" என்று உத்தரவிட்டார். தளபதி, பிரதானி, அரசர், மங்கம்மாள் உத்தரவுகளுக்கு மட்டுமே பணியும் நாயக்க நாட்டு வீரர்கள், மந்திர சக்தியால் கட்டுண்டவர்கள் போல், அழகாத்திரியின் கட்டளையை நிறைவேற்றினர்.

நாயக்க மாமன்னர் சொக்கநாதரின் மீது பாய்ந்து அவரைப் பிடித்திழுத்துக் கயிறுகளால் கட்டினர்.

"கொண்டு போங்கள்" என்று கர்ஜித்தான் அழகாத்திரி.

"தனிச் சிறையில் அடையுங்கள். என்ன இருந்தாலும் அரசரல்லவா? ஆனால் பைத்தியம் பிடித்துவிட்ட நிலையில் அவர் எப்போது என்ன செய்வார் என்று தெரியாது. எந்தக் காரணம் கொண்டும் கை, கால் கட்டுகளை அவிழ்க் காதீர்கள், இன்னும் பட்டினி போடுங்கள்" என்று கட்டளையிட்டார்.

தன்னைக் கயிறுகளால் பிணைத்துக் கட்டும் காவலர் களை நோக்கி, "எனக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை. பொய் சொல்கிறான் அழகாத்திரி. அவனை நம்பாதீர்கள். எல்லாரும் சேர்ந்து சதி செய்கிறார்கள்" என்றார். சிறு குழந்தை போல் தேம்பி அழுதார். கால், கைகளை அசைக்க முடியாமல் கட்டப்பட்டதைக் கண்டு, "ஐயோ! என்னை ஏன் கட்டுகிறீர்கள்? நான் இந்த நாட்டு அரசர். நான் சொல்கிறேன் கேளுங்கள். உண்மைத் துரோகிகள் இராயசமும், பிரதானியும் தான். இப்போது அவர்களுடன் என் தம்பி அழகாத்திரியும் சேர்ந்துவிட்டான். காவல் வீரர்களே! அழகாத்திரியைச் சிறையிலடையுங்கள். எங்கிருந் தாலும் உங்கள் அரசி மங்கம்மாளை அழைத்து வாருங்கள்" என்று கூறிக் கதறினார்.

"உம், மங்கம்மாளும் வருவாள். சிறையில் உமக்குத் துணையாக இருக்க விரைவில் வருவாள், அமைதியாக இருங்கள்" என்று அழகாத்திரி அவர் முகத்தருகே சென்று கூறி, காவல் வீரர்களை நோக்கி, "இந்தப் பைத்தியத்தை உடனே அழைத்துச் செல்லுங்கள்" என்று கட்டளையிட்டார்.

## 23

**மு**த்து வீரப்பன் குடிலுக்குள் நுழைவதைப் பார்த்தவுடன் முதலில் திகைத்தவள் முத்தம்மாள்.

அடுத்து வியப்புற்றவள் தேனாட்சி.

அதற்கடுத்து, ஒன்றும் புரியாமல் வைத்த கண் மாறாமல் பார்த்து நின்றாள் நாயக்க நாட்டுப் பேரரசி மங்கம்மாள்.

'அம்மா' என்றழைத்தான் முத்துவீரப்பன். "இப்போதுள்ள நிலையில் நீங்கள் உடனே தென்காசிக்குச் செல்லவேண்டும். சிவிகை ஆயத்தமாக உள்ளது. துணைக்கு வீரர்கள் வருகிறார்கள். தேர்ந்தெடுத்த வீரர்கள்" என்றான் முத்துவீரப்பன்.

"தென்காசிக்கா?" மங்கம்மாள் கேட்டாள். எரிச்சல் இருந்தது அதில்.

"முத்துவீரப்பா! நீ நினைப்பது போல் தென்காசிப் பாண்டியருக்கு நம் மீது மரியாதை இல்லை, மதிப்பில்லை; அன்புமில்லை. மகுடத்தை அடைய அவர் ஆசைப்படுகிறார். இன்னும் பகல் கனவு கண்டவாறு இருக்கிறார். ஒரு நாளும் உங்கள் கனவு நனவாகாது என்று நான் சூளுரைத்திருக்கிறேன், விரோதியிடம் சரணடையலாம்; வயிற்றெரிச்சல்காரரிடம் சரணடையச் சொல்கிறாயே..." என்று அவள் கூறியபோது அவளுடைய வழக்கமான குரலுடன் வேதனையும் கலந்திருந்தது.



முத்துவீரப்பன், தேனாட்சியையும் முத்தம்மாளையும், நோக்கியவாறு பேசினான்:

"தாயே! அப்படிக் கூறாதீர்கள். பாண்டிய அரசர் நற்குணம் நிறைந்தவர். மதுரை மகுடத்தின்மீது அவர் ஆசைப்படுகிறார் என்றால் அதன் பெயர் ஆசை அன்று; உரிமை..." என்ற போது மங்கம்மாள் வெகுண்டு, "என்ன சொன்னாய்! அடுத்து, இந்த நாட்டின் அரியணையில் அமரவிருக்கும் நீயா இப்படிச் சொல்கிறாய்?" என்று கடுமையாகப் பேசினாள்.

கோபத்தாலும், எரிச்சலாலும், பசியாலும், களைப்பாலும் அவள் உடல் நடுங்கியது. அருகே இருந்த தூணைப் பிடித்துக் கொண்டாள்.

முத்துவீரப்பன் மெல்ல நகைத்தான். அருகே பாண்டிய இளவரசியும் அவள் தோழியும் இருக்கிறார்கள் என்பதை உணராமலே, "அம்மா! இப்பொழுதாவது என் நினைவு வந்ததே உங்களுக்கு; இந்த நாட்டிற்கு வாரிசு நான் ஒருவன் இருக்கிறேன் என்று..." என்றான்.

"ஏன், உனக்கில்லாத உரிமை வேறு யாருக்கு உண்டு? நாயக்க சாம்ராஜ்யத்தில் உள்ள எந்தப் பாளையக்காரரும் மதுரை மகுடத்திற்கு உரிமை கொண்டாடாத போது தென்காசிப் பாண்டியர் மட்டும் தனக்கு உரிமை என்று நினைக்கிறார், நீ ஒருவன் இருப்பதை உணராமலே. அதை நினைவுபடுத்தவே அப்படிச் சொன்னேன்!" என்றாள் மங்கம்மாள்.

"யாருக்கு நினைவுபடுத்த...?"

"ஆண் வாரிசற்ற நாட்டு அரசருக்குப் பெண்ணாய்ப் பிறந்திருக்கும் இதோ முத்தம்மாளுக்காகச் சொன்னேன்."

முத்தம்மாள் முகம் மாறியதைக் கண்ட முத்துவீரப்பன் பேச்சை மாற்ற எண்ணி, "தாயே! பாண்டியர் ஒருவர்தான் இப்போது நமக்கு உதவக்கூடிய நிலையிலிருக்கிறார். அவரும் தன் மகளை வேற்று நாட்டு இளவரசருக்கு மணம் செய்து கொடுத்துவிட்டால், அவர்கள் உதவியுடன் மதுரையைத் தாக்குவது எளிதாகிவிடாதா? அதனால் நாம் தென்காசிப் பாண்டியரின் அபிமானத்தை அதிகம் பெற வேண்டும்" என்றான்.

மங்கம்மாள் சீறினாள். "என்ன சொல்கிறாய் முத்து வீரப்பா? மதுரையை விட்டு ஊர் ஊராகத் திரிந்ததால் உன் மனம் மாறிவிட்டதா? சொந்த நாட்டுப்பற்று குறைந்து விட்டதா? தென்காசிப் பாண்டியர் மதுரையில் கயல் கொடி மீண்டும் பறக்கும் என்று கனவு காண்கிறார்; தன் கனவை நிறைவேற்றத் திட்டங்களைத் தீட்டுகிறார். அவருடைய அபிமானத்தை நாம் பெற வேண்டுமா?"

மங்கம்மாளின் சீற்றத்தைக் கண்டு முத்துவீரப்பன் வருத்தப்படவில்லை; பயப்படவுமில்லை. மிக அமைதியாக முத்தம்மாளை நோக்கியவாறு "தாயே! பாண்டிய மன்னர் அப்படி நினைப்பதில் தவறில்லை. முடிந்தால் அவர் மதுரையைக் கைப்பற்றட்டும். நம் சக்தியை உணராமல் அவர் அத்தகைய செயலில் இறங்குவாரா? ஆனால் இன்றுள்ள நிலையில் அரசரை அழகாத்திரி சிறைப்பிடித்துச் சென்றுள்ள நிலையில் பாளையக்காரர்கள் யாரை ஆதரிக்கப் போகிறார்கள் என்று தெரியாத நிலையில், தென்காசிப் பாண்டியரின் ஆதரவு மட்டும் நமக்கு இருக்கிறது என்று



உறுதியாகத் தெரிந்திருக்கிறது. அதனால்தான் நாமும் அவருடன் அனுசரித்துப் போகவேண்டுமென்று யோசனை சொல்கிறேன்" என்றான்.

மங்கம்மாள் அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். "முத்துவீரப்பா! நீ சொல்வதைப் பார்த்தால் தென்காசி மாளிகையில் பல நாள்கள் தங்கியிருந்து பாண்டியரிடம் பேசிப் பழகியவன் போல் தோன்றுகிறது" என்றாள்.

"ஆமாம்; தென்காசி மாளிகையில் இல்லை; சிறைக் கூடத்தில்! பல நாள்கள் அல்ல; சில நாழிகைகள். அங்கே பாண்டிய இளவரசியைச் சந்தித்தேன். இளவரசியின் அந்தரங்கத் தோழி சிறைக்கூடத்திற்கே வந்தாள்" என்று கூறி முத்தம்மாளையும் தேனாட்சியையும் நோக்கினான் குறும்புப் புன்னகையுடன். அவர்கள் இருவருக்கும் புரிந்து விட்டது. நாணம் மிகுந்த முத்தம்மாள், தன் தோழியை அழைத்துக் கொண்டு வேறு இடத்திற்கு ஓடோடி மறைந்தாள்.

"தேனாட்சி! எதிர்பாராத திருப்பங்கள் சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஒருவகையில் மகிழ்ச்சி தருவன என்றாலும் ஏனோ எனக்குப் பயமாகவும் இருக்கிறது" என்று அவள் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"பயம் ஏன் தேவி?" என்று கேட்டாள் தேனாட்சி. அவளுக்குப் புரியவில்லை. 'மலைக்கோயிலில் ஒற்றர்கள் என்று சிறைப்படுத்தப்பட்டவர்களுள் ஒருவர் இங்கே அரசி மங்கம்மாவைத் தாயே என்றழைக்கிறார். பாண்டிய அரசருடன் நெருங்கிப் பழகியவர் போல் பேசுகிறார்; ஒன்றும் புரியவில்லையே" என்று கன்னத்தில் கையை வைத்துக் கொண்டவள். "தேவி! நீங்கள் அதிர்ஷ்டசாலி; அது மட்டுமா? நீங்கள் எடுத்த முடிவு மிகவும் சரி" என்றாள்.

தேனாட்சியை விழுங்கிவிடுபவள் போல் பார்த்த முத்தம்மாள், "நான் என்ன முடிவெடுத்தேன்?" என்று கேட்டாள். முகத்தில் பொய்யான கோபம் பொங்கி நின்றது.

"அவர் சேர நாட்டு ஒற்றராக இருக்க மாட்டார் என்று நினைத்தீர்கள்."

"பிறகு..."

"அவரை மிக மரியாதையுடன் நடத்துமாறு சொன்னீர்கள்."

"அப்புறம்?"

"சிறைக்கூடத்திற்குச் சென்று வருமாறு என்னைப் பணித்தீர்கள்..."

"அப்புறம்..."

"நான் சொல்லவும் வேண்டுமா? நீங்களும் நானும் சிறைக்கூடத்திற்குச் சென்றோம். இவையெல்லாம் நீங்கள் எடுத்த தீர்க்கதரிசனமான முடிவுகள்."

தேனாட்சி இப்படிக் கூறியபோது முத்தம்மாள் விழிகளை மூடிய வண்ணம் மெய்மறந்து ரசித்துக் கொண்டிருந்தாள். தேனாட்சி பேச்சை நிறுத்தியவுடனே முத்தம்மாள் பெருமூச்சு விட்டாள். அவளுடைய இதய எதிரொலியாக அவளுடைய செங்கலசத் தனங்கள் பூரித்துச் சிலிர்த்தன.

"இப்போதுதான் பயமாயிருக்கிறது தேனாட்சி! முதன் முதலில் அவரைப் பார்த்தபோதே என் மனத்தை மிகவும் கட்டுப்படுத்திக் கொண்டேன். அவர் ஒற்றராக இருக்கக் கூடாதே என்று மலைக்கோயில் ஆண்டவரை வேண்டிக் கொண்டேன். அவரைப் பிணைத்திருந்த கயிறுகள் அவர்



மேனியைத் துன்புறுத்துமே என்று கவலைப்பட்டேன். ஒற்றர்களுக்கு மரண தண்டனை கிடைக்குமே என்று அச்சங்கொண்டேன். அதனால்தான் உன்னை அனுப்பிப் பார்த்து விசாரித்து வரச் செய்தேன். அவரைப்பற்றி அறிந்து வரச் செய்தேன். ஆனால் நீதான் சரியான விவரம் சொல்லவில்லை. அப்போதே தெரிந்திருந்தால்..." பாண்டிய இளவரசி முத்தம்மாள் சற்று நிறுத்தினாள்.

"தெரிந்திருந்தால்...?" – தேனாட்சி தூண்டினாள், இளவரசியின் உள்ளத்திலுள்ளதை அறிய.

"தெரிந்திருந்தால் மனத்தை மாற்றிக் கொண்டிருப்பேன்" என்று சொன்னவுடன் அவள் தன் செவ்விதழை மெல்லக் கடித்துக் கொண்டாள். சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டோமோ என்று முகத்தைக் கரங்களால் மூடிக் கொண்டாள். சிறிது நேரம் கழித்துத் தன் விரல் இடுக்குகளின் வழியே மெல்ல நோக்கியபோது தேனாட்சியைக் காணவில்லை. அங்கே நாயக்க இளவரசன் முத்துவீரப்பன் நின்று கொண்டிருந்தான்.

"தெரிந்திருந்தால் மனத்தை மாற்றிக் கொண்டிருப்பீர்கள் அப்படித்தானே? மனத்தில் என்ன இருந்தது என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்ற குரல் கேட்டபோது முத்தம்மாளின் மேனி மெல்ல நடுங்கியது. உடல் முழுவதும் வியர்வைத் துளிகள் துளிர்த்தன.

"ஐயோ, தேனாட்சி! எங்கே போய்விட்டாய்?" என்று கூறி அங்கிருந்து பரபரப்புடன் செல்ல முயன்றவளின் வளைக்கரங்களைப் பிடித்து நிறுத்தி, "நான் தெரிந்து கொள்ளக்கூடாதா?" என்றான் முத்துவீரப்பன்.

அவன் செய்கையைக் கண்டு சற்று நடுங்கினாலும் பிறகு துணிவுடன் அவன் பிடியை உதறி, "ஒரு பெண்ணின்

காத்தைத் தொட உங்களுக்கு யார் உரிமை அளித்தார்கள்...?'' என்று சீறினாள்.

''மலைக்கோயிலருகே உங்களைச் சந்தித்தபோதே உங்கள் விழிகள் என் இதயத்துடன் பேசி உங்களைத் தொடக்கூடிய உரிமையை அளித்துவிட்டன. உங்கள் தோழி என்னைத் தேடிவந்தபோது அதை உறுதிப்படுத்திக் கொண்டேன். பிறகு நீங்களும் சிறைச் சாலைக்கு வருவீர்கள் என்பதையும்...'' என்று கூறியவாறு அவளை மெல்ல நெருங்கினான்.

முத்தம்மாள் இரண்டடி பின் நகர்ந்தாள்.

''ஒற்றராக ஏன் நடித்து நாடகமாடினீர்கள்? சிறையிலின்று நீங்கள் தப்பிப் போகுமளவுக்குப் பாண்டியக் காவலர்கள் அன்று உறங்கிவிட்டார்கள். இல்லாவிடில் என் தந்தை உங்களுக்கு மரண தண்டனை அளித்திருப்பார்...'' என்று அவள் கூறியது கேட்டு முத்துவீரப்பன் நகைத்தான்.

''மரண தண்டனை தந்திருக்க மாட்டார்; ஆயுள் தண்டனை அளித்திருப்பார்!'' என்று கூறிக் கண்களைச் சிமிட்டியதை முத்தம்மாள் கவனிக்கவில்லை.

''ஓ! மரண தண்டனையைவிட ஆயுள் தண்டனை கொடியது'' என்று முத்தம்மாள் கூறும்போது முத்துவீரப்பன் நகைத்தான்.

''ஆமாம், ஆமாம் கொடியதுதான். ஆயுள் முழுமையும் ஒருவரையொருவர் வைத்த விழி இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஒருவர் பேசுவதை மற்றவர் ரசித்துக் கொண்டிருக்க வேண்டும். ஒருவர் பொழியும் அன்புக்கு மேல் மற்றவர் அன்பு மழையை அதிகம் பொழிய வேண்டும். சிரித்தால் சிரிக்க வேண்டும். அழுதால் அழ



வேண்டும். கோபம் இருவருக்கும் பொதுவாகக் கொள்ள வேண்டும். ஒருவர் நினைப்பது போல் மற்றவர் நினைக்க வேண்டும். ஆனால் மரணம் அப்படியல்லவே! இருவருக்கும் ஒன்றாய் நேராதே! மறுபிறவியில் சந்திக்க முடியும். அங்கு எப்படியோ? ஒன்றுபட்ட உள்ளம் தொடர்ந்து வருமோ, வராதோ? அங்கு போய்க் காத்திருக்கும் கொடுமை ஏற்படுமோ தெரியாது. அந்த அமர உலகில் ஏமாற்றம். ஏக்கம் எல்லாம் நிகழுமானால் அதைவிட, மரண தண்டனையைவிட, ஆயுள் தண்டனையே மேலானதல்லவா?''

முத்துவீரப்பன் பேசியதில் பாதி புரிந்தது பாதி புரியவில்லை. ஆனால் ஒவ்வொரு சொல்லும் அவள் மேனி எங்கும் சிலிர்ப்பொன்றை ஏற்படுத்தியது. அவள் பாதங்கள் பூமியில் அழுந்தியவாறு மேலெழும்புவதுபோல் தோன்றியது. இரண்டு இறக்கைகள் அவள் தோள்களில் முளைத்தது போன்ற உணர்வு ஏற்பட்டது.

அந்த இறக்கைகள் படபடவென அடித்துக் கொள்கின்றன. அந்தக் குடிலைவிட்டு அவள் மேலே எழுகிறாள். உடல் லேசாக ஆடுவது போல் உணர்கிறாள். அவளுடன் மற்றொருவரும் படபடவெனச் சிறகடித்துப் பறந்து வந்து சேர்ந்து கொள்ள முயல்கிறார்.

இருவரும் ஒன்றாக வான வீதியில் பவனி வருகிறார்கள். குற்றாலத்து அருவி மறைகிறது. திரிகூட மலை மறைகிறது. அடர்ந்த கானகக் கூட்டம் மறைகிறது. எங்கும் நீலவானம். மேகக்கூட்டங்கள், வெண்மையாகவும் சூல் கொண்டும் திரிகின்றன. அவற்றையும் கடந்து அவர்கள் செல்கின்றனர்.

அவர்கள் சிரிக்கிறார்கள். அது போன்ற சிரிப்பை அவள் இதுவரையில் கேட்டதில்லை. அது தேவகானமாக

ஒலிக்கிறது. அந்தச் சிரிப்பொலியினின்றும், புதுவித இனிமை வீசுகிறது. வானவில்லின் ஏழு நிறங்களும் ஒன்று சேர்ந்து அந்த ஒலிக்கற்றையைத் தழுவுகின்றன. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற திசைகள் தெரியவில்லை. காற்றும் நின்றுவிட்டது. அவர்கள் மிதக்கிறார்கள், உதடுகள் அசைகின்றன, பேசுகிறார்கள். ஆனால் கேட்க முடியவில்லை. தொட முயல்கிறார்கள்; முடியவில்லை. கரங்களும் மேனியும் தக்கை போல் இலேசாக ஆகிவிட்டன.

"நாம் எங்கே போகிறோம்?'' என்று அவள் கேட்கிறாள். அவன் செவிகளில் அந்த வார்த்தைகள் விழவில்லை.

"நீ எங்கே என்னை அழைத்துச் செல்கிறாய்?' என்று அவன் கேட்கிறான். அது அவள் காதுகளில் விழவில்லை. நல்ல வேளையாக ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள். அவள் முகம் அவனுக்குத் தெரிகிறது - அவன் முகம் அவளுக்குத் தெரிகிறது.

"நாம் பூ மண்டலத்திலிருந்து எவ்வளவு தொலைவு வந்திருப்போம்?'' என்று அவள் கேட்கிறாள்.

"நாம் இன்னும் எவ்வளவு தொலைவு செல்ல வேண்டியிருக்கும். நமது பயணம் எங்கே நிற்கும்?'' என்று அவன் கேட்கிறான்.

இருவர் உதடுகளும் அசைகின்றன. பார்க்க முடிகிறது. கேட்க முடியவில்லை. அவனை நெருங்க அவள் ஆசைப்படுகிறாள். அவனை ஸ்பரிசிக்க அவன் அவாவுறுகிறான். முடியவில்லை, இயலவில்லை. எண்ணியது நடக்கவில்லை. ஆனால் மனத்துக்கு இதமாக இருக்கிறது. மனத்திலே அமைதி இருக்கிறது. பரிபூரண அமைதி நிலவுகிறது. ஆனால் அந்த மகிழ்ச்சி அவளுக்குப் பிடிக்கவில்லை. அவனுக்கும் பிடிக்கவில்லை.



"வேண்டாம் இந்தச் சுவர்க்க யாத்திரை'' என்கிறாள் அவள். அவனும் அப்படியே சொல்கிறான். அவர்களுக்கு வேதனை ஏற்படுகிறது. வேண்டாம் வேண்டாம் என்று கதறுகிறார்கள்.

திடீரென பயணம் தடைப்படுகிறது. திக்குத் திசை தெரிகிறது. கூக்குரலிடுவது காதில் விழுகிறது. உலக சப்தங்கள் யாவும் காதில் வீழ்கின்றன. அமைதி குலைகிறது. பலவித ஒலிகள் கேட்கின்றன.

யாரோ தடதடவென ஓடிவரும் ஓசை.

முத்தம்மா திடுக்கிடுகிறாள். அவள் எதிரே சிற்பம்போல் விழி கொட்டாமல் நின்றிருந்த முத்துவீரப்பன் திடுக்கிடுகிறான். இதுவரை அவளையே உற்றுநோக்கிய வண்ணம் இருந்த பார்வை சிமிக்கிறது. இதுவரை அவனை இமைக்காது நோக்கியவாறு இருந்த அவளது விழிகள் தாழ்கின்றன. இமைப் பறவையின் சிறகுகள் துடிக்கின்றன.

வெளியே பெரும் கூக்குரல், யாரோ ஓடிவரும் ஓசை. "இங்கேதான் இருப்பாள்; விடாதே பிடி'' என்ற சப்தம்.

மங்கம்மாளைத் தேடிவந்த அழகாத்திரியின் ஆட்கள் வாளுடனும், வேலுடனும் அந்தக் குடிலைச் சுற்றிச் சூழ்ந்து கொள்கிறார்கள்.

## 24

மதுரைச் சிறைக்கூடத்திற்குச் சொக்கநாதர் அழைத்து வரப்பட்டார்.

அவர் மதுரை மன்னர் சொக்கநாதர் என்று ஒருவரும் அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அவர் முக்காடிடப்பட்டு, உடல் மறைக்கப் போர்த்தப்பட்டு அவர் பேச முடியாமல் வாயைச் சுற்றித் துணி கட்டப்பட்டு அழைத்து வரப்பட்ட அவர் நிலையைப் பார்ப்பவர்கள் யாரோ பயங்கரக் குற்றவாளி ஒருவரை அழைத்து வருவதாக நினைக்குமாறு செய்திருந்தனர்.

அழகாத்திரி, அரசரைத் தொடர்ந்து வராமல் சற்றுத் தொலைவிலேயே வந்து கொண்டிருந்தார். எக்காரணம் கொண்டும் சொக்கநாதரைச் சிறையைவிட்டு வெளியேற்றி விடவேண்டாம் என்று தனது அந்தரங்க உதவியாளரிடம் கண்டிப்பாகக் கூறியிருந்தார். சிறையில் அடைக்கக் கொண்டு வருபவர்களின் பெயரைக் குறித்துக் கொள்வதற்காக சிறைக்கோட்டத் தலைவர் கேட்டபோதெல்லாம் அழகாத்திரியைக் கேளுங்கள் என்று சொல்லிவிட்டனர். ஆனால், சிறைக்கோட்டத் தலைவர் அவர்கள் பேச்சை ஒப்புக் கொள்ளவில்லை.

"சிறைக்காலையில் ஒருவரை அடைக்கிறோம் என்றால் அரசருடைய உத்தரவு இருக்கவேண்டும் அல்லது பிரதானி, இராயசம் யாராவது ஒருவருடைய கட்டளை இருக்க வேண்டும். குற்றவாளி பற்றிய சிறு குறிப்பு இருக்க வேண்டும். அப்படியில்லாவிடில் நாங்கள் ஏற்றுக் கொள்ள



மாட்டோம்" என்று கண்டிப்பாகக் கூறினார். சிறிது நேரத்திற்கெல்லாம் அழகாத்திரி அங்கே வந்தவுடன், மன்னரின் சகோதரர் என்ற முறையில் மரியாதை செலுத்திய சிறைக்கோட்டத் தலைவர் மிகப் பணிவுடன், "அந்தக் குற்றவாளி யார்? எதற்காக இங்கே கொண்டு வந்து அடைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அழகாத்திரி தன் கையிலிருந்த முத்திரை மோதிரத்தைக் காட்டி, "இராயசம் பின்னால் வந்து கொண்டிருக்கிறார். இவர் மிகப் பயங்கரக் குற்றவாளி. அதனால்தான் இவரை மிகக் கவனமாக இங்கே அழைத்து வந்திருக்கிறோம். ஒரு கணமும் தாமதிக்காமல் இவரைச் சிறையிலிட்டுப் பூட்டுங்கள்" என்று சொன்னார்.

அரசரின் அடையாள மோதிரத்தைப் பார்த்தவுடன் சிறைக்கோட்டத் தலைவர் ஒன்றும் சொல்லவில்லை. அழகாத்திரிக்குத் தலைவணங்கினார்.

சொக்கநாதர் அறைக்குள்ளே தள்ளப்பட்டு இரும்புக் கதவுகள் தாளிடப்பட்டன. கீழே விழுந்து புரண்ட சொக்கநாதர், கைக்கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு தன் வாயைச் சுற்றி அழுத்தமாகச் சுற்றப்பட்டிருந்த துணியையும் அவிழ்த்துக் கொண்டு 'ஓ'வெனக் கூவினார். கதவை படபடவென்று தட்டினார். சிறையிலடைக்கப்பட்டவரின் ஓலத்தைக் கேட்ட சிறைக் காவலர்கள் விரைந்து வந்து கதவைத் திறந்து அவரை மிகவும் கடிந்து, "இனி மீண்டும் ஆர்ப்பாட்டம் செய்தால் நீ கத்தமுடியாமல், கதவைத் தட்ட முடியாமல் செய்து விடுவோம்" என்று பயமுறுத்திச் சென்றனர்.

காவலருள் ஒருவன் மட்டும் சற்றுத் தயங்கி, சொக்கநாதரை உற்றுப்பார்த்து, அருகே இருந்த மற்றொரு

காவலரிடமே மெல்ல ஏதோ கூறினான். அவன் கூறியதைக் கேட்ட முதல் காவலன் பெரிதாக நகைத்தான்.

'ராத்திரி ஏதாவது கனவு கண்டாயா, தம்பி? அரசரை யாவது இங்கு அழைத்துச் கொண்டு வந்திருப்பதாவது? அரசர் மாதிரி யாரையாவது பார்த்துவீட்டு மதுரை அரசர் என்று சொன்னால் உன்னைப் பைத்தியம் என்று சொல்லி விடுவார்கள்'' என்று அவன் சொல்லி அங்கிருந்து போய் விட்டான். ஆனால் சந்தேகப்பட்ட அந்த இளைய காவல்காரன் மீண்டும் ஒருமுறை சிறைக்கூடக் கதவருகே சென்று மெல்ல எட்டிப் பார்த்தான்.

சொக்கநாதர் மிகப் பரிதாபத்துடன் காவலாளியை நோக்கி, "கதவைத்திற. நான் யாரென்று தெரிய வில்லையா?'' என்று பல முறை கூவினார். அவன் சற்று நின்றான். தலைமுடி அலங்கோலமாக வெட்டப்பட்ட நிலை யிலும் கிழிந்த ஆடையுடனும் இருக்கும் அந்த மனிதரை மிகவும் கவனத்துடன் உற்றுப்பார்த்து, அவர் அரசர்தான் என்று அவன் உறுதிப்படுத்திக் கொண்டான்.

மிகப்பணிவான குரலில், "ஐயா நீங்கள் யார்?'' என்று அவன் கேட்டான். கனிவான குரல் ஒன்று வெளியிலிருந்து கேட்டவுடன், சொக்கநாதர் திடீரென ஒரு முடிவுக்கு வந்தார். ஆர்ப்பாட்டம் செய்வதால் பலனில்லை என்று "தம்பி! கதவைத் திற; நான் உண்மையைச் சொல்கிறேன்'' என்றார்.

"கதவையா? கதவைத் திறக்க முடியாது; என் தலை போய்விடும். சொல்ல வேண்டியதை அங்கிருந்தே சொல்லுங்கள்'' என்றான் காவல்காரன்.



"நான் இங்கிருந்து சொன்னால் உனக்குப் புரியாது அப்பொழுதுதான் என்னை நீ நன்றாகத் தெரிந்து புரிந்து கொள்ள முடியும்'' என்று கொஞ்சம் குரலில் கூறினார்.

"உங்களை நான் நன்றாக அறிந்து கொண்டுதான் இப்பொழுது பேசுகிறேன்'' என்ற காவல் வீரன், "அரசே! உங்களுக்கு இந்த நிலை எப்படி ஏற்பட்டது, சொல்லுங்கள்? என்னால் இயன்ற வரையில் உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறேன். எனக்குப் பேசுவதற்கு நா எழவில்லை. நீங்கள் அரசர்தானா என்று ஊர்ஜிதம் செய்து கொள் வதற்காகவே சற்றுத் தயங்கினேன். உங்களை ஏன் ஒருவரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை? எல்லா ருடைய அறிவும் மழுங்கி விட்டதா? அவ்வளவு சீக்கிரம் அரசரை மறந்து விட்டார்களா? எந்தத் துரோகி உங்களை இவ்வாறு செய்து விட்டான்?'' என்று அந்த வீரன் பதை பதைத்தான். அவனுடைய கவலையையும், விசுவாசத்தையும் அவன் மிகவும் படபடப்புடன் பேசுவதையும் கண்ட சொக்க நாதர், இவன் மூலம் நாம் எப்படியும் உண்மையை வெளிப்படுத்தி விடலாம் என்ற நம்பிக்கையில், "தம்பி! இந்த அநியாயத்தை நான் என்னவென்று சொல்வேன்? என்னைப் பைத்தியம் என்று முடிவு செய்து இங்கே கொண்டு வந்து சேர்ந்து விட்டார்களே!'' என்றார்.

"பைத்தியம் என்றால் பயங்கரக் குற்றவாளிகளை அடைக்கும் சிறையிலா அடைக்க வேண்டும்? அரசருக்குப் பைத்தியம் என்றால் அரண்மனையிலே தனி அறையில் வைத்து, வைத்தியர்களை அழைத்து வந்து வைத்தியம் செய்ய வேண்டியதுதானே? இங்கே ஏன் அடைத்திருக் கிறார்கள்?'' என்று விவேகம் தெரிந்த அந்த வீரன் கேட்டான்.

"நீயே கேள் தம்பி, ஒரு சாதாரண வீரன்; உன்னுடைய அறிவுக்கு எட்டியதுகூட மற்றவர்களுக்கு எட்டவில்லையே? சிறைக்கோட்டத்துத் தலைவர் சற்றுத் தயங்கினார். அவர் என்னை சிறைக்குள் அனுப்பமாட்டேன் என்று அழுத்தமாகச் சொன்னார். ஆனால் என் கையிலிருந்த முத்திரை மோதிரத்தை அபகரித்து வைத்துக் கொண்டிருக்கும் ஆகாத்திரி அதன் மூலம் தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டு விட்டான்" அரசர் இதைச் சொல்லும் பொழுது அவர் குரல் தழுதழுத்தது.

காவல் வீரன் கேட்டான்: "உங்கள் முத்திரை மோதிரத்தை அழகாத்திரி அபகரித்துக் கொண்டுவிட்டார் என்று சொன்னீர்களே? நீங்கள் எதிர்க்கவில்லையா?"

அரசர் சொன்னார்: "என் கையிலிருந்து அவன் கழற்றவில்லை. குற்றாலத்துக் குடிலுக்கு எங்களைச் சந்திக்க வந்தபொழுது, ஏதோ ஓர் ஓலையில் நான் முத்திரையிட வேண்டும் என்று மங்கம்மாள் விரும்பினாள். அதை நிறைவேற்றிய பிறகு மறந்து போய் நான் மோதிரத்தை அருகே வைத்திருந்தேன். அதை அவன் அபகரித்துக் கொண்டு விட்டான்" என்றார்.

வீரன் சற்று யோசித்தான், பிறகு கேட்டான்: "அழகாத்திரி உங்களுடைய சகோதரர்தானே? ஏறத்தாழ ஓராண்டு காலமாக அவரை நாங்கள் மதுரை நகரத்தில் காணவே இல்லை. அவர் திடீரென்று எப்படி அங்கு வந்தார்?"

அரசர் சொன்னார்: "ஓராண்டு காலமாகத் தலைமறைவாக இருந்தான். அது இந்த மாபெரும் சதியை நிறைவேற்றுவதற்குத்தான். தன்னுடைய காரியத்தை அவன் முடித்துக் கொண்டான். இப்பொழுது என்னைப் பைத்தியம் என்று சொல்லி இந்தச் சிறைக்கூடத்தில் அடைத்திருக்



கிறான். தம்பி! தாமதிக்காதே. உடனே ஓடு. எங்கிருந்தாலும் ராணி மங்கம்மாளை அழைத்து வா. அரசியை மட்டுமன்று. இன்னும் இந்த ஊரில் உள்ள மிக முக்கியமானவர்களை, புரோகிதரை, கோயில் பட்டரை, தளபதியையும் அழைத்து வா! ருஸ்தம்கான் எங்கிருந்தாலும் அவனைத் தேடி அழைத்து வா! நீ இந்தக் காரியத்தைச் செய்தால் உனக்கு நான் ஏராளமான வெகுமதியைத் தருவேன்" என்றார். காவலன் சற்று நின்றான்; சிந்தித்தான். "இராயசத்தையும் பிரதானிகளையும் அழைத்துவரட்டுமா?" என்று கேட்டான்.

"அவர்கள் துரோகிகளாக மாறிவிட்டார்கள். நீ சென்று அழைத்து வராமலே அவர்கள் இங்கே வந்து விடுவார்கள்" என்று வேதனையுடன் கூறினார்.

காவல் வீரன் அரசரை நோக்கி, "கவலைப்படாமல் இருங்கள். என்னால் இயன்றதைச் செய்கிறேன்" என்று கூறி, மிக வேகமாக வெளியே வந்தான்.

அவன் சிறைக்கூடத்தின் வாசலை நெருங்கியபோது அழுத்தமான கரம் ஒன்று அவன் தோள்களைப் பிடித்து நிறுத்தியது.

"எங்கே போகிறாய்?" என்ற அந்தக் குரல் மிகவும் கடுமையாகக் கேட்டது. அவன் நடுநடுங்கி விட்டான். அவன் வாய் குழறியது.

"நான் எங்கும் செல்லவில்லை" என்று தடுமாறினான்.

"போ உள்ளே! நீ எங்கே செல்கிறாய் என்று எனக்குத் தெரியும். அந்தப் பைத்தியக்கார அரசர் உன்னிடம் பேசிக் கொண்டிருந்தார் அல்லவா?" என்று கடுமையான குரல் கேட்டது. அந்தக் குரலுக்கு உரியவர் அழகாத்திரியேதான்!

காவல் வீரன் செய்வதறியாது நின்றான். அழகாத்திரி மீண்டும் கேட்டார். "புரோகிதரையும் தளபதியையும் கோயில் பட்டரையும்தானே அழைத்துவரச் சொன்னார்? இதோ இன்னும் சிறிது நேரத்தில் இந்த ஊரின் முக்கியப் பிரமுகர்கள் எல்லாரும் இங்கு வரப் போகிறார்கள். அவர்கள் சொல்லுவார்கள் அரசருக்கு என்ன நேர்ந்திருக்கிறது என்று. அரசருடைய மனநிலை என்னவென்று நீயும் பார்த்துக் கொண்டுதான் இருக்கப்போகிறாய். ஆனால் உன்னை நான் ஒன்று எச்சரிக்கிறேன். அரசர் உன்னிடம் பேசியதை யாரிடமாவது மூச்சுவிட்டாயானால் உன்னுடைய உயிர் உன்னிடம் இருக்காது" என்றார். அவன் வயதில் இளையவன். இதுவரையில் அவனுக்கு இது போன்ற சதித்திட்டங்கள் தெரியாது. அவன் அப்படியே அயர்ந்து போய்க் கல்லென நின்றுவிட்டான்.

சிறிது நேரத்தில் அரண்மனை மருத்துவர் அங்கே வந்தார். அழகாத்திரி அவரை வரவேற்றார். "ஐயோ மருத்துவரே! வாருங்கள், வாருங்கள், நமது அரசருடைய உடலை நீங்கள் சோதிக்க வேண்டாமா?" என்று கேட்டார்.

அவர் ஏதும் பேசவில்லை. பிறகு மெல்லக் கேட்டார். "அரசரா, அவர் இங்கு எங்கேயிருக்கிறார்? சிறைச் சாலைக்கு ஏன் என்னை அழைத்து வந்தீர்கள்?"

அழகாத்திரி அவரை விழுங்கி விடுவதுபோல் பார்த்து, "அரண்மனை வைத்தியரே! உம்முடைய பதவிக் காலத்தை இன்றுடன் முடித்துவிடலாம் என்று நான் நினைக்கிறேன். இதுவரை அரசருக்கு என்ன நோய் என்று கண்டு, என்ன மருந்தைக் கொடுத்து வந்தீர்கள்? நல்ல மருந்தைக் கொடுத்திருந்தீர்களேயானால் குற்றாலத்துக்குச் சென்று பாண்டியனுடைய உதவியுடன் அவர் அளிக்கும் சிகிச்சையை



ஏற்றுக்கொண்டு நமது மன்னர் இவ்வளவு காலம் அங்கு இருந்திருப்பாரா? உம்முடைய மருந்து ஒன்றும் சரிவர வேலை செய்யாததால்தான் அவர் குற்றாலம் சென்று சிகிச்சை எடுத்துக் கொள்ளும்படி ஆயிற்று. அந்த ஒரு காரணத்திற்காகவே, உங்களையும் இதோ அடுத்த அறையிலே நான் தள்ளிவிடப் போகிறேன். யாரங்கே?" என்று குரல் கொடுத்தார். இரண்டு வீரர்கள் வந்து நின்றனர்.

"இந்த வைத்தியரை அடுத்த அறையில் அடையுங்கள். பூட்டைப் பூட்டுங்கள். இன்று முழுவதும் அன்ன ஆகாரமும், குடிக்க நீரும் கொடுக்காதீர்கள்" என்றார்.

வைத்தியர் நடுநடுங்கிவிட்டார். திடீரென அழகாத்திரியின் பாதங்களில் விழுந்து, "ஐயோ, நான் தவறாக என்ன சொல்லிவிட்டேன்? எனக்கு இப்படிக் கடுந்தண்டனை கொடுக்கிறீர்களே?" என்றார்.

"ஒன்றும் பேசாதீர்கள்" என்று சொல்லி வீரர்களைப் பார்த்து "ஏன் நிற்கிறீர்கள்? நான் கட்டளையிட்டால் மறுகணமே அதை நிறைவேற்ற வேண்டும். நீங்கள் யாராவது தயங்கி நின்றாலோ அல்லது மறுத்துப் பேசினாலோ அல்லது வேறு விதமான சதித்திட்டங்களில் ஈடுபட்டாலோ உங்களுக்குச் சிறை தண்டனை இல்லை; உங்களுடைய உடலை இரண்டாக வெட்டி மதுரைக் கோட்டை வாயிலில் போட்டு விடுவோம் கழுகுக்கு விருந்தாக" என்று அதிர்ச்சி ஏற்படும் வகையில் பேசவும் காவலர்கள் பாய்ந்து சென்று மருத்துவரை இழுத்து அடுத்த அறையிலே அடைத்தனர்.

## 25

இயற்கை எழில் சூழ்ந்த குற்றாலம் ஒரு சிறு போர்க்களம் போல் காட்சி அளித்தது. தென்காசிப் பாண்டிய இளவரசி முத்தம்மாள் தங்கியிருந்த குடிலுக்கு வெளியே கலகப்படைகளும் உதவிக்கு வந்த தென்காசிப் பாண்டியர் படைகளும் மோதின. போர் நடத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் வராமல் இருதரப்பு வீரர்களும் ஒரு குறிக்கோளும் இல்லாமல், ஆனால் ஏதோ ஒரு செயலை நிறைவேற்றும் எண்ணத்தோடு அங்கு வந்திருந்தனர்.

போர் முரசம் கொட்டாமல் பேரிகை முழங்காமல் எச்சரிக்கைக் கொடி ஏற்றப்படாமல் திடீரென்று வாளோடு வாள் மோதி மின்னின. கேடயங்கள்மீது மோதும் வாளினின்று எழும் தீப்பொறி கதிரொளியுடன் போட்டியிட்டது. கரம் வெட்டுண்டவர்களும் கால் வெட்டுண்டவர்களும் முதுகில் தாக்கப்பட்டவர்களும் குடல் சரிந்தவர்களும் ரத்தவெள்ளத்திலே கீழே சாய்ந்து கிடந்தனர்.

இதுபோன்று ஒரு கணத்தில் நடைபெற்ற போரை முத்தம்மாள் இதற்கு முன் கண்டதில்லை. இளவரசியை அணைத்துக் கொண்டு தேனாட்சி ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்தாள். இளவரசிக்கு ஏதும் நேர்ந்துவிடக் கூடாது என்ற கவலை அவளுக்கு. அரசி மங்கம்மாவைச் சிறைப்படுத்துவதற்குக் கலகப்படைகள் வந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தேனாட்சி புரிந்துகொண்டாள். அரசியை எப்படியும் காப்பாற்ற வேண்டும் எனும் பரபரப்பு அவள் உள்ளத்தில் ஏற்பட்டது.



"தேவி! இங்கேயே இருங்கள். நான் எப்படியும் அரசியாரை மிகப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு, மங்கம்மாள் தங்கியிருந்த அறையை எட்டிப் பார்த்தாள். அங்கே அரசியைக் காணவில்லை.

முத்துவீரப்பன் மிக ஆக்ரோஷத்தோடு தான் ஒருவனே சுற்றிச் சுழன்று கையிலுள்ள வாளைச் சக்கரம் போல் சுழற்றி எதிரிகளை அஞ்சி ஓடுமாறு செய்துகொண்டிருந்தான். அவன் ஒருவனே பலரை எதிர்த்து நிற்பதைக் கண்ட முத்தம்மாள் அவன் வீரத்தைக் கண்டு வியப்படைந்தாள். முன்பே அவனது தோற்றத்தில் மயங்கியிருந்த அவள் இப்போது அவன் வீரத்தை எண்ணி மனத்தில் மகிழ்ந்தாள். அழகும் வீரமும் ஒன்றுசேரத் திகழும் நாயக்கர் குலத்து இளவரசனைத் தன் இதயத்திற்குள் ஏற்றிவைத்திருக்கும் தன் செயலை எண்ணித் தானே அகமகிழ்ந்தாள். ஆனால் பாண்டியர்களைக் கண்டாலே எள்ளளவும் பிடிக்காத மங்கம்மாள் இந்தச் செய்கைக்கு ஒப்புதல் அளிப்பாளா? அவள் செய்திருக்கும் சபதத்திற்கு நேர் விரோதமாக வன்றோ இந்தக் காதல் உணர்வு மலர்ந்திருக்கிறது? என்று அவள் மனத்திற்குள் ஒரு கணம் நினைத்தாள். நாயக்க இளவரசனின் உருவத்தை மறக்க முயன்று இமைகளை மூடினாலும் அங்கே வந்து நின்றான் முத்துவீரப்பன்.

சிறிது நேரத்தில் அங்கே ஆள் அரவமே இல்லை. கத்தியோடு கத்தி மோதியதற்கு அடையாளம் இல்லை. வீரரோடு வீரர் மோதிய அடையாளம் இல்லை. எல்லாரும் எங்கே சென்றுவிட்டார்கள்? இளவரசி மெல்ல எட்டிப் பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. குடிலுக்குள்ளே பார்த்தாள். தேனாட்சியையும் காணவில்லை. முத்தம்

மாளுக்குச் சற்று அச்சம் ஏற்பட்டது. அமைதியாக தன்னந்தனியாக தான் ஏன் விடப்பட்டோம் என்று அவளுக்குப் புரியவில்லை.

"தேனாட்சி" என்று குரல் கொடுத்தாள். மறுமொழி யில்லை. ஆனால் பின்புறமிருந்து யாரோ மெல்லக் கனைக்கும் ஓசை கேட்டவுடன் திடுக்கிட்டுத் திரும்பிய முத்தம்மாள், முத்துவீரப்பன் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தாள். வியர்வை சொட்டச் சொட்ட உடலெல்லாம் புழுதி படிந்திருக்க களைப்பு உடலை ஆக்ரமித்திருந்தாலும் களைப்பு தெரியாத வகையில் புன்முறுவல் பூத்தபடி, "பயந்துவிட்டாயா?" என்று கேட்டான்.

அவள் மேனி மெல்ல நடுங்கியது. அவனை மிக அருகே சந்தித்துவிட்டதால் நாணம் சூழ்ந்து கொண்டது. தலையைக் குனிந்து சற்று நேரமிருந்த முத்தம்மாள் நிமிர்ந்து பார்த்தபோது அவன் தன் உடைவாளை எடுத்து அருகேயிருந்த மஞ்சத்தில் வைத்துவிட்டு மேலங்கியைக் களைந்து உதறி அதன் மீது படிந்திருந்த தூசியைத் தட்டிக் கொண்டிருந்தான். முத்துவீரப்பனுடைய விரிந்த மார்பை அவள் பார்த்து ஒரு கணம் ரசித்தாள். சற்று முன்பு நடைபெற்ற கலகத்தைப் பற்றிக் கேட்க நினைத்தாள்.

"திடீரென்று நமது குடிலைச் சூழ்ந்துகொண்டவர்கள் யார்?" என்று அவள் பேச்சைத் தொடங்கினாள். பிறகு "ஆகா; சுழன்று சுழன்று தாக்கி எதிரிகளை வீழ்த்தும், உங்கள் திறமையைக் கண்டேன்" என்றாள்.

முத்துவீரப்பன் மெல்ல அவளை நோக்கினான். பிறகு "எல்லாவற்றிற்கும் காரணம் என் சிறிய தகப்பனார்தான். சற்று முன்பு அரசரைச் சிறைப்பிடித்து அழைத்துச் சென்றாரே அவர்தான். அழகாத்திரி என்று அவருக்குப் பெயர்" என்றான்.



"உங்கள் சிறிய தந்தையா?" என்று வியப்புடன் கேட்ட முத்தம்மாள், "சொந்தச் சகோதரரை ஏன் சிறைப்படுத்தினார்?" என்று தொடர்ந்து கேட்டாள்.

"அதுதான் அரசாங்க விஷயம். மதுரை மகுடத்தை அடையவேண்டும் என்று பலர் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதில் அழகாத்திரியும் ஒருவர்" என்று கூறி மெல்ல நிறுத்தினான் முத்துவீரப்பன்.

"அரசர் சொக்கநாதர் இருக்கும்பொழுது அவர் சகோதரர் அழகாத்திரி ஏன் ஆசைப்படுகிறார்?" என்று முத்தம்மாள் கேட்டாள்.

இப்பொழுது முத்துவீரப்பன் ஒரு குறும்புப் புன்னகையுடன், "சொக்கநாதர் அரசராக இருப்பதால், அவரை இறக்கிவிட்டுத் தாங்கள் அரியணையில் அமரவேண்டுமென்று பல பேருக்கு ஆவல் உண்டு. ஆசையுண்டு. அவர்களுள் அழகாத்திரியும் ஒருவர்" என்றான்.

மகுடத்தை அடைய பாண்டியர்கள் ஆசைகொண்டிருப்பதை மறைமுகமாக முத்துவீரப்பன் குறிப்பிடுகிறார் என்பதை முத்தம்மாள் புரிந்துகொண்டாள். சரியான மறுமொழி அதற்குக் கொடுக்க எண்ணி, "மதுரை மகுடத்தின் மீது பரம்பரையாக உரிமை கொண்டாடுபவர்கள் அப்படி ஆசைப்படலாம். உரிமை அற்றவர்கள் எல்லாரும் ஏன் அப்படி நினைக்கிறார்கள்? அவர்கள் எல்லாரும் தோற்றுத்தான் போவார்கள்" என்று முத்தம்மாள் கூறினாள்.

"யார் உரிமை உடையவர்கள் என்று தெரியாமல் உரிமைக்கு ஆசைப்படும் நிலையில் அழகாத்திரியும், மகுடத்தை அணிந்து அரியணையில் அமர நினைத்திருக்கிறார்."

முத்தம்மாள் பேச்சை மாற்ற விரும்பினாள். "என்னுடைய உயிர்த்தோழி தேனாட்சியையும் காணவில்லை. இங்கே ஒரே அமைதியாகிவிட்டது. உங்களையும் காணவில்லையே?" என்றாள்.

பிறகு, "உங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு சமயம் ஒற்றராக வருகிறீர்கள். அரசியின் மகனாக வருகிறீர்கள். அதுதான் உண்மைத் தோற்றமா? இளவரசருக்கு என்று இன்னும் வேறு வடிவங்கள் உண்டா?" என்று கூறி மெல்ல அவனை நோக்கினாள்.

முத்துவீரப்பன் மெல்ல நகைத்து, "உண்டு; சபதம் செய்யும் பாண்டிய மன்னருக்கு உதவுவதற்காக வடிவமெடுத்து வருகிறேன்" என்றான்.

"பாண்டிய மன்னருக்கு நீங்கள் எந்த விதத்தில் உதவப்போகிறீர்கள்?" வியப்புடன் கேட்டாள் முத்தம்மாள்.

முத்துவீரப்பன் சொன்னான்: "எவ்வளவோ விதங்களில். பாண்டிய மன்னர் செய்திருக்கும் சபதத்தை நிறைவேற்றுவதற்காகக்கூட நான் உதவலாம் அல்லவா?"

"என் தந்தை உங்கள் தாயிடம் சபதம் செய்திருக்கிறார் என்பதை நினைவில் வைத்துமா இப்படிப் பேசுகிறீர்கள்?" என்று முத்தம்மாள் கேட்டபோது அவள் விழிகள் வியப்பால் மலர்ந்தன.

"ஆமாம்; தெரிந்தே பேசுகிறேன். தெரிந்தே உன்னிடம் தனியே பேச வந்தேன்..." என்று கூறிய முத்துவீரப்பன் முத்தம்மாளின் கரத்தை மெல்லப் பிடித்து, "முத்தம்மா! இன்னும் தாமதிக்காமல் தென்காசிக்கு நீ உடனே புறப்பட்டுச் செல்லவேண்டும். இனி இங்கே இருப்பது சரியன்று. நான் மதுரைக்கு விரைகிறேன். இன்னும் சில நாள்களில்



பெரிய மாறுதல்கள் மதுரையில் ஏற்படலாம். அவ்வப்பொழுது உனக்குச் செய்தி சொல்லியனுப்புகிறேன்" என்றான்.

முத்தம்மாளின் உடல் மெல்ல சிலிர்த்தது. 'இவர் என்ன செய்தி சொல்லி அனுப்பப் போகிறார்? நாம் என்ன கேட்டோம் இவரிடம்?' என்று அவள் மனத்திற்கு நினைத்து, "நான் ஒன்றும் எந்தச் செய்தியும் சொல்லியனுப்புமாறு உங்களைக் கேட்கவில்லையே" என்று சொல்லிவிட்டு அவள் மெல்ல நகைத்தாள்.

முத்துவீரப்பன் கேட்டாள். "நீ ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் உன் விழிகள் என்னிடம் எப்போதோ செய்திகளைச் சொல்லிவிட்டன. உன் இதயத்துச் செய்தியை விழிகள் முதன் முதலில் என்னிடம் பேசிவிட்டன. அந்தச் செய்திக்குத் தான் நான் விடைபகரப் போகிறேன்" என்றான்.

முத்தம்மாள் கேட்டாள். "மிகவும் சிக்கலான ஒரு காரியத்தில் நீங்கள் இறங்கியிருக்கிறீர்கள். சிக்கல் என்றால் மதுரை மகுடத்தை எதிர்த்துப் போட்டியிடும் உரிமை கொண்டாடும் பலருடைய சிக்கலைச் சொல்லவில்லை. என் தந்தை உங்கள் தாயிடம் ஒரு சபதம் செய்திருக்கிறார். மதுரை அரியணையில் பாண்டியருடைய பரம்பரையை உட்கார வைக்காமல் ஓயப்போவதில்லை என்று சொல்லியிருக்கிறார். மங்கம்மாள் அந்தச் சபதத்தை ஏற்றுக் கொண்டு, 'ஒருநாளும் உங்கள் கனவு பலிக்கப் போவதில்லை' என்று சூளுரைத்திருக்கிறார்கள். எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது" என்றாள்.

"உன் தந்தை என் தாய் மங்கம்மாளிடம் செய்திருக்கும் சூளுரையை நான் அறிவேன். என்னைப் பொறுத்தவரை இருபுறமும் எனக்குத் தாக்குதல்" என்றான். அவன்

சொல்வதைப் புரிந்து கொள்ள முடியாத முத்தம்மாள் அவனைக் கேள்விக்குறியுடன் நோக்கினாள். முத்துவீரப்பன் சொன்னான்: "தாயின் சபதத்தை எளிதில் தட்ட முடியாது. ஆனால் அதே சமயம் அதற்கும் மேலாக பாண்டிய இளவரசியின் தாக்குதலிலிருந்து என்னால் மீள முடிய வில்லை" என்றான். இளவரசிக்குப் புரிந்தது. ஆனால் புரியாததுபோல் நடித்தாள். பொய்க் கோபம் கொண்டாள்.

"இளவரசரே! திடீரென்று ஏதேதோ பேசுகிறீர்கள்" என்றாள்.

முத்துவீரப்பன் சிரித்தான். "ஆமாம் இளவரசி! நான் ஏதேதோ பேசுகிறேன். விழிகள் என்னை அடிமையாக்கி விட்டன..." என்றான். முத்தம்மாள் மேலும் அவனைச் சோதனை செய்ய விரும்பினாள்.

முத்துவீரப்பன் அருகேயிருந்த மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டு, "எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. உன்னை இவ்வளவு அருகே தனியாக சந்தித்துப் பேசும் பேறு கிடைக்கும் என்று நான் கனவில்கூட நினைக்க வில்லை. சில ஆண்டுகளாக நான் உன்னைத் தொலைவி லிருந்தே கண்டு வருகிறேன். ஒருமுறை தாமிரவருணிக் கரையில் நீ நீராடும் போது உன்னைப் பார்த்தேன்" என்று சொல்லி அவன் நிறுத்தினான்.

"ஆ" வென்ற குரல் அவளிடமிருந்து வந்தது. வெட்கத்தால் அவளுடைய முகம் சிவந்ததையும் முத்து வீரப்பன் கண்டான்.

"நான் தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கவில்லை. பரிவாரத்துடன் நீ வரும்போது நான் பார்த்தேன். நான் உங்கள் பரிவாரத்திலுள்ள வீரருள் ஒரு வீரனாக நின்று



கொண்டிருந்தேன். என்னை யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

"பிறகு தென்காசிக் கோயிலில் வழிபாடு நடத்தும்போது மெய்மறந்து விழிகளை மூடி, நீ இறைவனை வேண்டிக் கொண்டபோது நான் உனக்கு மிக அருகே நின்றேன், மெய்க் காவலர்களுள் ஒருவனாக."

இதைக் கேட்ட இளவரசி, அவனைச் சினத்துடன் நோக்கி "அதெப்படி கட்டுக்காவலையும் மீறி எங்கள் மெய்க்காவலர்களுள் ஒருவராக நீங்கள் நின்றீர்கள்?" என்று கேட்டாள்.

"இளவரசி! இப்போது அதைச் சொல்வதற்கு நேர மில்லை. சமயம் வாய்க்கும் பொழுது சொல்கிறேன். நான் உன் தந்தையின் மிக அருகே உட்கார்ந்து பேசியிருக் கிறேன். கோயிலில் உன் அருகே நின்றிருக்கிறேன்; நீ சிவிகையில் செல்லும்போது உன்னை நான் பார்த்திருக் கிறேன்; இப்படியாக சில ஆண்டுகளாக உன்னை – உன் தோற்றத்தை உன் வடிவழகை நான் என் மனத்திற் குள்ளேயே உருவகப்படுத்தி ஓவியமாகத் தீட்டி வந்தேன். உன்னை நேரே சந்தித்துப் பேச வேண்டும் என்ற ஆவல் மிகக் கொண்டிருந்தேன்" என்றான்.

முத்தம்மாளின் மேனி சிலிர்த்தது. இவ்வளவு நெருங்கி நேருக்கு நேர் உள்ளத்தில் உள்ளதை அவர் எடுத்துச் சொல்லுவார் என்று அவள் நினைக்கவில்லை. அவள் தனது முகத்தை இரு கரங்களாலும் மூடிக் கொண்டாள். விரல் இடுக்கு வழியே மெல்லப் பார்த்தாள். சலனமின்றி முத்துவீரப்பன் நின்று கொண்டிருந்தான். அவன் காமப் பசியுடன் நோக்கவில்லை என்பதை அவள் உணர்ந்தாள்.

தன் அழகு மேனி மட்டுமே அவன் குறிக்கோளா யிருந்திருந்தால் எப்போதோ அதைத் தன் பசிக்கு இரை யாக்கியிருப்பான். அவனுள்ளத்தில் முளைத்திருப்பது தூய காதல்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டாள். தன் இதயத்திலுள்ளது மட்டும் என்ன?

அவன் இப்பொழுது புழுதியை எல்லாம் தட்டி மேல் அங்கியை அணிந்து கொண்டிருந்தான். உடைவாளை எடுத்துச் செருகிக் கொண்டான். அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதை எதிர்பார்த்து ஒரு போர் வீரனைப் போல் கம்பீரமாக நின்றான். முத்தம்மாள் பயம் தெளிந்த வளாக, ஆனால், நாணம் மிகுந்தவளாக சற்றுப் பின்னால் ஒரடி நகர்ந்து, "எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. நான் சொல்ல முடியாததை மனத்திலே புதைத்து வைத்துக் கொண்டிருப்பதை நீங்கள் இவ்வளவு தெளிவாக, இவ்வளவு எளிதாகச் சொல்லிவிட்டீர்கள். ஆனால் எனக்கென்னமோ இன்னும் பயமாகத்தான் இருக்கிறது. இந்த மதுரை மகுடத்திற்காக ஏற்படும் இந்தக் கலகத்தில், யார் வெல்லப் போகிறார்கள் என்று தெரிய வில்லை. கலகம் ஓயுமோ ஓயாதோ? ஆனால் என் தந்தையும் உங்கள் தாயும் எடுத்திருக்கும் சூளுரைகள் ஓயா. என்றும் தொடர்ந்து நடக்குமென்று தோன்றுகிறது. ஆனால்..." என்று கூறி மெல்ல நிறுத்தியவளை நோக்கி முத்துவீரப்பன், "ஆனால்... ஆனால்... ஆனால்... என்று என்ன சொல்லத் தயங்குகிறாய் முத்தம்மா? நான் சொல்லட்டுமா? உன் தந்தையின் சூளுரை நிச்சயம் வெல்லத்தான் போகிறது" என்றான்.

"மதுரை மகுடத்திற்குப் பாண்டிய வாரிசா? பாண்டிய நாட்டில் வாரிசே கிடையாதே! என் தந்தைக்கு ஆண் மகவே



இல்லையே! ஒருவேளை என் தந்தை மதுரை மீது படையெடுத்து அரியணையில் அமர்ந்தால்தான் அவரது எண்ணம் ஈடேறும். பாண்டியர் எதிர்க்கும் போது நாயக்க இளவரசர் கை கட்டி நிற்பாரா? அப்போது அவரது காதல் என்ன ஆகும்? எனக்குப் புரியவில்லையே..." என்றாள்.

முத்துவீரப்பன் சொன்னான்: "ஆண் மகவு இல்லாவிடில் என்ன? நீ இருக்கிறாய். பாண்டிய வாரிசாக நீ இருக் கிறாய்" என்று கூறி நிறுத்தியவனை நோக்கி மேலே பேச முடியாமல் திகைத்த முத்தம்மாளின் கரங்களை அழுத்த மாகப் பிடித்து, "முத்தம்மா! நீ உடனே தென்காசிக்குச் சென்று விடவேண்டும். நேரமாகிறது. நான் முதலில் சொன்னபடி விரைவிலேயே மதுரையில் உன்னை நான் சந்திப்பேன்" என்றான். முத்தமாளுக்கு ஒன்றும் புரிய வில்லை. ஆனால் தென்காசி மாளிகைக்குச் சென்ற பிறகுதான் அடுத்து என்ன நிகழப்போகிறது என்பதை ஓரளவிற்கு அவள் உணர்ந்தாள்.

## 26

மதுரை மாநகரமெங்கும் அந்தச் செய்தி பரவிவிட்டது. அரசர் சொக்கநாதர் மனநோயுடன் திருக்குற்றாலத்தில் இருந்தார் என்றும் அவர் நோய் அதிகமாகவே அவர் சகோதரர் அழகாத்திரி மதுரைக்கு அழைத்து வந்து தனி அறையில் அடைத்து வைத்திருக்கிறார் என்றும் செய்தி பரவியது. சிறைச்சாலையில் அடைத்து வைத்திருக்கிறார் என்று செய்தியை மாற்றி, பயங்கரமான முற்றிய நிலையிலுள்ள மனநோயாளிக்குச் சிகிச்சை அளிக்க எந்த

வைத்தியராலும் முடியாத நிலையில் அவரைச் சிறித காலம் அமைதியாக இருக்க வைக்கும் பொருட்டுத் தனி இடத்தில் அடைத்து வைத்திருப்பதாக செய்தியைப் பரவ விட்டார். ராயசமும் பிரதானியும் அதை மறுக்காததால் நகரம் முழுமையும் அந்தச் செய்தி பரவிவிட்டது. அரசி மங்கம்மாள் எங்கே என்ற கேள்விக்கு உடனடியாக அழகாத்திரியால் சமாதானம் சொல்ல முடியவில்லை. மங்கம்மாவை அரசர் கொல்ல முயன்றார் என்றும் அதனால் மங்கம்மாள் தப்பி ஓடி தென்காசி மாளிகையில் அடைக்கலம் புகுந்திருக் கிறார் என்றும் செய்தியை அவர் பரவவிட்டார். அரசரைச் சந்திக்க வேண்டும் என்று பெருங்கூட்டம் மாளிகையில் வாசலில் வந்து கூடியது. நேரமாக ஆக அவர்கள் முணு முணுப்பு பெருங்கூச்சலாக மாறியது.

"யாராவது ஒருவர் வந்து அரசரைப் பார்த்துப் பேசிச் செல்லலாம்" என்று துணிவுடன் சொன்னார் அழகாத்திரி.

ஒரு கணம் திகைத்து நின்றவர்களிடையே ஒருவர் மட்டும் துணிவுடன் "நான் வந்து பார்க்கிறேன்" என்று முன் வந்தார்.

"இவரை மன்னர் இருக்கும் இடம் அழைத்துச் செல்லுங்கள்" என்று கூறிய அழகாத்திரி, "ஐயா! அங்கு உங்களுக்கு ஏதாவது நேர்ந்தால் அதற்கு நான் பொறுப் பல்லன்" என்றும் எச்சரித்தான்.

மன்னரைப் பார்த்துவிட்டுத் திரும்பி வெளியே வரும் பொழுது, சந்திக்கச் சென்றவரின் உடல் முழுவதும் பெரும் சிராய்ப்புகளும் கீறல்களும் இருந்தன. பேச முடியவில்லை. அவரைத் தூக்கி வந்து வெளியே கிடத்தியவர்கள் சொன்னார்கள். 'அரசரின் மனநிலை மிக மோசமாக



உள்ளது. தன்னை நெருங்கியவர்களைக் கையில் கிடைத்த பொருள்களால் தாக்குகிறார். "அரசரே! உடல் நலம் எப்படி இருக்கிறது?' என்று கேட்டவுடனேயே இவரை அடித்து நொறுக்கிவிட்டார்" என்று சொல்லவும், மக்கள் கூட்டம் அங்கிருந்து பயந்து ஓடத் தொடங்கியது.

"மிகப் பலமான பூட்டைப் பூட்டி வையுங்கள். அரசருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. பைத்தியம் பிடித்துவிட்டது" என்று கூவிக்கொண்டே அவர்கள் சென்றனர். அடுத்து என்ன நேருமோ என்று கவலையையும் தெரிவித்துக் கொண்டு சென்றார்கள். சிலர் இராயசத்தை அணுகி "மன்னருக்கு இப்படிப்பட்ட நிலை என்றால் அடுத்து யார் நாட்டை ஆளப் போகிறார்கள்?" என்று கேட்டனர்.

இராயசம் சொன்னார். "யார் மகுடத்துக்கு உரிமை யானவர்களோ அவர்கள்தான் நாட்டை ஆளவேண்டி யவர்கள்."

பட்டும் படாததுமாக அவர் சொல்லும் இந்தப் பேச்சைக் கேட்டு மக்கள் மிகவும் வேதனைப்பட்டனர்.

"கவலைப்படாதீர்கள். அழகாத்திரி, அரசரின் பைத்திய நிலையை முற்றிலும் குணப்படுத்தி விடுவார். அது வரையில் அவர் இந்த நாட்டின் சகல விதமான பொறுப் பையும் கவனித்துக் கொள்வார்" என்று பிரதானி சமா தானம் கூறினார். தங்கள் திட்டம் நிறைவேறவில்லையே என்ற ஏமாற்றம் அவர்களிருவருக்கும். மாளிகையில் முக்கியமானவர்களிடையே ஒரே பரபரப்பு.

அழகாத்திரி மாளிகையில் ஒவ்வோர் இடமாக நுழைந்து அரசருக்கு வேண்டியவர்கள் அனைவரையும் இனம் கண்டு பிடித்து அவர்களையெல்லாம் சிறையில் அடைக்குமாறு

உத்தரவிட்டதைக் கண்ட அனைவரும் நடுங்கினர். கடைசியாக அழகாத்திரி மாளிகையின் வெளியே வெற்றிப் புன்முறுவலுடன் இருபுறமும் இராயசமும் பிரதானியும் சூழ வந்து கொண்டிருந்தார். அவர் பிரதானியைப் பார்த்து, "நீங்கள் என்னுடன் ஒத்துழைத்தால் இதே பதவியில் என்றும் இருக்கலாம். நீங்கள் எனக்கு விரோதமாக மூச்சு விடுவதாகத் தெரிந்த மறுகணமே உங்கள் உயிர் உங்களுக்குச் சொந்தமன்று" என்று எச்சரித்தார்.

இராயசம் அந்தச் சூழ்நிலைக்குத் தகுந்தபடி தன்னை மாற்றிக் கொண்டு, "அரசே! நீங்கள் என்ன கட்டளையிடுகிறீர்களோ அதை நான் நிறைவேற்றக் காத்திருக்கிறேன்" என்றார்.

அழகாத்திரி சிரித்தார். "அரசே! என்று நீங்கள் என்னை அழைத்த அந்தக் குரலிலிருந்தே உங்கள் உணர்வை நான் அறிந்தேன். மதுரை மகுடத்தை அடைய நீங்கள் மூவரும் திட்டமிட்ட செய்தியையும் நான் அறிவேன். அத்தகைய எண்ணமிருந்தால் அதை இந்த நொடியிலிருந்து அழித்துவிடுங்கள். நான் கட்டளையிடுவதை நீங்கள் நிறைவேற்றுவது ஒருபுறமும் இருக்கட்டும். எனக்குத் தக்க யோசனைகளை நீங்கள் அவ்வப்போது சொல்லி வரவேண்டும்.

"உடனே அரசி மங்கம்மாவைத் தென்காசியிலிருந்து இங்கே வரவழைக்க வேண்டும். அவர்களை வெளியேவிட்டு வைப்பது மிகப் பெரும் தவறாகும். சொக்கநாதரை ஆட்டிப் படைத்தவரே அவர்தான். உங்களுக்குத் தெரியும். இந்த நாட்டின் தொல்லைக்கு அவர்கள்தாம் காரணம்" என்று சொன்னவுடன், பிரதானி அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ராயசத்திடம் கூறி மங்கம்மாவைத் தென்காசியிலிருந்து அழைத்து வரத் தக்க உத்தரவுகளைப் பிறப்பித்தார்.



அழகாத்திரி ராயசத்தை நோக்கி, "நான் அரியணையில் ஏறி அமர்ந்து மகுடம் சூட்டிக் கொள்ள நல்ல நாளை நிர்ணயித்து அந்த விழாவிற்கு வருகை தருமாறு எல்லாப் பாளையக்காரர்களுக்கும் ஓலை எழுதி அனுப்புங்கள்" என்று கட்டளையிட்டார். அவர் சொன்னதை ஏற்றுக் கொள்வதைத் தவிர பிரதானிக்கு வேறு வழி இல்லை. பிரதானியும் ராயசமும் கண்களாலேயே ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு தங்கள் எண்ணம் நிறைவேறாது போனது குறித்து வேதனையடைந்தார்.

அன்று மாலை, இருள் மெல்ல மெல்ல ஆட்சி செலுத்தத் தொடங்கிய நேரத்தில் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அரண்மனை வாயிலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. காவல் வீரர்கள் அதிர்ச்சி அடைந்து அங்குமிங்குமாக அடைக்கலம் தேடி வேகமாக ஓடினர்.

ருஸ்தம்கான் குதிரையில் அமர்ந்தபடியே சபை மண்டபம் வரையில் வந்துகொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து வந்த குதிரை வீரர்கள் குதிரையினின்று குதித்துப் பாய்ந்து வந்து, ஒரே இடத்தில் அமர்ந்து யோசனை செய்து கொண்டிருந்த இராயசத்தையும் பிரதானினையும் அழகாத்திரியையும் சூழ்ந்து கொண்டனர்.

கண் இமைக்கும் நேரத்திற்குள் அவர்களைச் சங்கிலி கொண்டு பிணைத்து இழுத்துச் சென்றனர். செய்தி எங்கும் பரவியது. மாளிகை வாசலில்மக்கள் கூடிவிட்டனர். அவர்களை நோக்கி ருஸ்தம்கான் மகிழ்ச்சியுடன் கையை உயர்த்தி அசைத்தான்.

அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து, "அஞ்சாதீர்கள், இந்த மோசக்காரன் அழகாத்திரி சொக்கநாதரைச் சிறையிலடைத்தான். நான் அவனைச் சிறையிலடைத்து விட்டேன்" என்றான்.

"அப்படியென்றால் சொக்கநாதர்தானே மதுரையின் மன்னர்?" என்று கூடியிருந்தவருள் ஒருவன் கேட்டான். ருஸ்தம்கான் பயங்கரமாக நகைத்தான். "மதிப்புமிகு சொக்கநாதரிடம் நான் பேரன்பு கொண்டவன். அவருக்கு மன நோய் இல்லை என்று நானறிவேன். ஆனால் இனியும் ஆளும் தகுதி அவருக்கில்லை. அவர் ஒரு கைப் பாவை. இந்த மதுரைக்கு நான்தான் அரசன்" என்று கூறவும் அங்குள்ளவர்கள் ஒன்றும் புரியாமல் விழித்தனர்.

குதிரை வீரர்களுள் ஒருவரை அழைத்து, "இனி நீதான் இராயசம். நான் இடும் கட்டளைகளை நிறைவேற்றுவது உன் பொறுப்பு. முதலில் இந்தக் கட்டளையைக் குறித்துக் கொள். பாளையக்காரர்களுக்குச் செய்தி அனுப்புமாறு அழகாத்திரி சற்று முன்பு சொன்னதுபோல் பாளையக் காரர்களுக்கு உடனே செய்தி அனுப்புங்கள். 'ருஸ்தம்கான் இந்த நாட்டின் பேரரசனாகி விட்டான். மகுடம் அணியும் விழா நாளன்று எல்லாப் பாளையக்காரர்களும் திரண்டு வந்து அந்த வைபவத்தில் கலந்து கொள்ள வேண்டும்' என்று லிகிதம் எழுதியனுப்புங்கள்."

எதிர்த்துப் பேச நினைத்தவர்களின் மார்பெதிரே கூர்மையான வாள் மினுமினுத்தது. சொக்கநாதருடன் அழகாத்திரியும் சிறையில் வாடத் தொடங்கினார்.

மதுரை நகரம் முழுவதும் காட்டுத் தீ போல் இந்தச் செய்தி பரவியது. நாயக்கர் மன்னர் சொக்கநாதரின்



ஆட்சியின் கீழ் குதிரைப் படைத் தலைவனாக இருந்த ருஸ்தம்கான் மதுரை அரியணையைக் கைப்பற்றி, பரம்பரை மகுடத்தைச் சூடிக்கொள்ள நாள் பார்த்திருக்கிறான் என்ற செய்தி எங்கும் பரவியது. ஓரிரு இடங்களிலே எதிர்த்துப் பேச முற்பட்டவர்களை, குதிரை வீரர்கள் சவுக்கால் அடித்துச் சிறைச்சாலைக்கு இழுத்துச் சென்றனர். ருஸ்தம் கானை எதிர்த்துப் பேச முடியாமல் தவித்தனர். தெருவிலே மக்கள் நடமாட்டம் குறைந்தது. கோயில் பூஜையை முறையாகச் செய்வது பற்றித் தயக்கத்துடன் பட்டர்கள் கூடிப்பேசினர். பட்டர்களுக்கு அறிவுறுத்துவதற்காகத் தக்கவரை அனுப்பி, "பட்டர்களே! உங்கள் பணியைத் தொடர்ந்து செய்யுங்கள். உங்கள் கோயில் பூஜை முறையில் நான் தலையிட மாட்டேன்" என்று அவன் உறுதி கூறினான். பட்டர்களுக்கு அது திருப்தியாக இருந்தாலும் மதுரை அரியணையில் ஒரு குதிரை வீரன் அமர்வதா என்ற கலக்கத்துடன் அவர்கள் மௌனமாக ரகசியமாகப் பேசிக் கொண்டனர்.

காலைக் கதிரவன் ஒளியும் சற்று பிரகாசம் குறைந்து காணப்பட்டது போல் தோன்றியது. வழக்கம்போல் கதிரவன் மேல் திசையில் மறைந்தாலும் இருளை எண்ணி மக்கள் அச்சம் கொண்டனர்.

இந்த நிலை சில நாள்கள் நீடித்தது. ஒரு நாள் காலையில் பொழுது புலர்வதற்கு முன்னே முத்துவீரப்பன் பெரும் படைகளுடன் அரண்மனையைச் சூழ்ந்து கொண்டான். ருஸ்தம்கான் விழித்து எழுவதற்கு முன்பு அன்றைய காலைப் பொழுது அவனுக்குப் பேரிடியாக அமைந்தது.

கதிரவன் நிமிர்ந்து எழுந்தான்.

## 27

எதிர்ப்பு ஏதுமின்றி மதுரை அரியணையை அடையப் போகிறோம் என்ற பெருமிதத்தில் ருஸ்தம்கான் இன்பக் கனவுகளைக் கண்டவாறு தூக்கம் கலைந்தும், கலையாமலும் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்.

அவன் படுத்திருக்கும் அறைக்குள்ளே முத்துவீரப்பனின் வீரர்கள் புகுந்தனர். அவர் கண்மூடித் திறந்து தன் உடைவாளைத் தாவி எடுப்பதற்குள் அவன் நெஞ்சிலே கூரிய வாள் ஒன்று ஆழமாக இறங்கியது. வாய்விட்டு ஓலம் எழும் முன்பே அவன் உயிர் அவனை விட்டுப் பிரிந்தது. தலை முதல் கால்வரையில் அவன் உடலைப் போர்த்தித் தூக்கிக் கொண்டு மெல்லிய காலை வெளிச்சத்தில் கோட்டை வாயிலை நோக்கி விரைந்தனர். மதுரைக் கோட்டை வாயிலின் மேலே ருஸ்தம்கானின் உடல் தொங்க விடப்பட்டது. முத்துவீரப்பன் சிறைச்சாலைக்கு விரைந்தான். மிகமெலிந்து, உடலில் உயிர் இருக்கிறதா என்று சொல்லும் அளவுக்குக் கிழிந்த துணியைப் போல் தரையில் கிடந்த தன் தந்தையைக் கண்டவுடன் அவனுக்குத் துக்கம் பொங்கியது. "அரசே, தந்தையே!" என்று கூவினான் முத்துவீரப்பன்.

சொக்கநாதர் மெல்லக் கண் விழித்தார். முத்துவீரப்பனின் முகம் தெரியாமல் அவர் விழிகளில் பார்வை குறைந்திருந்தது.

எங்கோ அகல பாதாளத்திலிருந்து கேட்பது போன்ற குரல்...



வெறித்து நோக்கிக் கொண்டிருந்த தந்தையை எடுத்து மார்பிலே சாத்திக் கொண்ட முத்துவீரப்பன் விட்ட கண்ணீர் அவர் நெஞ்சை நனைத்தது.

சொக்கநாதர் புரிந்து கொண்டு விட்டார், 'மகனே! முத்துவீரப்பா!' என்று அவர் கூவினார். அவரிட்ட கூச்சல் வெளியே கேட்கவில்லை. அவர் குரல் மிக மெல்லியதாக எழுந்தது.

முத்துவீரப்பன் சொக்கநாதரை மெல்லத் தாங்கி வெளியே அழைத்து வந்து ஓர் இருக்கையில் அமர வைத்து தூக்கிச் சென்று அந்தப்புரத்தில் அவர் வழக்கமாகப் படுக்கும் இடத்தில் சேர்த்தான்.

அரச வைத்தியரை வரவழைத்து அவருக்கு வேண்டிய சிகிச்சைகளை உடனே செய்யச் சொன்னான். நகரெங்கும் ஒரு கணத்தில் இந்தச் செய்தி பரவியது. 'வாழ்க முத்து வீரப்பன்! வாழ்க சொக்கநாதர்' என்று முழக்கமிடத் தொடங்கினர். தெருவெல்லாம் மக்கள் மகிழ்ச்சியுடன் கூடிப் பேசினர். தர்மத்திற்கு என்றும் வெற்றி உண்டு என்று பேசிக் கொண்டனர்.

அரசி மங்கம்மாள் சகல மரியாதையுடன் மதுரை எல்லையிலே வரவேற்கப்பட்டாள். நடந்த சம்பவங்களை எல்லாம் அப்பொழுது தான் அவள் அறிவாள். ருஸ்தம்கான் அழகாத்திரியைச் சிறையிலிட்டதையும், முத்துவீரப்பன் ருஸ்தம்கானைக் கொன்றதையும், மீண்டும் சொக்கநாதர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு அவருக்கு பூரண ஓய்வுடன் தகுந்த சிகிச்சைகள் அளிக்கப்படுவதையும், அறிந்து மங்கம்மாள் ஓடோடி அந்தப்புரத்திற்குச் சென்று அங்கே சில உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்த முத்து

வீரப்பனை அழைத்து உச்சிமோந்து ஆரத்தழுவிக் கொண்டாள்.

"முத்துவீரப்பா! என் மகனே! நீதான் இனி இந்த நாட்டு அரசன்" என்றாள்.

முத்துவீரப்பன் மெல்ல நகைத்தான். "தாயே! இம் மகுடம் என் தந்தையுடையது. என் தந்தைக்குப் பிறகு தான் என்னுடையது" என்று மிகப் பணிவுடன் கூறி, தாயின் முகத்தைப் பார்த்தான். மங்கம்மாள் உடனே ஏதும் பேசவில்லை. மதுரையில் ஏற்பட்டுள்ள குழப்பம், கலகம் தீர்ந்தபிறகு பேசுவோம் என்று கணவர் சொக்கநாதரை காண அவள் விரைந்தாள்.

சற்று அமைதி நிலவியபோது, மங்கம்மாள் முத்துவீரப் பனை நோக்கி, "நான் விரைவிலேயே உன் திருமண ஏற்பாடுகளைச் செய்யப் போகிறேன். உனக்கேற்ற மண மகளை, இந்த நாட்டு அரசகுமாரியைத் தேர்ந்தெடுத்து வர நாலா திசைக்கும் ஆட்களை அனுப்புகிறேன்" என்றாள். முத்துவீரப்பன் மிக வேடிக்கையாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஏளனம் இருந்தது. 'தாயே! நீங்கள் நாலா திசையும் மருமகளைத் தேடி ஆட்களை அனுப்ப வேண்டாம். உங்கள் அருகிலேயே மருமகள், வருங்காலத்து மதுரையின் அரசி இருக்கும் பொழுது நீங்கள் எங்கே தேடுகிறீர்கள்?" என்று கேட்டான்.

மங்கமாளுக்கு ஒன்றும் புரியவில்லை. "என் அருகிலேயே இருக்கிறாளா? வருங்காலத்து மதுரை அரசி இருக்கிறாளா? என்ன சொல்கிறாய்?" என்று கேட்டாள்.

"இப்பொழுது இங்கு இல்லை. விரைவில் உங்களைத் தேடி வந்து விடுவாள். நீங்கள் நேற்று வரையில் அவளுடன்



தான் இருந்தீர்கள். அவளுடைய அன்பில் திக்கு முக்காடிப் போயிருந்தீர்கள். அவள் தான் உங்களைக் காப்பாற்றினாள். என் தந்தையைக் காப்பாற்றினாள்" என்று கூறிச் சற்று அமைதியானான். மங்கம்மாளுக்குப் புரியவில்லை.

"என்ன புதிர் போடுகிறாய் முத்துவீரப்பா? புரியும்படி சொல்!" என்றாள்.

முத்துவீரப்பன் "தாயே! அதற்குள் தென்காசியை மறந்து விட்டீர்களா? பாண்டியர் செய்த உதவியை மறந்துவிட்டீர்களா?" என்று கேட்டான்.

இப்போது மங்கம்மாளுக்குப் புரிந்து விட்டது. தென் காசிப் பாண்டியனுடைய மகளையா சொல்கிறான்? அவளா இவனை மணக்கப் போகிறாள்! அவளா வருங்காலத்து மதுரை அரசி? மங்கம்மாள் திடுக்கிட்டாள்; திகைத்தாள், கோபமுற்றாள்.

முத்துவீரப்பன் பேசினான்: "முறைப்படி பெண் கேட்டு நாம் தூதுவரை அனுப்புவோம். முத்தம்மாளைச் சகல மரியாதையுடன் மதுரைக்கு வரவழைப்போம்" என்றான்.

மங்கம்மாள் ஒரு கணம் திகைத்தாள். "என்ன சொல் கிறாய் முத்துவீரப்பா? பாளையக்காரரான பாண்டியன் மகளையா மணக்கப் போகிறாய்? அவளா மதுரை அரி யணையில் உன்னுடன் சரிசமமாக அமரப் போகிறாள்? என்னுடன் சபதம் செய்த பாண்டியன் மகளுக்கா அரியணை?" என்று அவள் கேட்கும் பொழுது, "தாயே! இந்த மதுரை மகுடம் நிலைத்து நிற்க வேண்டுமானால், இதை எதிரி களிடமிருந்து நிரந்தரமாகக் காப்பாற்ற வேண்டுமென்றால் நாம் தென்காசிப் பாண்டியனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டுதான் ஆக வேண்டும்" என்றான்.

மங்கம்மாள் சீறி எழுந்தாள். "நம்மிடம் இல்லாத பலமா? பாளையக்காரரிடம் சென்று அவரிடம் உடன்படிக்கை செய்ய வேண்டும் என்று கேட்கிறாயே? உனக்கு இது வெட்கமாக இல்லையா?" என்று கேட்டாள்.

முத்துவீரப்பன் இப்பொழுது சிரித்தான். அதிலே கோபம் பொங்கி வந்தது. ஆனால் அமைதியுடன், "எது வெட்கம் என்று கூறுகிறீர்கள்? மதுரையிலில்லாத மருத்துவத்தைக் குற்றாலத்தில் செய்யச் சென்றீர்களே அது வெட்க மில்லையா? உங்களுக்குக் குடிலை அளித்ததோடு பாதுகாவலுக்காக வீரர்களையும் அளித்தாரே பாண்டிய மன்னர் அவரிடமிருந்து உதவி பெற்றது வெட்கமில்லையா? அவரிடம் நீங்கள் சூளுரைத்தது, அந்தச் சூளுரைக்கு மாறாக அவருடைய உதவியைப் பெறுவதற்குத் தென் காசியில் தங்கியிருந்தது நம்முடைய கௌரவத்திற்குக் குறைவில்லையா?

"இதையெல்லாம் எண்ணிப் பாருங்கள் தாயே! தென் காசிப் பாண்டியரின் உதவியுடன், மற்றும் பாளையக்கார வீரர்களுடனும் சேர்ந்துதான் இந்தச் சதிகாரர் கூட்டத்தி லின்று மதுரையைக் காப்பாற்ற முடிந்தது. நான் தனிப் பட்ட முறையில் சூழ்ச்சிக்கார அழகாத்திரியையும், நம்பிக்கைத் துரோகி இராயசத்தையும், உடனிருந்தே கொல்லும் வியாதி போன்ற சென்னப்பரையும், எளிதிலே மதுரையை அபகரித்த குதிரைப் படைத் தலைவனையும் வெல்ல முடியுமா? தென்காசிப் பாண்டியரின் உதவியுடன் தான் பகை வென்றோம். பாண்டிய மன்னர் யார்? பாண்டிய மன்னரிடமிருந்து தானே இந்த மகுடத்தைப் பல ஆண்டு களுக்கு முன்பு நம் முன்னோர் கைப்பற்றினார்கள்? மீண்டும் அவர்களுக்குப் பங்கு கொடுப்பதிலே என்ன



தயக்கம்? இதில் என்ன வெட்கம்?" என்று கேட்டவுடன் மங்கம்மாள் வாயடைத்து நின்றாள்.

கோயில் மணி தொலைவில் ஒலிப்பது கேட்டது. மறு நாள் பொழுது விடியும் நேரத்தில் தென்காசி மாளிகையில் நாயக்க மன்னரின் தூதுவன் போய் நின்றான். கையிலே பெரிய தட்டும் அதில் பழங்களும் பூக்களும் திகழ்ந்தன. அவற்றுடன் தென்காசிப் பாண்டியருக்கு விடுத்த விகிதம் ஒன்றும் இருந்தது. முத்தம்மாளை மிக மரியாதையுடன் மதுரைக்கு அழைத்து வருமாறு மங்கம்மாள் விடுத்திருந்த வேண்டுகோள் அதில் இருந்தது.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சொக்கநாதர் அதிர்ச்சி யாலும் நோயாலும் பீடிக்கப்பட்டுத் திடீரென்று ஒருநாள் மாரடைப்பால் காலமானார். மதுரை மகுடம் சில காலத் திற்குப் பிறகு முத்துவீரப்பனுடைய சிரசில் வந்து அமர்ந்தது.

மன்னரின் மறைவிற்கு மதுரை மக்கள் ஆழ்ந்த வருத் தத்தைத் தெரிவித்துக் கொண்டாலும் அவருக்குப் பிறகு மகுடத்தைச் சூட்டிக் கொள்ளும் முத்துவீரப்பனின் வீரத்தையும் நற்குணத்தையும் போற்றிப் புகழ்ந்தனர். அவன் அருகே முத்தம்மாள் அமர்ந்திருப்பதைத் தொலைவிலிருந்து மங்கம்மாள் பார்த்து மகிழ்ச்சியடைந்தாலும் அவள் உள்ளுக்குள்ளேயே நாம் சபதத்தில் தோற்று விட்டோம் என்ற ஏக்கம் இல்லாமல் இல்லை. அந்த ஏக்கம் கொஞ்சம் கொஞ்சமாக விஸ்வரூபம் எடுத்தது. பாண்டிய மகள் முத்தம்மாள் மதுரை அரியணையில் தன் மகனுடன் இணைந்து அமர்வது அவளுக்குப் படிக்கவில்லை. பிற்காலத்தில் பெரும் புயலாக அது மாறியது.

பாண்டிய வாரிசு மதுரை அரியணையில் நீடித்து அமர்வதை எப்படித் தடுக்கலாம் என்று மங்கம்மாள்

சதித்திட்டம் வகுக்கலானாள். ஆனால் முத்துவீரப்பனையும் முத்தம்மாளையும் மிகவும் நேசித்த மதுரை மக்களின் அன்பும் ஆதரவும் அவர்களுக்கு இருக்கும்வரை மங்கம்மாவினால் எந்தச் சதித் திட்டத்தையும் நிறைவேற்ற முடியவில்லை. முத்துவீரப்பனின் இனிய காதலி முத்தம்மாள் விரைவில் சூலுற்றாள். பத்து மாதங்களுக்குப் பிறகு ஆண் மகவு ஒன்றைப் பெற்றெடுத்தாள். மதுரை மகுடத்திற்கு நீடித்த வாரிசு கிடைத்ததை எண்ணி மங்கம்மாள் மன வேதனையுற்றாள். அதனால் மங்கம்மாள் மிகுந்த பொறாமை கொண்டு, முத்தம்மாளை வெறுக்கலானாள். தானே மதுரை மகுடத்தை அடைவது எப்படி என்று சிந்திக்கலானாள். அது வேறு கதை.

மதுரை மகுடத்தைக் கம்பீரமாக முத்துவீரப்பன் அடைந்தான். பாண்டிய மன்னரின் சபதமும் நிறைவேறியது என்ற நிறைவோடு இந்த வரலாற்றையும் இந்த அளவில் நாம் முடித்தோம்.

★ ★ ★